ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

2308

ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகராகிய

ஸ்ரீமாந் – கச்சிக்கடாம்பி – இராமாநுஜாசார்யஸ்வாமிகள்

திருவடி சம்பந்தியும்,

எதிராஜதாஸனென்னும் தாஸ்யநாமியுமாகிய

ப்ரபந்ந வித்வான்

கொ – பள்ளிகொண்டான் பிள்ளையவர்கள்

இயற்றிய

பிரபந்தத் திரட்டு.

VENKATESWARA ORIENTAL
21 MAR 1941

இஃது

ம-ரா-ரா-ஸ்ரீ அ-இரத்தினவேலு பிள்ளையவர்கள்

முயற்சியால்

ப்ரபந்ந வித்வான் – காஞ்சீபுரம்,

ஸ்ரீமாந் – ராமஸ்வாமி நாயுடவர்களாற்

பார்வையிடப்பட்டு

திருமணம் – செல்வகேசவராய முதலியார் M.A.

அவர்களால்

சென்னபட்டணம்,

செஞ்சுலக்ஷ்மிராயநாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1899ஆம் ஆகஸ்ட்டில்

Registered copyright.

இப்புத்தகம் வேண்டியவர்கள் புரசைப்பாக்கத்தில் வினோதர்த் தான் முதலியார் வீதியில் கிழண்டைவாடை 12-வது கதவிலக்க முள்ள வீட்டிலும், சூளையில் சாமிபிள்ளைவீதியில் மேலண்டைவா டை 25 - வது கதவிலக்கமுள்ள வீட்டில் சே. முத்துகிருஷ்ண நாயுடவர்களிடத்திலும், முத்தியாலுபேட்டையில் பவளக்காரத் தெ ருவில் மேலண்டைவாடை 42-வது கதவிலக்கமுள்ள வீட்டில் அ . இரத்தினவேலு பிள்ளையவர்களிடத்திலும் வாங்கிக்கொள்ளலாம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணை 12.

ஸ்ரீ

பிரபந்தத்திரட்டின் விவரண அட்டவணை.

க	துதிகவிகள்	க
உ	ஸ்ரீமணவாளமாமுனிகள் நான்மணிமாலை	கூ
ங	எதிராசமாமுனிகள் நான்மணிமாலை ...	உள
ச	முதலாழ்வார்கள் மும்மணிக்கோவை ...	ருக
ஞ	நம்மாழ்வார் நான்மணிமாலை... ...	எங
ட	கோதைநாயகித்தாயார்மாலை	கூகூ
ண	வேதவல்லித்தாயார்மாலை	ககங
அ	உருப்பிணித்தாயார்மாலை	கஉள
கூ	அணிமாமல்மங்கைத்தாயார்மாலை ...	கசக
க0	என்னைப்பெற்றதாயார்மாலை	கருஞ
கக	கனகவல்லித்தாயார்மாலை ...	ககூகூ
கஉ	பெருந்தேவித்தாயார்மாலை	கஅங
கங	அலர்மேன்மங்கைத்தாயார்மாலை ...	ககூள
கச	அரங்கநகரன்னையடைக்கலமாலை ...	உகக
கஞ	பார்த்தசாரதிப்பரஞ்சுடர் மாலை ...	உஙக
கூ	பார்த்தசாரதிமாயவன்மாலை	உசஞ
கள	பார்த்தசாரதிப்பெருமான்மாலை ...	உருக
கஅ	வீரராகவப்பெருமான்மாலை	உளங
ககூ	அத்திகிரியந்தாதி	உஅள
உ0	சேடகிரியந்தாதி	ஙo க
உக	அரங்கநகரப்பனடிப்புகழ்ச்சிமாலை ...	ஙகஞ
	தொண்டைநாட்டுத்திருப்பதிப் பஞ்சரத்தினங்கள் } ...	ஙஉசூ
	க திருக்கச்சி—அத்திகிரி ...	ஙஙo
	உ. திருவட்டபுயகரம்	ஙஙஉ
	ங திருத்தண்கா	ஙஙச
	ச திருவேளுக்கை	ஙஙசூ
	ஞ திருப்பாடகம்	ஙஅ

பிரபந்தத்திரட்டின் விவரண அட்டவணை.

ரு	திருநீரகம்... ...	...	ரூ ச 0
எ	திருநிலாத்திங்கட்டுண்டம்	...	ரூ ச உ
அ	திருஊரகம் ...	...	ரூ ச ச
ரூ	திருவெஃகா ...	...	ரூ ச ரூ
க 0	திருக்காரகம் ...	...	ரூ ச அ
கக	திருக்கார்வானம் ...	...	ரூ ஞ 0
கஉ	திருக்கள்வனூர் ...	...	ரூ ஞ உ
கரூ	திருப்பவளவண்ணம்...	...	ரூ ஞ ச
கச	திருப்பரமேச்சுரவிண்ணகரம்	...	ரூ ஞ ரூ
கஞ	திருப்புட்குழி ...	...	ரூ ஞ அ
ககூ	திருநின்றவூர் ...	...	ரூ ரூ 0
கள	திருவெவ்வுளூர் ...	...	ரூ ரூ உ
கஅ	திருநீர்மலை ...	...	ரூ ரூ ச
ககூ	திருவிடவெந்தை ...	...	ரூ ரூ ரூ
உ 0	திருக்கடன்மல்லை ...	...	ரூ ரூ அ
உக	திருவல்லிகேணி ...	...	ரூ எ
உஉ	திருக்கடிகை ...	...	ரூ எ உ



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

சாத்துகவிகள்.

ப்ரபந்ந வித்வான், காஞ்சீபுரம்,

ஸ்ரீமாந்-ராமஸ்வாமி நாயுடவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தங்கள்.

பொன்பூத்த நறுங்கமலப் பொகுட்டிறையு நான்முக
த்துப் புத்தே ளீன்ற, மன்பூத்த மன்பதைக ளீடெடுப்பில்
லாவிறைவன் மலர்த்தாட் கன்பாய்த், தென்பூத்த வீறிலின்
பச் சிந்துவிலாழ்ந் திடுமுரிமை தேறு தென்றுங், கொன்
பூத்த பவப்புணரி வீழ்ந்தயருங் கொடுமையினைக் குறித்து
நோக்கி, (க)

பரிவொடுமன் னவைமோக்க பாரமதை யடைந்திட
ற்கோர் பஃறி யாக, அரியபெருங் கருணையினம் முலககுரு
வருளிய நூ லனைத்தி னுஞ்சீர், பெரியர்திருப் பவளம்வந்து
பிறங்கிடுநா லாயிரத்தும் பேசு சீர்த்திக், குரியகுரு பரம்ப
ரையென் முரவோர்கள் கொண்டாடு மொருநூ லுள்ளும்,

பகரருஞ்சீர்ப் பாகவதம் பளகில்விண்டு புராணமெ
னும்பனுவ லுள்ளும், நிகரறுபா ரதராமா யணவிதிகா சங்
களினு நெறிமை யார்ந்து, தகைமையுறு மானவநூ லினு
மேனை நூல்களினுஞ் சாற்றும் பற்பல், வகையமைநற் பொ
ருள்கடம்மின் வாய்ப்புடையவாங்காங்கே வரித்தெடுத்தே,

தொடுகடல்சூழ் நிலப்புலவர் தொக்கிருந்துண் டுள
மகிழ்வான் மூய்மை யார்ந்த, படுமதுமா மலர்மகள்சீர் நி
லமகணீ ளிடமக்குப் பரிவார் கொண்கன், நெடுமைநிறை
குணக்கடலிற் றினைத்தாடு மாரியர்க்கு நிலமேல் வந்த,
வடுவறுசீ ராழ்வார்க டமக்குமெழின் மாறனக்கும் வனப்பு
வாய்ந்த, (ச)

துதிநலம்வாய்ந் திடுமாலை யொன்றுமகந் தன்கூற்றிற்
றுலங்க வந்த, மதிநலமார் மணவாள மாமுனிக்கும் வைகு
ந்த மன்ன மக்கட், கதிநலமந் திரராஜ மளித்தருளெம் மெ
திபதிக்கு மமல சேனை, பதிகலியிற் றென்குருகைப் பதிவந்
த பராங்குசனும் பண்ண வற்கும், (ஞ)

நலனமைநான் மணிமாலை யொவ்வொன்று மெவ்வெ
வரு நயகருஞ் சிர்சால், குலனமைவெஃ காவினினற் பொ
ய்கைதனிற் பொன்னிறமார் குசேச யத்தும், பொலனமை
சிர்க் கடன்மல்லைப் புனிதமா தவிபூத்த புதுவீ யுள்ளும்,
புலனமைமா மயிலையிலோர் கிணற்றெழிலார் சேதாம்பற்
பூவி னுள்ளும், (கூ)

வந்தருளெம் மாதியோ கிகளாய மூவருக்கும் வனப்
பு வாய்ந்த,பந்தமறு மும்மணிக்கோ வையும்புத்தூர்த் திரு
த்துழாய்ப் படப்பை வந்து, நந்தமருங் கரத்தாற்கு நற்பா
ப்பூ மாலைதரு நங்க டாயாம், நந்தமர்மூன் கரக்கோதை நா
யகிக்கும் பற்பலநன் னயங்கள் வாய்ந்த, (எ)

அல்லியங்கே ணியிற்கிள்ளை யமர்பூவை யமிழ்தயிர்
கண் டாதி கேருஞ், சொல்லியெழி லார்வேத வல்லியாய்
தனக்குமெமைத் துரிச துத்தான்,நல்லியலா ருருப்பிணியா
நாயகிக்கு நீர்மலையி னண்ணி வாழும், வல்லியுமழ் தருமை
ணிமா மலர்மங்கை யாய்க்கு நின்றை வாய்ந்திலங்கும்,(அ)

எனைப்பெற்ற தாய்தனக்கு மெவ்வுளில்வாழ் கனகவ
ல்லி யெனுமன் னைக்குந், தனைப்பொருவு மத்திகிரிப் பெரு
ந்தேவித்தாய்தனக்குஞ் சரிமேற் ருவும், தனைப்பொழில்சூ
ழ் சுகனூரி னண்ணுமலர் மேன்மங்கை நாயகிக்குங், தனைப்
புனற்பொன் னிக்கிடைவா ழரங்கநக ரன்னைக்குங் காதல்
கூர்ந்தே, (கூ)

அந்தமுறும் பதப்பொருள்க ளைமைந்திலங்கு சதச்
செய்யு ளெலங்கல் வேய்ந்து, சந்தமுறீ இத் திகழுல்லிப் பல்
வலஞ்சார்ந் துறைபார்த்த சார திக்கும், பந்தமறச் சாலிய
வி முனிக்கருளி யெவ்வுள்வாழ் பரம னுக்கும்,நந்தமையா
ளரங்கநக ரப்பனுக்கு மொவ்வொர் கண்ணி நயந்து நல்கி,

வாரணமா மலையுறையும் வரதனுக்கு நாகமலை வாழை
ந்தைக்குஞ், சீரணவு மந்தாதி மாலையொவ்வொன் றளித்
தென்றுந் திகழுந் தொண்டை, ஏரணவு திருப்பதிக ளிரு
பானே டிரண்டினுள்ளு மிலங்கிநிற்குங், காரணவெம் மடி
களுக்குத் தனித்தனியம் மணிமாலை சவினச் சூட்டி, ()

பிறவிகர லேயைக்கடந்து பேரின்ப முத்தியெனும் பெரியதீரத், துறவியைந்து மூத்தாப வுருப்பமெழுந் துய்ந்திட்டா னுயர்சூர் மாளத், தெறுகுமரன் றென்பொதியிற் சூழுமுனிவற் றிசைத்ததமிழ்ச் சீர்சால் பாடை, புறுகடலே யொருங்குண்டு தேக்கெறிந்த வரவோனல் லொளிகு லாவும், (கஉ)

புலவர்பெரு மானென்ன வவதரித்துப் பூவுலகிற் பொருந்துமுப்பால், நலமுலவ வளித்தபெரு நாவலர்வாய்மை யையமறுத்த நாப்பூச் செல்வன், அலகறுநற் குணங்களா மணிமணிப்பூ ணெஞ்ஞான்று மணிந்த சீலன், இலகுபொழிற் புரசைவரு மெழிற்சபா பதிக்குரவ னிறும்பூ தெய்த, அட்டாவ தானமியற் றரும்புலவர் திலகனன்னே னலர்த்தாட் பத்தி, தட்டாது செய்துநனி யிலக்கியங்க ளிலக்கணங்க டவாது கற்றோன், மட்டாரும் பொழிற்கச்சிக் கடாம்பியிரா மாநுசன்மா மலர்த்தாள்பூண்டு, கட்டாரும் பிரபத்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்துக் களித்து வாழ்வோன், (கச)

அருணிதியாந் திருமாறன் னடித்தொண்டே யியற்றி யென்று மஃகாச் சீர்த்திக், கருணிகர்நற் குலவிளக்கா யொளிர்காரா ணக்குரிசில் கவினச் செய்த, தெருளுநற் றவப்பயனே யுருத்தனென வுலகர்புகழ் செம்மற் றேசார், பருணிதரோ மெழிற்புரசைப் பள்ளிகொண்டா னெனுமியற் பேர்ப் பாவலோனே. (கடு)

திருச்சிராபுரம் - மஹாவித்வஜ்ஜநசேகரர்

ஸ்ரீமாந் கோவிந்தப்பிள்ளையவர்கள் குமாரரும்

பெங்களூர் சென்ட்ரல் காலேஜ் தமிழ்த்தலைமைப் பண்டிதருமாகிய

ஸ்ரீமாந்-தி-கோ-நாராயணசாமி பிள்ளையவர்கள்

இயற்றியவை.

சீரார் சங்கத் தவமருந் திருவார் தொண்டை நன்னாடாம், பாராரிரத்தி னகரத்திற் பண்பொற் பணிநீர் கவிஞக்கம், நேரார் பொகுட்டுச் சததளங்கண் ணிலத்தா திசைமுத் தமிழ்நிதந், தாரார் சென்னை நகராகுஞ் சீரோ சஞ் சார்ந்த புரசைவயின், (க)

குலவு செல்வக் கருணீகர் குலத்தி னுரா யணக்குரி
சில், நிலவு தவத்தில் வந்துதித்து நிகழும் கச்சிக் கடாம்பி
நலம், உலவி ராமா நுஜாரியன்ரு ளுற்றுப்பற்றி யிதம்
பெற்ரழ்ந், தலகி லாத தரிசனநூ லாய்ந்து ப்ரபந்த ருட
ன்கலந்தோன். (உ)

வேறு

வள்ளிகொண்ட வரணிநிகர் சபாபதியா மஷ்டாவ
தானி மன்பால், நள்ளிகொண்ட விலக்கியத்தோ டிலக்க
ணங்க ணன்குகற்ற நல்லோன் வல்லோர், புள்ளிகொண்ட
பத்திவயி ராக்கியநன் ஞானநலம் புகுந்த நெஞ்சன், பள்ளி
கொண்டா னெனும்பெயராற் பரவுகொண்ட பெருந்தகை
ய பாக்ய யோக்யன். (ஊ)

புன்னெறிய சமயங்கள் புறங்கண்டு விண்டுவிண்டு புக.
ன்ற சீர்சால், நன்னெறிய சமயமிது சமயமிது கொண்மி
னென நவின்று கொண்டோன், கன்னெறிய கடுங்கானங்
கடந்துவரி யணைகட்டிக் கண்டம் பத்தும், வன்னெறியு
முடையானை வதைத்தவனைத் தன்மனத்தில் வைத்துவாழ்
வோன். (எ)

வேறு

பரனிலை யுயிர்க டந்நிலை நெறியாய்ப் பகர்நிலை தடை
செயூழ் வாழ்வின், நிரனிலை கூறுஞ் செவ்வியோர் மொழி
கள் சிகரறத் தெரிந்துபக் குவர்க்கு, வரனிலை யாகத் தெரிப்
பவன் ரூய்மை வாய்மையே யாதியாங் குணங்கள், உரனி
லை யாக வுறைதரு மிடனு யுற்றவன் வித்தகத் தோன்றல்.

வேறு

ஆறனைத்தும் புகழ்ங்கை யடியாணை யடியாரை யக
லா துள்ள, ஆறனைத்து முடையானை யன்றியய லறியாத
வறிவை யார்ந்தோன், மாறனைப்பா டினரந்த மதுரகவி யெ
னப்பட்டார் மற்றின் னேனம், மாறனைப்பா டியவதனன்
மதுரகவி யென்கோயான் வழுத்து மாறே. (ஙு)

வேறு

ஆரிய ராழ்வா ரச்சுதன் றுதியே யாதியா யிருபதோ
டொன்றுங், தேரிய லணிகொ டொண்டைகன் ஞட்டுத்
திருப்பதி யிருபதோ டிரண்டிற், கேரியல் பஞ்ச ரத்தின
மெனும்பா விலம்பக மியம்பினன் சிறப்புக், கூரிய லாக
வெம்மனோர் கூறுங் கொள்கைய தன்றெவன் குறிப்பாம்.

ஸ்ரீமாந் - தி - செல்வகேசவராய முதலியார் M.A.

இயற்றிய

நிலமண்டில வாசிரியப்பா

வடவேங்கடம்புகழ் வாய்ந்ததென்குமரி
குடபாற்குடகங் குணபாற்குணகடல்
என்றநான்கெல்லைத் திருந்தமிழ்நாடு
நின்றவந்நாட்டிடை துன்றித்தோன்றிய
புத்தமுஞ்சமணமும் புகலுமற்றும்பல
புத்தம்புதியவாப் புகன்றிடுமதங்களும்
பிறையெனவுவாவெனப் பெருகியுங்குறைந்தும்
நிறைவிலவாகி நீங்கிக்கரந்தன
வழிவரும்வைணவம் வயங்குசைவம்மென
மொழிபதிமதங்களிம் மூதுலகந்தனில்
இன்றுகாறு நின்றுநிலைத்தன
மன்னிவழங்குறூஉ மன்னவைதம்முள்
ஆரியாவர்த்தத் தரியராமுனிவர்
சீரியபுலவர்கள் செழுநிலத்தரசர்கள்
என்றிவர்ததழீஇ யேழையோர்த்தணந்து
தென்றிசையண்மி நன்றிசைகெழுமிய
விசிட்டாத்துவிதமாம் விண்டுவினமதந்தனை
விசிட்டநல்லொழுக்குரை வேதவித்துக்களாம்
ஆழ்வார்களுந்தெரு ளமைந்தவாரியர்களும்
வீழ்நாள்படாது விழைந்துவளர்த்தனர்
காரணப்பொருளா நாரணப்பரமனைத்
தாழ்வொன்றிலரா மாழ்வார்பதின்மரும்
ஒருமிடறுக வுவந்துபழிச்சிய
பெருமைசான்மறைப்பொருள் பிறங்கிடுத்தமிழ்மறை
உரையொடும்வியாக்கியை தருபொருளுணர்ந்தும்
ஐம்பொருடம்மையுஞ் செம்மையிற்றெரித்திடுஞ்
சீரியவாரியன் றிருவடிகளையடைந்
தோரியல்ஞானத் தாருயிருயத்தரும்
ஐந்துகிரியையு மடைவுடனடைந்து
மும்மறையின்பொருள் செம்மையினுணர்ந்து
முத்தத்துவநூன் மொழிந்திடுமரும்பொருள்
சித்தந்தன்னிற் றெளிவுறத்தேர்ந்து

புல்லொழுக்கெல்லாம் பொட்டெனப்போக்கி
நல்லொழுக்கந்தனை நல்லணியெனக்கொண்
டிரவுநன்பகலு மிடைவிடாதென்றும்
படியெலாந்தாயகம் பரம்பான்றன்னையும்
அடியர்கடம்மையு மகமலர்தனினிறீஇப்
புலனுமுன்புடன் பூசனைபுரிந்திடும்
நலமுடையவர்வை ணவசிகாமணிகளாம்
இன்னனேர்ந்தொகை யெஞ்சுமிந்நாடனில்
தன்னனேர்ந்தொகை தழைப்பானினைந்து
அரிசரணடைந்தவ ரவித்தையாகிலோ
அரிசமயக்கிலை யதன்பொருள்கட்குத்
கருப்பணமாகவுந் தரிசனந்தனைநல
விருப்புடனுணர்வார் விழைபழம்பாடம்
ஆகவுமென்னனே ரவாவினமேற்கொண்
டோதையினடியர்தம் மொள்ளடியேத்தெடுத்
தந்தமிலாகொளி ரந்தாமத்திரு
மாமணிமண்டபம் வழிமுறையடைந்து
மாமணிமார்பினன் மாணடிதொழுதுய
ஆரியராழ்வா ரசசுதன்றுதிகளும்
வாரிசேரருண்மண வாளமாமுனிக்குந்
தெருணிதியெதிபதிச் செல்வன்றனக்கும்
அருணிதியாகுகம் மாழ்வார்தமக்கும்
உதித்தபேரன்புடன் றுதித்திடவொவ்வோர்
வான்மணிபோலொளிர் கான்மணிமாலையும்
நீதியினுறையுளா மாதியோகிகள்
மூவர்கடமக்குமோர் மும்மணிக்கோவையுந்
தேவர்கணையகன் றிருவருளாலுறூஉம்
மேதையோர்புகழ்திருக் கோதைநாயகிக்கும்
இமிழ்திரைக்கடல்வரு மமிழ்தினுமினியதாஞ்
சொல்லியாம்வேத வல்லியாய்தனக்குந்
திருப்பணிக்குழாத் துருப்பிணித்தாய்க்கும்
மன்னணிமாமலர் மங்கையாய்தனக்கும்
பின்னமிலாதினைப் பெற்றதாய்தனக்கும்
மெல்லியற்கனக வல்லியன்னைக்கும்
ஓவியவியற்பெருந் தேவியன்னைக்கும்
பொங்கொளியலர்மேன் மங்கையம்மனைக்கும்
நிகரில்சீரரங்க நகரன்னைக்கும்

எவ்வெவருந்தொழ வொவ்வொர்பாமாலையும்
பார்த்தசாரதியெனப் பகர்ந்திடும்பரஞ்சுடர்
மூர்த்திக்கினியவா மூன்றுசொன்மாலையும்
உலகினில்வாழ்தரு மலகிலாவுயிர்கள்பால்
வாரமாருளத்தெம் வீரராகவப்
பெருமான்றனக்கு மிருமாநிலத்திற்
றிகழ்புகழரங்க நகரப்பனுக்குந்
தேற்றமாயொவ்வொரு மாற்றமாலையும்
அத்திகிரியிசை யமைசேடகிரிக்
கொத்தவந்தாதியென் றுரையிசைமாலையுந்
தொண்டைநன்னாட்டினிற் சுரக்குநல்வளங்கெழூஉம்
பண்டையவாந்திருப் பதிகளோரிருபான்
இரண்டினுக்குந்தவத் திரண்டபேரன்புடன்
மனத்தினிற்றெழுதெழத் தனித்தனியொவ்வோர்
பஞ்சரத்தினப் பனுவனன்மாலையும்
இயற்றியுடனே யியற்றியாங்கியைத்
தேசந்திகழ்ந்திடச் செங்கோல்செலுத்திடும்
அறனையுந்திறனையு மறிஞர்கணுடொறும்
பேசுபெரும்புகழ் பெறும்பேரரசியாம்
அன்னவிக்டோரியா வென்னுநற்பெயரினள்
இந்துதேசத்துவா விந்துவினெளிர்தருஞ்
சக்கரவர்த்தினி புக்கரசியற்றிடுங்
காலையிற்கருவியாங் கருமுகிறவம்பல
சோலைசூழ்புரைசைத் தொல்பதியதன்கண்
வியனுறுமயோத்தியா ளயனெனும்பெருமகன்
றருமகன்றசரத சக்கரவர்த்திதன்
றிருமன்சார்ங்கவிற் சேவகனமரர்கள்
தங்கியடியர்க டயாநிதிவாழ்தருஞ்
சங்கிமுன்னெணைத் தகுங்கையுச்சமைம்
ஒன்றுமையாயிரத் தொன்றினில்விகாரி
வருடங்கடக மதியமுன்பக்கம்
செப்புமேழாந்தக மூப்பதாந்தெய்தியில்
ஆதிவாரம்வருஞ் சோதநாடன்னிற்
கவியரங்கேற்றினன் கவிவல்லுநர்களும்
புவியரும்புகழ்தமிழ்ப் புலமைசான்றோன்
எழுங்கதிரவனொளி மழுங்கவெஞ்ஞான்று
ஈங்காதொளிர்திரு நாடுபெற்றுய்வான்

ஐந்தாமுபாயமே யரணைக்கொண்டோன்
தப்பொழுக்கினைநற் றவவொழுக்கினராச்
செப்பமாச்செய்திடுஞ் சித்தகுளிகையிற்
நிலம்புகழ்சீர்கரு ணீகர்குலப்பதி
நலம்பெறுநாரா யணநன்னுவலன்
தவப்பயனெனவரு தநயன்லல்விநயன்
நிவப்புறவோங்கி நீடுவளம்பெறும்
புரசையம்பதியினிற் புலவர்தந்திலகனுய்
முட்டொன்றின்றியே யட்டாவதானம்
இயற்றியிசைசெழூஉ மியற்றமிழ்ச்சபாபதிக்
குரவன்றனையடித் துரநல்குவதாங்
கனவிலக்கியவிலக் கணதூல்கற்றோன்
மாடகூடங்களார் கூட லூர்வாழ்தரும்
முதலியாண்டானென நுதல்பெருந்தகையுழித்
தரிசனக்கலைப்பொருள் கரிசறக்கற்றோன்
விரிபயோதியிடை வரியராவணைமிசைப்
பள்ளிகொண்டருளெம் பரம்பரன்பதந்தொழும்
பள்ளிகொண்டானெனும் பாவலோனே.

புவனகிரி ப்ரபந்தவித்வான் ஸ்ரீமான்

அழகியமணவாள தாசரவர்க ளியற்றிய

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

மதிமேவு மாரியர்க ளாழ்வார்கண் மாதவன்
மலரடி முனைந்துதித்து
மறைமுதற் றனிமுதல்வ னுமெந்தை மலர்மங்கை
மதுபமூரல் கோதையாண்டாள்

கதிமேவு பிரபத்தி நெறிகாட்டு மெதிராசர்
கருணைபொழி வரவரமுனி
கன்னித் தமிழ்ச்சுருதி யோகிமுத லாழ்வார்கள்
கண்ணுமிவர் கழலிணைகண்மேற்

நுதிமேவு பாவணிகள் சொன்னயம் பொருணயந்
தோன்றத் தொகுத்தணிந்தான்
தூயமா றரிசனத் தொல்கலைப் பொருளோர்ந்த
சுகுணன்வள மேவுபுரசைப்

பதிமேவு செம்மன்மெய் யுணர்வுற்ற பாகவதர்
பண்பே பழிச்சுமுரவோன்
பாமகள் விலாசனம் பள்ளிகொண் டானெனப்
பகர்பெயர்கொள் பருணிதனரோ.

கோயம்புத்தூரைச்சார்ந்த பூலுமேட்டிலிருக்கும்

வித்வான் ஸ்ரீமான்

வேணுகோபாலசாமி நாயுடவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தங்கள்.

உலகமெலா மோதத்தி னுறுவலுரு துகந்துண்டஃதொ
ழியுங் காலை, இலகவுமிழ்ந் களிக்குமெம்மா னிறைவர்
தமக் கிறைவனென விழிபொன் றில்லா,அலகறுசீ ராரண
த்தி னந்தமறை தலையறிந்த வறிஞர் தம்மிற், றிலகமெனத்
திகழ்பெரியர் சேவடியே தஞ்சமெனத் தெளிந்த சீலன்.(அ)

மாதவன்போ னீண்டபெரு மாப்புகழோ னவன்கழ
னீர் மானுங் தூயோன், ஆதவன்போல் வாய்மை யுள்ளோ
னரிந்தமன்ற னடிக்கன்பி லம்ப ரீடன, நீதவன்போ டருண்
முதலா நிகழ்த்திடுநற் குணங்களுக்கோர் நிலய மானோன்,
நீதவன்போழ் செல்வத்திற் கயிங்கரியச் செல்வமே சிறந்த
தென்போன். (உ)

உத்தமதத் துவமூன்றி னுட்பொருளி னுண்மைநிலை
யுணர்ந்தோன் வேத,விந்தமர்சொல் விசிட்டாத்து விதசித்
காந் தத்தையெங்கும் விளங்கச் செய்வோன், மத்தமதா
வளத்தினிரு மருப்பொசித்தோன் மலரடியை மறவா தென
ன்றுஞ், சித்தமத னிடையிருத்திக் திறம்பாமற் றினந்தோ
றுஞ் சிந்தைசெய்வோன். (ஊ)

ஆழ்வார்க ளாரியர்க ளருளிச்செய் யருங்கலையி ன
மைந்த மோக்க, வாழ்வார்மந் தணப்பொருடேர் வைணவ
ர்தாட் டெரியாம் வாழ்வு கப்போன், ஊழ்வாட்டு முலகசு
ரு வுரைத்தவொண்ணூற் பொருளெலா மொளிரு ளத்
தோன், கேழ்வானோர் குருவேபோற் கேள்வியுள்ளோ ன
னுட்டானக் கிரமம் வாய்ந்தோன். (எ)

சீரகத்தின் மும்மைமறை நூல்கடமிற் செறிந்தபொ
ருட் டேர்ச்சி மிகுகோன், பேரகத்தி யங்தொல்காப் பிய
மும்மைவைக் கிலக்கியமாம் பெருநூல் யாவும், ஓரகத்தினுற
க்கற்ற வொள்ளியோ ருழுக்கற்ற வரவோன் வேலைப், பார
கத்திற் பண்டையா ரியற்கணடை பாராட்டும் பண்பின் மிக்
கோன். (சு)

இத்தகையார் பள்ளிகொண்டா னெனும்பெயரொம்
மேந்தலிரு மறையு மோர்ந்த, சித்தன்வர யோகியெதி பதி
குருகைச செம்மலிவர் சிறந்த சீர்த்திக், கொத்தகான் ம
ணிமாலை முதலாழ்வார் மூவர்கட்கு முரவோ னென்னும்,
கத்துமும் மணிகோவை நற்புதுவை வருகோதை நாய
கிக்கும், (சூ)

அல்லியங்கே ணிப்பதிவாழ் வேதவல்லி யுருப்பிணி
யா மன்னு மார்க்கும், கல்லியனீர் மலிகின்றை யெவ்வுள்
கச்சி நகர்சுகனூர் கல்ல ரங்கம், புல்லிவா ழுன்னையர்க்குக்
கனித்தனியே தமிழ்ச்சொன்மணம் பொங்கு மாலை, சொல்
லியற்கை ரவக்கேணிப் பார்த்தன்றன் சாரதியாங் தொல்
லோனுக்கும், (எ)

எவ்வுளரங் கப்பதிவா ழிறைவர்கட்குக் கனித்தனி
யோ ரின்சொன் மாலை, அவ்வுளரும் பொருளத்தி யரவம
லை யார்களுககங் காதி மாலை, இவ்வுலகிற் முண்டைக
ன்னுட் டிருக்குமிரு பானிரண்டென் றிசைக்குஞ்சீர்சால்,
செவ்வியபெறும் பதித்திருமால் களுக்கொவ்வோர் பஞ்சர
த்தைச் செய்யுண்மாலை, (அ)

குழுவல்வினை மற்றவற்றின் காரணகா ரியங்கணனி
குலந்து நீங்கி, வழுவலில்சீ ரந்தாழ வாணர்குழுக் கூடி-
யென்றும் வாழும் வண்ணம், உழுவலன்பி னியற்றியவ ரவ
ருபயத் திருவடியி லுகந்த ணிந்தான், நழுவலிலா ரவச்சு
வையா ரம்மாலை களினணுகு நயங்க ணுடின், (கூ)

புவிப்புலவர் தொழும்பதின்மர் தமிழ்மறையின் சார
மெலாம் பொதிந்த வென்கோ, கவிப்புலவர் புகழ்கம்பன்
கவிகளினன் னயங்களெலாங் கலந்த வென்கோ, செவிப்
புலனுக் கினியவிதி காசவற நெறிகளெலாஞ் செறிந்த
வென்கோ, அவிப்புலவ ரமிழ்தென்கோ வின்னவென
வுறையகிலே னவனி யீதே. (கஎ)

க்வான் பென்னலூர் - நாராயணசாமிநாயுடு புத்திரரும்
இந்நூலாசிரியர் மாணாக்கரு மொருவருமாகிய

நாதமுனிநாயுடவர்கள் இயற்றிய

நிலமணிமாலையாசிரியப்பா.

உலகருவருவரு ளுதவியபதினெண்
கலிகடம்மினுங் காட்சியாங்கண்பெறு
மேலோராய்ந்திடு நாலாயிரத்தினுங்
கருவைநந்தொழிக்குங் குருபரம்பரையினும்
மோசவதஞ்செயும் பாகவதத்தினும்
புராணமாம்விண்டு புராணத்தன்னினும்
இதிகாசங்களென் றிசைக்குமிரண்டினும்
மதிகாசொன்றிலா மானவதூவினுங
குற்றமற்றனவா மற்றநூல்களினும்
பாற்படப்பகுத்துரை பற்பலபொருள்களில்
ஏற்பனசிற்சில வெடுத்தெடுத்தாங்காங்
கணிபெறவமைத்திம் மணிபடுகடல்சூழ்
நாட்டோர்நாடொறுங் கூட்டுண்டுப்பான்
பார்மகள்விளைச்செம் பதுமாதேவியனுஞ்
சீர்மகணீலாச் செல்விநறுகொண்கன்வண்
புகழெனும்புணரியிற் புக்கென்றுங்குடைந்
தகமகிழாரிய சாழ்வார்களுக்கும்
ஆரியமறைச்சிரத் தச்சுதன்றனகருஞ்
சீரியதுதிகளாஞ் செய்யுண்மாலையும்
அரவரசாகிய வநந்தன்கலிவருஞ்
வரகுணனுமண வாளமாமுனிகருங்
கவித்தவவித்தையிற் காலத்துவமெலாந்
தவித்தலமருமிக் கராதலத்தோர்தமைத்
திருத்திச்சீதரன் றிருவடிக்காட்படும்
விருத்தியினமைக்கவிவ் விபுலவந்தவனென
உள்ளியோருள்ளத் தெள்ளியோருரைத்திடுங்
குதிபதிபாதத் தெதிபதிதனக்குங்
தெருட்சேநேசன் செழுங்கலிதனில்வரும்
அருட்சடகோபனென் றறைமுனிவரற்கும்
வலம்பெறும்வானவர் வைகுமந்தாம
நலம்பெறவொவ்வோர் நான்மணிமாலையும்
அஃகாவளத்திரு வெஃகாப்பதியுழி

அமலத்தடப்பொற் கமலக்கருவினும்
எல்லையிலிசைக்கடன் மல்லைமாநகர்வயின்
மாதவிபூத்தசோர் தாதவிழ்மலரினும்
வளங்கெழுமயிலையில் விளங்குமொர்கிணற்றறல்
பூத்தசெவ்வல்லியின் மாத்தகைக்கருவினும்
ஆவலினுதித்தரு ளாதியோகிகளாம்
மூவர்கடமக்குமோர் மும்மணிக்கோவையும்
நத்தூர்வளவயற் புத்தூர்வந்தருள்
போதநாயகியெனுங் கோதைநாயகிக்கும்
கல்லியலார்திரு வல்லியங்சேணிகற்
சொல்லியாம்வேத வல்லியாய்தனக்குங்
கருப்பிணிகளைந்திடு மூருப்பிணியனைக்குங்
துங்கமாநீர்மலை தங்கணிமாமலர்
மங்கையம்மனைக்குநீர் மாவளர்ன்றையில்
உற்றுறைபெண்ணைப் பெற்றதாய்தனக்கும்
எல்லிசேர்பொழிற்றிரு வெவ்வுள்வாழ்கனக
வல்லியன்னைக்குநல் வாரணமாமலை
மன்னிவாழ்பவளாய் மன்னுயிர்தமக்கெலாம்
ஆவியாகியபெருந் தேவியாய்தனக்கும்
அரிச்சிகன்றவழ்பொழிற் றிருச்சுகனூருறை
பொங்குசீரலர்மேன் மங்கையம்மனைக்கும்
நிகரறுமரங்க நகரன்னைக்குங்
கணித்தணிப்படிப்போர்க் கினித்திடவொவ்வோர்
பதமுறுபொருணயச் சதமணிமாலையும்
நல்லிககாதிய நாடொறும்விரோவயல்
அல்லிக்கேணியென் றறைந்திடும்பதியுறை
தீர்த்தக்கடீர்த்தராந் தெளிவிசும்போர்தொழும்
பார்த்தசாரதிப் பரம்பரன்றனக்கும்
படர்ந்தசீரொவ்வுட் கிடந்தமாறனக்கும்
நிகரில்சீரரங்க நகரப்பனுக்கும்
எவ்வெவர்தமக்கு மினித்திடவொவ்வொரு
நூறுமாமணியெனக் கூறுமாமாலையுங்
கைந்நாகச்சிலைக் கரிவரதனுககும்
பைந்நாகச்சிலைப் பரந்தாமனுக்கும்
நந்தாதிப்புவி நயந்திடச்சதுத்தொகை
அந்தாதிப்பே ரணிமணிமாலையுங்
தொண்டைநாட்டின்கண் மண்டிவிளங்குபூவம்

ஐங்கான்கிரண்டென வறைதிருப்பதிகளில்
எஞ்ஞான்றும்முறை யெம்பெருமான்களுக்
கிம்மணிக்கடலுல கிசைத்திடவொவ்வோர்
ஐம்மணிமாலையு மணிபெறவியற்றிப்
பணிந்தவரவர்திருப் பாததாமரைகளிற்
றிணிந்தபேரன்புடன் பணிந்தனனிணிந்தனன்
கைசெயற்கரியதோர் கல்வியங்கடலாய்ப்
புரைசையம்பதிவாழ் புலவர்தந்திலகனுய்
அட்டாவதானந் தட்டாதியற்றிடுஞ்
சுபாகரனெனச்சொலுஞ் சபாபதிமாலுழி
இலக்கியவிலக்கண விருநூற்பொருளெலாம்
அடுத்துச்செவியான் மடுத்துக்கற்றோன்
திருமாறரிசனச் செழுங்கலைப்பொருள்களுங்
கருமாலறுத்துநற் காட்சிதந்தருள்வதாஞ்
செந்தமிழாரணந் தந்தருள்பொருள்களுங்
தக்கோரறிவால் மிக்கோர்தாள்களுக்
கற்றோரு யருந்தொண்டியற்றிப்
பெற்றோன்பெரியனாப் பேணிடும்பெற்றியன்
சசக்கூடென்னுங் கவற்றண்டலைசூழ்
கொசப்பூதெனும்பெயர் கொண்டநற்பதியினன்
அன்னக்கொடியின ரம்புயமாலையர்
என்னப்புவியோ ரிசைத்திடமிசைகெழுஉஞ்
சீர்கருணீகன் பேர்கெழுகுலத்தினன்
திவ்யாங்கமாமுனிச் செழும்பெயர்க்கோத்திரன்
செவ்வியதாய்த்திகழ் திரியாங்கசூத்திரன்
உய்வழிக்குரியவா மெய்வழிநூலகளே
பாராயணஞ்செயும் பண்பினனுகிய
காராணமா னல்கியநந்தனன்
நாற்பொருட்பயத்தவா நூற்பொருளடியனேன்
கருத்தினிலமைத்திட வருத்தியிற்பன்முறை
யோதகாரியெனும் போதகாசிரியன்
பாலலைதன்னினு மாலிலைதன்னினும்
பள்ளிகொண்டருளெம் பரம்பரன்பதம்பணி
பள்ளிகொண்டானெனப் பகரியற்பெயரும்
நேசமாயெவருநிகழ்த்தெதிராச
காசனெனச்சொலுந் தாசியநாமமும்
பெற்றோனென்னுழிப் பெருகன்பென்னும்
பெற்றோனெச்செயும் பெருந்தகையோனே.

இந்நூலாசிரியர் மாணாக்கரும்

ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதரேணுவுமாகிய

திருவல்லிக்கேணி

சே – முத்துகிருஷ்ண நாயுடு இயற்றியவை.

சீரார்ந்துசெங்கமலை கேள்வனருளுற்பவச் செவ்வியிற்
பெறுசிறப்பாற் – றிகழ்சாத்துவீகனுய்த் திடஞான
மூடையனுய்த் தெளிவிசும்பெய்தவெண்ணுஞ்
சிந்தனையையுடையனு யாரியர்களாழ்வார்கள் சீதரன்று
திகண்முன்னுச் – சீர்த்திபெறுமணவாள மாமுனிக்கு
ந்தெருட் செல்வனு மெதிபதிக்குந்
தென்குருகைமாறனுக் குந்தனித்தனியே சிறந்தநான் மணி
மாலையுந் – தீர்த்தர்மூதலாழ்வார்கண் மூவர்கடமக்
குமோர் நிகழ்மும்மணிக்கோவையுஞ்
சிவில்லிபுத்தூரி னற்றுளவினடிவந்த சீர்க்கோதைநாயகி
க்குந் – திருவல்லிக்கேணிமறை வல்லியாய்க்குங்கருணை
சேருருப்பிணியனேக்கும்

நீரார்ந்குமலைவாழ் மணிகொண்மாமலர்மங்கை நித்தியை
க்குஞ்சோலைசூழ் – நின்றையென்னேப்பெற்ற தாய்க்
கும்வளரேந்கெவ்வு ணிலவுபொற்கொடியனேக்கும்
நிர்மைபெறுகச்சிப் பெருந்தேவியாய்க்குநில நீர்வளச்சுக
ஜூரில்வாழ் – நிமலையலர்மேன்மங்கை யன்னேக்குநி
கரில்புகழ் நீடரங்கத்தனேக்கும்
நிகமவொளிநீங்காது நிகழ்கைரவக்கேணிநிலையகங்கொண்
டபார்த்தன் – நெடுந்தேருகைத்தபெரு மானுக்குமூ
ரையெல்வு ணிகழ்வீரராகவற்கும்
நிறைசீரரங்கநகரப்பனுக்கும்பெருமை நேர்ந்தபொருண்
மணமாப்பயன் – நிலவுசொன்மலராத் தனித்தனிய
மைத்தநன் னிலைமைசேர்மாலைவகையும்

காரார்ந்குசேடநிரி மானுக்குமத்திநிரி கரிவரதமாயனுக்
குங் – கவினேந்குமந்தாதி யுந்தொண்டைநாட்டுத்
கலந்தவிருபானிரண்டாக
கனாதிருப்பந்திகடொறும் வாழுமெம்பெருமான் களுக்கொ
வ்வொர்பஞ்சரத்தக – கணனியுமியற்றியவ ரவர்திரு
க்கழல்களிற் சரையிலன்பாற்புனைந்தான்

:

கருணீகர்குலதிலக னென்னுநாராயணக் கலிவரேலான்கா
தன்மைந்தன் - கடிப்புரைசாட்டாவ தானச்சபாபதிக்
கவிஞர்பெருமானுழியிலக்
ணவிலக்கிய நூல்கள் கற்றுணர்ந்தோன்கணக் காவளக்கூ
டலூர்வாழ்-கருணைதிகழுதலியாண் டான்பாங்கர்மா
ன்மதக் கலிகளின்பொருளுணர்ந்தோன்

பாரோங்குகச்சிக் கடாம்பிராமாதுசப் பகவனடிபற்றியுய்ந்
தோன் - பரவுமகிழ்மாலைப் பராங்குசன்முதற்பதின்
மர் பவளவாயவதரித்த
பழையதமிழாரணப் பொருள்வைணவக்கலைப் பண்டிதர்க
ள்பாற்றெளிந்தோன் - பளகில்சிர்ப்பெரியவாச் சான்
பிள்ளைபுலகருபன்னுமவரிளவலென்னும்
பரஞானிமணவாள யோகிவரயோகியாம் பண்டையாரியர்
கலைகளிற் - பதிந்தபொருள்யாவும் பதிந்தவுளனென்
னுழிப் பரிவின்னோயினுமிக்கோன்
பகர்முதலியாண்டா னெனும்பரமபாவனன் பாலென்னையு
ய்த்தவள்ளல் - பள்ளிகொண்டானெனும் பேர்கொ
ளெம்மாரியன் பைந்தமிழ்ப்பாவலனரோ.

வேறு.

கண்டுழாய்மோலியருள் பெறும்விசிட்டாத்துவித சமயத்
தினன்சமமுடன் - றமமாகியாத்தும குணத்தினனூல்
வழித் தகழ்ஞானமுடனெழுக்கங்
கொண்டிலகுதூயவன் பிரபத்திநெறியினன் குருநிட்டை
யான்முமமறை - கூறுமூன்றுகார மேவிநவவிதமாக்
குறிக்குமுறவந்தெளிந்தோன்
பண்டைமறைசொல்லுமுத் தத்துவத்துண்மையைப் பள
கறத்தேர்ந்தருத்த - பஞ்சகமதன்பகுப் பைந்தினையு
மோர்ந்தவன் பாரதந்தியவிரதன்
புண்டரிகவாவிசூழ் பூகபுரிவாழுமதி புங்கவன்மருள்புக
லெனப் - புகுவாம்பள்ளிகொண் டானடித்துணைசி
ரம் புந்தினைத்தேத்துவனரோ.

வெண்பா.

தேனுதி யாயுலறிற் செப்புசுவைப் பல்பொருளும்
வானரமுது மதியேனை—ஆனசிர்ப்
பள்ளிகொண்டா னென்னும்பேர்ப் பாவலர்கோன் பாமாலைத்
தெள்ளமுதத் தேக்கையுளந் தேர்ந்து.

விண்டுகரி சனநாணல் வேகவீரை
வேலைகண்ட வேதியரும் வேலைவண்ணன்
தொண்டிதந்துய்க்குமே னாயருலக்குந்
தொண்டர்களுந் தத்தங்காட் டேரியென்னுந்
தொண்டனிழை நாற்றுகளைச் சாதிவற்சத்
நுரிசையின்பிற்கொண்டதனைத் தூயதாக்கிக்
கொண்டல்போற் கொண்டெனையும் தூயோனாக்கிக்
கொள்ளுவர்தம் பெருங்கைமைக ளுணத்திலனே.

மூலவிலக் கணவிலக் கியமுன்னீரை
முற்றுமுணர்ந்த மூதறிவான் முளைத்ததான
சிலமுயர்ந்த சீரியர்கான் சிறியேன்செய்யிச
சின்னூல்க ளனைத்தினுள்ளுஞ் செறிந்திருக்குங்
கூலமிலாச் சூற்றங்கள் கண்டுநுங்கள்
குழவிமிழற் நுங்குதலைக் குயில்கள்கேட்டுச்
சாலவளங் களித்தலைனக் களித்தனுகள்
சான்றுண்மைச் சாயலுக்குத் தக்கதாமே.

உலகினினூ லனைத்துமுணர்ந் தோருமில்லை
யொன்றுமுண ராதோரு மிலையுடற்கண்
உலவுகுணங் கண்மூன்றுங் கவியுரைப்போர்க்
குறுமேத நான்குமொழித் தோருமில்லை
நிலவுமிந்த நியாயவகை நெஞ்சத்தோர்ந்த
நெடுந்தகைமைப் பெரியரிந்தா னிகிலத்துள்ளுங்
குலவுசுற்றங் குறியார்க ளெனுங்குறிகோள்
கொண்டவனைக் சுவீகரணக் கொள்கின்றேனே.

அரங்கேற்றிய காலமும் இடமும்

அணிமேவுகலியாண்டு மாறனவதாரவாண் டையாயிரத்
தொன்றினில் - அறைதருமிகாரியாண் டாடிமுப்
பான்றெய்தி யதனில்வருசுகலபக்கம்
கணிமேவுசத்தமித் திதியிரவிகாள்சோதி நாடனில்வளங்
கொள்புரசை - நற்பதியிலிசைகெழூஉ மஞ்சனையின்
மைந்தனிரு நயனங்களிக்கவந்த
மணிமேவுமுடியுடைத் தயரதன்புதல்வனெம் வைதேகி
மதிழ்மணுளன் - வானவர்கடனிமுதல்வன் மேவிவா
ழ்சந்நிதியில் வண்டமிழ்ப்பள்ளிகொண்டான்
நிணிமேவுமன்பினெடு மாரியர்களாழ்வார்கள் செங்கமலை
மாலிவர்கண்மேற் - செப்புபாமாலைக ளரங்கேற்றினை
ன்புலவர் செவிமனங்களிகொள்ளவே.

இஃது பூர்வம் ஸ்கூல் இன்ஸ்பெக்டராயிருந்த
வ. லக்ஷ்மணநாயுடவர்கள் இயற்றியது.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

அடியில் வருவன, அவற்றுடன் சேர்த்திருக்கும் நூல்களை இயற்றிய கொ-பள்ளிகொண்டான்பிள்ளை என்பவர் அந் நூல்கள் இனிது முடிதற்பொருட்டுத் தன் தந்தையும் பிரதம குருவுமாகிய கொ-நாராயணபிள்ளை, இலக் கிய இலக்கணநூல்களைப் பயிற்றின புரசை-அஷ் டாவதானம்-சபாபதி முதலியார், இரகசிய கிரந்தங்களை ஓதுவித்த கூடலூர்-முதலியா ண்டான் தாஸர், பஞ்சசமஸ்கார பூர்வக மாக மந்திரமந்திரார்த்தங்களையுபதே சித்தருளிய ஸ்ரீமத்-உ-வே-கச்சிக் கடாம்பி-இராமாநுஜாசாரியார் முதலிய ஆசாரியர்கள், ஆழ் வார்கள், அநந்தகருட விஷ் வக்ஸேநர், பெரியபிராட் டியார், பரத்துவாதி பஞ்சகங்க ளாகிய பரவாசுதேவன் என்னும் இவர்கள் விடயமாகச் செய்த

துதிகவிகள்.

கொ-நாராயணபிள்ளை.

அரியோமென்றுதியிலக்கரமாதியடைவுடன்சொல்
பெரியோனையான்விளைப்போகத்திற்கிம்மையிற் பெற்றவுடற்
குரியோனைநாராயணனையுருளொற்றையூர்திகொளேழ்
பரியோனெனவுட்டிகழ்வாளைப்பேணிப்பழிச்சுவனே. (க)

புரசை-அஷ்டாவதானம்-சபாபதிமுதலியார்.

புரசைப்பதிவளரட்டாவதானப்புலவர்கணத்
தரசைத்தமிழ்க்கல்விவேட்டோர்திலைக்குமளக்கரினீள்
சரசைச்சபாபதிமாலையெப்போதினுந்தாழ்ந்துதொழுஞ்
சிரசைக்கரத்தைப்படைத்தேனிதுவுமென்செய்தவமே. ()

புரசைச்சபாபதிக்கோமான்பொருவில்புலவர்கணத்
தரசினமக்கன்புடையாரிலையென்றதிர்மணிநா
முரசறைந்தன்னேன்முகிற்கடப்பாட்டைமொழிந்திடமெய்ப்
பரசெடுப்பான்வம்மினென்னுடன்கல்விபயின்றவரே. (க)

கூடலூர்-முதலியாண்டான் தாஸர்.

நீண்டானைத்தீச்செயனற்செயலாகுந்திகழ்மணிப்பூண்
பூண்டானைமான்மதநூற்பொருளுள்ளம்புகுத்தியெனை
யாண்டானையாத்தனையங்கூடலூரண்ணலாமுதலி
யாண்டானெஞ்சேயணிவிளக்காகின்னகத்திருத்தே. ()

கச்சிக்கடாம்பி-இராமாநுஜாசாரியார்.

ஏராராத்தேயமாபமூதாழியெமுமதியைச்
சீராரபரமாரியன்சீநிவாசன்றன்சேய்மணியைத்
தாராரபுயனையிராமாநுசனெனுஞ்சற்குருவை
நாராரின்பால்வைத்துப்போற்றுதியென்றுமென்னன்னெஞ்சமே.

மெச்சிச்சகம்புகழ்மேம்பாடுடையனைமெய்ம்மைமறை
உச்சிப்பொருளெற்குரியனசெய்துரைத்தானைவளக்
கச்சிக்கடாம்பியிராமாநுசாரியக்கற்பகத்தை
இச்சித்தவெற்கென்குறைநல்விபூதியிரண்டினுமே. (கூ)

அஷ்டதிக்கஜங்கள்.

எட்டுக்கருபத்திபங்களினுங்காங்கிருந்திரும்பைத்
தொட்டுப்பொன்செய்திடும்வேதியிற்சேதகர்தோற்றுடைத்துக்
கட்டுப்படுத்திநங்கண்ணனுக்காட்செயக்கண்டிடுவான்
இட்டுப்பிறந்தம்மாரியொண்மையேத்துநெஞ்சே. (எ)

ஸ்ரீமணவாளமாமுனிகள்.

பணவாளரவணைப்பள்ளிகொண்மாயன்பரத்துவத்தைக்
குணவாளர்நெஞ்சிற்குறித்திடவந்தகுருமணியைத்
தணவாதுசீசயிலேசத்தனியனேச்சாற்றிநெஞ்சே
மணவாளயோகிமலரடிவாழ்த்துதிமாண்புறவே. (அ)

திருவாய்மொழிப்பிள்ளை.

மருவார்மலர்க்குழன்மாஞரகட்டின்மறவினையாற்
கருவாய்பிறவிகழிப்பானிருக்கின்கடையுரைசெய்
பெருவாய்மையோர்ந்தபெரியோர்கள்பேசும்பெரும்புகழார்
திருவாய்மொழிப்பிள்ளைசேவடிசிந்தனைசெய்குவனே. ()

பிள்ளைலோகாசார்யர்.

இலகாரியந்தமிழ்நூல்களினின்றுலகோர்களுய்யப்
பலகாரியகாரணங்கடொகுத்துப்பன்னூலியற்றத்
திலகாரியர்கள்செறிந்திடுங்கோயில்செனித்தபிள்ளை
யுலகாரியனடியென்னுளத்தென்றுமொளிர்தருமே. (கo)

வேதாந்ததேசிகர்.

வேதாந்தசூத்திரத்துக்கெம்மெதிபதிமெய்விளங்கப்
பாதாந்தமாகப்பணித்தநற்பாடியமாம்பயிர்க்கு
வாதாந்தகாரப்பகடழியாதுவன்காப்பினின்ற
வேதாந்ததேசிகன்முணம்முளத்திருள்வீட்டொளியே ()

வடக்குத்திருவீதிப்பிள்ளை.

கருவீதிநீக்குந்திருவரய்மொழியின்கருத்துணர்த்தும்
பெருவீதியாமுப்பத்தாறுயிரப்படிப்பேருரையைத்
தருவீதராகர்தலைவனங்கோயிலெச்சார்வடக்குத்
திருவீதிப்பிள்ளைதிருத்தாள்கருத்துடன்சேவிப்பனே. ()

பெரியவாச்சான்பிள்ளை.

ஒளியுருவாகுந்திருவாய்மொழிப்பொருளோர்ந்திடுவான்
தெளியுருவாகுமிருபாலுன்காயிரச்செவ்வுரைசெய்
அளியுருவாநம்பெரியவாச்சான்பிள்ளையங்கழலைக்
களியுருவாகுநெஞ்சேநின்கண்வைத்திநற் காப்பென்னவே.

நம்பிள்ளை.

உலகாரியப்பெயரோனடித்தோர்கட்குரன்கொளுத்தி
நலகாரியஞ்செய்யுநம்பூர்நம்பிள்ளைநலினமென
இலகாரியவடியேயென்னிதயத்திலேய்ந்திருக்கும்
அலகாரஞ்ஞானமிரிக்குமெய்ஞ்ஞானவலரியன்றே. (கச)

நஞ்சீயர்.

விழுமியஞானநிதியாம்வேதாந்தியிம்மேதினிமேற்
கெழுமியகீர்த்திநஞ்சீயரெந்நாளுங்கிளர்மதியோர்
தொழுமியற்சேவடிநெஞ்சேநினைமைத்தொன்றுதொட்டுக்
கழுமியபாவக்கடல்கடத்துங்கடமைக்கலமே. (கரு)

ஸ்ரீபராசரபட்டர்.

கஞ்சத்துணையெனவென்றுமென்கட்டுணைகாண்டுணையென்
நெஞ்சத்துணைநங்நிமலனருட்டுணைநீடுபொறி
வஞ்சத்துணைவளைவாட்டுந்துணைமுத்திவான்வழிக்கோர்
தஞ்சத்துணைநம்பராசரபட்டர்தந்தாட்டுணையே. (கசு)

எம்பார்.

அம்பார்கண்ணங்கனையாராசைநீத்தவறிஞர்கள்கோன்
எம்பாஎனுமம்மடிகளிவறிலாரிறைஞ்சும்
வம்பார்மலரடிவைகுந்தமீந்திடவல்லதென்று
நம்பாநம்பாதிருத்தனலமென்றனன்னெஞ்சமே. (கஎ)

எம்பெருமானார்.

எதிபதியெண்ணுமிரண்டுவிபூதியினடத்தும்
அதிபதியாரணத்தந்தப்பொருட்கோரகலுரைசெய்
மதிபதிமாசுணமன்னவதாரிமறையவர்தந்
துதிபதிபாதநெஞ்சேநமக்கென்றுத்துணைநிற்குமே. (கஅ)

பெரியநம்பிகள்.

நம்பிவழிபடுவோர்க்கெளியோன்பிறர்நண்ணரிய
அம்பியடியச்சுதற்குநமையென்றுமாட்படுப்பான்
தும்பிமுரல்பொழில்சூழ்கோயில்வந்தகொல்சீர்ப்பெரிய
நம்பியடிகளடிகணமக்கென்றுநற்றுணையே. (ககூ)

ஸ்ரீ ஆளவந்தார்.

சூளவஞ்செய்திலையென்றபயன்பன்னிசொல்லித்தன்னை
ஆளவந்தாரென்றழைத்தசிறப்பாக்கியர்பிறவிக்
கோளவந்தீர்க்கும்யமுனைத்துறைவர்குரைகழலை
நாளவம்போகாதிறைஞ்சிவழுத்துநிநன்னெஞ்சமே. (உ0)

மணக்கால்நம்பி.

குணக்காதிதிக்கினர்கொண்டாடுங்கீர்த்திக்குவாலுடைய
மணக்கானம்பிப்பெயர்மாதவன்பாதத்தைமத்தகத்தின்
வணக்காலுனையால்வளர்வீண்கருமம்வளைந்தமனத்
திணக்காற்றெழுதுவழுத்திநிநேப்பனிடரறவே. (உக)

உய்யக்கொண்டார்.

மண்டாரிக்கஞ்சக்கண்ணுய்யக்கொண்டார்தம்மலரடியைக்
கண்டாரிச்சந்தனக்கண்ணிகொண்டேத்திக்கவிக்குமனத்
தொண்டாரிச்சன்மத்தொடர்பறுத்துப்பரஞ்சோதிமய
விண்டாரிப்பற்றவிழுப்பதங்காண்குவர்மெய்ம்மையிதே. ()

ஸ்ரீமங்காதமுனிகள்.

அமிழ்தினுமாற்றவினிதாந்தமிழ்மறையாவுமுன்போல்
இமிழ்திரைஞாலத்திலங்கச்செய்நாதமுனிகளென்னும்
சிமிழ்திமிராரிநஞ்சிந்தையல்சீத்தொளிச்சின்மயமாய்
இமிழ்திவத்தேற்றுங்கண்ணேணியெனவதி யென்மனனே.

பொய்கையாழ்வார்.

செய்கைதிருந்திமுச்செம்பொருண்ஞானஞ்செறிந்துலகோர்
உய்கையடையவுயரிசைக்கச்சிவெஃகாவுதித்த
பொய்கைமுனிவனேப்போற்றுநெஞ்சேயவன்பொங்கருள்வாள்
கொய்கைசெயுநம்பவஞ்செய்வினையின்குழுவினையே. ()

பூதத்தாழ்வார்.

கடன்மல்லைவந்தநம்பூதத்தடிகள்கழறெழினஃ
தடன்மல்லைமாய்த்தோனடிக்காட்படுத்தியைம்பூதமய
உடன்மல்லைநீக்கிப்பஞ்சோபநிடண்மயமாயொளிரும்
உடன்மல்லைத்தந்துநமைமோக்கவீட்டின்பத்துய்த்திடுமே.

பேயாழ்வார்.

அயிலைப்பழிவிழியார்போகவாஞ்சையிலாழ்த்தவித்தைத்
துயிலைத்துடைத்துச்சுகம்பெறவெண்ணினென்றாயநெஞ்சே
மயிலைப்பதிமகதாக்கியமாமுனிமாமலர்த்தாள்
எயிலைத்துணைகொணமக்குப்பிறவியிடரில்லையே. (உசு)

திருமழிசையாழ்வார்.

பாரனைத்துள்ளினும்பண்புடைத்தென்னப்பகர்மழிசை
யூரனைத்தன்புகழோராதுதன்னெடுடன்றவரை
மாரனைவென்றுநம்மாயனையேத்திமகிழும்பத்தி
சாரனைச்சார்தியென்னெஞ்சேநஞ்சன்மத்தவறறுமே. ()

குலசேகராழ்வார்.

வில்லவர்கோன்மணியாரம்வவ்வாரெங்கள்விண்டுசித்தர்
நல்லவரென்றுநன்னகக்குடத்தத்தநம்பியிட
வல்லவனுமெங்குலசேகரப்பெருமாள்புகழைச்
சொல்லவல்லார்மனனேமோக்கமார்க்கத்துணைவர்களே.()

பெரியாழ்வார்.

சிட்டர்துதிசெகத்காரணன்றன்னைச்செழுமறையால்
எட்டர்புகழ்பஞ்சவனவைதன்னிலெடுத்துரைத்த
பட்டர்பிரான்றன்பதபங்கயத்தைப்பணிந்துதொழார்
இட்டர்களாயினுமன்னேர்களேவிட்டிருத்தனன்றே. (உக)

ஸ்ரீ ஆண்டாள்.

கருக்கோதைநீத்திடக்காகினியீர்நீர்கருதுதிரேல்
இருக்கோதையோவாப்புதுவையில்வந்தவிறைவியென்றுய்
திருக்கோதைதாயகிசெந்தாமரைமலர்ச்சேவடியின்
மருக்கோதைசூடிவணங்கிவழுத்துதிர்வைகலுமே. (ஈ0)

தொண்டரடிப்பொடியாழ்வார்.

அண்டங்குடிகொளகட்டோற்குநம்மையிங்காட்படுப்பான்
மண்டங்குடிவந்தமாதவன்மாணடிவாழ்த்துநெஞ்சே
துண்டங்குடிகளங்காதுகண்ணுநியதொக்கிடுமிப்
பிண்டங்குடிபோம்பெயர்த்தும்வருமெனும்பீரில்லையே. (சு)

திருப்பாணாழ்வார்.

பாகனவேதப்பசுந்தமிழாலிப்படருலக
மோகனரங்கன்றன்பாதாதிகேசமுறைதுதித்த
மாகனயோகிநம்பாண்பெருமாண்மறையோர்ந்தமுனி
வாகனபோகர்மலரடியெற்கென்றும்வான்முனையே. (சூ)

திருமங்கையாழ்வார்.

திருமங்கைகேள்வற்குமாறன்செய்செந்தமிழ்ச்செய்யமறைக்
கருமங்கமாறுமறையவனிக்கவதரித்த
திருமங்கைமன்னன்றிருவடிசிந்தனைசெய்யின்முத்தித்
தருமங்கைகூடும்பிறப்பாதித்துன்புந்தவிர்ந்திடுமே. (சூ)

மதுரகவியாழ்வார்.

சந்தாமரைக்கண்ணற்போற்றுதுதன்னைத்திருக்குருகை
வந்தாண்டமாறனேயேதெய்வமென்றுவழுத்தியநம்
ஐந்தாமுபாயத்தமைந்தோன்மதுரகவியடிகள்
அந்தாரடிகள்மனனேபவநோய்க்கருமருந்தே. (சூ)

நம்மாழ்வார்.

ஆயிரஞ்சாகைகொளாரணத்தந்தமடித்துரைக்கும்
ஆயிரநாமனுக்காயிரமோலியரிந்தமனுக்
காயிரஞ்செய்யுளளித்தகுருகையமலனடி
ஆயிரமாகவிரிபவநோய்நீரதகநெஞ்சே. (சூ)

சேணமுதலியார்.

ஐங்கோலனந்தகனரணனணிகளற்றுழியும்
ஐங்கோலத்தெந்தையைச்சேவிக்கவீண்டுமமரர்களுக்
கங்கோலத்தாட்சடகோபஞ்சித்திக்கவணிக்கரங்கொள்
செங்கோலர்சேனத்தலிவரடியிணைசேர்பவர்க்கே. (சூ)

பெரியதிருவடிக்கியனுர்.

போதத்துருவற்குப்பொன்முப்பதந்தந்தபூமகள்கோன்
நீதத்துலவமென்பண்பூண்டுவகைகிறைந்துநிற்கும்
வேதத்துருவன்வியாளாபரணன்விதைமைந்தன்
பாதத்துணைதுணைநெஞ்சேநாஞ்செல்லும்பரகதிக்கே. (சூ)

திருவனந்தாழ்வார்.

குருவனந்தாழ்பஃறலைமணித்தீபகுலமமைத்து
மருவனந்தாமமணிந்தென்றுந்தொண்டின்மகிழ்ந்துநிற்கும்
திருவனந்தாமத்தமரர்கள்கோட்டித்திலகனெனுந்
திருவனந்தாழ்வான்றிருவடிசிந்தனைசெய்திநெஞ்சே. (கூ)

பெரியபிராட்டியார்.

பங்கயத்தாள்மலராதனம்வாழ்ந்தருள்பார்க்கவிசெம்
பங்கயத்தாலோப்பரிவுடன்போற்றிப்பணிதிநெஞ்சே
பங்கயத்தாரலர்த்துங்கதிர்ச்சூனுபரமனுந்திப்
பங்கயத்தான்செய்யழிப்புப்படைப்புப்பயமிலையே. (கூ)

பரத்துவாதிபஞ்சகங்கள்.

ஐவகையாயிரஞ்சென்னிப்பணியேந்தவனியரை
ஐவகையானவினையிற்றிருத்தியடிமைகொள்வான்
ஐவகையானவடிவத்தமைந்தநம்மாதிதனை
ஐவகையானபொறியவித்தேத்தெனவலநெஞ்சே. (கூ0)

அர்ச்சை.

அடியாருகந்தவுருக்கொண்டருச்சகனண்டமுள்ளப்
படியேயொழுகியிப்பார்த்தளிவீட்டிற்பரிவுடனே
குடியேறியன்பர்குறித்தனநல்கிக்குலவுமர்ச்சை
வடிவாகுநம்பெருமானடிவாழ்த்திவணங்குநெஞ்சே.(கூக)

அந்தரியாமி.

நிலையாமுயிர்க்குட்சொரூபத்தினண்ணிநிறைந்துநின்றும்
நிலையாந்தன்விக்கிரகத்துடனுள்ளத்தினேர்ந்துநின்றும்
நிலையாகியமிக்குமந்தரியாமிநிமலன்பொற்றாள்
நிலையாநினைதிநெஞ்சேநித்யமுத்திநிலைபெறவே. (கூஉ)

விபவம்.

அலகிலதாய்க்கௌணமுக்கியமாகியவந்தரத்தால்
அலகில்முமூக்குக்களாதரஞ்செய்வனவல்லனவாய்
அலகிலிசைகொள்விபவாவதாரவடிகளடி
அலகில்விடயத்துழன்மனனேநின்னகத்திருத்தே. (கூங)

விபவபேதம்.

தாபாதிநீங்கியித்தாரணியோர்கடழைக்கும்வண்ணந்
தீபாதிதோன்றிடுந்தீபத்தினுங்கித்திகழ்பதும
நாபாதிநாலொன்பதுபேதமாம்விபவங்களேநம்
பாபாதிநீங்கிப்பரகதிநண்ணப்பணிதிநெஞ்சே. (கூச)

வியூகவாசுதேவர்.

கார்கொணித்யோதிதர்கட்டோன்றிநற்சங்கருடனெனன்
பேர்கொள்வியூகத்தின்காரணமாகிப்பிறங்கிநிற்குஞ்
சீர்கொள்வியூகவசுதேவனுகியசெல்வனேநம்
ஏர்கொள்சாந்தோதிதப்பேராஸையேத்தியிறைஞ்சுநெஞ்சே.

சங்கர்ஷணஸ்தி வியூகமூர்த்திகள்.

மும்மைத்தொழில்களுமற்றுங்கருமமுழுமுற்றுவிக்கும்
அம்மைபெறுசங்கருடனப்பேர்கொளமலன்முதற்
செம்மைவியூகனன்மூர்த்திகள்மூவர்திருவடியை
எம்மையுமேத்துதிநெஞ்சேபிறவியிடரறவே. (சசு)

கனவுநனவாதி வியூகபேதம்.

புல்லுமுபாசகராதியர்க்காப்பான்புகனனவு
வல்லகனவுசுழுத்திதுரியவடிவமைந்து
சொல்லும்வியூகங்களுன்கினும்வேறெனத்தோன்றியென்றும்
நல்லருணண்ணும்வியூகத்தின்பேதத்தைகாடுநெஞ்சே. ()

கேசவாதி வியூகபேதம்.

ஒண்பாலமாதியுழிஞ்முடற்புரந்துன்னுமவர்
கண்டாபமாதியகீர்த்திடகான்குவியூகநின்றும்
எண்ணுர்மும்மூன்றென்மிசைமூர்த்திகளாயிலங்கிவந்த
வண்கேசவாதிவியூகாந்தரத்தைவணங்குநெஞ்சே. (சஅ)

பரவாசுதேவர்.

அரவாதனமிசையந்தாமந்தன்னிலமர்தொழ
விரவாரியைகணம்மன்னியர்தம்முடன்வீற்றிருக்கும்
பரவாசுதேவனெனுநித்தியோதிதப்பாவனனைக்
கரவாதென்னெஞ்சேகருதிவழுத்திநின்கண்ணிருத்தே. ()

திருமாமணிமண்டபம்.

மணிமண்டொளித்திருகாட்டெட்டிதழ்ப்பதுமப்பொகுட்டார்
மணிமண்டரவணைமீதெம்பெருமான்மகிடியொடும்
மணிமண்டரிநித்தியர்மூத்தர்சூழ்ந்திடவாழ்திருமா
மணிமண்டபமென்மனமண்டபத்தென்றும்வாழியவே. ()

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமணவாளமாமுனிகள்

நான்மணிமாலை.

காப்பு.

மணிமாலைவாழ்த்துமணவாளமாமுனிவற்கொருநான்
மணிமாலைபாடிவனையமகிழ்ந்துநல்வாக்களிப்பன்
மணிமாலைமாய்த்திம்மகியோரைவாழ்விக்கவந்தமகிழ்
மணிமாலைமாறன்மறைத்தமிழ்செய்தநம்மாதவனே.

விதிகட்கிடமாம்வரவரயோகிதன்மெல்லடிக்கோர்
துதிகட்கிடத்ததொர்நான்மணிமாலையைச்சூட்டவெற்கு
நதிகட்கிறைசுற்றிஞ்ஞாலத்தைக்காக்கநயந்துவந்த
எதிகட்கிறைவனிராமாநுசன்செய்வனின்னருளே.

நூல்.

வெண்பா.

திங்கடவழ்தண்டலைசூழ்தென்குருகைவந்துதித்த
எங்கண்மணவாளமுனியேந்தலே—பொங்குபுகழ்ச்
சாகரனேமும்மையாந்தத்துவத்தினுண்மைநிலைக்
காகரனேமுத்தியருள். (க)

கட்டளைக்கலித்துறை.

அருளேயுருக்கொண்டதென்னுங்குருகையடிகள்சொற்ற
தெருளேய்மறையின்சிரப்பொருளாந்திருவாய்மொழியின்
பொருளேபுவியோர்ப்புரக்கும்பொருளெனும்புண்ணியவென்
மருளேமடித்தருள்வாய்வரயோகியென்மாதவனே. (உ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தவத்தோர்கள்வணங்குபெருந்தவத்தினுனே
தண்டாதவவித்தையெனுஞ்சலதியாழ்ந்த
அவத்தோரையந்தாமக்கரைசேர்ப்பிக்க
வவணந்தவருளம்பியேயனையநீராய்
திவத்தோர்கடிலகனேசீர்த்தஞான
தேசிகனேமணவாளயோகியேயென்

பவத்தோங்கொள்பவப்பிணியைப்பாற்றவல்ல
பண்டிதனென்றுன்பதத்தைப்பற்றினேனே. (ஈ)

நேரிசையாசிரியப்பா.

பற்றியபிறவிப் பற்றற்றவரும்
மூற்றியஞான மூதுவர்குழுவும்
எல்லையிலன்பொடு மென்றுமேத்தெதிக்குங்
தொல்லைமாமறைத் துழனித்தெனவும்
மாயிருஞால மகிழ்தரத்தோன்றிடும்
ஆயிரமருக்கரி னவிரொளித்தெனவுந்
துன்னியவண்டத் தொகுதிகளழியினுந்
தன்னியல்பழியாத் தகைமைத்தெனவும்
ஈறுறுபதங்களி னின்பமாறுதல்போல்
மாறுதலிலாச்சுக மயத்தெதென்னவும்
மித்தையொன்றிலதாய் மிளிர்பரியங்க
வித்தைவிளம்பிய வீதம்விளங்குறாஉம்
மாட்சிமைத்தெனவு மயர்வற்றடைந்தோர்
மீட்சியைத்தடுக்கு மிடுக்குடைத்தெனவும்
பன்னும்பரம பதத்திலெஞ்ஞான்று
மன்னுமலர்மகள் மகிணன்முத்தொழிற்கும்
மூன்றுருவாகிய மூதல்வனெவ்வுயிர்க்குஞ்
சான்றுருவாகிய தலைமகன்மெய்யுரை
நூற்பயனுக நுவலறம்பொருண்முதல்
நாற்பயன்களையு நயந்தோர்க்களிப்போன்
ஓல்கிளர்மறைக ளுரைக்குமார்த்தாதி
நால்வருநயக்கு நளினமென்றூளோன்
ஆரணத்தாரணத் தந்தத்தொளிர்தருங்
காரணவாக்கியக் கருப்பொருளாணை
அலகிலாவண்டமு மவற்றுள்ளுறைதரும்
உலகிலாவுயிர்களு மூடலமாக்கொண்டோன்
வேதவேதாந்த விழுப்பொருளான
நாதனரணனென நன்கறிபுலவன்
ஊனமின்ஞானமு முறுபத்திமையும்
நானவிராகமு நுவலுமெய்ந்நூல்களும்

உலகினர்க்குதவுவா னுள்ளுவந்தொருப்பட்
டிலகுமோர்வடிவ மெடுத்தெனத்தகைய
திருமலையாழ்வார் திருவடிப்புணையோய்
கருமலைஞானமுங் கைதூவாமையுங்
குண்டுநீர்க்குரவைக் குவலயத்தோர்கைக்
கொண்டுவாழ்தரச்செயுங் குரவர்தம்பெருமை
புண்ணியபுரிவொடு புந்தியினினைப்போர்க்
கண்ணியவாத்த வளக்கரினளவலா
அருள்குடிகொண்ட வகத்தவேதாந்தத்
தெருள்குடிகொண்டநற் சிந்தையசிற்பர
வரவரமுனிவ வயதுகாண்முதிர்ந்து
வரவரஞான வரம்பினைகனியிகந்
துவர்க்கத்தக்கவா முண்பொருளுவந்து
பவர்க்கத்தடையுமிப் பாவியேனுனின்
ஆட்சிக்கிழமைக் கமைந்தமெய்யடியவர்
மாட்சிப்பேரபி மாகத்தொதுங்கி
நல்வழிநடந்து நாளுமைம்பொறிகளை
வெல்வழிநின்றுநின் மேதகுசீர்த்தியைப்
பாடிக்கண்கள் பனித்துடல்புளகித்
தாடிக்களிப்பி னவசனாகி
உய்யும்விரகொன் றுரல்லை
செய்யுங்கடமைநின் றிருவருட்குரித்தே. (சு)

வெண்பா.

உரித்தாவர்நின்னடியரொள்ளகியைப்பொன்னுத்
திரித்தாக்கும்வேதியினென்றீங்கை—யிரித்து
மணவாளயோகியேமாத்தூயோனுக்கித்
தணவாதடிமைகொள்ளத்தான். (ரு)

கட்டளைக்கலித்துறை.

தானவர்தன்மையைத்தாங்கியுயிர்கடமைச்சவட்டி
மானவவேடத்தின்வைகுறுமென்னையும்வாழ்வித்தும்பூ
வானவர்தான்மறைவண்பொருள்வாய்ந்தமனமுடையோர்
ஆனவர்போற்றுமணவாளயோகியடிநிலையே. (சூ)

ஸ்ரீமணவாளமாமுனிகள் ஞான்மணிமாலை.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அடிநிலையெளிலாத்தவத்தளான
வந்தணத்தியாய்ச்சியெனுமபிதானத்தி
முடிநிலையிலிறைப்பொழுதுமுடித்தெஞ்ஞான்று
மூவாதபெருஞானமுற்றின்முள்
படிநிலையார்புகழ்கொண்மணவாளயோகிப்
பண்ணவவப்பாதுகையின்பாழிச்சீர்மை
கடிநிலைகொள்கமலவஞைக்கடவுளுக்குங்
கட்டுரைக்குந்தரத்ததன்றுகணிக்குங்காலே.

நேரிசையாசிரியப்பா.

காலவாஞை கடக்கநிலாவிஞ்
ஞாலவாணர்க ணூற்கதிப்பிறப்பிற்
பிறந்துபிறந்து பேரஞர்தலைப்பெய்
திறந்துபடுந்துய ரிரித்துக்காப்பான்
காரணகாரிய காரணனை
நாரணன்சைய நகத்தினின்றிழிதரு
பொன்னியாற்றிடைக்குறைப் புகறிருமங்கை
மன்னெழுத்தெட்டு மதிலோரேழுஞ்
சமானமுமதிகமுங் கலந்தெங்கணுமிலா
விமானமொன்றுமாய் மிளிர்திருவரங்கம்
பெரியகோயிலிற் பிரமனுதியர்க்கும்
அரியனுயரவஞை யறிதுயிலமர்தரும்
பூதநாயகன் புவிமகணுயகன்
வேதநாயகன் விழுவுறுமருச்சனை
நித்தமுநிரப்புக ணேர்ந்திடவியற்றிய
உத்தமநம்பியென் றுரைபெயரோனையும்
பூவிரிபொழில்களின் பொற்புடைத்தாய
காவிரியுந்தியிற் காலையுணுநீர்
ஆடப்படர்கா லன்புடனின்னுடன்
கூடப்படர்ந்துநீ குளிர்புனல்குடைந்திடும்
நீர்நிலைக்கண்ணே நீராட்டயர்தரு
நார்நிலைகொண்ட நற்சீவைணவன்

ஒப்பாவொருவரை யுறுபவனல்லா
அப்பாவெனும்பெய ரந்தணன்றன்னையுந்
திடத்தவன்பொடு செழுங்காய்கிழங்குகள்
மடத்துக்குதவி வந்தநன்மறையோன்
சித்தசஞ்ஜனையைச் செல்லாதடக்கிய
சித்தசுத்தஞ்ஞ் சிங்கரையனையுங்
கண்ணன்கழலிணை கருதுகந்தாடை
அண்ணன்முதல்வந் தடுத்தோர்தம்மையும்
வருத்தமின்றிநல் வழிபடர்ந்துய்வான்
திருத்தியாட்கொண்டரு டேசிகர்தேசிக
வரவரமுனிவநூல் வரம்பினிற்போர்க்குத்
திரவரமருள்செயுஞ் சிந்தாமணியே
தீயவழியிற் றிரிதந்துழலுமிந்
நாயனேயனேயு நல்வழிப்படுத்தி
நின்னடிக்கன்பர்க ணீசசிகர்த்தநற்
பொன்னடிக்கன்பரைப் பொருவுவோரெங்கணும்
இலரென்றவருழி யென்றும்
அலர்தருமன்பினை யருண்மதியெனக்கே. (அ)

வெண்பா.

னைக்குமணவாளமுனியேந்தலேயென்று
மனக்கினியதந்தைதாய்மற்றுங்—கனத்தகுரு
தெய்வமவன்சேவடியைச்சிந்தித்திருத்தலெனக்
குய்யும்வழியென்பனோர்ந்து. (கூ)

கட்டளைக்கலித்துறை.

ஓர்திவரவரயோகியொண்பாதமுபாயமென்று
தேர்திநெஞ்சேயதுதிண்ணநற்பேறென்றுசிக்கெனவே
சார்தியவனடியாரைநிதநற்றகைப்பணவ
ஊர்திவருநமையந்தாமவீட்டின்பத்துய்த்திடவே. (கo)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உய்த்துணர்ந்தின்றெனறுரைப்பனோர்நெஞ்சே
யுந்திபூத்தவனையுற்றோர்க்கொளிர்வீட்டின்பந்
துய்த்தறியாலையினுந்தொலையுமன்னென்றெண்டர்த்
தொழுமவர்கட்கொருகாலுந்தொலையாதென்ப

மொய்த்தமுரண்வினையுணிற்குமீமூப்போதும்
முதமுடனம்மணவாளமுனிவன்பாதம்
மெய்த்தலிலாதேத்துதியேலினையின்மாயை
யிகல்வெல்வோமெழுபிறவியிடர்வெல்வோமே.(கக)

நேரிசையாசிரியப்பா.

வென்றைம்பொறியெனும் வேடரையாள்பவர்
நின்றவாநில்லா நெஞ்சகந்தன்னையும்
ஒருங்கிடச்செய்யு முபாயம்வல்லுநர்
ஒருங்கிருசெருக்கையு மொழித்தநல்லுரவோர்
அவச்செல்வத்தி னவாவினையறுத்தோர்
தவச்செல்வத்தின் சால்பினைப்பொறுத்தோர்
பத்திநெறியிற் படர்குநர்பழிப்பிலா
முத்திநெறியின் முயல்குநர்சூழ்ந்திடக்
கும்பமுனிவரன் குடிகொண்டிருக்கும்
வம்பவிழ்சோலைகள் வான்முட்டோங்கும்
பொதியகின்றிழிதரு பொருநைப்பெயர்த்தாம்
நதியமர்கரைக்க ணல்லோர்பலருறை
குருகூருதித்த குணநிதிபராங்குசன்
முருகூர்மகிழ்த்தொடை மொய்ம்பினன்மாறன்
ஈனமின்மறைகளே யிருந்தமிழ்செய்த
ஞானதேசிக ணண்மட்டமச்சம்
பயிர்ப்பெனுங்குணங்கள் படைத்தோள்கற்பெனும்
அயிர்ப்பொன்றில்லா வரும்பெறற்பேற்மூள்
உடையநங்கைப்பெய ருத்தமிமுன்னர்
நடைபெறுதூவுரை நல்வழிநின்று
தொல்லைமாயவன் சுடரடிதமைநினைந்
தெல்லையில்கால மியற்றியதவத்துடன்
காலினுமுருளினுங் கறங்கூசலினுஞ்
சாலவுமலமரு தன்மைத்தாகிய
பவப்பிணியொழியவிப் பரவைசூழ்பாருளோர்
தவப்பலநாள்செய் தவத்தொகைகூடியோர்

திருக்கிளருருவாய்த் திரண்டெனத்தகைய
தருக்கிலாஞானச் சடகோபன்ருள்
நிறைதருமன்புட னிச்சலும்வழிபட்
டிறைதருகாலையி லோர்நள்ளிரவில்
இழுக்காறிலாநின் னிரும்பெருமையைக்கண்
டழுக்காற்றுழுகிடு மசுரயோனிகளாய்
மருளற்றிம்மகி மாந்தர்களுய்வான்
அருளிச்செயல்களி னரும்பொருள்விளங்கநீ
காலக்கேபக் கடன்கழித்தநுதினம்
ஓலக்கத்துட னுவந்தினிதிருக்குந்
திருமடந்தன்னிற் றீயைவைத்துத்தம்
பெருமடங்காட்டிய பிசுனராய்ப்பேர்க்கொணுப்
பரக்கழிபூண்டவப் பதகர்களுய்பாக்
கிரக்கமிக்குடையநல் லிதயத்தவர்க்குங்
கச்சிமாநகரிற் கலித்தொகைகற்றோர்
மெச்சுசீபாடிய மேதகவுரைத்த
*ஆரியன்றனக்கு மரங்கமாநகர்க்கட்
சீரியஞானச் செல்வியாகுமோர்
§அம்மையார்தமக்கு மகந்தனுகுநின்
செம்மையாங்கோலச் சேவைகாட்டிய
திருவருட்குறையுளாந் தெள்ளியசிந்தைய
வரவரமுனிவநின் வண்கழற்றுணைக்கன்
புடையேன்போனடித் தொழுகாநிற்குங்
கடையேன்றனக்குமக் காட்சிதந்தெனது
பண்டைவல்வினை பாற்றித்
தொண்டுகொண்டருளத் துணிதனின்கடனே. (கஉ)

வெண்பா.

நின்னைவழுத்திநெடிதுவழிபடுமென்
முன்னைவினையின்முதறடிந்—தென்னை
மணவாளமாமுனிவமாண்புடனிற்போற்றுங்
குணவாளர்தங்குழுவிற்கூட்டு. (கங)

---

*கடாம்பிநாயனூர். §சடகோபக்கொற்றியார்.

கட்டளைக்கலித்துறை.

கூட்டந்தளர்ந்துளமேங்கொடுவினைகூசியுட்கி
ஓட்டந்தொளிக்கவுழிநேடுநம்மதுடற்பிறவி
வாட்டந்தவிர்க்கவரும்வரயோகியைவாழ்த்துந்தொண்டர்
ஈட்டந்தனைக்கண்டுநாட்டங்களின்பெய்துமெல்வையினே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எல்வையெலாமிகையவர்சிற்றின்பமிச்சித்
திகந்தனனிப்போதியமனேவனிற்போர்
வல்விரைந்துவந்தென்னேவதைக்குங்கால
வரையறையுமணித்தாயிற்றைவர்தம்மை
வெல்விரகமணவாளமுனிவனின்கேழ்
விரைமலர்த்தாள்வேட்டடைந்தேன்வெறுக்காதென்னை
நல்வைகுந்தநகர்கொடுபோய்நாரூமம்மா
னற்பணிசெய்திருக்கவருணல்கிடாயே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

ஆய்ந்தநூலறிவின ரதற்கியைநடையினர்
தோய்ந்தநூன்மார்பினர் தொகையிறந்தோர்கள்
வழுவாத்தரிசனம் வளர்ப்போரான
எழுபாணன்கெனு மெழுமுரியாதனர்
துன்னிருசெருக்கையுந் துடைத்தவரான
பன்னீராயிரம் பரமேகாந்திகள்
சித்தசனங்கணைச் செருக்கினையடக்கிய
உத்தமாச்சிரமிக ளோரெழுநூற்றுவர்
புனைநம்பிறவிப் புணரிக்கெனவந்
தினையடியடைந்தவ ரெண்ணிறந்தோர்கள்
தற்புடைசூழ்தரத் தரணியோர்ப்புரக்கும்
அற்பிலைலக்கத் தமர்ந்துவீற்றிருந்த
படிவர்சிகாமணி பற்றறுஞான
வடிவர்சிகாமணி வைணவசிகாமணி
நேடியமுறைப்படி நிகமாந்தசூத்திர
பாடியம்பகர்ந்தருள் பண்டிதசிகாமணி
தெரியாவுயிர்ப்பொரு டெரிக்குங்கண்மணி
இரியாவவித்தை யிருடெறும்விண்மணி
ஆரியர்னந்தலை யமரரதமணி
பூரியர்கைப்படாப் போதசிந்தாமணி

அன்புடையோர்கட் கருளம்புயநிதி
துன்புடையோர்துயர் துடைவலம்புரிநிதி
துதிகட்கிடந்தருஞ் சுகுணவாரிதியாம்
எதிகட்கிறைவ னிறைக்கரத்தேந்துமுத்
தண்டமெனும்பெயர் கொண்டபெருந்தகை
எண்டிசையும்புக ழிலங்குமுமாண்டகை
நுதலியஞானமு நுண்ணெழுக்கமுமுள
முதலியாண்டான்றன் முதுமரபினராம்
அண்ணன்முதலோ ரனைவருங்கும்பமும்
அண்ணலெறும்பியி லமரப்பாவும்
ஒப்பில்லவரா யுலகெடுத்துரைக்கும்
அப்பிள்ளான்முத லறிஞர்கள்யாவரும்
மூற்றியவன்பினின் மூழ்கினராகிப்
பற்றியபெரும்புகழ்ப் பாதபங்கேருக
வரவரமுனிவவல் வஞ்சகன்பொய்யன்
கரவடனுகிய கயவனேனையும்
நின்னருளென்ன நிகழ்த்தும்வேதகப்
பொன்னிணற்றெட்டுறப் புனிதனுக்கியென்
விடியாவல்லிருள் விடிந்திடச்செய்து
வடியாப்பவக்கடல் வற்றுவித்தடியவர்
நார்த்துதிசேர்திரு நாட்டிற்
சேர்த்தனின்கடனெனத் திண்ணநம்பினனே. (ககூ)

வெண்பா.

நம்பினேர்க்குண்டிருநாடென்றனன்னெஞ்சே
நம்பலிரார்க்கென்றுமந்தநாடில்லை—கம்பின்
மணியுருவத்தெந்தைமணவாளயோகிப்
பணியுருவத்தோங்கும்பதம். (கள)

கட்டளைக்கலித்துறை.

பதமாம்பதத்தொடுபாறயிரூட்டிப்பருக்கச்செய்புற்
புதமாம்புரத்துயிர்ப்புந்திசெய்நெஞ்சேபுதவரர்கட்
கிதமாம்பொருள்சொன்மணவாளயோகியையெண்ணுதியேற்
சதமாம்பதந்தருந்தத்துவஞானந்தலைப்படுமே. (கஅ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தலைப்பட்டபெருமாயைதானேயுட்கித்தணக்குந்தருணிமார்கண்
வலைப்பட்டநீயுமுயர்வாழ் வடைந்துவாழ்தியினிவருமோரன்னை

மூலைப்பட்டபாலருந்தமுயல்பிறவிவாராதுமுத்தியுண்டாம்
நிலைப்பட்டநீர்மைகொணம்வரயோகியதிதமுநினைதிநெஞ்சே.

நிலைமண்டிலவாசிரியப்பா.

நெஞ்சகநிறையிரு ணீக்கிடுஞ்சவிதா
வஞ்சகர்வாதமாம் வைப்போர்க்கனற்பொறி
துறவுச்சுடரினைத் துலக்குந்தூண்டுகோல்
பிறவிப்பிணிதனைப் பேர்த்திடுநல்லுறை
சுருதிசாரஞ்சுகத் தூவொழுக்காதிசொல்
மிருதிசாரந்தமின் மிக்கதொன்றில்லதாம்
புராணமறைப்பொருள் பொதிதரும்பதினெண்
புராணசாரம்புகழ்ப் பூடணத்தனவெனக்
கற்றவர்புகழிதி காசசாரம்மெனற்
குற்றனவாக வுலகாரியனெனும்
எந்தையெம்மடிக ளிலங்குமெவ்வுயிர்க்குந்
தந்தைபோற்பரிவுறூஉந் தண்ணளிக்கடலனுன்
அந்தணர்முதலியோ ரறிந்துயவியற்றிய
மந்தணப்பதினெண் மாக்கலைதம்மின்
முத்தத்துவநூல் மூவிரகசியநூல்
புத்தமுதாஞ்சொற் பூடணப்பெருநூல்
வாயழகிய மணவாளப்பெருமா
ணையனருளிய நல்லாசாரிய
இதயமென்ன வியம்புநூல்ஞான
உதயமிலார்க்கஃ துதிப்பிப்பவரென்
றம்புவிபோற்றரு ளாளப்பெருமா
ளெம்பெருமானு ரிருங்கலையாவையும்
பன்முறையாய்ந்து பயன்படுபொருளெலாந்
தொன்முறையெடுத்துத் தொகுத்துத்திரட்டியி
நானிலமுயச்செய் ஞானசாரநூல்
மேனிலைதருபிர மேயசாரநூல்
என்னுமிவற்றுக் கினியவியாக்கியை
பன்னியிப்பரவைசூழ் பாரோர்க்குதவிய
வள்ளற்றன்மைகொள் வரவரமுனிவவெற்
கள்ளற்றுன்பினை யடைவிப்பவராம்
நவ்விநோக்கியர்சுக நரலியிற்படிந்தென்
செவ்வியெலாம்வீண் செய்தனனந்தோ
செய்வதொன்றறியேன் நீவினைதனினின்

றுய்வதொன்றறியே னுத்தமநின்னடி-
அடைக்கலமாக வடைந்தனனன்றமர்
படைக்கலங்காட்டிப் பற்களைக்கறித்துத்
திட்டித்தெழித்தெனைத் திரப்பாசத்தாற்
கட்டிப்பிடிக்கக் கனன்றெழுஉவருங்கால்
எந்தாய்நின்றம ரீட்டத்துடன்வந்
தந்தாமத்தெனை யடைவுடன்கொடுபோய்
அடியார்பணியி னமைத்தனல்லருளால்
நெடியாய்சாலவு நினக்கறமாமே. (உ0)

வெண்பா.

அறத்தாற்றிற்செல்லவழுங்குவேனின்னு
மறத்தாற்றிற்செல்லமகிழ்வேன்—றிறத்தில்
அருத்தியெதிராசமுனிக்கன்பவெவன்செய்ய
இருத்தியோவின்றெற்கிசை. (உக)

கட்டளைக்கலித்துறை.

இசையோங்குமுத்தர்தமேற்றமும்பத்தரிழிதகவும்
மிசையோங்கிடும்புருடோத்தமன்மேன்மைமிகுநிலையும்
நசையோங்குநெஞ்சேநமக்குப்புலப்படுநன்னரெட்டுத்
திசையோங்கியபுகழ்நம்வரயோகியைச்சிந்திக்கினே.(உஉ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிந்தித்துத்தொழுஞ்சேடச்சிலம்பினுற்குச்
செற்றூர்தம்பயங்கரனுமண்ணன்மேனுள்
வந்தித்துமஞ்சனநீர்வழங்குநாளின்
மணவத்துவிரவாதுவறிதிருக்கச்
சந்தித்தோனின்பெருமைசாற்றக்கேட்டுத்
தானிருக்கமணவாளவள்ளாலங்கீர்
கந்தித்ததெற்றையினுங்கழிமிக்கென்று
கட்டுரைக்குந்திறனெவனேகாண்கிலேனே. (உங)

நிலமண்டிலவாசிரியப்பா.

காணற்கவணமே பேணற்குரியராம்
உயர்ந்தோர்தம்மை யயர்ந்திகழாமை
புகழ்பெறவேண்டி யிகழ்விலராத்தினை
நயந்துசெய்யாமை பயந்ததுதினமும்
மனமொழிமெய்களாற் கனவினும்பிறர்கட்

குயவுசெய்யாமை யயலவர்நம்மை
வருத்தினுமனத்தில் வருத்தமுறுமை
ஆத்துமஞானம் பூத்தொளிர்தரவருள்
ஆரியன்றனிதஞ் சீரியவன்புடன்
வழிபடல்வாழ்த்துதல் விழிபடகில்லா
உயிருணர்வுக்குமச் செயிரிலாவுணர்வைப்
பெறுவதற்குரித்தா யுறுநெறிதனக்கும்
வேண்டியதாகநூல் மாண்டகவுரைத்த
பெற்றியின்மனமொழிக் குற்றதாகிய
செப்பமுடைமையவ் வொப்பிலாநூலுரை
நுட்பமாம்பொருள்களிற் றிட்பநன்குடைமை
உயிர்ப்பொருளொழிந்த செயிர்ப்பொருளனைத்திலும்
உலாவுமனத்தைச் செலாதுநிறுத்துகை
அழியுமாலையவா மிழிதகவுடைய
பொருள்களிலுறும் பெருகுவர்ப்புடைமை
தேகமேயுயிரெனு மோகமின்மை
தனதலாப்பொருளைத் தனதுதனதெனுஞ்
செருக்கடையாமை யிருக்குநாளளவும்
மூவகைத்துன்பமு மோவிடாவென்னும்
நினைப்புமாகியகுண மனைத்துநினைத்தொழும்
எனக்குண்டாக நினக்கருள்வருமேல்
வரவரமுனிவ சுரவரர்தொழுதெழும்
ஒளிமயமாகிய தெளிவிசும்பெனது
கையதாமெனுமிது பொய்யலமெய்யே. (உசு)

வெண்பா.

மெய்யாகவைம்பொருளின்மேதைப்பைங்கூழ்விளையுஞ்
செய்யாகவென்மனத்தைச்செய்தனலால்—பொய்யாது
மண்ணவர்கள்போற்றுமணவாளமாமுனியாம்
பண்ணவன்றன்னுள்ளம்பரிந்து. (உஞ)

கட்டளைக்கலித்துறை.

பரிந்ததிருவுளத்தோனென்றுபாதலம்பார்விண்ணெங்கும்
விரிந்தபுகழ்மணவாளமுனிவன்விரைமலர்த்தாள்
மூரிந்தபின்னன்றிரைமோதுமுந்நீர்வைப்பின்மொக்குட்டன்னமை
தெரிந்தநெஞ்சேநம்புதிசேமவைப்பிற்சிறந்ததென்றே. ()

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிறந்தஞானமுமொழுக்குஞ்சிறிதுமில்லேன்
செய்துதிகள்கணிகைகுலத்தெரிவைமார்கட்
கறந்தெரிக்குமாறவலமாகுமென்றே
யழுங்குகின்றவெனக்கிரங்கியருளல்வேண்டிங்
கறந்தகறும்பாலிழுதுகண்டுமும்மைக்
கனிபோலண்ணித்தெனுளக்கமலம்வாழுந்
துறந்தநிலமணவாளமுனிவனின்றன்
றுணையடியல்லால்வேறுதுணையிலேனே. (உள)

இணைக்குறளாசிரியப்பா.

துணைக்கட்டழகார் கணைக்கட்காந்தையர்
மால்வலையறுத்து மேல்வழிகாட்டும்
முருகுகூர்மகிழ்த்தொடைக் குருகூர்ப்பராங்குசன்
அருளியவருமைத் திருவாய்மொழிக்கோர்
நூற்றந்தாதியும்
சீர்த்திசேர்தரு மார்த்திப்பிரபந்தமுஞ்
சுபதேசுதவிடு முபதேசரத்தின
மாலையும்படிப்பவர் மாலையொழித்திடுங்
காட்டிற்பொலிதரு சேட்டிட்டிற்குஞ்
செம்மையாந்தத்துவ மும்மைமாநூற்கும்
அளவைத்திரட்டும்
மாயத்திரிபிலை மாய்க்கும்பிரபன்ன
காயத்திரியெனக் கட்டுரைக்கின்ற
ஏற்றந்தாலத் திலங்கிராமாநுச
நூற்றந்தாதிக் கேற்றதோருரையும்
இயற்றியுடனே யியற்றியுதவிய
அருணிதமுடைய பருணிதர்தலைவ
எதிபதிபாதத் துதிபதியுளத்த
வரவரமுனிவ சுரர்நரர்துதித்திடும்
அரவரசானவ குரவர்தங்குரவ
கொடியேனுயினு மடியேனினது
திருக்கிளர்கமலத் துருக்கிளரடிகளில்
அடைக்கலமாக வடைந்தனன்முடைக்கலம்
சாயுங்காலைத் தாயுந்தந்தையும்
அந்தணுங்கத்தணு நித்தணுமாகிய

எம்பெருமானு மெம்பெருமாட்டியுஞ்
சுவணத்தூவி யுவணப்புள்ளின்
பண்ணுறுதோண்மேல் விண்ணுறவரக்குழீஇ
நீயுநிறைபுகழ் மேயநின்னடியரும்
அன்னவர்தம்மொடு துன்னிப்போந்துதுங்
காட்சியை யெற்குக்காட்டி
மீட்சியில் பெரும்பதத்தாட்சிதந்தருளே. (உஅ)

வெண்பா.

தந்தருள்வனெஞ்சேநீசார்ந்தென்றுந்தோத்திரிக்கின்
எந்தைவரயோகியிருவினையால்—வந்த
அறப்பெரியநந்தாபமாற்றவல்லதான
நிறப்பெரியதன்றணிழல். (உக)

கட்டளைக்கலித்துறை.

நிழற்குரித்தாகியநீசப்பிறவிகணேர்ந்தெடுத்து
விழற்கிறைத்தாரின்வெறுவியலுமெனைமென்கருணை
நிழற்குரித்தாக்குமணவாளயோகிநிமலநின்றன்
கழற்குரித்தாக்குங்கருணையும்வேண்டினன்காத்தருளே. ()

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காக்கின்றசெல்வநல்குரவுகடிவமூதங்கனத்தநேயம்விரோ
தங்-கரிசறுசுவர்க்கநரகந்துன்பமின்பங் கலக்கமொடு
தேற்றமிங்ஙன்,
வீக்கமாவென்றும் விருத்தமா மியல்புடைவிபூதியில்விடா
விரண்டு-வினையினுன்மேன்மேலும் வெருவுபவம்வரு
மென்னின்வெட்கியுட்கித்திடுக்கிட்,
டேக்கமுறுகின்ற தென்னெஞ்சமென்செய்குவேனினியநி
ன்னிணைகொள் சரணத்-தில்லடை புகுந்தனனிழுக்
கினைத்தருகின்றவிருசெருக்கினையுநீக்கி,
மோக்சுநெறிநிற்பவர்க்கருள்செய்யுமணவாளமுனிவவென்
பிறவிமூலம்-முழுது மற்றென்னிலே விளங்கநல்லுப
தேசமொழியொன்றுரைத்திடாயே. (ஈக)

இணைக்குறளாசிரியப்பா.

ஆயுங்காலைக் காயம்வாக்கு
மனமிவற்றூற்செய் கனவினைக்கெல்லாம்
பூதக்குழாத்தா மேதக்குரம்பையுங்
கத்தனெனச்சொலு நித்தனுமுயிரும்

இந்தியக்கூட்டமு மைந்துவாயுவும்
கரந்தசில்லிடந்தொறும் பரந்துளவொருவனுங்
காரணம்
ஆமெனமொழியுமிக் கோமொழிக்கருத்தினைத்
திருத்தமாய்த்தமியே னருத்திசேருளத்தில்
ஓர்தரச்செய்தது பேர்தராவணமீ
திண்ணப்படுத்திச்
சழக்கறுவிழுப்ப வொழுக்கமுந்தந்தது
சாம்பிப்போகா தோம்பிவளர்த்திடும்
அறிவையுமளித்துநன் னெறிபடர்வித்தெனைத்
திருமலையாழ்வார் திருவருட்குரியோய்
நின்னடிக்கடியவர் பொன்னடிக்கன்பனுய்
உய்யும்படிக்கரு ணைய்தினிற்செய்தியேல்
இலகெவ்வுலகினு மிலதாம்
அலகினின்பெரும்புகழ்க் காவதோரீடே. (௩௨)

வெண்பா.

ஈடுமூப்பத்தாறுயிரப்பெருக்கநின்னடியேன்
வீடுபெறவீரும்பியுல்—நாடுமெனைப்
போர்த்தவினைபொன்றவருள்பொங்குங்கடைவிழியாற்
பார்த்தருளினின்றன்பரம்.

கட்டளைக்கலித்துறை.

பரம்புளகித்துன்பதஞ்சேர்ந்தகூடற்பதிக்*கிறைவன்
வரம்பெறுமாமணிக்கஞ்சிகைதாங்கிவரவவனுக்
குரம்பெறுநல்லருள்செய்வரயோகியுனையுன்னுவோர்
திரம்பெறுமுத்திப்பெருஞ்செல்வமெய்துவர்திண்ணமிதே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திண்ணியஞானச்செல்வஞ்சிறந்தவாழ்வார்
திருநகரிசேவிக்கச்செல்லுமெல்லை
தண்ணிழறந்துபகரித்தவெகினத்தாருத்
தணுவிருந்தவவ்வுயிர்க்கந்தாமந்தந்த
புண்ணியவெம்மணவாளமுனிவரின்னம்
போருகத்தாளடைந்துய்ந்தபுலவர்கோட்டிக்
கண்ணியனயவரதமவர்கடாட்டொண்
டன்புடன்செய்துய்யவருளளித்திடாயே. (௩௩)

*மஹாபலிவாணராதராயன்.

நேரிசையாசிரியப்பா.

அளியுருவாகிய வமரனைவந்தருளே
களியுருவாகிய காமதேநுவே
பயக்கடல்படாத நயச்சுவையமுதே
வியப்புலனட்டு விளையாக்கரும்பே
ஆக்கறவாத தேக்குறுபாலே
தோய்தயிரெழாத சுரநறுநெய்யே
ஆய்கழைச்சாற்று லடாதகற்கண்டே
பரமஞானத்தருப் பழுத்தபைங்கனியே
பிரமஞானிகளுணும் பிடுடைத்தேனே
தலத்திலுஞ்சலத்திலுந் தலைப்படாமுத்தே
அலைக்கடற்படாத வருமபெறற்றுகிரே
இருநீர்ப்படாத பெருநீர்மணியே
பூரணஞானிகள் பூணுமும்பொன்னே
ஆரணஞானிக ளணிந்திடுமணியே
நரரொடுபிறவுய ஈனிலம்வந்தருள்
வரவரமுனியெனும் வண்மைப்பெயரோய்
வச்சையர்தலைமகன் மிச்சையர்பெருந்தகை
காமுகர்க்கதிபதி தீமுகர்க்கேந்தல்
கையர்கள்சிகாமணி பொய்யர்கள்பூபதி
ஆனவித்தகைத் தீனனேனிதுவரை
எடுத்தபிறவிக விருநிலமுடுத்த
நுணித்தசிகரக்கட லுதிக்கரைமணலினைக்
கணிக்கிலுஞ்சிறிதுங் கணிக்கப்படாவாம்
அருந்தியதாய்முலை யமுதமோவென்னில்
பொருந்துமேழ்புணரியின் புனலினும்பெரிதால்
இப்பொழுதிருந்திடு மெண்கணன்கற்பமுங்
கப்பாதினிவருஞ் சதுமுகர்கற்பமுங்
கழியினுமென்வினை கழியாதாதலின்
சுழிபடுபிறவியுந் தொலையாதென்செய்கேன்
பவப்பிணியொழித்திடும் பண்டிதனீயெனத்
தவத்துயரறிஞர்கள் சாற்றலாலடைந்தனை
கமலமாமலர்புரை விமலமாம்பதங்களின்
மூடைக்கலம்விழுமுன் னடைக்கலம்புகுந்தனன்
சரணவரணத் தருமந்தனக்கோர்
அரணமாகுன் றளிப்போயென்பிழை

அனைத்தையும்பொறுத்தெனை யமலனுக்கஈ
தினைத்துணையளவளித் திருட்டியினேக்குறின்
அற்றனனென் வினையாவும்
பெற்றனன்யாவரும் பெரூப்பெரும்பேறே. (ஈசு)

வெண்பா.

பேறுபெறவேண்டினென்றும்பீழையுறும்பேதைநெஞ்சே
வேறுகதியிவ்விபூதிதனிற்—றேறுங்கால்
இல்லைவரயோகியினையடியல்லாலீது
தொல்லைமறையோர்துணிபு. (ஈஎ)

கட்டளைக்கலித்துறை.

துணித்திடத்தக்கதுதொல்லைவினையின்றொடர்புநிதம்
பணித்திடத்தக்கதுபட்டாரகன்பெயர்பாறுநெஞ்சம்
பிணித்திடத்தக்கதுபேர்த்திடத்தக்கதுபெட்குமவா
குணித்திடத்தக்கதுரம்வரயோகியுட்கொள்குறிப்பே. ()

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குறிக்கொண்டுநின்றனையேனெஞ்சமே
நித்தர்குழுக்கூடலாகும்
உறிக்கொண்டவெண்ணெயுணவுவந்தவம்மா
னுரைகிதையுறுபின்பாக
நெறிக்கொண்டவாழ்வார்களாரியர்க
ணிகழ்த்திவந்தநியமம்வாய்ந்த
கிறிக்கொண்டவரயோகிபதநிதமுந்
தொழனமக்குக்கிழமையென்றே. (ஈசு)

நிலமண்டிலவாசிரியப்பா.

என்றுநின்பொன்னடி யிறைஞ்சிடுந்தொண்டரை
என்றுவாயிலா யியக்கிக்கொடுபோய்க்
கண்ணுறற்கரியதா நுண்ணுடறன்னையும்
அடித்தநீர்விரசையில் விடுத்திடச்செய்ததன்
கரைவாழுமாநவர் கரப்பரிசத்தாற்
சுப்பிரமாகிய திப்பியதேகமும்
பெறுவித்தென்று முறுவித்தகமயம்
ஒளிமயமாயொளிர் தெளிவிசும்பதனிற்
றாமணித்தூணஞ் சுமந்திடுந்தகைத்திரு
மாமணிமண்டப மன்னிவாழ்குராம்

நித்தியமுத்தர்கள் பத்தியின்வைத்திடும்
அரவரசாகிய வரவரமுனிவவெற்
கவித்துக்கவற்றிய வவித்தைதத்தமந்தபும்
இருவினைக்கள்வர்கள் வெருவியோட்டெடுப்பர்கள்
பாவப்பிறவிமுத் தாவமுந்தணிந்திடுஞ்
செயிரறுபத்திமைப் பயிர்தழைத்தோங்கும்
உருகுமுமனக்கடல் பெருகிக்கலித்தெழும்
புந்திக்குமுதமுங் கந்தித்தலர்தரும்
வாக்கெனுஞ்சகோரமுந் தூக்கதிருணவெழும்
ஒண்கழற்கமலமென் றிண்மனங்கவர்தர
வெண்கழைத்தொடைகளென் கண்களிற்றோன்றிட
இடைசுற்றியசெவ் வுடையுடனிலங்க
மூப்புரிதானிறஞ் செப்பமாய்த்திகழ்ந்திட
முக்கோலேந்துமங் கைக்கோலந்தர
வளவுறுவலம்புரிக் களனழகொளிர்தரச்
சவிதருகுண்டலச் செவிகடயங்கிட
விதுப்புறுமாடிக் கதுப்புகடிலங்கிட
ஊர்த்துவபுண்டரஞ் சேர்த்தியபாலமும்
பூத்தளிபொழிதரு நேத்திரக்கமலமும்
முத்தமுளைத்தென முறுவனிரம்பிய
முத்தவாய்பூத்தபுன் முறுவலுமவிர்தரத்
தேய்தலும்வளர்தலு மேய்தலிலானின்
மங்கலத்திருமுகத் திங்கடோன்றிடினே. (ச0)

சூன்மணிச்சங்கநிறச்சேடன்றோற்றமெனப்படுவோன்
வான்மணிபோலொளிர்வண்சீர்வரவரமாமுனிக்கோர்
நான்மணிமாலைநவிற்றினனன்னூனமும்பொருளாம்
மேன்மணிசேருளன்பள்ளிகொண்டானெனும்விற்பனனே.

ஸ்ரீமணவாளமாமுனிகள் நான்மணிமாலை
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம :

எதிராசமாமுனிகள் நான்மணிமாலை.

காப்பு.

வான்மணிவாரணம்வாய்வயற்பூதூர்வளம்பதிக்கண்
வான்மணிபோல்வந்தநம்மெதிராசவரோதயற்கோர்
நான்மணிமாலைநவிலநல்லோருறைநற்குருகைக்
கோன்மணிக்கோகநகத்திருத்தாளுளங்கொள்ளுவனே.

எதிராயவாதியிபங்கட்கரிமாவெனவிசைக்கும்
ஏதிராயமாமுனிநம்மிதயத்திருளீர்க்குமதிக்
கதிராயவற்கொருநான்மணிமாலைகழறவவன்
சதிராயதாமரைத்தாளேநமக்குநற்றஞ்சநெஞ்சே.

நூல்.

வெண்பா.

பூமலியும்பூம்பொழில்சூழ்பூதபுரிபோந்தவள்ளல்
பாமலியுஞ்சீர்த்திப்பரவையான்—நேமலியும்
எந்தையெதிராசமுனியென்விணையைத்தீர்க்கவென்றன்
சிந்தைகுடிகொண்டிருப்பன்சேர்ந்து. (க)

கட்டளைக்கலித்துறை.

சேர்ந்தாரைவாழ்விக்கும்பூதூரெதிபதிச்செம்மலருள்
ஆர்ந்தாரைபோற்சூழவித்தைக்கனையருவினைக்குக்
கூர்ந்தாரைவாளவுவினைவாதனைக்கநகூலஞ்செய்யாச்
சேர்ந்தாரைக்கொல்லியெனநன்குநம்புதிதிண்ணநெஞ்சே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திண்ணநெஞ்சேதிருமால்சேநேசன்சேடன்
றிகழுமைம்படைக்கலைகடிரண்டொன்றுகி
மண்ணவரைவாழ்விப்பானிளையாழ்வாராய்
வந்தபெருமந்தணத்தைமறந்திழுக்கா
வண்ணநீநிற்றியெனின்வடியாச்சன்ம
வாரிதியில்வருந்துதலைவரைந்தெந்நாளுங்
கண்ணனடித்தொண்டுசெயும்பேரானந்தக்
கடலெனுமந்தாமத்தைக்கலக்கலாமே. (ங)

நேரிசையாசிரியப்பா.

கலக்கமுந்தேற்றமுங் களிப்புங்கவர்வும்
விலக்கொணப்பகைமையும் வேட்குறுங்கேண்மையும்
ஆக்கமும்வறுமையு மறத்தொடுமறமுஞ்
சுவர்க்கமுமழுங்குறும் பவர்க்கமுமாகிய
மூரணியல்பறுத தரணியிற்பிறந்துழல்
மன்பதையுறும்பவத் துன்பதைத்துடைப்பான்
செம்பியனுட்டினில் வம்பியன்மலர்களைக்
காலையுங்கமழ்தருஞ் சோலையின்மாலைய
இருகரையிடித்துறப் பெருகலைக்காவிரி
உந்தியினனந்தலை யுந்திவந்தவனெடும்
இரவணையிமகர னெழினிறத்தைந்தலை
யரவணையறிதுயி லமர்ந்தருளமலனுங்
தேங்கடாத்திரிநிகர் சிந்துரங்காத்தருள்
வேங்கடாத்திரிமிசை விளங்குறும்விமலனும்
நான்முகமாகமுன் னன்மூகனியற்றிய
அரிமகத்தவிசொரி யெரிமுகக்குண்டத்
தண்டர்களருந்தவர் தொண்டர்கள்வணங்குபு
துதித்திடுஞ்செவ்வியி னுதித்தவனுகிய
பேரருளாளனுங் கூரிருளிரித்தெழும்
விரிச்சிகன்றண்கதி ரரிச்சிகன்றவழ்தருஞ்
சீதமார்கொடுமுடி யாதவாத்திரியுறை
திருநாராயணப் பெருமானும்மதி
காலையுமுச்சியு மாலையுமாதவர்
நூலையோதித்தொழுஞ் சோலையோதிமத்துறைஇ
வரமெச்சிடவருள் பரமச்சுவாமியுந்
தெறுங்கொடுவினைகளைத் தீர்த்தருள்புரிதிருக்
குறுங்குடிநம்பியுங் குருகைநம்மாறனும்
வேதவாதியா நாதமுனிகளுஞ்
சென்னியாமன்னவன் பன்னிமுன்பகர்ந்தருள்
சூளவம்போக்கா வாளவந்தாரும்
அரியபுகழ்கெழுஉம் பெரியநம்பியுங்

கோட்டமிலிசைத்திருக் கோட்டியூர்நம்பியுங்
கருமலியுந்தெருட் டிருமலைநம்பியும்
மாலைவென்றருடிரு மாலையாண்டானுங்
கருவரங்காதைமைக் காத்தருளாழ்வார்
திருவரங்கப் பெருமாளரையரும்
மன்றுபடுத்திய துன்றுசீர்ப்பெருமையை
உடையவர்நம்மையா ருடையவராகிய
எதிபதியிலங்குறு மிருவிபூதிக்கும்
அதிபதியடிகளே யடைக்கலமென்றுணர்ந்
தொண்மையினெஞ்சமே திண்மையினெண்ணிநீ
இருத்தியெனினனி விருத்திசேர்மதிநலம்
பூத்திடுநமைநனி யாத்திடும்வினைகளும்
மாய்ந்தறுமாயையு மோய்ந்தறுமதனல்
உறவுகொண்டென்று மோவாப்
பிறவியும்பெயர்ந்தறும் பெற்றித்தாமே. (ச)

வெண்பா.

ஆமுதல்வனீங்கிவனென்றுளவந்தாரென்னுமுனிக்
கோமுதல்வன்கூறுங்குணக்கடனம்—பாமுதல்வன்
ஈனநெறிநீக்குமெதிபதிநெஞ்சேவித்தித்த
ஞானநெறிநமக்குநன்று. (ஞ)

கட்டளைக்கலித்துறை.

நன்றென்பதோராகவையோர்சிலர்நாரணன்முதல்வன்
அன்றென்பதையறுத்தாமென்றறையவடைந்தகுணக்
குன்றென்னுநங்களெதிபதிதாளுளங்கொண்டவர்கட்
கின்றென்பதின்றவ்வெழிற்பரந்தாமத்திருஞ்சுகமே. (சு)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருஞ்சுகந்தேரிருவகையிந்தியமேயென்ற
னிதயமேதும்மையானீறில்வீட்டுப்
பெருஞ்சுகத்துக்கேகுங்கால்விரசைவிட்டுப்
பேர்வனென்றுபிணங்காதெற்பெற்றேர்மாது
தருஞ்சுவர்க்கமுண்ணுதெற்றடுத்தாட்கொள்ளத்
தரணிவந்தவெதிபதிதாள்சாருங்காறும்
அருஞ்சுகிர்தவதரிலியானமைந்திருக்க
வருளினுமக்கழியாதவறமுண்டாமே. (எ)

நேரிசையாசிரியப்பா.

அறநெறியிற்றெனுந் திறனறிபவராம்
வடுவொன்றில்லா வடுகநம்பியும்
நெறியார்கணிய னூர்ச் சிறியாச்சானும்
அம்புவிபோற்றரு ளாளப்பெருமா
ளெம்பெருமானு ரென்னுளுஞ்சீயரும்
வள்ளற்றன்மைப் பிள்ளைப்பிள்ளை
யாழ்வானும்மிள காழ்வான்முனும்
நம்பார்க்கும்மளி கல்குமெம்பாரும்
சிட்டர்கடொழுமதித் தெட்புடைப்பட்டரும்
நெஞ்சினுயிர்க்கரு ணிறைந்தநஞ்சீயரும்
கும்பியினதரினைக் குறுக்குநம்பிள்ளையும்
பெருகிடுஞ்சீர்த்திருக் குருகைப்பிரானுந்
துப்பார்கோமடத் துப்பிள்ளானுந்
துங்கமாஞானத் தெங்களாழ்வானுஞ்
சாரந்தோர்நடா தூாம்மாரும்
நடுவுநிலைமைகொ ணடுவிலாழ்வானுங்
கியாதிசேர்வேத வியாதபட்டரும்
விற்பனராநடு விற்றிருவீதிப்
பிள்ளையுமாகிய வள்ளலாரியர்கள்
பெருமிடல்வாய்மையி னெருமிடறுகச்
சித்தமுகப்புறத் தத்தந்திருவடித்
துணைதமைத்தமக்குநற் றுணையெனப்பற்றிய
ஆணவமில்லா மாணவகர்களை
நோக்கியுலகினை நோக்கவந்தருளிய
எம்பெருமானுர் தந்திருவடிகளே
சரணமென்றிருமி னரணதுறுமக்கென்
றோதியவிதிதனை நீதிகளுரைமறை
விதியினுஞ்சிறந்த விதியெனக்கடைப்பிடித்
தொழுகுதியேலென் னுள்ளமேயவ்வணம்
ஓழுகியசான்றோ ரொப்புயர்வில்லா
எப்பெரும்பேற்றினைத் துப்பினெய்தினரோ

அப்பெரும்பேற்றினை யறவுஞ்சிறிதுங்
தடையொன்றின்றிச் சார்ந்தின்
றடைவதற்கொன்று மையுறவிலையே. (அ)

வெண்பா.

ஐயமறவேதத்தரும்பொருளெலாம்விளங்கச்
செய்தவெதிராசவள்ளல்சீர்நிலையின்—மெய்யெவர்க்குந்
தோற்றப்பிரமமண்ணைதொல்யாதவற்குரைத்த
ஏற்றந்தனைநெஞ்சேயெண். (கூ)

கட்டளைக்கலித்துறை.

எண்ணில்பவமெடுத்தெய்த்தனநெஞ்சேயிலங்குமதிக்
கண்ணில்லவருரைகட்டுரைகேட்டகரிசமுப்பான்
மண்ணில்வணங்கிமறைபுகுவோமறையோரிதய
விண்ணில்விளங்குமம்விண்மணியாமெதிவேந்தனையே. ()

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேந்தர்கள்வாழ்வியன்கச்சிப்பதியின்மேவும்
விண்டுவின்றன்றெண்டார்குலம்விளங்கவந்த
சாந்தனெனுங்குணிப்பிள்ளைசின்னுளங்குத்
தான்காணுதிருந்துபின்னத்தலத்தோர்காணப்
போந்தெவர்க்கும்பூதபுரிப்புண்ணியன்சீர்
புகன்றதனையுணர்ந்தநெஞ்சேபுவியிலின்னும்
மாந்தர்தமிற்பதடியாய்மாயாதச்சீர்
மறவாமைமமக்கமுதம்வழங்கற்பாற்றே. (கக)

நேரிசையாசிரியப்பா.

பாற்கடலுறைதரும் பலமயிலெயுமதன்
பாற்படுபானிறப் பசுங்கதிர்த்தேவையுங்
கத்தமரபினிற்சார்ந்ததொன்றுத்தஞ்
சித்தத்துணர்ந்திடுந் திறனெனப்படியின்மூற்
பவப்பிறப்புடையயா தவப்பிரகாசனும்
மறைமுடிப்பொருளெலா நிறையுளத்தறிஞர்கண்
மொழிமனமாதிதம் வழிபடவழிபடும்
விழுமியமான்மியங் கெழுமியவெவர்தமைத்
தனைப்போற்றன்னுளந் தனினினைந்தனனே

கயக்குறவெவரையு மயக்குறுமாயையின்
கரவசப்பட்டுப் பரவசனுகி
அழுக்காறென்னு மிழுக்காறுடையனுய்
வசிட்டாதியர்துதி விசிட்டாத்துவைத
நன்மதமொறுத்துத் தன்மதநாட்டுவான்
எவனைத்தவர்க ளியங்குறுங்கங்கையின்
றெருணனியுடைமணிக் கருணைகைக்கட்டத்
தெருக்குவானெண்ணிப் பொருக்கெனத்தன்னுடன்
கொடுசெலுங்காலெவர் கூரனுமவன்
கொடுவினைப்புணர்ப்பினைக் கொய்திடுமெம்மான்
அருளுருவாம்புணர்ப் பரணினையுடையராய்
ஒற்றையாழித்தே ரூர்சுடர்க்கற்றையோன்
அத்தமனமெனு மத்திரியடைந்திட
மாலைமயங்குறும் வேலையினண்டிகங்
கொடுவரிகுடாவடி யடிதொழிற்கோளரி
குஞ்சரமாதிய சஞ்சரித்திருப்பதாய்
வெம்பியமேவலர் வேணுதியெனநனி
வெம்பரலுறுத்திடும் வெவ்வதருடையதாய்
வெருவந்தந்தரும் விந்தியவிபினத்
தொருவந்தத்திடை யுபாதியாமியக்கம்
இரண்டினென்றினையோ ரிடத்தினில்விடுத்துத்
தொடுநீர்தேடித் துயக்குறுமெல்வையிற்
கங்குலெங்கணுங் கலத்தலான்மங்குலும்
மண்டலமுங்காண் கண்டலம்புதைதர
வழிதிகைத்தயர்ந்திவ் வுழிநமக்குத்துணை
ஆவாரெவரென வழுங்குறுமவ்வயிற்
றேவாதிபனு மூவாமுதல்வனும்
மூருகவிழ்சததளத் திருமலர்ச்செல்வியும்
வேடனும்வேடு விச்சியுமாகிய
வேடம்பூண்டருள் விளங்குறவெவர்க்குமுன்
ரோன்றியெவருளத் தூன்றியவுட்கினை
மடித்தொருதிருமர வடித்தலத்திருந்துகள்

விரவினைக்கழித்தெழுந் திரவிவந்தெழுமுனம்
அண்ணிதாகிய புண்ணியகோடியாம்
விமானம்விளங்குறு மமானப்பெருமைசால்
மச்சணிமாடமா மாளிகையோளிசூழ்
கச்சிமாநகர்வயிற் கலந்துவிடித்தவண்
மறைந்திடவெவரம் மாயமானுடர்தமை
நிறைந்தபேரன்புட னேடிக்காணு
தலமந்திருக்கையி லவ்வழிவருநராஞ்
சிலவரையன்பொடு சிறப்புறநோக்கியீ
தெவ்வூரெத்தல மெனக்கட்டாவிடவவர்
இவ்வூர்காஞ்சியென் றிறுத்திடவச்சொல்
உவப்புறுநியாசத் தவத்தராமெவர்க்குத்
திசைமுகம்பழித்திடுந் தசமுகன்வதத்தினைச்
செவியுறுபிராட்டியின் சவிபெறுமுவகையும்
விண்டருஞ்சீதையைக் கண்டனனென்றசொற்
கேட்டவெம்பெருமான் மாட்டுறுமுவகையும்
முதுவனுஞ்சதமகன் மதுவனம்புகுந்துழிப்
பெருவடிவெடுத்தநந் திருவடியுவகையும்
போன்றதோருவகையா மான்றமாவளக்கரை
அடைவித்தேயதிற் குடைவித்திடவெவர்
விரவியகானிலள் விரவினிலிருந்துணை
நேயமாய்வந்திவண் மாயமானவர்தமை
எம்பெருமானெம் பிராட்டியாமெனத்
திண்ணமெண்ணிநங் கண்ணன்குணங்களின்
மூருகூர்மகிழ்த்தொடைக் குருகூர்ப்புங்கவன்
ஈடுபட்டுப்பெரும் பீடுபெற்றுமதி
மோகித்திருந்தவம் முறைமையின்மோகித்
திருந்தனரோவெவர் திருந்திடாவுலகோர்
திருந்திடநல்லருள் செய்யவந்தவரோ
அவராகியநம் மண்ணலெதிபதித்
துவரார்தாமரைத் துணையடிகளேநிதம்
வஞ்சகமிலாமலென் னெஞ்சகமேநனி

எண்ணிப்பூசனை பண்ணியேத்தெடுக்கும்
நன்னிலைநிற்றியே னினிழுந்திருந்ததாம்
என்னிலையெனக்குறு மீறிலாநாளெலாஞ்
சீர்த்தசோர்சினத்தினைற் போர்த்தமாமாயையுங்
கழிந்திடும்பிறவியு மொழிந்திடுமித்தகைக்
கடப்பாடியற்றிய திடப்பாடுநினைக்
கேற்றதோர்கைம்மா றியற்றவல்லேனலேன்
ஆதலினுலிப் பூதலந்தன்னிற்
றிடம்பெறயானிவ் வுடம்பினிலுறைதருங்
காலமெலாநினைக் கோலி
அஞ்சலிபுரிகுவன் றஞ்சமாநினக்கே. (கஉ)

வெண்பா.

நினக்கேதமியேனெடுத்தொண்டுபூண்டென்
மனக்கேதமாற்றமகிழ்வாய்—வனக்கோதை
நாயகன்பார்க்கவிசெய்நல்லறங்கள்செய்யுமெதி
நாயகனேயெங்நாளுநன்று. (கங)

கட்டளைக்கலித்துறை.

நன்முதரஞ்செய்தநாதமுனிகட்கென்னன்னெஞ்சமே
குன்முதசெல்வக்குருகையர்கோனருள்கூர்ந்தளித்த
பொன்முதசீரெதிர்வாரியவிக்ரகப்புண்ணியனும்
பின்முதசீர்த்தியெதிராசனேநிதம்பேணுதியே. (கச)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பேணுறயாதவனுதிநன்னூற்குரைபெட்டிரைவெட்டியவன்
நாணுறமெய்ப்பொருணல்கியநம்மெதிநாயகனல்லருளே
வேணுமுமிவ்விளையாட்டுவிபூதியின்வெருளையொழித்தழியா
தேணுறுநித்யவிபூதியினின்பினையீந்திடுமென்னுளமே. ()

நேரிசையாசிரியப்பா.

என்னுளமேநினக் கின்னமீர்த்திடுஞ்சீர்
ஏற்றமார்மாற்றமொன் றிசைக்குவல்கேட்டியிம்
மண்ணகந்தன்னினம் மண்ணலெதிபதி
குருகுலக்குரவையிற் குளிர்மதியெனவந்
துதித்தலைக்காணுஉத் துதித்திடத்தக்கவாம்

வேதவேதாந்தமாம் வேலைகள்யாவுமா
மோதந்தன்னுன் முதிர்ந்தொலித்தோங்கின
விதியார்மிருதிக ளிதிகாசங்களாங்
காவியுமல்லியும் பூவிற்பொலிந்தன
புராணமாஞ்சகோரப் புட்களுட்கொரீஇப்
பிராணனையடைந்திடம் பெயர்ந்துதிரிந்தன
ஈங்குகதேவர் டங்கர்திரமிடர்
ஆதியகுரவர்க ணீதிசேர்வசனமாஞ்
செயிரிலாதநற் பயிர்தழைத்தோங்கின
வாதியர்கணுத ராதியர்தம்மதக்
கருவரிசாலவுஞ் சருவரியடைந்தது
சாங்கரீயமா யோங்குபங்கயங்க
டேம்பிச்சாம்பிச் சூம்பிக்கூம்பின
பாற்கரமதத்தராம் படிறர்தம்வாதந்
தோற்றுநீளிடை தொலைந்துமறைந்தனர்
யாதவன்மாதவ யஞ்ஞமூர்த்திகள்விழி
இங்குகாந்தச்சிலை ஈைந்தறல்கான்றன
உபநிடதங்களுக் குள்ளீடாகிய
சுபகரத்திருமா ரெஹல்லிப்பரத்துவம்
மங்குதலொரீஇ யெங்கணுமொளிர்ந்தது
கூரநாதனங் குருகாதிநாதன்
வேரமின்மனக்கோ விந்தநற்பாதன்
முதலியாண்டான் முதலியமோக்க
இச்சையுடையவர் மிச்சையால்விளைந்ததம்
பிறவிமுத்தாபத் துறவியுமிழ்ந்திடுந்
திண்மையுருப்பினை யெண்மையிற்றீர்ந்தனர்
ஆதலினீயுமவ் வருந்தவனடித்துணை
காதலின்வணங்கிநின் கண்ணன்கிருத்தியைப்
போதுந்துதித்தியேற் பூதியுந்துறக்கமும்
போதலும்வருதலுஞ் சாதலும்பிறத்தலும்
ஒருவுமந்தாமத் தோங்குஞ்
திருவும்பெறலாந் திண்ணமீதாமே. (கசு)

வெண்பா.

திண்ணநெஞ்சேநம்புதிநற்சீர்கொள்யமுனைத்துறைவர்
வண்ணவடிகள்வணங்கியுய்ந்த—அண்ணன்மனக்
கோட்டமிலாவெதிகள்கோமானடித்தமர்கள்
ஈட்டந்துணையென்றுமென்று. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

என்றூழினெங்குமிலங்கிடுஞ்சீர்த்தியெதிபதிதாள்
நன்றூழினண்ணியெங்ஙாளுநண்பாகநயத்தியெனிற்
றுன்றூழித்தீயிற்சுடுநம்வினையின்றொடர்புமறுஞ்
சென்றூழினெய்தலுமாந்திருநாட்டுச்சிறப்பினையே. (கஅ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிறப்போங்குவாதராயணர்நம்மாழ்வார்
சித்தாந்தநிலைநிறுத்துந்திறலோனுய்ந்தோர்
பிறப்போங்குநற்போதாயனர்கோட்பாட்டைப்
பீடுபெறத்திகழ்விப்போன்பெட்பைவென்ற
விறப்போங்குநாதமுனியாளவந்தார்
வியந்தொழுகுநல்லொழுக்கவிரதந்தன்னின்
மறப்போங்குமனனிலானென்னுநங்கள்
வள்ளலெதிபதிதாளைவழுத்தென்னெஞ்சே. (கக)

நிலைமண்டிலவாசிரியப்பா.

வழுத்துறுங்காரண வத்துவானவனெவன்
பிழைப்பில்சீர்த்தரிசனம் பேதமோவபேதமோ
பாடியைந்திடுபிர பன்னரிட்டர்களடை
வீடிப்பிறப்பிலே வேரோர்பிறப்பிலே
வீடடைவித்திடும் விழுப்பமாநெறியெது
நாடிப்பற்றிடு நல்லாரியனெவன்
கடும்போர்புரிநோய்க் கணத்தாலுயிருடல்
விடும்போழ்தத்துநம் விண்டுவைநினைத்திடல்
வேண்டற்பாற்றே வேண்டாப்பாற்றே
என்னுமிக்கடாக்களை யிதயத்துட்கொளீஇக்
கைக்கோலம்பெறக் காழுகச்சிறுமுறி
மூக்கோலேந்திய முனிவரர்பெருமநீ

எதிராசமாமுனிகள் நான்மணிமாலை.

பன்னிடுமுக்கப் பணித்திருச்சி
நம்பிதன்வம்பவி ழும்புயமலர்புரை
யடிகளேவணங்கி யடிகளடியனேன்
சிந்தையினிங்கையில் [illegible]
அவற்றையவனியோர் [illegible]
ஆழமாமலைகட லறிதுயிறனையோரி
வேழமாமலையுறை விபுதர்தம்வேந்தனை
வினவிநன்றெற்கு விழைந்தறிவுறுத்தமையின்
கனவியகருணையின் கடனெனக்கழறிட
நம்பியும்பிற்றைநா ணயந்துநுண்ணுரு
தும்பிமாமலையவற் றெழுதுதற்பணியினையால்
முற்றியபிற்றிரு முன்னர்நின்றிடப்
பற்றியவடியவர் பவப்பிணிபாற்றிய
எம்பெருமானுரன் கிதயக்கமலமொ
நம்பிநீயிற்றைநா ணம்மைச்சிக்கெனநுன்
கேட்பான்வேட்டிதிற் கின்றனைபோலுமால்
என்னநம்பியு மினிதினேயாய்வார்
சொன்னசொல்லெலாந் தொல்பிறப்பிலுமே
வளையாழிக்கை வாதகிரகமும்
இளையாழ்வார்கொடு மெய்ஞ்ஞானமும்
அன்னவர்யாவு மறிந்தவாசிரியர்
மன்னறம்யாவையு மாயுமுனிவரன்
பெருமைசால்சாந்தி பிள்ளைதாளினை
அருமைசாலுல்க பாலித்தவரையுரை
தீதுதபும்வண மோதியருளையினிற்
மிடைந்தகற்கலையெலா மெனதிதயமுற்
அடைந்தாய்நின்றன தருளிற்றுக்கண்
ணெண்பெறவிதயத் தெண்ணியபொருளா
மாண்பினம்முகமா மன்னுயிர்த்தொகுதி
யாவருந்திகழுவர் யாவர்பாலன்பெனை
மேவருந்தனை யிதித்துயிருய்யுமே

ஆதலானவற்றையாங் காதலிற்கூறுதும்
உலககாரணனு யிலகுவோன்யானே
கரிசிலாதகங் கரிசனம்பேதமே
பிரபன்னப்பெயர் வரகன்னடையினர்
மோக்கமுறுவதிவ் யாக்கையின்முடிவினே
முத்தித்துறைபிர பத்தித்துறையே
அரியகற்குரவனும் பெரியகம்பியே
கடைமுறைகினைத்தலும் விடுமுறைமைத்தே
என்றிபமலைமுடி யிலங்கருளாளனும்
மன்றவுணர்த்திய வார்த்தையோராறும்
அச்சுதன்முகமா கிச்சயமாதலின்
நித்தியகிலைபெறுஞ் சத்தியமென்பதும்
அருச்சையுருவினில் வருச்சியாகாரணன்
காரணஞானமும் பூரணமென்பதும்
இத்தகைஞானக் கேற்றகம்பன்புடை
வித்தகர்க்கேயது விளங்குமென்பதுங்
களங்கமில்லாததை விளங்கக்கண்டவர்
பம்புசீர்க்கச்சி கம்பியென்பதும்
அவரருளாளனே டமர்வேதிடத்திருந்
தார்த்திதீர்தரகிதம் வார்த்தைகன்காடுவர்
என்பதுமவர்க விருவருக்கும்பேர்
அன்புடைநீவி ராத்தரென்பதும்
ஒளிப்பறவெவர்க்கும் வெளிப்படுதலிறற்
சந்திரதிலகச் சுந்தரப்பொழில்சூழ்
பூதபுரியுறை போதமாரெதிபதிப்
புண்ணியவன்பர்கட் கண்ணியகின்னடி
கண்ணியவிரும்பெனு காயடியேனகின்
சுத்தமாக்கருணையாஞ் சித்தமாக்குளிகையாற்
மொட்டிச்சுட்டகற் சுவணகோ்பவனென
ஆக்கிப்பணிகொளீ இ மோக்கமாகுகல்
வீட்டினிலமைத்தனின் பீட்டினுக்குரித்தே. (உ)

வெண்பா.

பீடுபெறுநித்தியரும்பிழையறமுத்தரும்வாழ்
வீடுபெறநீவிரும்பினில்—ஓடுநெஞ்சே
நின்றென்றுநீத்தோர்நிருபனற்றொடொழுதல்
நன்றென்பர்நன்கதையேநாடு. (உ.க)

கட்டளைக்கலித்துறை.

நாடுதிநம்மெதிராசனேநண்ணன்னடவைதனைக்
கூடுதிமற்றவன்கோதிலடியர்குழாமதனைப்
பாடுதிநெஞ்சேயவர்புகழ்பன்னுநற்பாக்கடமை
சூடுதியாநந்தத்தாண்டவமன்னேரடிநினைந்தே. (உ.உ)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அடிநினைத்திடுமடியரகமறுத்தடிமைகொள வரவவெற்பு
றையுமமலன் – அமர்திருப்பதியிலுறை பொழுதகிற்
கோதனத் தாநிரைபுரக்குமாயர்
தடிநினைக்குந்தும்பையூர்க்கொண்டியென்பவள் கொழிப்
பிலாநற்குணத்தாள்- கொடுத்ததயிரமுதிற்குரித்தாம்
விலைப்பணங் கொள்ளாதிருக்குமெல்வை
படிநினைக்குந்தனதுபாததீர்த்தந்தரப் பருகிநன்ஞானமெ
ய்திப் - பணயம்வேண்டாதுபர கதிவேண்டவப்பரம
பதவாழ்வையன்னளடையும்
படிநினைத்தொருபனைச்சிறுமுறிவரைந்ததைப் பாந்தண்ம
லையாற்களித்த- பரமகல்யாணகுணவெதிபதியைவிதி
யுடைப் பாவநர்பழிச்சுவரரோ. (உ.ங)

நிலமண்டிலவாசிரியப்பா.

பழிச்சற்குரியராம் பண்புடைப்பெரியோர்
பழிச்சுறும்பதயுகப் படிவர்தம்பெரும
புவனியோர்க்காப்பான் பூதமாபுரிதனில்
அவதரித்தருளிய வருட்கொடையண்ணல்
அடிநாட்டொடங்கி யடியனேப்பகுதியாம்
ஆமயமடைந்துவெந் தீமயமாயெழீஇ
வருத்துகின்றது மற்றதன்குணங்கடாம்
விருத்தமாரியல்பினெவ் வேளையும்விடமித்

தவரதமுமரு வரந்தையாம்பிரளயக்
கனவிரதத்தாற் கவற்றுகின்றன
இதனுநா விதமாயெய்துமோர்
தனியிலாத்துன்பந் தனைதுகர்கின்றனன்
அப்பிணிப்பண்பையு மதன்வரலாற்றையுங்
கப்பிலாநூல்வழிச் செப்பமாச்சிந்தையில்
அறிந்தவாரியர்களா மாயுள்வேதியர்களிற்
சிறந்தவனெனும்பெருந் தேசுடைமருத்துவன்
நின்னையன்றியிங் கெடுங்கடல்வளாகத்
தென்னையிடைவிடா தெருக்குமிங்கோய்தனை
நறுமொறுப்புடனே மறுவலும்வராது
போமாறியற்றிடு மாமாத்தியரிலை
அடியேனகதி யகிஞ்சனருளால்
நெடியோயென்னையா னினக்குச்செயவலேன்
நின்னறக்குணத்தினு னின்னளியெனச்சொலுங்
குடிநீர்கொணர்ந்து குடிப்பித்துடங்குநின்
சீபாததீர்த்தமாஞ் சித்தசுத்தத்துறை
மாபாவநமூற மடித்திடச்செய்வித்
தென்றுநினக்கே நன்றுநிவேதனம்
புரிந்திடுமடிசிலை யருந்திடலாகிய
பத்தியமுறைமையி னித்தியமெனைநிற்ப்பி
உயத்தகுவிரசையின் பயத்தினுரோக்கிய
நானநானமா நன்குசெய்வித்தியான்
அங்நாட்டொடங்கியிங்நாட்டினையும்
பெற்றுணற்கரிதாம் பெற்றியினிருந்ததாம்
பரமமாகிய பிரமமாமடிசிலை
மற்றதன்குணங்களா யுற்றநல்லறுவகைப்
பெறுஞ்சுவைக்கறியொடு நறுஞ்சுவைக்கனியொடுங்
கூலமொன்றிலாக் காலதத்துவமெலாம்
நித்தியவிபூதியி னித்தியவுருவுடன்
உண்டகுறுதென மண்டுமூட்கின்றியே

கட்புலன்றன்னுற் கண்டநுபவித்தும்
உட்புலன்றன்னு லுண்டநுபவித்தும்
துன்பமறும்பே ரின்பமயத்தனுச்
செய்வித்தடியனே யுய்வித்திடுஞ்செயல்
நளிர்கடலுலகெலா நனிநிறைந்தொளிர்தரும்
அரும்பெறலாகுகின் பெரும்புகழ்க்கழகே. (உச)

வெண்பா.

புகழார்புயங்கப்பொருப்பப்பன்மேனுள்
இகழாதுகைத்தலத்தினேந்தத்—திகழாழி
சங்கமளித்தானேச்சார்பிலார்பற்றுமெதி
புங்கவனேயென்றுநெஞ்சேபோற்று. (உடு)

கட்டளைக்கலித்துறை.

போற்றுதிநம்மைப்புரந்திடக்கங்கணம்பூண்டவனேச்
சாற்றுதிநெஞ்சேயெதிகள்சிகாமணிதன்பெயரை
ஊற்றுதியன்னேன்புகழ்க்கூழையுண்போருளங்களிக்க
ஆற்றுதியன்னேனடிப்பணிமோக்கத்தமம்பெறவே. (உசு)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறமமருந்திருப்பதிகளொருநூற்றெட்டு
மரிந்தமனுக்கிடமென்பரவனவற்றே
டுவியங்கியெதிபதிதன்னுளத்தானென்ப
துண்மையாதலினுலவ்வுறுவர்கோனே
உறவணங்கிவலமொருகாலுஞ்றினெஞ்சே
யுரைத்ததிருப்பதிகளேயுழுவண்வாழ்கின்ற
திறமிகுநம்பெருமானம்பிராட்டிமாரைத்
திருவலஞ்செய்பயன்பெறுதறிண்ணமாமே. (உள)

நேரிசையாசிரியப்பா.

திண்ணமிவ்வுலகைத் திருத்தியுய்வித்திடும்
வண்ணம்வண்பூதூர் வருமெதிப்பெரும
போதமெவ்வுலகினும் பொருத்திடுகில
வேதவேதாந்த விழுப்பொருளுணர்ந்தோய்
கந்தளவைப்பர தந்திரனுகூ
ரூரியன்கூறிய சீரியவாணையுங்

கடந்ததனல்வரு மிடும்பையுங்கைக்கொள
ஒருப்பட்டென்று மொழியாக்குமும்ப
அருப்பச்சேற்றில் விருப்புற்றழுந்துபு
அறமறக்கடையெனுந் திறவினையிரண்டினான்
மீண்டுமீண்டும் யாண்டுமீண்டிடு
நால்வகையோனியின் பால்வருமுயிர்க்கையை
யெடுத்தலும்விடுத்தலு மிருணிரகடைதலும்
ஆகியவவத்தையில் வேகமாருசலின்
ஓழுகைக்காலி னுழன்றுமேல்கீழ்
எழுகையும்விழுகையு மியல்பின்மேற்கொண்ட
சேதநராகிய பூதலத்தவர்பால்
அருளுருவாகுநின் றிருவுளமிரங்கி
அதிகாரிகளவ ரல்லராயினும்
விதிவாய்த்திருத்தலின் விழைந்தவர்தமக்கெலாம்
மந்திரமெவற்றினு மாட்சிமைத்தாகிய
மந்திரமுரைத்துநன் மாக்கதியளித்தலின்
வெருட்சியைநீக்குறு மருட்கடலெனும்பெயர்
நினக்கேதக்கது நினக்கேதக்கது
தோமுடைமையினும் பாமரராகி
அவிக்கப்படாத வவித்தையினுற்றலாற்
கட்டுண்டவரையக் கட்டினின்றும்
நீக்கிக்காத்திட வீக்கியகங்கணன்
என்னநம்மான்றேர் பன்னிடுந்திருப்பெயர்
மனத்தாயுங்கா னினக்கேதக்கது
முறைமைகள்யாவு மொழியும்
மறைமொழிக்குரிய நிறைமொழியோயே. (உ

வெண்பா.

நிறைமொழியாளர்க்காக்கநீணிலத்தில்வந்தெம்
இறைமொழிக்குப்பாடியஞ்செய்தீந்த—மறைமொழிவா
எம்மானிராகவன்பினீடணகடெரிதிகள்
பெம்மான்புகழைநெஞ்சேபேசு. (உ

கட்டளைக்கலித்துறை.

புகழ்ந்திடத்தக்கதுபூதபுரிப்புண்ணியன்புகழே
திகழ்ந்திடத்தக்கதுசிந்தையிலன்னேன்றிருவுருவே
நிகழ்ந்திடத்தக்கதுநெஞ்சத்தவனுரைநீதியென்றும்
அகழ்ந்திடத்தக்கதவித்தையன்னேன்றன்னருள்பெறவே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருளுறுமைந்தாம்வேதம்பருவமூவா
றுமதன்சாரக்கிதையவ்வெண்பெற்ற
தெருளுறுமத்தியாயமாமதிற்றெட்புற்ற
சீர்ச்சரமசுலோகச்செம்பொருளேமேனள்
பொருளுறுநங்கோட்டியூர்நம்பிபானம்
பூதபுரிவருமவ்வேதப்புலவர்கோமான்
இருளறக்கேட்டதும்பதினெண்முறைபோந்தென்ப
விச்செயலினருமையெண்ணினிறும்பூதாமே. (நக)

நிலமண்டிலவாசிரியப்பா.

ஆமோதத்துள வணிந்திடுமிரிந்தமன்
மாமோதத்துடன் மகிழ்ந்துதன்னினுந்
தன்னடியார்களாஞ் சநகாதியரையும்
கொன்னுறுமன்புடைக் குகப்பெருமானையும்
அத்தனருட்கிலக் காஞ்சபரியையும்
வித்தகஞ்சொலும் விதுராழ்வானையும்
ஞானவானென நவில்குசேலனையுஞ்
சூனுவையிழந்துளஞ் சோர்வைதிகனையும்
உற்றவராகிய மற்றுஞ்சிலரையும்
வியந்தேயென்று மூயர்ந்தோரெனக்கொளீஇ
அகமுகமலர்ச்சியின் முக்மன்மொழிசொலித்
தன்கினைவிடித்து நன்குறமதித்தவர்ப்
பெருத்தவன்போடுப சரித்தநன்முறைமையின்
பவக்கட்டறுத்திடும் பண்டிதசிகாமணி
தவக்கட்டழகார் தபோதனசிகாமணி
தெட்புறுஞான தேசிகசிகாமணி
நட்பினன்பர்க்கரு ணல்குசிந்தாமணி

அறிதரவறுதியிட் டருள்வோய்போற்றி
அச்சுதற்கணையா யமைந்தோய்போற்றி
அடியாரரில்களை யரிப்போய்போற்றி
அடைந்தோரிடுக்க ணறுப்போய்போற்றி
அபவர்க்கத்தத ரறைவோய்போற்றி
அப்பனுக்காழிசங் களித்தோய்போற்றி
அமிதமாமகிமை யமைந்தோய்போற்றி
அழுதனர்கவித்தொடை யணிந்தோய்போற்றி
அரங்கனுடற்கொடி யானோய்போற்றி
அரிக்குபதானமா யமைந்தோய்போற்றி
அரிந்தமனடிநிலை யானோய்போற்றி.
அனந்தாவதார ணனுய்போற்றி
ஆதிமாற்காதப மானோய்போற்றி
ஆதிரைநாளவ தரித்தோய்போற்றி
ஆய்ச்சிக்கமுத மளித்தோய்போற்றி
ஆரியரிலக்கண மமைந்தோய்போற்றி
ஆளவந்தாரரு ளடைந்தோய்போற்றி
இராகவபிரானுக் கினியோய்போற்றி
இராமாநுசமுனி யேந்தல்போற்றி
இலக்குமணரிய னென்போய்போற்றி
இளையாழ்வாரெனு மிலாஞ்சனிபோற்றி
ஈடணைமூன்று மிலாதாய்போற்றி
உபயவிபூதியு முடையாய்போற்றி
உபயவேதாந்தமு முணர்ந்தோய்போற்றி
உலகோர்வந்தனைக் குரியோய்போற்றி
ஊமைக்கருள வுகந்தோய்போற்றி
ஊர்த்துவபுண்டர மொளிர்வோய்போற்றி
எண்ணினற்குணங்க ளியைந்தோய்போற்றி
எம்பார்க்கருள்செயு மியல்போய்போற்றி
எம்பெருமானு ரென்போய்போற்றி
எழுபானன்கெனு மெழுழரியாதனர்
என்றும்வழுத்துறு மிறைவபோற்றி
ஐம்படையவதா ரத்தனேபோற்றி
ஐம்பொறிவாயி லவித்தோய்போற்றி
ஒழுக்கநெறிநிலை வழுக்கிலோய்போற்றி
ஓத்தின்பொருளொருங் குணர்ந்தோய்போற்றி
ஔவியமில்லா வகத்தோய்போற்றி

கச்சிநம்பிபாற் காதலோய்போற்றி
கட்டுணுமுயிர்களின் கட்டினைக்கடிந்திடக்
கட்டியகங்கணக் கரனேபோற்றி
கத்தியமூன்றுங் கழறினோய்போற்றி
கரையிலாக்கருணைக் கடலேபோற்றி
கலியன்றமிழ்மறை கற்றோய்போற்றி
கலிவிடதரந்தடி கலுழபோற்றி
காந்திமதிமகிழ் கான்மூளைபோற்றி
கிழியறுத்தோன்பாற் கேண்மையோய்போற்றி
கீதையினுட்பொருள் கிளத்தினோய்போற்றி
குருகுலக்குரவைக் குளிர்மதிபோற்றி
குலசேகரனருள் குறிப்போய்போற்றி
குறுங்குடிநம்பிதன் குரவபோற்றி
கூரநாதன்றொழுங் குருபரபோற்றி
கைதவமொன்றிலாச் செய்தவபோற்றி
கோட்டியூர்நம்பிசீர் கூறுவோய்போற்றி
கோதைநாயகியருள் கொண்டோய்போற்றி
கௌவையில்புகழணி கலத்தோய்போற்றி
சாந்தகுணப்பெருந் தகையேபோற்றி
சிகையுபவீதச் செம்மால்போற்றி
சித்தகுளிகையின் செயலோய்போற்றி
சின்முத்திரைக்கைத் தேசிகபோற்றி
சீவகாருணியஞ் சிறந்தோய்போற்றி
சீவேச்வரர்திறந் தெரிப்போய்போற்றி
செந்தமிழ்மறைப்பொருட் சிந்தையோய்போற்றி
சேடாவதாரத் தீர்த்தபோற்றி
சேனையர்கோன்கலி செறிந்தோய்போற்றி
ஞானிகளுள்ள நயந்தோய்போற்றி
தத்துவஞானிக டலைவபோற்றி
திருமலைநம்பிதாள் சேர்ந்தோய்போற்றி
துவர்க்கலையுடுத்தரு டேயபோற்றி
துன்மதநிவாரணத் தோணமுல்போற்றி
தேசிகர்தேசிக சிகாமணிபோற்றி
தொண்டர்தாட்பொடிதனைத் தொழுவோய்போற்றி
நல்லோரவைக்கள நாயகபோற்றி
நாதமுனிபுகழ் நவில்வோய்போற்றி
நித்தியர்முதல்வனு நெடுந்தகாய்போற்றி

நீதிநெறிநிலை நிறுவினோய்போற்றி
பட்டர்பாலென்றும் பரிவோய்போற்றி
பணவப்பொருடனைப் பகர்வோய்போற்றி
பராங்குசன்பாதுகைப் படிவபோற்றி
பரிசவேதிப் பார்வையோய்போற்றி
பவப்பிணியொழித்திடும் பண்டிதபோற்றி
பாண்பெருமாளடி பரவுவோய்போற்றி
பாமகண்முகமன் படைத்தோய்போற்றி
பிரபத்தியோகப் பெரியோய்போற்றி
பிரமசூத்திரப்பொருள் பேசினோய்போற்றி
பிரமஞானிகடம் பெருமபோற்றி
பூதத்தாழ்வார்ப் புகழ்வோய்போற்றி
பூதபுரிமகிழ் புண்ணியபோற்றி
பேயாழ்வாரடிப் பெட்பினோய்போற்றி
பேரருளாளனைப் பேணுவோய்போற்றி
பொய்கைப்பிரானடி போற்றுவோய்போற்றி
பொறைக்குணக்குன்றமாம் புங்கவபோற்றி
மதுரகவிகளை வழுத்துவோய்போற்றி
மந்திரமணிப்பொருள் வழங்குவோய்போற்றி
மழிசைப்பிரானடி வணங்குவோய்போற்றி
மாறனுரைசெய் மகிமையோய்போற்றி
மாறன்றமிழ்மறை வளர்த்தோய்போற்றி
முக்கோலேந்துகை முனீந்திரபோற்றி
முதலியாண்டான்றொழு மூதுவபோற்றி
முதுமுக்குவுக்கருள்புரி முதல்வபோற்றி
யதிந்திரனெனும்பெய ரியைந்தோய்போற்றி
யதுகிரியான்பிதா வென்போய்போற்றி
வாக்குக்கெட்டா வைபவபோற்றி
வாமனசீலனும் வள்ளால்போற்றி
விசிட்டாத்துவைத விளக்கேபோற்றி
விண்டுதரிசன விற்பனபோற்றி
விண்டுவின்பணிசெயும் விநோதபோற்றி
வியாதனுண்மகிழ்ச்சியை விளைத்தோய்போற்றி
என்றெடுத்தொருநூற் றெட்டுமுறைநிதம்
நன்றுரைத்தேத்தி நயந்துவழிபடின்
எப்பயன்பெறவிவ் யாக்கையெய்தினமோ
அப்பயனடைத லணித்தயிர்ப்பின்றே. (கூ கூ

வெண்பா.

அயிர்ப்பிலாவன்பர்பாலாறிரண்டா*மாசும்
பயிர்ப்பினியற்றிருத்தல்பண்பென்—றுயிர்க்குழுவுக்
கெம்பெருமாஞரிசைத்தவிதியைநெஞ்சே
நம்பிநடத்தனலம். (கூஎ)

கட்டளைக்கலித்துறை.

நலனென்றுநல்வளப்பூதாருறையெதிநாதன்முன்னுள்
பலனென்றப்பன்னுநியமங்களென்பன‡பன்னிரண்டும்
புலனென்றப்புந்திபுரிந்தாசரிக்கின்முன்போற்றுபுகர்க்
குலனென்றுநம்முழிக்கூடாதிதனைக்குறிக்கொணைஞ்சே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நஞ்சமேயாத்துமபாத்திரைசங்காழி
நேமியோனதீநமொன்றுநெகிழவேண்டா
புஞ்சமாநெகிழினுயிர்ச்சமர்ப்பணந்தான்
பொய்யாகுந்தேகயாத்திரையோவென்னில்
ஞ்சமாவிருவினையின்வயத்ததாகும்
வருந்தினுத்திகனமெனமக்குத்
ஞ்சமாவெதிபதிசொல்விதியைநன்னர்த்
தழுவியொழுகிடின்முத்திசாரலாமே. (கூகூ)

நிலமண்டிலவாசிரியப்பா.

முத்தியடையவிம் மூதுலகோர்க்குப்
புத்தியளித்துப் புரக்கவிப்புவிமிசைச்
சிந்தைமகிழ்ந்து வந்தவெந்தையாம்
எதிபதிப்பேருடை மதிநலவாரியே
ஞானநூலொன்று நானமாவறிந்திலன்

. ஜந்மரூபணம், உ. சரீரரூபணம், ரு. பாகரூபணம், சு. ஆசிரமரூபணம், டு. அவயவரூபணம், சூ. ஆலஸ்யரூபணம், எ. வாஸரூபணம், அ. பந்துரூபணம், கூ. ப்ரகாசரூபணம், கo. ப்ரகாரரூபணம், ஙக. வர்த்தகரூபணம், ஙஉ. தோஷரூபணம்.

. ஆஹாரநியமம், உ. அநாஹாரநியமம், ரு. அங்கநியமம், சு. போஜநியமம், டு. ஸ்நாநநியமம், சூ. ஸ்வரூபநியமம், எ. உபாயநியமம், அ. உபேயநியமம். கூ. வாஸநியமம், கo. போகநியமம், ஙக. ஆசாரநியமம், ஙஉ. ஸம்ஸர்க்கநியமம்.

ஆத்துமகுணங்களை நீத்தவனக்குணம்
அல்லாக்குணங்களைப் புல்லாப்பூண்டவன்
நன்றெனப்படுவ தொன்றுமறிந்திலேன்
சந்தமாரிலக்கண மைந்திலென்றேனுங்
கற்றவர்பாற்போய்க் கற்றறிந்திலேன்
ஆதலானின்மீ தோதுமிக்கவிகளில்
வருக்கப்பிழைக ளிருக்கினுமவைகளைப்
பாராட்டாதுநீ சீராட்டுடனின்
மனமகிழ்ந்தெனதுசொன் மாலையாங்கவிகளைத்
தந்தைதாய்தமது மைந்தர்தம்மழலைச்
சொற்களைத்திவவுறு கற்கிளையாழிசை
குழலிசையிவற்றினுங் கூரவினிதெனக்
கேட்டுநனியுளக் கிளர்ச்சியடைதல்போல்
அகிஞ்சனனகதி யாகியவெனக்குத்
தந்தையுந்தாயுஞ் சற்குருதெய்வமும்
யாவுமாகியே மேவியிருக்குநீ
கேட்டெடுத்தென்னும் வாட்டமில்சூட்டென
அங்கீகரித்துநின் செங்கேழடிகளிற்
றிணிந்தவுவகையி னணிந்திடவேண்டுமென்
றடியனேன்மூடிமிசை யணிகுவனத்திருத்
தாளெனுந்தெய்வத் தாமரைப்பூவே. (80)

பல்வளமுங்கெழுமியசீர்ப்பெரும்பூதூரென்
பதியில்வாழ்தெதிபதிதன்பதாம்புயத்திற்
சொல்வளநான்மணிமாலையொன்றியற்றிச்
சூட்டினனம்பொறியென்னுந்துட்டர்தம்மை
வெல்வளஞ்சேர்விரகராம்விண்டுசித்தர்
விமலவபிமானமெனும்வீதில்செல்வ
நல்வளங்கொண்டோன்பள்ளிகொண்டானென்னு
நாமங்கொண்டோன்கல்விநலங்கொண்டோனே.

எதிராசமாமுனிகள் நான்மணிமாலை.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம :

முதலாழ்வார்கள்

மூம்மணிக்கோவை.

காப்பு.

பூவர்க்கருள்செயப்போந்தநம்பொய்கைப்புனிதன்முதன்
மூவர்க்குமும்மணிக்கோவைமொழியவென்முச்சிவைப்பன்
நாவர்க்குலோங்கியநாவீறனினிலநண்ணகில
சீவர்க்குநல்லருள்செய்மாறனம்பொற்றிருவடியே.
ஆதியாகியவருமறைச்சிரத்தினிலமர்ந்த
ஆதிமால்பரனெனவறிந்தகவிடத்தவர்தம்
ஆதியாதிநோய்தவிர்த்துயவருமறைதமிழ்செய்
ஆதியோகிகளடியிணைமுடிமிசையணிவாம்.

நூல்.

நிலமண்டிலவாசிரியப்பா.

திருமலர்ச்சேக்கைத் திசைமுகன்படைத்தவிவ்
வுருகெழுமும்மை யுலகினிலொன்றும்
பூவலயத்துவர்ப் பொருதிரைப்புணரிசூழ்
நாவலந்தீவினி னவவருடத்தோர்
வருடமாம்பாரத வருடவளாகத்
தூழுறவொளிர்ந்திடு மேழுமாபுரிகளுள்
ஒன்றுயென்றும் பொன்றுப்புகழ்பெறூஉம்
நாஞ்சியாரைசூழ் காஞ்சிமாபுரிவயின்
பழமறைமுறையிடப் பைந்தமிழ்ப்பின்படர்
கிழமையோன்றிருமலர்க் கிழத்தியோடுறைதரும்
அஃகாவளத்திரு வெஃகாப்பதியுழிக்
கள்ளுணமுகமூஉம் புள்ளறைவள்ளவாய்
முள்ளரையாடக முளரிக்கருவிடை
ஏழாவரணமுஞ் சூழாவொளிர்தரும்
அண்டமுமவற்றுறை யண்டராதியரும்

நினைவினுதித்திட வனைதலாதிக்குக்
காரணனாகிய நாரணனருள்வழிப்
பூத்திடக்கொப்பூழ் பூத்தோனெடுத்துச்
சீர்பெறுமணிமறு மார்புறத்தழீஇ
மெச்சிமுச்சியி னுச்சியைமோந்து
நானக்கருங்குழ னளினக்கிழத்திதன்
ஞானப்பாறரு நகிலுமுண்பித்து
நோக்காரருள்விழி நோக்கிநங்நேயத்
தாழ்வீரவித்தையைப் போழ்வீர்நமைச்சொலும்
அந்தமின்மறைப்பொருள் யாவையுமமைத்துச்
செந்தமிழ்முதற்பாச் செய்தவற்றுனும்
இருளறவேயா மருளியநியாச
வித்தையினுமிவ் வத்திசூழுலகரைத்
திருத்திநந்தாள்களிற் பொருத்தியவர்நன்
குயத்தகுநெறியினை நயத்தொடுகாட்டுவான்
விருப்பொடுநாமுறை திருப்பதிதானுமே
விஞ்சியவன்பொடு சஞ்சரித்தென்றுநீர்
இருந்திசென்றுரைத்த விருத்திபெற்றுளமகிழ்
பொய்கைமாமுனிவர பொய்கைபூம்பொழில்சூழ்
திருக்கடன்மல்லைத் திருப்பதிவயினிசைப்
பாட்டினரளியளி கூட்டினுறுவிரைத்
தாதவிழ்ந்தலர்ந்ததோர் மாதவிச்சுமனசக்
கருவழியுதித்திடப் பெருவிறலுவணமாக்
கேதகன்கமலமாப் போதில்வாழ்பவனுடன்
வந்துதன்சேவையைத் தந்தருட்பெருக்குறூஉங்
கடைவிழியாற்பரிந் தடைவுடனேக்குபு
தகர்ச்சியிலாநந் தூகர்ச்சியிலாழ்வீர்
ஆதிநூற்சார மனைத்தையுந்திரட்டிநன்
னீதிசேர்செந்தமிழ் நிறையிலக்கணமுதற்
பாக்களாலோர்தூல் பணித்ததுபயன்பட
ஊகமாயெவர்க்கு முரைப்பதினுனும்

விதியுடனுதும் மதியுறவருளிய
பதிபன்னிக்குள பந்தத்துணர்வையுஞ்
சத்தையார்பிர பத்திவித்தையையுஞ்
செப்பமாவுபதே சிப்பதிலுமிவ்
வுலகினர்தமைமதி கலமுறத்திருத்திதுக்
காட்கமலங்களுக் காட்படும்வணஞாம்
உகந்துறைநிலங்களி னகந்தொறுமகந்தொறும்
இயங்கியிருமெனும் வயங்கெழுநியமநம்
பூண்டபூதப்பெய ராண்டகாய்புகழ்கெழுஉம்
மயிலைமாநகர்வயி னயிலைநேர்பெருவிழி
கொசிதுண்மருங்கும் சசிதன்கொண்கணும்
வாசவன்முதலியோர் வணங்குபுவழிபடுங்
கேசவப்பெருமான் கேண்மையிற்கிளர்ந்துறை
கோட்டத்தமர்ந்தபூந் தோட்டக்கிணற்றறல்
அலர்ந்தசெவ்வல்லியி னலந்திகழ்கருவயின்
விதித்தவனருள்வழி யுதித்திடமற்றவன்
மாண்டகுதிருக்கார் தீண்டியேந்துபு
மன்னுயிர்க்கெலாமோ ரன்னையாகிய
எம்பெருமாட்டியின் வம்பவிழ்காந்தணோர்
அத்தத்தளித்திடச் சித்தமுவந்தவள்
பினக்கொங்கைசேர் ஞானப்பாலளித்
திருநிலக்கிழத்திபா லிருமெனவிடுத்திட
மூன்றைமாமறைதொழூஉ மெந்தையெம்பெருமான்
நளிரருள்விழியாற் குளிர்தரநோக்கியெம்
ஆழ்வீர்நீவிர்நம் வாழ்வார்திப்பிய
தேசந்தோறும் வாசஞ்செய்தவண்
பொருந்தியசேதகர் திருந்துறவருமறைக்
குருந்தினம்பொருள்களீப் பொருந்திநன்கமைத்துப்
பைந்தமிழ்ப்பாக்கள் பணித்தவற்றுணுதுந்
நெஞ்சுறதுமக்கியாந் தஞ்சமாவருளிய
விஞ்சுசீர்ப்பிரம விஞ்சையினுனும்
ஞானமுத்தத்துவ ஞானத்தானும்

இமைக்குமுயிர்க்கு நமக்குமென்றும்முள
சரீரசரீரிக் குரீஇயகட்பையுங்
கிளக்குஞானத்தைக் கிளத்தலிஞனும்
வையகமாந்தர்தம் பையுடவிர்த்துயச்
செயக்கடவீரெனு நயத்தகுமாணையை
மேற்கொண்டொழுகுபு மெதினிமாகடம்
நாற்கதிப்பிறப்பினை நசித்திடச்செய்துவிச்
சிராந்தியடைந்திடும் பிராந்தித்தபோதன
பாவனப்பொருள்களுட் பாவனமான்வும்
மூடிக்கருந்தவத்தவர் முடிக்கணியானவும்
ஆர்த்தர்கடங்கட் கடைக்கலமானவுங்
தீர்த்தர்கடமக்குநற் சேமவைப்பானவும்
என்னையொத்தவர்கட் கன்னையொத்தன்வும்
ஆகியபெரும்புகழ்க் காகரமாகுநுங்
கிருவடிகளையென் னுருமனச்சினகரம்
விதிப்படிநன்னர்ப் பதிட்டைசெய்வித்துத்
துளக்கமின்மெய்ம்மதி விளக்கநன்கமைத்
தன்பெனுமஞ்சன மின்புறவாட்டுபு
பத்திமைத்தேமலர்க் கத்திகைசூட்டுபு
தவாதுமேன்மேல்வள ரவாவின்மையெனும்
அறுசுவையடிசின்ன னெறிமுறைநிவேதித்
திழுக்குறுதகல் லொழுக்கத்தூபமுந்
தூய்மையினீங்கா வாய்மைத்தீபமும்
வழங்குவல்வணங்குவல் வாழ்த்துவல்மாயா
அவித்தைத்தமமுனங் குவித்தவினைப்பிழம்
பதனலடிநாண் முதலாவெனக்குநேர்ந்
தீர்தருபவப்பிணி தீர்தரற்பொருட்டே.

வெண்பா.

பொருள்கொண்மறையின்பொருண்முடிவுதோன்றும்
இருள்கொளிருவினையுமீண்டா—அருள்கொண்முத
லாழ்வார்கடாளிலடைக்கலமென்றேயடைந்து
காழ்வார்களுள்ளந்தமக்கு.

கட்டளைக்கலித்துறை.

உள்ளத்துறையுமொருமுதறந்தவுணர்வுநல
வெள்ளத்துறைதருநம்மாதியோகிகள்வீழ்கழல்கள்
கூள்ளத்துறைவிட்டுநெஞ்சேகருதுதியேற்றிமிரப்
பள்ளத்துறையிற்படாதுகமைக்கொளும்பான்மையே.

இணைக்குறளாசிரியப்பா.

பான்மொழிமான்விழிப் பாவையரகட்டினிற்
பத்துத்திங்களு முற்றிப்பிறந்தழல்
அலகிலராகிய வுலகினர்போலா
தலர்தருமுருகுவிழ் மலர்வயினுதித்திடும்
அருமையிலருமையாம் பெருமையிற்சிறந்தீர்
ஞானமும்பத்தியு நயப்பின்மையுமாம்
ஊனமின்மணிப்பூ ணுள்ளத்தணிந்தீர்
ஏட்டையுமிந்தியச் சேட்டையுமொழித்தீர்
ஆகியநீவிர்
துறவியராதலிற் ரெல்லுலகோர்க்கம்
உறவினைக்காண்டொறு முள்ளத்தாற்ரு
தொருவரையுணரா தொருவரெங்களும்
ஓரிரவேனு மோருழித்தங்கா
தெம்பெருமான்றன் வம்பவிழ்மலரடிக்
குரியபேரன்புடன் பிரிதருங்காலுமை
உயிர்நிலையாக்கொளெம் முயிர்க்குயிராயவன்
நும்மைக்கொண்டிச் சும்மைநீருலகினைத்
திருத்துவானருத்தியைக் கருத்துட்கொளீஇத்
தீமனங்கெடுத்தருள் வாமனக்கேத்திரத்
தோவலிலாச்சீர்க் கோவலூருறைதருந்
தன்னைக்கண்டு தரிசித்திடுவான்
புத்தியளித்திடப் பத்தியினீவிரும்
அப்பதியடைகால் வெப்பமார்கரக்கதிர்
குடகடல்குளித்திடப் படரிருண்மிடைதலிற்
பூசுரனுமோர் மாசிலாவைணவன்
நடைபெறுமாளிகை யிடைகழிதனில்வந்

திருக்கையிலிறைவனும் பொருக்கெனதும்முழி
வருந்துவினன்றியே புருந்துமிதூர்ந்திடக்
கழியநமக்கிடங் கழிமைசெய்பவன்
யாவனென்றுணர்வா னீவிர்மூவிரும்
இடிந்சினெய்திரியினுன் முடிந்திடாத்தீவினை
மண்ணுறவேற்றிக் கண்ணுறுங்காணுமை
நெருக்கியோன்றிருக்கினர் மருக்கமழ்நறுந்துழாய்க்
கண்ணியனண்ணியன் புண்ணியனுண்ணியன்
காரணன்பூரண னவிற்றுமேழுலக
பாரணன்காரணன் பகர்மறைச்சிரத்தினிற்
றுணிபொருள்யாவையு மணிபொருளறிஞர்கள்
பணிபொருளெவற்றினும் பரந்துறையும்பொருள்
மூப்பரம்பொருட்கு முதற்பொருளாமம்
மெய்ப்பொருடனே நுங்கைப்பொருளெனக்கண்
டுள்ளத்தடங்கா வெள்ளக்களிப்பாழ்ந்
தவசராயெழுந்துட லரும்பியபுளகக்
கவசராய்ப்பழிச்சுறுங் கருத்துடையவராய்ச்
சேமமாரிருக்கெசுர் சாமவேதத்துறுஉம்
ஈரமாம்பொருள்களுட் சாரமாம்பொருளைமைத்
தமிழ்தினுமினியசெந் தமிழ்முதற்பாக்களால்
ஏவரும்புகழ்தரு நீவிர்மூவிரும்
முதலிரண்டொடனே துதலியமூன்றுந்
திருவந்தாதிகள் கருவந்துழலுமெம்
போலியருய்வான் வாலியகருணையின்
அருளிச்செய்தீ ரரியவாமூப்பொருட்
டெருளிற்சிறந்தநற் றெய்வப்புலவீர்
ஏழுத்துஞ்சொல்லும்
பொருள்யாப்பணியுங் கெருளுறக்கிளக்குறு
நூலினுமேனைய வாலியநூலினும்
எட்பகவன்னதோ ரொட்பமுமில்லாக்
கழுதிரதத்தைநீர்க் கயமெனுமிழுதையேன்
உறுதியாநாணுஞ் சிறிதுமின்றியே

அறவுஞ் சிறிதா முறவியொன்றெழுந்து
குசத்தீவைத்தன் வசத்தாய்ச் சூழ்தரும்
இழுதம்போதியை முழுதுமுண்குபு
புக்கெனவிணையினும் புசழ்க்கவிபாடுவான்
புக்கனனென்பிழை பொறுத்தெளியேனுங்
கிருத்தாட்டொண்டு செய்யத்
திருத்தியாட்கோடனுங் கருத்தருட்குரித்தே. (சு)

வெண்பா.

அருட்கடல்களாகுமுதலாழ்வீர்காளென்னெஞ்
சிருட்கடலிலவற்றுவித்தென்றும்—தெருட்கடலென்
புந்திக்குட்டேக்கிதுந்தம்புண்டரிகப்பொன்னடிகள்
வந்திக்கச்செய்வீர்மகிழ்ந்து. (ரு)

கட்டளைக்கலித்துறை.

மகியைச்சுகிசெய்துவாழ்விக்கவந்தருண்மாமுனிகாள்
அகியைப்படுக்கையமலற்கிடமாகத்திரெனா
யகியைப்பொன்னுக்கலெனத்தூயனுக்கியளவுர்ச்
சிகியைத்தணித்தனுஞ்சீரருண்மாரிச்செயலென்பவே. ()

நேரிசையாசிரியப்பா.

என்னகந்தன்னை யிறுக்கித்துதைந்து
மன்னகந்தன்னை மடித்தேகட்டிடுவான்
மண்டியதிற்குடி கொண்டுமகிழ்தரூஉம்
.ஆதியோகியிர் நீதியினீவிர்கள்
ஆழிசூழுலகத் தாழியான்புதல்வனைத்
திருவோதத்தியினிற் றிருவடிதொழுதெழுந்
தருளியிருக்கையி லிருடருமிலம்பா
டிற்றெருபொருளு மற்றவனுரிய
மறையவனெருவ னிறையன்புடனுமை
வழிபடவவற்குப் பழிபடாவிம்மைச்
செல்வமுமோக்கச செல்வமுமளித்தபின்
மங்கலிலாப்புகழ்க் கங்கையின்கரைமேல்
வதிதருகின்ற வதரியாச்சிரமத்
துறைத்தருதரு ராயணவுறைக

கண்டகளிப்புட் கொண்டபின்னீவிர்
பென்னம்பெருத்த பிறங்கற்குகைக்குட்
டன்னந்தனியே தானிருந்தியோகு
புரியுங்காலையில் வரியளிமுரன்றெழும்
ஒண்மலர்ச்சேக்கைவாழ் மண்பொதுத்தந்தை
வாராவரநர நாராயணரெனும்
இருடிகளானும் பொருடிகழ்பெருமையைக்
கேட்டதைத்தெளிவான் வேட்டரம்பைக்கவான்
அரம்பைமேநகை யாதியோர்க்கொண்டும்
மூரம்புறுகானத் துரம்பெறத்திரிதரு
மூடங்குலைச்சீயங் கடங்கலுழ்கைம்மா
அடிதொழுதுநிர்க்கரக் கொடுவரிகொண்டும்
உம்பலிற்சிறந்ததாஞ் சிம்புளைக்கொண்டுங்
கடைநாளெழுகடு நடையார்மருத்துடன்
சென்மழைமின்மழை செறிந்திடைவிடாதுபெய்
கன்மழைமுதலிடர்க் காரணங்கொண்டும்
நுங்கள்யோகினைப் பங்கப்படுத்துவான்
வற்புறுமுயற்சிகள் பற்பலவியற்றியும்
நிட்டையினீவிரோர் மூட்டுமின்றியே
சலியாதிருத்தலிற் றன்னுள்விளையெலாம்
பலியாப்பான்மையைப் பார்த்தப்பங்கயன்
விண்டுவைப்போலவன் றெண்டருமொருவரால்
வேறற்கரியவர் தேறற்கரியவர்
என்றுதன்னுளந்தனின் மன்றமாத்தெளிபு
பன்முறைபணிந்துமை மும்முறைவலம்வந்
தென்பிழையாவையு மன்பிறற்பொறுத்துக்
காத்தனுங்கடனெனத் தோத்திரித்ததூங்
காமமார்ந்தசெந் தாமரைத்தாளீர்
விரிஞ்சிக்கரியதும் பெருஞ்சீர்வண்மையைக்
காமரத்துபதங் கலிங்கந்தமக்குழல்
பாமரனெங்ஙனம் பகுத்தறிந்துய்குவல்
ஓவலிருளினு னீவிரேயதைத்தெரித்

தல்கலில்பத்திமைச் செல்வப்பெருக்குடன்
மல்குநன்ஞானமு மாவைராக்யமும்
காத்திகவென்னுளம் பூத்திடச்செய்துபுன்
பிறப்பிறப்பாதிய விறப்பென்றுந்தரும்
மாயையின்விறலுமம் மாயையையொழித்திடும்
புண்ணியஞ்புரு டோத்தமஞ்ணைமையும்
என்னுடையியற்கையு மென்னுளந்தெளிதர
உணர்த்துவீரென் றும்மை
மணத்தபேரன்புடன் மறைபுகுந்தனனே. (எ)

வெண்பா.

ம்றைபுகுந்தோர்தம்மையோர்மங்கைக்கருப்பச்
சிறைபுகுதாவண்ணஞ்செயுமால்—நிறைபுகழ்சேர்
எம்மடிகளெந்தையர்களென்னுமுதலாழ்வார்கள்
தம்மடிகளீதுசரதம். (அ)

கட்டளைக்கலித்துறை.

சரதத்தைநிற்குரைத்தேன்றேர்ந்துகோடிதருணியர்கள்
சுரதத்தழுந்துநெஞ்சேநந்துயரந்துடைக்கவந்த
வரதத்துயர்முதலாழ்வார்கள்வண்புகழ்வாழ்த்தெடுக்கும்
விரதத்தினிற்றியெனிம்பெறலாமின்பவீட்டினையே. (கூ)

இணைக்குறளாசிரியப்பா.

இன்பமென்பதோ ரெட்டுணையிலதாத்
துன்பமென்பதே தொகுதியினுளதாக்
குடும்பினிப்பெயர்த்த கொடும்புலியானுஞ்
சந்ததியெனச்சொலு மந்தமாவானும்
ஆரூமவித்தைக் கோளரியானும்
அண்டியதீவினை யண்டிகத்தானும்
பீடுரூமனமெனுங் கோடரத்தானும்
பொறிகளெனும்பெயர்ப் பொறையிலரானும்
நயந்தருமவாவெனும் வியந்தரத்தானும்
மண்டியகுடும்பக் கண்டகந்தன்னிற்
புகுந்துபீரூமோர் வகுந்துவையுணரா
கலமந்தென்று மூலமந்துழறரும்

உயிர்கடத்தஞ் செயிர்கடிர்ந்துய்வான்
ஐப்பசியோண மவிட்டஞ்சதயத்
திப்புவிவந்த வியற்றமிழ்ப்புலவீர்
நீவிர்
கருமலிமருந்திக் காசினியோர்க்கெனுங்
கிருமலிதனில்வாழ் கிருமமுமார்பினை
ஆவிக்கொருதுணை யாகியவமலனைச்
சேவிக்கிடுவான் றிருவுளங்கொளீ இச்
சென்றகாலையிலக் குன்றரசனந்தன்
பெருமைசான்ற கிருவுருவாதலின்
அடிதொட்டன்னதன் முடிமட்டுங்தும
தடியிட்டேறுத லரிலெனவெணியதன்
காழ்வரையோங்கிய தாழ்வரைக்கண்ணிருங்
துள்ளமுருகுற வள்ளிவாழ்த்தெடுப்பவப்
பூவைப்பூநிறப் புண்ணியனடைந்துதன்
சேவைத்திருவினைச் செவ்விதினளித்திடக்
கண்டுகளிப்புட் கொண்டவணிருக்குங்
காலையிற்காலையு மாலையுமுச்சியும்
விண்டுவினடிக்கே தொண்டுபூண்டொழுகுவோன்
பெரிதாசற்றெளிர் பீடுடையொழுக்கினன்
அரிதாசப்பெய ரந்தணனொருவன்
நுந்தம்
அடிக்கமலங்கடன் முடிக்கணிகலமா
வணிந்துகாடொறுங் கிணிந்தபேரன்புடன்
மொழிமனமுடலெனு மூக்கரணத்தினும்
வழிபடவவற்றுக் கழிபேரருளுடன்
உந்திபூத்தவற்கு முயிர்க்குமுள்ளதாஞ்
சந்தமார்சீர சரீரிசம்பந்த
வுணர்வினையுளத்துற வுணர்த்திவிண்டுவில்
பூசனைசிறந்தது புகலதனினுமவன்
தேசர்தம்பூசனை தெடிதுசிறந்ததாம்
ஆதலினவற்றையும் வீதலாராலயம்

புதுக்குதல்பொய்கைகள் புதுக்குதன்மூதலிய
கருப்பிணிகளைந்திடுந் திருப்பணிதம்மையும்
பேர்கெழுமரங்கப் பெரும்பதிமுதலிய
சீர்கெழுதிப்பிய தேசத்தலந்தொறும்
அருளுருவெடுத்துநின் றன்னதோர்தன்மையின்
றிருமலிதனிலுறை செல்வனைச்சிந்தைசெய்
தன்னவனருள்வழி மன்னுமோரக்கய
பாத்திரமும்மதைப் படிறர்வவ்வாது
காத்திடத்தக்கதோர் கனலுமிழாழியுங்
கண்டளித்திவ்வக் கயபாத்திரநிதந்
தொண்டனினக்குச் சுரந்திடும்பொருள்கொடு
பரிந்தமனத்துடன் புரிந்துநீவருகியென்
றருளியவருட்கட லெருட்கடலன்னீர்
தவத்தாலுயரி தாசம்போலா
தவத்தாளழுந்திய வாதனேயினும்
என்னரியர்கா ணிண்டைநேர்தமது
பொன்னாடகவிற் புகல்புகுந்தனனென்
பண்டைவல்வினை பாற்றித்
தொண்டுகொண்டருளுந் தொல்லருட்குரித்தே. ()

வெண்பா.

அருளுருவங்கொண்டனையவாதியோகிப்பெரியீர்
மருளுருவமாமென்மனத்தைத்—தெருளுருவம்
பூணச்செய்வீரெனிலப்போதன்மறலிதமை
நாணச்செய்வீராகனி. (கக)

கட்டளைக்கலித்துறை.

செய்வீர்பிறந்தெனமால்சொற்றதைச்செய்திராதிர்சினத்
தைவீரரைப்புறங்கண்டவராமுதலாழ்விரென்பால்
மெய்வீரங்காட்டிமெலிவிக்குமாயையின்மேவுஞ்சன்மம்
மொய்வீரைமூற்றும்வறண்டிடநீவிர்முயன்றிடினே. (கட)

நிலைமண்டிலவாசிரியப்பா.

மூயன்றமர்புரிவா னியன்றெழுமொன்னலர்
இதயம்போழ்தர விம்மென்றதிர்தருஞ்
சங்குநற்றண்டொளி தங்கும்வாட்கலைகளில்

அவனியோர்க்கருள்வா னவதரித்தருளிய
ஆதியோகியீர் வேதியர்தொழுதிருக்
கச்சியிற்கரிகிரி யுச்சியிற்றிகழ்தருங்
காரணவத்துவைப் பூரணப்பொருளினைத்
தேவர்கடொழுதெழு மூவர்கண்முதல்வனை
ஓரிருமறைதுதி பேரருளாளனை
விண்ணவர்விழுமமும் விரிதிரைவேலைசூழ்
மண்ணவர்மம்மரு மாற்றிடற்குரியவாம்
வரதாபயகரச் சரதாசிரியனைத்
திருவடிதொழுதவண் மருவியகாலையில்
விண்டுவர்த்தனனெனும் வேந்தர்கோனுங்காட்
டொண்டுளுண்டநுதினங் தொழுதுவழிபா
டியற்றியிருந்திடு மெல்லையிற்பற்பல
இயற்றியுடன்படை யெடுத்துவந்தயற்
றேயத்தரசர்கள் மாயப்போர்வினைத்
தன்னவன்றனையவர் வெங்கிடச்செயலும்
மன்னவன்வந்துதும் மரைபுரையடிகளின்
மறைபுகழ்விரவ் வாகுசற்கிரங்கிநான்
மறைமூடிப்பொருளெனும் வாரணமாமலை
எம்பெருமானடி யிறைஞ்சியேதிக
டம்பெருமானெனச் சாற்றிடுந்தகைத்திரு
வாழியாழ்வான்றனை யடைந்ததையவற்களித்
தாழிசூழகலிடத் தரசருக்கரசனும்
விண்டுவர்த்தனவிதைக் கொண்டுநின்பகைவரை
வென்றுநின்னகரியிற் சென்றுநின்றமருடன்
அரசவையடைந்தரி யாதனமீதிருந்
தொருகுடைநீழலி லுலகெலாம்பல்பகல்
ஆண்டுவாழ்ந்ததற்பின் மாண்டகுமோக்கமும்
அடைதியென்றுசிக ளடைவுடனருளிய
தத்துவவுணர்ச்சித் தாபதத்தலைவீர்
வித்துருமொக்குள்வான் வில்லெனநிலையிசைக்

காயத்தெற்குள காதலிக்கழித்துநுங்
நேயப்பெருக்கையென் னெஞ்சத்திருத்தியங்
நெஞ்சத்துறைதரும் புஞ்சத்தமத்தினைச்
சீர்த்தவானகந்தனைப் போர்த்தபுன்பனிதனைப்
பருதிவானவன் பாற்றல்போற்பாற்றிமெய்ச்
சுருதிநூற்சாரமாத் தூயவர்சொற்றிடும்
அஞ்சுபொருளையு மறிந்திடுமறிவையுஞ்
செஞ்செவேயளித்தெனைத் திருத்தியாட்கொளீஇ
நித்தியவிபூதியி னித்தியர்தம்மொடு
நித்தியச்சுகத்தினை நித்தியந்துய்த்திடற்
குரியனல்லேனையு முரியனுச்செய்வீர்
ஆயினச்செய முயினுமினியனும்
மாமகணுயகன் பூமகணுயகன்
அகமலர்ச்சியையு முகமலர்ச்சியையுஞ்
சுருங்கலின்றியே யொருங்குசெயவற்
றுமெனமொழிப சேமநூலோரே. (கஙூ)

வெண்பா.

சேமமாம்வைப்பிற்சிறந்ததென்றேதெளிதி
காமநோய்கொண்டவென்கன்னெஞ்சே—நேமமார்
ஆதிகவிகணமதாதியாம்யோகிகடங்
நீதிசேர்பாதநிழல். (கச)

கட்டளைக்கலித்துறை.

நிழலினருமையையெய்யினின்றேர்கணினைப்பர்கண்ணன்
குழலினருமைகுழாத்துயிரோருங்கொடும்பவமூன்
றழலினருமையறியாதியோகியடிகணுஞ்சீர்க்
கழலினருமையைக்காண்போர்முத்திக்கரைகாண்பவரே.()

நேரிசையாசிரியப்பா.

கரைகாண்பரிதாய்த் தரைகாண்பரிதாய்ச்
செடிகுடிகொண்ட மிடியுடையுளத்தோர்க்
கடியிதுவென்று முடிவிதுவென்றுங்
கூர்ந்தமதிகொடு மோர்ந்தறிவரிதாய்
நெருங்கியபிறவிப் பெருங்கடலழுந்துபு

மோக்கக்கரையினை நோக்கவுமூக்கம்
இறையுமிலவா யுறைதருமுயிர்களை
நீதிகணிகழ்த்துறு மாதிநூல்வேதந்
துளக்கமின்றியே விளக்கமாக்கிளக்குறும்
பன்னெறிகளினு நன்னெறிநடாத்தி
வீக்கியதீவினை நீக்கிக்காப்பான்
சென்னிநாட்டிற் பொன்னியாற்றிடைக்குறைத்
திருவரங்கம் பெரியகோயிலில்
வனந்தாழ்சுதைத்திரு வனந்தாழ்வான்மிசை
அறிதுயிலமர்ந்திடும் பொறிமறுமார்பினை
அரணியலிலார்க்குச் சரணியன்றனை
அடர்ந்தபொருடொறும் படர்ந்துறைபவனை
பயிர்க்குநீர்நிலைபோற் பயின்றேயவ்வவ்
வுயிர்க்குயிராகி யோங்கொளியுருவினை
அண்டகோடிகளைக் கண்டகாரணனை
அவற்றுள்ளுறைதரு மெவர்க்குமெவைக்கும்
மூதல்வன்றனைமுத லாழ்வீர்முதுமுடன்
நீவிர்மூவிரு மேவியவிருவகைப்
பார்வைபடைத்த பயன்பெறும்வண்ணஞ்
சேவைசெய்துநுஞ் சிந்தைநைந்துருகிடக்
களிப்பெனுங்கடலுட் குளிப்பினையெய்தி
அவ்விடத்தெழுந் தருளியிருக்கையிற்
றெவ்விடமெனச்சொலுந் தீவினைவயத்தாற்
புழுநோய்வினைத்திடுந் தொழுநோய்த்தொடர்பினல்
அடியிடந்தொடங்கி முடியிடங்காறும்
புண்ணுராக்கையிற் புண்ணுயெங்குஞ்
சீயொடுசிலைநீர் வாய்தொறுமசும்பலில்
நீளிடைவீசுறூஉங் கோளுடைமுடைத்தி
நாற்றங்கெழுமிய நரபதியொருவனுஞ்
சீரார்மான்மியச் சிறப்பினைச்செவியுற்
றூராவன்பி னவசனுகியிப்

பார்த்திவந்தன்னைப் பாவனஞ்செயவரு
மூர்த்திகளாகுமும் முண்டகமலரடி
தோய்ந்தபொடிகளிற் றோய்ந்திடவப்பொடி
குட்டநோய்தந்தவக் குற்றவகையெலாம்
பொட்டெனப்போக்கியப் புரவலன்புரத்தினை
மாரவேள்புரத்தினுஞ் சீரிதாச்செய்திட
நறும்பூந்தொடைப்புய நரேந்திரனதைக்கண்
டிறும்பூதெய்திநும் மிணையடிப்பெருமையை
வாழ்த்திவாழ்த்தியவ் வண்கழல்களிற்றலை
தாழ்த்தித்தாழ்த்திநுந் தாசனெனும்பெயர்
பெற்றுநுந்தாட்கே யுற்றவனுகிநற்
றெண்டிருப்பூண்டொழுகுமம் மண்டலீகனை
ஆட்கொண்டருளிய வருட்சிறப்புடையீர்
வாட்கண்மடந்தையர் மால்வலையழுந்திக்
கருப்பநரகினு முருப்பமாரேனைய
விருணிலந்தொறுநனி மருளுறீ இயுழறரும்
அடியனேனுநும் மடியிணைக்காட்பட்
டெய்யும்விரகொன் றுளதற்றுதிராயின்
மெய்யரணத்தான் மிளிர்ந்திடுநும்புகழ்
எவ்வுலகத்தினு மேறி
இவ்வுலகத்தினு மியங்கிமல்கிடுமே. (கசு)

வெண்பா.

இயங்குதிணையோடியங்காத்திணையின்
மயங்கியதுபோதுமிம்மட்டும்—வயங்குமுத
லாழ்வீரடியனமுதமுறவென்மருளைப்
போழ்வீரருட்கண்புரிந்து. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

அருட்கண்ணைவிரடியேனுழிச்சற்றமைக்கினென்றன்
மருட்கண்மடிந்திடுமாயாதமாயையுமாயுநல்ல
தெருட்கண்டிறக்குமுத்தத்துவஞானஞ்சிறக்குமுதற்
பொருட்கண்புரிவுபுகுமாதியோகிப்புனிதர்களே. (கஅ)

நேரிசையாசிரியப்பா.

கள்ளவிழ்நறுவிரை முள்ளரைமுண்டகச்
சேக்கையிற்சேக்குமெண் ணேக்குடைப்போதனும்
ஆதிமனுவென வறைசுவாயம்புவுஞ்
சோதிமயனெனச் சொற்றிருஞ்சூரனும்
மெச்சுசீர்கெழுவை வச்சுதமனுவுங்
காண்டாவனனெடு மாண்டாபதர்களுந்
திக்கெலாநிறைபுக ழிக்குவாகுவும்
இரவிதன்மரபினில் வருநரபதிகளும்
வீடணனெனும்புகழ்ப் பூடணவள்ளலுங்
கழிபேரன்புடன் வழிபாடியற்றிய
தரங்கக்காவிரித் தரங்கிணிநதந்தலை
அரங்கத்தரவணை யறிதுயிலமர்ந்தருள்
அப்பனையன்பெனு மலரணியாடையின்
ஒப்பனைசெய்துள வொண்மலராதனத்
திருத்தியெப்பொழுதினு மருத்தியினிதுகர்ந்
தீதியொன்றிலா வாதியோகியீர்
ஓவலிலன்புட னீவிர்மூவிரும்
இருக்குங்காலையிற் றிருக்கிளர்கிள்ளிதுஞ்
சவிபெறுமான்மியஞ் செவியுறீ இத்தனது
மனைவியொடுஞ்சத தகயைகடம்மொடும்
விரிவார்நால்வகைப் பரிவாரத்தொடும்
மிடைந்தபேரன்புட னடைந்துநுஞ்சேவடி
பற்றிடவவனிரு பற்றுமற்றிட
நோக்காரருள்விழி நோக்கிமாநியாச
வித்தையையுபதே சித்திடவவற்குப்
பொய்ஞ்ஞானக்கண் பொருக்கெனப்புதைஇ
மெய்ஞ்ஞானக்கண் மிளிர்ந்துவிளங்கிட
யாக்கையுமிளமையு நோக்குமமசர்தம்
ஆக்கமுமழிந்தறும் போக்கினையுடையன
என்றுமனந்தனின் மன்றமாத்தெளிந்துவர்த்
தேறெழில்பெறுந்தன நூறுநந்தனைகளுங்

கண்டவுடன்மயல் கொண்டுவேட்டிடவவாம்
வாகுவன்மதனையும் வாகைகொண்டவனெனும்
யோகிதாசப்பெயர் யூகிமன்னவன்றனக்
குதகபூர்வகமா வதுவைசெய்தீந்துதன்
அரசையுமரசினுக் குரியனயாவையும்
அவ்வரனுக்கே யளித்துதுந்திருவடி
நவ்வினைக்கொளீ இத்தன் னடலைப்பவக்கடல்
கடப்பானறிவின் றிடப்பாடருளிய
அருணிதிகாளிவ் விருடிணியிதயத்
திழுதையேன்பவக்கட டெழுநாமண்டிய
வழுதுவான்போரென மாய்ந்திடச்செய்தருக்
கருவடிகளையுதுந் திருவடிகட்கே
ஆனவன்பொடு தேனுர்மலர்தூய்
வணங்கிவாழ்த்தெடுத் தினங்கியெண்ணியிவ்
வழும்புறுசட்டகம் விழும்பொழுதளவுதுந்
தொழும்புபூண்டியவருள் சுரத்தல்
அறமெனவறைகுவ ரறிந்திசினேரே. (ககூ)

வெண்பா.

ஞர்ந்துளமேகோடிநீயுய்வமுதலாழ்வார்கள்
யார்ந்தபெருவாரிதிசூழ்வையகத்துப்—போந்தசெயல்
ம்மைப்போனுநலிவுபடுவோரையெலாந்
ந்மைப்போலாக்கவென்றுதான். (உ0)

கட்டளைக்கலித்துறை.

ன்றும்பிறவியிடும்பைகொணெஞ்சேபிளம்புனிற்றுக்
ன்றுன்னுமாவிற்கனிந்திந்தக்காசினிக்கண்ணுதித்த
துன்றுங்கருணையுளத்தாதியோகிகடொல்கலிச்சீர்
ன்றும்பொருணைமையோர்திருவீட்டின்பத்துய்க்குமென்றே.

நேரிசையாசிரியப்பா.

என்றுமென்றாழு மிலங்கிமகரவுந்
துன்றுறுகோள்களுந் துலங்குதிக்கணங்களும்
மேகமூழுயங்கிடு மாகமார்க்கத்தால்
அயிர்ப்பிலியோகப் பயிற்சியினுற்றலாற்

படர்ந்துபல்வளங்களு மடர்ந்திடுஞ்சுவேதத்
தீவினையடைந்தவண் மேவிவாழுநர்நிதம்
பூசனைபுரிந்திடு மீசனைமலர்மகள்
நேசனைநீவிர்நும் நெஞ்சகத்தினினைந்
தாடிப்பரிவுடன் பாடிப்பணிந்தவண்
விட்டுப்பெயர்ந்தலை வீசுமும்பாற்கடற்
கிட்டித்துதித்ததிற் கெழுமியநனந்தலை
மணிமயமாத்திகழ்ந் தணிபெறுகோயிலிற்
றிகழ்தருமிரசதச் சிலோச்சயமிசையோர்
மகிழ்தருநீலமா மணிச்சிலோச்சயந்
திருவடிமுதலாத் திருமுடியளவள
அவயவத்தொகுதிக ணவநவமாக்கொளீஇக்
கிடந்தெனக்கிடக்குநங் கேசவன்றன்னைப்
படர்ந்துமுகமுந்துழாய்ப் படலையன்றனை
மாவாழ்மார்பனை மூவாமுதல்வனை
மண்டியவுலகெலா முண்டசெவ்வாயனை
யிருவிபூதிக்கு மொருபெருந்தலைவனை
நாரணனுகிய காரணபூதனைப்
புண்டரீகாக்கனைப் புருடோத்தமன்றனை
வண்டமுமும்மத வாரணேந்திரன்
ஆதிமூலமென் றழைத்திடவக்கணஞ்
சோதிமயத்ததாஞ் சுதரிசனத்தைவிட்
டிடங்கரையெருக்கியவ் விபத்தினின்னுங்
கடங்களுமகற்றிய வருளுடையமலனை
ஓவலிலன்புட னுளத்துளிவாழ்த்தெடுத்
தாவியினின்றெழீஇ யாயிரஞ்சோதிதன்
மண்டலம்படர்ந்ததின் மன்னிருகமலநேர்
கண்டலமுடையனுய்க் காஞ்சனகிறத்தனுய்ச்
சுடர்விடுமங்கதத் தோணன்குடையனுய்
அடல்பெறுமாழிசங் கணிதிருக்கரத்தனுய்
மணிமுடியுடையனுய் மகரகுண்டலத்தனுய்
அணிபெறுமாடகாம் பரனுயந்தனர்

பரசுறும்விண்டுவைத் தரிசித்தேத்திய
ஆதியோகியீர் நீதிதெறிநிலா
தடிநாட்டொடங்கியிவ் வண்டவகுப்புகண்
மூடிநாட்காறுமோர் மூடிவிலாப்பல்வகைப்
பிறப்பாமளக்கரிற் பேதுற்றலமருஞ்
சிறப்பேயுடையவித் தீவினையேனையும்
ஆட்கொண்டருள்வா னணிறுந்
தாட்கமலங்களிற் சரண்புகுந்தனனே. (உஉ)

வெண்பா.

சரண்புகுந்தோர்தம்மையித்தாலத்தின்மாயை
மூரண்புகாவண்ணமுதிரன்—பரண்புகுவித்
தாதிமால்பாதமடைவிப்பர்நெஞ்சேநம்
ஆதியோகிப்பெரியோராம். (உங)

கட்டளைக்கலித்துறை.

பெரியோர்கள்பேணுறுநம்மாதியோகிகள்பீடுசொலற்
குரியோருலகத்தொருவருண்டேமனத்தொட்பமிலார்க்
கரியோரடியர்க்கெளியோரவர்பேரறையினளற்
றெரியோருமேலுவரிந்திரைகோன்றன்னிருப்பிடத்தே. ( )

நேரிசையாசிரியப்பா.

இடங்கொண்மாலுந்தியா மிண்டைவந்தவனுய்த்
தடங்கொளெண்கண்ணுடைச் சதுராகனனுய்
மேவியவைவகைத் தாவரசிட்டியுந்
துலங்குநாலேழ்வகை விலங்கின்சிட்டியும்
விண்ணகத்தியங்குறும் விபுதர்தம்படைப்பும்
மண்ணகத்துழிதரு மாநுடர்படைப்பும்
அவித்தையுமசத்தியுங் கவித்தசந்துட்டியுஞ்
சித்தியுமாகிய திரவரசிட்டியுஞ்
சமானமில்லவராங் குமாரர்தம்விதிப்பும்
மற்றும்பல்வகைப் பெற்றியர்விதிப்பும்
ஆற்றுமுஞானமு மாற்றலுமுடையனும்
ஓதிமவூர்தியின் சேதிமமோங்கிய
மெத்தியவொளிகெழுஉஞ் சத்தியவுலகினை

நண்ணியந்நான்முக னலங்கெழுமன்பிணல்
எண்ணியிறைஞ்சியேத் தெடுத்துப்பூசனை
புரிந்திடும்பூமகள் பொருந்தியமார்பினை
விரிந்திடுபெரும்புகழ் விண்டுவைமாயனை
அச்சுதாநந்தனே யநந்தசயநனைப்
பேராயிரமுடை நாராயணன்றனைப்
பின்னைகேள்வனைப் பீதாம்பரன்றனை
அன்னையொத்தெவர்க்கு மருள்செயுமமலனைக்
கேசவனைப்பர வாசுதேவனைச்
சகுந்தக்கோனையூர் முகுந்தக்கோனகம்
மகார்த்தியைமாய்க்குமுஞ் சகார்த்தகமூர்த்தியைப்
பஞ்சாயுதன்றனைப் பற்றற்றோர்கடங்
நெஞ்சால்வணங்குநீ னிறநெடியோன்றனைப்
பரவிச்சுரர்தொழுந் திரிவிக்கிரமனைத்
தாமரைக்கண்ணனைச் சம்புவைச்செளரியைச்
சாமளவண்ணனைத் தத்துவத்தலைவனை
மாலைமாதவன்றனை மணத்துழாய்மோலியை
கண்களளித்திடக் கண்டுளமகிழ்ச்சியாற்
புண்கடலைக்கொளப் பாடிநட்டமிட்
டாநந்தக்கட லழுந்தியவகத்தீர்
மோநந்தலைக்கொளூஉ முனிவரர்தலைவீர்
ஆதியோகியீ ரருந்தமிழ்ப்புலவீர்
நீதியோகத்தினி னிலைநிற்பவர்தம்
மனமொழிக்கெட்டா மாட்சிமையுடையீர்
சினமொழியாமனத் தீயனேன்பேயனேன்
நீசனேன்வஞ்சக நெஞ்சனேன்மகளிர்பால்
நேசனேனிசாரண நிசாசரரியல்புடைத்
துட்டனேன்றுட்டரைத் தூயவராக்குநும்
மட்டவிழ்மரைமலர் மாணடிசேர்ந்தனன்
ஆதலாலடியனே னரில்களெலாம்பொறுத்
தீதிசேரென்னுளத் திருடனையிரித்துமெய்ஞ்
ஞானமும்பத்தியு நாரணன்பரனெனும்

ஞானமாமதியையு நொடிப்பொழுதினிலளித்
தச்சுதனடியிணை யிச்சையினெணியெணி
நெக்குநெக்குருகிடு நெஞ்சப்
பக்குவியாக்கனும் பரம்பரம்பரமே. (உரு)

வெண்பா.

பரமேட்டிபாசகரன்பஞ்சபாணன்றம்
உரமேட்டிமைநம்பாலோவும்—வரமூட்டும்
ஆதியோகிக்கவிகளங்கழலேச்சிந்திக்கு
நீதியோகத்தினெஞ்சேநில் (உசு)

கட்டளைக்கலித்துறை.

நிற்றிநெஞ்சேமுதலாழ்வார்கட்போற்றுநிலையிலென்றுஞ்
சொற்றியவர்திருநாமமெப்போதுந்தொடர்ந்துநமைப்
பற்றியபாவப்பரப்பாற்படரும்பவப்பரவை
வற்றிவடிந்திடும்வைகுந்தநங்கைவயப்படுமே. (உஎ)

நேரிசையாசிரியப்பா.

வயப்படாப்பொறிகளும் வயப்படாமனமும்
வயப்படாமாயையும் வயப்பட்டெவர்கட்
குரைப்படிநிற்குமோ வுரைத்திடுமெவர்கள்
ஆமோதந்தனை யளிக்குமாமோதமும்
சம்மோதந்தனைத் தருஞ்சம்மோதமும்
பிரமோதந்தரும் பெற்றிப்பிரமோதமும்
ஆகியவுலகுகட் கன்புடன்முறைமுறை
யோகினற்றலா லுற்றவணுறைந்தருள்
சிங்கனினல்லிசை பொங்குசங்கருடனன்
பிறங்கியபெரும்புகழ் பெறும்பிரத்யும்நன்
அறங்கெழுமனிருத் தன்னெனும்வியூக
மூர்த்திகளாகிய மூவர்கடம்மையும்
ஆர்த்தியிற்கண்டுளத் தாநந்தங்கொண்
டாடியாடி யயர்த்தவர்சீர்த்தியைப்
பாடிப்பாடிப் பணிந்தவர்தம்முழி
விடைகொண்டவரருட் கொடைகொண்டிவ்வுழி
மீட்டுமெய்திய தீட்டொணவைபவச்
சிறப்புடையவரோ தெய்யவவர்களாம்

ஆதியோகிக ளருளாமரண்பெற
நீதியினெஞ்சமே நிச்சலுமவர்திருப்
பாததாமரைகளைப் பழிச்சி
நீதமாய்வழிபட னின்கடனுமே. (உஎ)

வெண்பா.

நின்புரிவாங்கடனெஞ்சமேநீசெய்யின்
முன்புகத்தில்வந்தமுனிவரா—மன்புகழ்சேர்
ஆதியோகிப்பெரியோராரருளாந்தங்கடனை
நீதியாச்செய்வர்நினைத்து. (உக)

கட்டளைக்கலித்துறை.

நினைத்துணைகொண்டனனெஞ்சேநீராழிநெடுநிலத்தோர்
வினைத்துணைக்காரணமாயையைவீழ்த்திடவேட்டுவந்தோர்
அனைத்துணையன்புடைநம்மாதியோகிகளென்றறிந்து
தினைத்துணையேனுஞ்செய்யன்பவர்பாதத்திருமலர்க்கே.()

பொய்கையூதன்பேயரென்னுமுதலாழ்வார்கள்
பொருவிழுவில்
உய்கைபெறவுன்னிமும்மணிக்கோவையென்னுநூ
லுரைத்தணிந்தான்
செய்கையாற்றிகழ்கச்சியிராமாநுசாரியன்முள்
சேருளத்தோன்
மெய்கையாவிரதத்தோன்பள்ளிகொண்டானெனுமியற்பேர்
மேதக்கோனே.

உண்மைபெறுபார்க்கவமென்னுபபுராணத்
துத்தரகண்டத்தன்னிலோதிரண்டாம்
வண்மைபெறுமத்தியாயந்தொடங்கி
வருத்திடுமெட்டாமத்தியாயங்காறும்
ஒண்மைபெறுநித்தியசூரிகளாமாதி
யோகிகடம்மொப்பில்சீர்வைபவத்தைத்
திண்மைபெறச்செப்புமுண்மைதேறவேண்டுஞ்
சிந்தையரந்நூல்படித்துத்தெளியலாமே.

முதலாழ்வார்கள் மும்மணிக்கோவை
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருக்குருகூர்

நம்மாழ்வார் நான்மணிமாலை.

காப்பு.

திருக்கிளர்தென்குருகூர்வாழ்வகுளச்செழுந்தொடையன்
மருக்கிளர்மாறற்கோர்நான்மணிமாலைவகுத்தணியக்
குருக்கிளர்வேத்திரமேந்துகைச்சேனையர்கோன்கமலத்
துருக்கிளரொள்ளடியுன்னிப்புனைவனென்னுச்சியினே.

குருகூர்வருங்குணநிதிமாறன்குலவுந்தெய்வ
முருகூர்மகிழ்த்தொடைமொய்ம்பினன்மொய்சிறைமோட்டெனைக்
குருகூர்தியஞ்சனெஞ்சேநங்கவிகளைக்கொள்வனென்றும்
பெருகூருணியெனப்பேசிடும்பேரருட்பேறளித்தே.

நூல்.

வெண்பா.

திருக்கிளருமெய்ஞ்ஞானதேசிகனம்மாறன்
உருக்கிளர்நற்சீருரைக்கவொண்மைப்—பெருக்குடையோர்
தம்மாலுமாகாதோர்சற்றுமவ்வொண்மையிலா
நம்மாலென்னுநெஞ்சேநாடு. (க)

கட்டளைக்கலித்துறை.

நாடுறுமுத்தத்துவமுணர்ஞானிகணுயகனற்
சேடுறுதென்குருகைப்பெருமான்றென்செறிவகுளத்
தோடுறுதொங்கற்றுணைத்தோட்பராங்குசன்றொல்லியற்சீர்
பீடுறப்பேசநினைத்தனைஞ்சேபெரும்பேதைமைத்தே.(உ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பேதைநெஞ்சேபெருநிலத்தோர்பிறவிபேர்ந்து
பெரும்பதத்தைப்பெற்றுய்யும்பெற்றித்தான
மேதைநெஞ்சில்விண்மணியின்விளக்கவேண்டி
மெய்ப்பொருளின்மெய்யுறையாம்வேதந்தன்னைப்
போதையுறுசெந்தமிழாற்புனைந்ததெய்வப்
புலமைசால்சடகோபன்பூவாரிக்கோர்

பாதையாம்பராங்குசன்சீர்பயமொன்றின்றிப்
பரவவொருப்பட்டதவாப்பரப்பின்பாற்றே.

நேரிசையாசிரியப்பா.

பரப்புற்றென்று முரப்புற்றேங்கி
நசிக்காவுயிர்களை விசிக்காவருத்துறாஉம்
அசித்தெனப்பெயரிய முசித்திடாப்பொருடான்
நகுமறிவிலதாய்ப் புகும்விகாரக்கே
இருப்பிடமாகி யொருப்பட்டென்றும்
இருக்குமதனிலைப் பெருக்கினைவிரிக்கின்
கலப்பறுசத்துவங் கலப்புறுசத்துவந்
தத்துறுகாலமாஞ் சத்துவசூனியம்
என்னவெடித்துப் பன்னிடுமூன்று
விதமெனப்புகல்ப துதலியவவற்றின்
எழுவாய்கடைகளி னியம்பியனவொரீஇக்
கழியாதிடையுறுங் கலப்புறுசத்துவம்
முக்குணமுடைத்தாய் முரணுறக்கட்டறீஇ
மட்குறுமுயிர்களின் மதிநலமறைப்பதாய்
ஒன்றும்வீற்றுணர்வினை யுண்டாக்குவதாய்
என்றுமுள்ளதா யிருடிகேசற்கு
மருவியகிரீடைக் கருவியினிருப்பதாய்ச்
சத்துவமிராசதந் தாமதமெனச்சொலுங்
குணவேற்றுமைகளின் கூட்டுறுவிடமொடு
குணவேற்றுமைகளின் கூட்டுறுவிடத்தின்
பேதத்தானும் பெருகிடுங்கால
பேதத்தானும் பிறங்கிப்பிறந்திடும்
ஒத்ததுமொவ்வா ததுமெனவுரைத்திடுஞ்
சூக்குமவிகாரமுந் தூலமாம்விகாரமும்
விளைத்திடக்கடவதாய் வீவிலாப்பகுதி
இளைத்தலிலவித்தை யிருத்தலின்மாயை
யென்னும்பெயர்களை மன்னிக்கலப்புறு
சத்துவமென்னுமச் சத்துவவசித்தால்
வீக்குண்டதன்குண வேற்றுமைதம்மாற்

முக்குண்டுழலுமித் தமியனேனித்தகை
அவித்தையாவரணமு மதன்குணப்பரிசமுங்
கவித்துநிற்றொடாவணங் கனன்றபெருந்தகாய்
அபயமுயிர்க்கரு ளரிந்தமனருளால்
உபயவிபூதியு மொருங்குறக்காணுமூஉ
மெய்யுணர்வாம்பெரு வீரையையுடையோய்
ஐயுணர்வயின்மிடு மைம்பொறியவித்தோய்
அலகோர்ந்துரைத்திடற் காகாவகத்தராம்
உலகோர்க்காப்பா ரெருப்பட்டென்றும்
முருகார்மலர்ப்பொழில் மூவாதொளிர்தருங்
குருகாபுரிவருங் குணக்குன்றனேயோய்
மாறன்பராங்குசன் மறைச்சடகோபனு
வீறன்வகுளவி விரைத்தொடையணிகலன்
அன்னவூர்தியென் றறைந்திடும்பெயரோய்
நின்னைவழுத்தி நினைந்திடநேர்ந்தென்
முன்னைநற்பாவினை முழுப்பேதைமையினை
என்னையாவெளியனே னிதனினென்றுணர்ந்திலன்
அன்னையொத்தென்பிழை யனைத்தையும்பொறுத்தென்
முன்னையுழ்வினைகளை முற்றவுமுருக்கு
பின்னரும்பின்னரும் பிழைசெயாதிருந்திடும்
உள்ளமுந்தந்தநில் வெள்ளமெய்ஞ்ஞானமும்
பூத்திடச்செய்தெப் போதுங்
காத்தனின்கரையிலாக் கருணையின்கடனே. (சு)

வெண்பா.

கடனுணர்த்துமாமறைகள்கட்டுரைக்குங்காட்சித்
திடனுணர்ந்துதேறியென்சிந்தை—யிடனிகழ்ர்
தன்கொருக்கிலின்சரணேசார்ந்துய்யவோர்மாற்றந்
தென்குருகைமாறவெற்குச்செப்பு. (கூ)

கட்டளைக்கலித்துறை.

செப்புறழ்கொங்கையர்ச்சேர்வழிசெல்லவென்சிந்தைதனைக்
கப்புறழ்வாங்கலிமாயைக்கடலிக்கடந்துநின்றனன்

துப்புறழ் தூவடி துன்னிட வோர்துறை சொற்றிபொறி
வெப்புறழ் வில்லார் தொழுங்குரு காபுரி வித்தகனே. (கூ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வித்தகத்தவியனுலகந்தனக்குமூன்று
விதமானகாரணமாய்விரிந்துநிற்கும்
வத்தகத்தமலயமிழிபொருநலுந்தி
வளரவாசிக்கரைவண்குருகைமாற
குத்தகத்தகுக்கிக்கேகுழைவேனின்றன்
கோகநகக்குரைகழற்கேகுழைந்துகையும்
பத்தகத்தனுப்பவவாரிதியிகந்து
பரந்தாமப்பதவிநண்ணப்பணித்திடாயே. (எ

கேரிசையாசிரியப்பா.

ஆய்ந்தோரமர்ந்திடு மரவரசமளியிற்
சாய்ந்தோனுந்தியந் தாமரைப்பூவரும்
அயற்கொருநாளிரண் டாயிரஞ்சதுர்யுகம்
இயற்படவவ்வகை யெண்ணிக்கணிக்குநாண்
மொழியுமைந்துடன்சேர் முந்நூற்றறுபான்
கழியிரண்டாங் கணித்திடுமவ்வகை
ஆண்டுநூறுயிடி னன்னமாஹூர்தியாம்
ஆண்டகையந்தணற் காயுளினவதியாம்
பாயிரமறைசொலப் பாரதிகொழுநனுக்
காயிரஞ்சதுர்யுக மாம்பகற்பொழுதினின்
மதித்திடுமீரேழ் மனுக்களிவ்வையத்
துதித்ததையுவப்புட னேம்பியொடுங்குவர்
அன்னவரொவ்வொரு வற்குமாயுடான்
உன்னுறுமெழுபா லொன்றெனுஞ்சதுர்யுகம்
என்னநூலுணர்ந்தோர் பன்னுவரெண்கணர்
இன்னணம்பிறந்திருந் திறந்தவர்கடற்கரை
துன்னுதுண்மணலெனத் தொகையிறந்தோர்களாம்
இப்பொழுதிருந்திடு மிரணியருப்பனுக்
கொப்புமாயுட்சமை யொருசதத்தளவையில்
ஐம்பான்சமைகழிந் தைம்பானொன்றெனுஞ்
சமைமுதனுடனிற் சமைபகற்பொழுதினின்

மறுவிலாமனுக்களோ ராறுவர்கண்மாய்ந்தனர்
ஏழாமனுவென விப்பொழுதிருந்திடுங்
காழார்கதிரவன் கான்முளைவைவச்
சுதமனுவாயுட் பதமெனுஞ்சதுர்யுகங்
குழுமாகூடிநி மெழுபாலொன்றினில்
இருபானேழ்கழிந் திருபானெட்டினில்
ஒன்பதுவாபர யுகத்தொடுக்கத்தில்
என்றுமபாவல ரிசைத்திடுமிசைசெழுஉம்
நாவலந்தீவினின் மேவுதென்றிசையுழி
எண்டவர்க்கருள்புரி விண்டுவின்கேத்திரம்
ஐந்தனுளொன்றுய் முந்திடுந்தாந்தம்
கேத்திரந்தன்னிற் கிளக்குமுமலயமென்
கோத்திரின்றுங் குவைத்திழிபொருகையாம்
ஆறுபாய்தலினு லூறுகாய்கில்லாக்
களஞர்வழுகி வளநாட்டின்கட்
டிருக்கிளர்ந்தோங்குந் திருக்குருகூர்க்கட்
டிருமகள்கொழுநனுந் திருநாராயணன்
திருமுகந்திருத்தோ டிருத்துடைதமையொரீஇத்
திருவடியுத்தவர் திருக்குலந்தன்னிற்
றெழுதிப்புகழ்த்திரு வழுதிக்கிழவனுர்
என்போருயிர்கண்மாட் டன்போரிருந்தனர்
அன்னவர்சேயறந் தாங்கியாரவர்மக
பன்னிடுஞ்சக்கர பாணியாரவர்கால்
அச்சுதரவர்முளை மெச்சுசீர்ச்சேந்தனர்
அருள்குடிகொளுமுளத் தவர்தரும்பிறங்கடை
செந்தமரைக்கணர் செப்பிவர்ந்தனர்
போர்க்கழியாரிவர் புதல்வரமவர்
கார்க்கைவள்ளலாங் காரியாரிவர்முனம்
இலையாற்றியளிக் குலையால்வளவிய
கதலியாற்கமுகாற் கதலிகைதம்மாற்
காவணமலர்களாற் கைசெய்தியற்றிய
காவணநீழலிற் கணிதரூலோர்சொலும்

பன்னுடம்மினு நன்னுளமைபூரும்
பொல்லாக்கோளிலா நல்லோரையினிற்
றண்டிலம்விரித்துநற் றருப்பைமேலணிந்து
விண்டலர்மலர்தூய் விதியுளிகுரியதா
வகுப்பனயாவையும் வரன்முறைவகுத்து
கல்விகயந்தருங் கல்வியாற்கேள்வியாற்
சான்றோர்கங்குலச் சட்டகங்கொண்மறை
போன்றோர்பொய்த்தலில் புடவித்தேவர்கள்
ஏம்பலினெழுச்சியா னேம்பியசெந்தீக்
கரியாவிகிமுறை கனிந்துகைப்பற்றிய
ஒண்புகழ்சேர்திரு வண்பரிசாரப்
பெருவாழ்வமைந்திடுந் திருவாழ்மார்பர்
விருப்பன்னவமெனுந் திருப்பின்னவராந்
தருப்பாசனத்தர் தவத்துயரில்லவள்
கருப்பாசயம்வரு கற்புருவானேள்
உடையநங்கைப்பெய ருடையோள்பல்பகல்
நோற்றநோன்பின்பய னேன்மையாலேற்றமார்
அறத்துருவாமவ ளகடாங்கிட்டிசை
திறச்சேனையர்சோன் செழுங்கலைகனக்கொடு
புகுந்துகியுகம் புகுந்தநாளெண்ணினங்
கொருமூன்றதனிலு முரைபிரமாதி
வருடம்வைகாசி வான்மதிமழைக்கோள்
வாரம்விசாகநா ணேருமுன்பக்கம்
பன்னஞ்சாந்திதி பகர்ந்திடுங்கவைத்தாள்
என்னுமோரையினு மிருள்வலித்திடினன்
இராமதிவாகர னிராமாதுசவொளி
தோன்றலிற்றெழுலையா தேன்றுறைந்திருந்ததாம்
உள்ளிருளுட்குமீஇப் பொள்ளெனப்பேரவும்
வற்றுப்பவக்கடல் வற்றிவறளவும்
மலராநெஞ்செனு மரைமலர்மலரவும்
மகிழணிப்பருகி வானவனென்னவிம்
மகிகலத்துதித்தருண் மாறபராங்குச

எனைப்போற்கொடியோ ரிவ்வுலகத்தினும்
எனைத்தோருலகினு மெக்காலத்தினும்
இருந்தோரிருக்கின் றவரிருப்பவர்களில்
வருந்தித்தேடினும் வாய்ப்பவரிலரால்
இத்தகைக்கொடியனே னிவ்வுலகத்தினில்
எத்தனைபிறவியோ வெடுத்தெடுத்தெய்த்தனன்
எல்லாரையும்போ யிரந்தனனவரெலாம்
பொல்லாவினைவெனப் புரந்திடாதொழிந்தனர்
இன்னும்பிறவிக ளெதிர்வதையெண்ணினென்
முன்னந்திடுக்கென முசிந்துசோர்கின்றது
வெய்யபிறவிகள் வேண்டேனுகிற்பின்
செய்யதாமரைத் திருவடியடைந்தனன்
மருளருணவந்தனை மானுமெற்கிரங்கி
அருளருணவமே யனையோயடியனேன்
உய்யும்விரகொன் றுரைல்லை
செய்தனின்னருட்குச் சிறப்புடைத்தாமே. (அ)

வெண்பா.

உடையகங்கைசேய்மணியையுன்னிற்பொறிகள்
அடையகங்கையமாமைம்பூப்—படையகங்கன்
போதன்மறவிபயம்போதுகெஞ்சேபுண்டரிகை
நாதன்பதமுணணுநாடி. (கூ)

சட்டவளக்கலித்தாழிசை.

நாட்டிலெங்கேனுந்தனைநல்குநாரிருகினுறுபால்
ஊட்டினுமுண்ணுதுறங்காதியோகினுமுழுவி
ஈட்டியசீர்த்திநம்மாறனல்லாமலிருந்தறென்று
கேட்டதுண்டோகவிகடுலைக்கோலிற்கிளத்துமினே. (கo)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கிளக்குமிரண்டியகுமின்றிக்குத்துமின்றிக்
கிளர்நீர்வேட்கையுமின்றிக்கிடத்தமெய்யை
வளர்க்குமவையயில்வாஞ்சைதானுமின்றி
மாசுணமன்னமுறங்காமரப்புவிக்கீழ்
வளக்கமலாதனனுப்சின்முத்திரைச்சை
வயங்கிடியோகத்திருந்தமாறன்றனினை

உளக்கமலத்துன்னுவோருற்பவத்தி
னுறுகணுருருலைவில்வீடுறுவர்தாமே.

திருமண்டிலவாசிரியப்பா.

உறுவர்களெவர்க்கு மூளத்தொன்னலராம்
அறுவரையெவரை யகத்தடைத்தோர்க்கும்
மறைகளின்முடிவினி லுறைதருமிறைநிலை
உணர்வரிதாமெனி னுணர்விலுதயமே
உருதேனுடற்றுயி லுபயச்செருக்கையும்
அருதேனலைக்குயி மைம்பொறிக்கள்வரைச்
செருதேன்சிரிய தேசிகர்திருவருள்
பெருதேன்பேர்க்கொணாப் பெற்றித்தாமவா
மருதேன்மனம்போ மார்க்கம்போதலை
ஒருதேனுண்மையை யுணர்த்துங்கலைகளைக்
கல்லாதேன்கலை கழறியவிதிவழி
நில்லாதேனுயிர் நேயநெஞ்சினில்
இல்லாதேனிரப் பாளர்க்கின்சொலுஞ்
சொல்லாதேன்மனத் தூயோரிணக்கினைப்
புல்லாதேன்பிறர் புன்கணைப்போக்கிட
வல்லாதேனுயிர்க் குறுகணையுஞற்றிடத்
தேடுவேன்றெரிவையர் சிற்றின்பத்தையே
நாடுவேனல்லவர் நற்பணிசெய்திட
ஊடுவேனுருதகை யுற்றிடவுனியுனி
வாடுவேன்வளனிலா வச்சையர்தம்மொடுங்
கூடுவேன்குலப்பொருள் குவித்திடவெங்கணும்
ஓடுவேனதற்கென துறையெலாமொழிப்பேன்
உண்ணத்தகாததை யுகந்துகந்துண்ணுவென்
பருகத்தகாததைப் பரிவுடன்பருகுவென்
எண்ணத்தகாததை யியற்றியெண்ணுவென்
சொல்லத்தகாததைத் துணிவுடன்சொல்லுவென்
செய்யத்தகாததைச் செப்பமாச்செய்குவென்
இத்தகையியல்பினை யெய்தியவேழையேன்
அத்தகையிறைநிலை யறிகிலேனுதலால

அருளுருவாகிய வமலமெய்ஞ்ஞானத்
தெருளுருவாகிய சிற்பரதெள்ளியர்
போற்றும்புனையடிப் புண்ணியவுதித்தோர்த்
தேற்றிக்காத்திடுந் திருவருட்சிந்தைய
ணண்டிசையெங்கணு மிலங்குறுஞ்சீர்த்திய
வண்டிசையறுமண வகுளமாமாலைய
நன்குருகூர்நகர் நனைநகற்றடஞ்சூழ்
தென்குருகூர்வருந் தேசிகர்தேசிக
சொன்னிலையிலாப்பெருந் துட்டனாகிய
என்னிலைக்கிரங்கி யிரிதருள்புரிந்தெனைத்
தூயோனாக்கியம் மாயோனிறைநிலை
யுள்ளிகினுணர்தரத் தெள்ளிதினுணர்த்தியிவ்
வடல்லினைக்குரியதா மூடல்விடுமளவும்
இகந்துபடாதகை நுகர்ந்தினிதிருக்கச்
செய்வதுமன்றியித் தேகம்விட்டபின்
அர்ச்சிரவதர்தனின் மெச்சிடக்கொடுபோய்
ஒளிமயமாகிய தெளிவிசும்பதனில்
நித்தர்கணிலவிய முத்தர்கள்குழுவினில்
உறைதரச்செய்வது முன்றன்பரமென
மறைபுகுந்தனனின் மரைபுரையடிக்கே. (கஉ)

வெண்பா.

அடிநாளடைந்தவரித்தைவினையாதி
முடிநாளுண்டாகநெஞ்சேமுன்னிற்—கடிநாண்
மகிழ்மாலைமாறன்மலரடிசிந்தித்து
நெகிழ்மாலையையாய்நீநில். (கங)

கட்டளைக்கலித்துறை.

நின்றுமதுரகவிப்பெருமான்முன்றன்னெஞ்சகத்தில்
ஒன்றுமயிர்ப்பறக்கேட்டவிலுவிற்குரியவிடை
மன்றுபடச்சொன்னமாறனடியைமனத்திருத்தல்
நன்றுகமர்கட்கெனநவில்வாமறைநாவலரே. (கச)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வல்லவர்ப்பண்டிருந்தவான்பீகாதி
வடமொழிதென்மொழிக்கவிஞர்வரப்பண்பில்லாப்

புல்லவராகக் குணத்துப்போதனுதிப்
புத்தேளிர்முனிவரருள்புக்கோரென்னும்
பல்லவப்பூம்பொழில்சூழ்தென்குருகைவந்த
பராங்குசமாமுனிக்கவிஞன்பரநூறோர்ந்த
கல்லவர்சொலுரணனல்லருளின்மாட்சி
நண்ணினேனென்னும்வல்லோர்கவிலுவாரே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

ஆருயிர்ச்சொருபஞ் சீரியதாமுடல்
பொறிமனம்பிராண னறிவுதியெனக்
கூறுமிவைக்கு வேறுயுள்ளதாய்த்
தனக்குத்தானே தயங்குக்கைத்தாய்
அலாவியம்கைச் சுகமாயிருப்பதாய்
ஓன்றியகால மென்றுமிருப்பதாய்
வளமாரணுவி னளவாயிருப்பதாய்ப்
பொறிகளுணர்வா னறியவொண்ணுததாய்
அசித்தின்குலத்ததாய் நினைகவொண்ணுததாய்
அசித்தெனவென்று முசித்திடும்விகாரந்
தட்டாதொருபடிப் பட்டிருப்பதாய்த்
திடஞானக்கிருப் பிடமாயிருப்பதாய்த்
துன்றவயவக்கூழு வின்றியிருப்பதாய்ச்
சீரியதியமியக் காரியஞ்சேடமாம்
என்னுமிவ்வுறையு மன்னியிருப்பதாய்
இருக்குமிலக்கண வருக்கமுடைத்தென
உத்தமராகிய தத்துவதரிசிகள்
ஓருமிடருகத் தெருளுறதெரிக்கினுங்
காலதத்துவமெலாங் கணக்கிலாப்பிறவிகள்
ஞாலமீதெடுத்து நவிற்றுமுயிர்நிறைகாள்
காமமவ்விலக்கணங் களிலொன்றேறனும்
வீமமவித்தையின் விறலிலகப்பட்
டுணர்ந்திலன்றத்துவ வுணர்ச்சியோரிணக்கமும்
புணர்ந்திலனெடுத்தவப் புலப்பிறவிகடொறுஞ்
சிதடனுய்மக்கட் பதடியாயினன்

இந்தகையேழையேற் கிரங்கியிருக்குணர்
வித்தகர்வியக்குறும் விழுப்பொருணர்ந்தவ
சடத்தைச்சினந்தவ தாகுமம்பொறிமேய்
விடத்தைப்போன்றதீ விடயமொறுத்தவ
இணக்கித்தம்வழி யெவரையுமீர்த்திடுங்
குணத்தைக்கடந்தவ குணநிதியானவ
மூருகூர்மலர்ப்பொழிற் குருகூர்க்கொற்றவ
மோனிகடிபத ஞானதேசிக
வணக்குடைத்தவெறி யிணக்கர்தந்தலைவ
என்னிலையானுறு நன்னிலையுணர்த்தித்
துறவச்சுடர்கொளீ இப் பிறவிப்பிணியொரீஇ
அந்தாமத்தினை யமைத்தல்
எந்தாய்நின்னருட் சேற்றதோர்செயலே. (கசு)

வெண்பா.

ஓர்ந்தோர்ந்துளத்துள்ளியோத்தின்பொருளையெலாந்
தேர்ந்தோர்தொழுங்குருசைத்தேசிகன்றாள்—சார்ந்தோரே
உய்யும்விரகென்பருள்ளமேயுண்மையினீ
செய்புங்கடமையஃதேதேர். (களை)

கட்டளைக்கலித்துறை.

தேர்ந்தோரைக்காக்குந்திரைகடற்றேயத்திற்றென்குருகை
சேர்ந்தோன்றமிழ்மறைசெய்தோன்சினந்தெறுஞ்சடத்தைத்
தீர்ந்தோன்றிருவடிக்கத்தாணிச்சேவகஞ்செய்துவக்க
நேர்ந்தோர்பெருமைநிகழ்த்தவல்லாரெவர்நீணிலத்தே. ()

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நிலத்தோங்கிவருங்கருமகைங்கரியமெனுமிவற்றி
னிகழ்த்துங்கன்மங்
குலத்தோங்கும்வருணக்குங்கைங்கரியந்தொண்டிற்குங்
குறித்தென்று
தலத்தோங்குந்தென்குருகைச்சடகோபன்றிருவுள்ளந்
தன்னையோர்ந்த
நலத்தோங்குநல்லோர்கணவில்வரிதைநாடோறு
நாடென்னெஞ்சே. (கசூ)

நிலைமண்டிலவாசிரியப்பா.

நாடுங்காலைப் பீடுசா னூல்கள்
கருமமுஞானமு மருமையாம்பத்தியும்
புரையிலதாக வுரைபிரபத்தியும்
ஆசரிப்பித்திடு மாசாரியாபி
மானமுமாமிவை ஞானநல்வீடடை
நெறிகளென்றெவரு மறிதரவுரைக்கும்
மூதலின்மொழிந்தவம் மூன்றுநெறிகளும்
மூதல்வருணத்தோர் முயன்றிடத்தக்கவாம்
ஞான்காநெறியையா னடத்தவல்லேனலேன்
ஐந்தாநெறிக்கே யமைந்தவனெவன்
சிந்தா குலங்கெடத் திருவருளுட்கொளீஇ
எந்தாயெம்மோ யென்குலதெய்வமே
இயங்குதிணையியங் காத்திணையாகிய
உயிர்க்குயிராகி யுறைபவனுந்தனக்
குயிர்ப்பொருளெனமதித் துரைத்திடத்தக்கோய்
ஞான்மறைச்சாரமா யநந்துயிருளிய
ஞான்குகலைகளு ஞான்குநிலைகளா
மோக்கவிருப்பெனுந் தூக்கனல்வாதைகொண்
மன்னுமாறரிசன வாய்மைதேரும்பிர
பன்னராகியபரி பக்குவக்கன்றுகள்
உண்டிசேக்கிடவருள் கொண்டநவரதமும்
ஊனமிலெம்பொருண் ஞானமாம்பால்பொழி
அழிவில்பேரின்பமே யொழிவிலாதொளிர்பரம்
காமகின்றழிதருங் காமதேதுவே
ஆரியரபிமா னத்திலமைந்துவாழ்
சீரியர்தமக்குநம் மெளிவிசும்பதனில்வாழ்
திருமகணுயகன் றிருவடிக்கடிமைசெய்
அண்பெனப்பெயரிய வழிவிலாக்கந்தர
முருகூர்மலர்ப்பொழிற் குருகூரெனும்பெயர்க்
கற்பகத்துறைதரு கற்பகத்தருவே
அடியனேனறிவினிற் சுடிமானத்தினில்

ஓடிவிலாதென்று மொதுங்கிவாழ்தரச்செய்
தளித்தியேல்யாவருங் களித்திடுநின்புகழ்
முன்னர்நிலையினு நன்னர்நனிதழைத்
தண்டங்களினுமவ் வண்டத்தொகைகளை
எண்ணிற்படைத்தவ னெண்ணிக்களித்துவாழ்
உரந்தாங்கியவொளிப் பரந்தாமத்தினில்
இடமுடைத்தலத்திலோ ரிடம்விடாதெங்கணும்
மன்னுபட்டென்றினு நன்மருளிர்தருமே. (உ0)

வெண்பா.

ஒளியுருவாயுதக்கிலொண்டிருக்கோளுரற்
களியுடன்முன்சேவைதந்தவண்ணல்—ஒளிர்குருகை
மன்னேமரகதமேமாமணியேமாற்றுயர்ந்த
பொன்னேயெனதுபவம்போக்கு. (உக)

கட்டளைக்கலித்துறை.

போக்குதிபொய்க்கலுபுந்திபுகுவித்துபொய்யுணர்வைத்
தேக்குதிமெய்யுணர்வைத்திருவாய்மொழிச்செம்பொருளால்
நீக்குதிநெஞ்சினிறைந்தவவித்தையைநின்னடிக்காள்
ஆக்குதியென்னுரத்திருக்குருகூருறையாண்டகையே. ()

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆண்டகைகளாமரசர்பொறியும்வேண்டே
னனிமாதிசித்திகளுமவாவகில்லேன்
வண்டலைகையிந்திரனிருவுமிவறகில்லே
னெண்கணன்றன்னிரும்பதமுமெண்ணகில்லேன்
மாண்டகையதிருக்குருகூர்வந்தமாற
மகிழ்மாலைச்சடகோபமறையோர்வாழ்த்திப்
பேண்டகையநின்றிருத்தாட்டொண்டியற்றும்
பெருஞ்செல்வப்பேற்றினையேபெணினேனே. (உங)

நேரிசையாசிரியப்பா.

ஏனத்துருவெடுத் திருநிலமிடந்ததன்
தானத்துய்த்தவெந் தண்ணளித்தனிமுதல்
எண்ணிலண்டங்களே யியற்றியளித்திடுங்
கண்ணன்கருமணி வண்ணன்செம்மணி

நிறத்தினன்மூற்றியிற் நிலமிசையறங்களைத்
திறப்படச்செய்துளத் தெள்ளியர்ப்புரப்போன்
பாமசுணுயகற் படைத்தோன்பரிமளப்
பூமசுணுயகன் பொறைப்புருடோத்தமன்
திடப்படநிற்பன நடப்பனவாகிய
ஆருயிர்க்கெலாமோர் பேருயிராயவன்
மறைமுடிவுரைத்திடு மிறைநிலக்குரியோன்
திருவருடன்னைத் திருக்குருகூர்தனிற்
றிருவவதரித்தருள் செந்தமிழ்க்கரசன்
வேரியார்மகிழ்த்தொடைக் காரிமாறப்பிரான்
நிலவுறுநிலமிசைக் குலவிவாழ்பவர்மனம்
வாய்மலமறத்திரு வாய்மலர்ந்தருளிய
வெண்பாநண்பா வியக்குமாசிரிய
வொண்பாவுவப்புட னுரைக்குமாசிரிய
விருத்தமப்பெயரினுல் விரித்திடத்தகுந்துறை
வஞ்சிப்பாவஞ் சித்துறைவிருத்தங்
கலிப்பாகலிவிருத் தத்துடன்கலித்துறை
என்னும்பெயரிரு லிசைப்பனவாகியுந்
தன்னும்பகரோய் தூடைப்பவராகிய
மருத்துவரவர்தரு மாண்புறையென்னவும்
வயங்கிநாடொறு மியங்கிப்புறத்துறை
நள்ளிருடன்னிலு நலிந்திடுந்தகைத்தாம்
உள்ளிருளொழித்தலி னுதயர்களென்னவுங்
கண்மையினளிபரிந் துண்மையுணர்த்தலின்
மாத்தகைக்குரியரா மாத்தர்களென்னவும்
பெரியர்களுரைத்திடற் குரியனவாகியுங்
திகழ்ந்திடுந்தகையவா யிகழ்ந்திடும்பிறவிப்
பையுரோப்பாற்றிடுஞ் செய்யுளாமாக்கள்
ஐம்பொருளாகிய செம்பொருட்டும்பால்
சொல்லச்சுரந்திடு நல்லியல்புளவா
அங்கண்மாஞாலத் தெங்கணுநிலையுறீஇ
இருக்கெனப்பெயரிய திருக்கிளர்செழுமறைச்

சாரமாய்த்தயங்குறுந் தகைத்திருவிருத்தமும்
போதமாரெசுர் வேதசாரமா
மருவாவொளிர்தருந் திருவாசிரியமும்
பதரதர்தொலைத்துநல் லதரிசனக்காட்டிறும்
அதர்வணவேதத் தமைந்திடுஞ்சாரமாம்
உருவந்தனைக்கொளுந் திருவந்தாதியுங்
கிதமார்சாம வேதசாரமாப்
பெருவாழ்வளித்திடுந் திருவாய்மொழியுமாம்
மேனிலக்குரியதா மானிலத்தலந்தொறும்
வணக்குடைத்தவநெறி யிணக்குடையவராங்
கன்றுகணேடியே நின்றிருக்கின்றன
அத்தவநெறிக்கே யமைந்தவராகிய
சுத்தமாந்திருவுளத் தொண்டர்கள்பண்டைநாள்
பாண்டியனைவக்களந் தீண்டியபுலவர்முன்
மேன்மையைக்குறித்திடு நோன்மைசாலாரண
வாக்கியபரம்பரைத் தூக்கெடுத்துரைத்துத்
திருமால்பரத்துவந் செய்தவராகிய
பெரியாழ்வாருந் பிறங்கிடுமவர்திரு
நந்தனையாகிநன் னந்தனவனந்தனிற்
றிருத்துளவடிதனி லருந்தியிலுலகினர்
வாதைதீர்தரவருங் கோதைநாயகியுமுன்
பேய்ச்சிபாலுண்டநம் பெருமான்பெட்புமூஉம்
ஆய்ச்சியர்பிறப்பினை யவாவியமுறைமையின்
நீவிர்கள்யாவரு மேவியவினைக்குறுஞ்
சாதனமாகிய கோதனவுருவராம்
பாவனமாகிய பாவனையுளங்கொளீஇ
வம்மின்வந்தெனக்குறும் வடிவச்சேவையைத்
தம்மின்றந்தபின் றடையொன்றின்றியே
வேதமெய்யுணர்ந்தோர் விரிஞ்சனுதியர்
கோதறுஞானக் கொழுந்தின்முன்செல்கினும்
ஏதமின்றிலங்குறு மெக்கவிகளினோர்

பாதமுன் செல்லுமே பரஞ்சுடரெனவோர்
கடவுட்புலவன் கழறுதற்குரியவாங்
கடவுட்டன்மைசால் கவிக்குழாமாகிய
குடஞ்சுட்டிகளுறை யிடஞ்சுட்டிச்சென்
றேறுதலாகிய வூட்டுங்கடமையைச்
செய்துமவைபொழி தீம்பாலமுதுண்
டெய்துமுடனின் முடற்றுறும்வினைகளோ
ஒழிதுமொழிலா வும்பவவாரியைக்
கடத்துமெடுத்தவிக் கடவினைகழிந்தபின்
கடத்துமர்ச்சிர நடவையையணிச்செலீஇ
நலமந்தமில்லதோர் நாட்டில்
உலவுமும்பர்களோ டுன்குழீஇவாழ்துமே. (உச)

வெண்பா.

வாழ்வோங்குந்தென்குருகைமாறன்றூளுச்சியாற்
றாழ்வோர்களாந்தொண்டர்தாட்டுணையை—வீழ்வோ
நடப்போதெஞ்சேயவர்சொன்னானெறியேநாங்
கடப்போம்பிறவிக்கடல். (உடு)

கட்டளைக்கலித்துறை.

பிறவிப்பிணிதனைப்பேர்த்திடுஞானப்பிடகபெருந்
துறவித்தலைவசுடராழிமாலைத்துதிகவிஞ
ரறவிப்பிரான்றொழுமாறதின்றூளையகத்திலுன்னு
மறவிப்பகையினமாய்த்தெனைக்காக்கமதிழந்தருளே. ()

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருள்கொளுநல்லகத்தராமடியார்தங்கட்
காரமுதாய்த்தேனுபண்ணிக்கும்பாலாய்
மருள்கொண்மனத்தோர்மாறுப்பிறவிநோயை
மறுவலும்வாராதொழிக்குமாமருந்தாய்த்
தெருள்கொளுஞ்செம்பொருட்கலியின்றிரள்கடம்மிற்
சிரியதாய்ப்பயில்பவர்க்குச்சிறந்தினிக்கும்
பொருள்கொளுன்றமிழ்மறையாம்போதவைப்பைப்
புந்திவைத்துமாறனிதம்போற்றுவேனே. (உஎ)

நிலமண்டிலவாசிரியப்பா.

போற்றுங்கலியெனும் புருடன்பெரும்பகை
ஆற்றல்சான்றென்று மலைக்குமாயைப்பகை
கவித்துக்கெடுத்திடு மவித்தைக்கொடும்பகை
வினைப்பகைவினையால் விளையுமுடற்பகை
காமப்பகைதெறும் வீமப்பொறிப்பகை
பசிப்பகைநோய்ப்பகை விசிக்குமவாப்பகை
இவைமுதலெண்ணிலாக் குவைகிழவுடம்பகைகளின்
வருக்கந்தன்னி னெருக்குண்டுழறரும்
ஏழையேன்மூவகைப் பிழையேன்கோழையேன்
நாராயணநித நாடுறுந்தமிழ்மறைப்
பாராயணவுயிர்ப் பரிவுறும்பராங்குச
குருகூர்வந்தருற் குணச்சடகோபன்
முருகூர்மகிழ்ந்தொடை மொய்த்திடுமொய்ம்ப
மாறனாவிற மராளவூர்திய
அச்சுதனறிஞர்கண் மெச்சிடுமிந்தமன்
திருத்தகுமருப்பொழி திருத்துழாய்மோலியன்
சங்குசக்கரந் தங்குகைச்சநார்த்தனன்
பதுமநாபன்செம் பதுமவிலோசனன்
மாயவன்றூயவன் மால்புருடோத்தமன்
முகுந்தனிருஞ்சிறைச் சகுந்தக்கோனூர்
இந்திராவரசனெம் மிந்திரைநாயகன்
கீதரனருட்டா மோதரன்செளரி
வாசுதேவன்வை குந்தன்கேசவன்
அனந்தசயன னகந்தமாம்பெயரினன்
உந்திபூத்தெண்கணற் றந்தநாராயணன்
கமலமாமலர்புரை விமலமாம்பதங்களை
அருத்தியினேத்திடுந் திருத்தகுதெய்வப்
புலவநற்றுமரை புரையுறுன்கழல்களிற்
புலமையேயில்லாப் பூரியன்புனைந்திடுஞ்
சொற்றொடையதனிற் சொற்பொருளாதிய

குற்றவகைகள் குழுஉக்கொண்டிருக்கினும்
அன்னவையாவையு மளித்திடுந்தந்தையர்
அன்னையர்தத்த மருங்குழவிகள்சொலும்
மழலைச்சொற்கேளாக் குழலிசைதன்னினும்
ஏழிசைபாடுறும் யாழிசைதன்னினுங்
கனியினுந்தேனினுங் கண்டினும்பாலினும்
இனிதெனச்செவியுற் றிதயங்களித்தல்போல்
அத்தனுமன்னையும் வித்தகக்குரவனும்
வாகுறுதேவுமெற் காருநீன்றன்
கள்ளமிலாவருள் வெள்ளமாருள்ளத்
தருத்தியினங்கி கரித்ததொடைதனை
அணிதியெனநின் னம்புயக்கழலினை
பணிகுவல்பரசுவல் பன்முறையெண்ணுதல்
செய்குவனீயது செய்யிலுய்குவலே. (உஅ)

வெண்பா.

உய்யவுரைன்றுமிலையுள்ளமேகம்புதியாற்
பையவரவுபெய்தபைங்குடத்தும்—வெய்ய
அழலினுங்கைவைப்பலருட்காரிமாறன்
கழலின்மறைபுகுந்தக்கால். (உக)

கட்டளைக்கலித்துறை.

காலினுருளிற்கறங்கும்பிறவிக்கலாம்விலோக்கும்
மாலினுழலுமனனேயஃதறவாருணத்தில்
ஆலினிலையமர்வோன்கவிமாறனருளியதீம்
பாலினினியபசுந்தமிழ்மாமறைபாடுதுமே. (கூ0)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாட்டிரதந்தேர்தருந்திருக்கோளூர்ப்
பண்ணவன்கைக்கொள்பட்டோலை
நீட்டிடநூனன்குணர்த்திடத்திருவாய்
திறந்தருள்செந்தமிழ்க்கரசே
கூட்டியிரெம்மான்றனைநுகர்பொருளாக்
கொள்ளலுமல்லதெம்பெருமான்

சேட்டடனுயிரையன்னதாக்கொளலும்
தெரித்தியாதிருவருள்சிறந்தே. (ஈச)

நிலமண்டிலவாசிரியப்பா.

திருவருள்சுரந்திடுந் திருமகணுயகன்
அத்தனுமன்னுயு மாயடியவர்க்கருள்
வைத்தமாநிதிப்பிரான் வைகலும்வைகுமூஉம்
ஒப்பிலாவொளிகெழுஉந் திப்பியதேயமாய்
மாயையில்வல்லனேர் தீயவண்பொருட்டுமுன்
பந்துரச்சுரிமுகப் பணிலமாணுமூஉங்
கந்தரத்திதிபெறுங் கடவுளர்வேண்டலாற்
கையிலாக்கடலேயங் கைக்கொளுமோர்துளி
வையதாக்கொண்டுதன் வாய்மடுத்தருளிய
கும்பசம்பவனுங் குமுமுனிவரனுறை
வம்பவிழ்சோலைசூழ் மலயதின்றிழிதரும்
பொருநையாறெங்கணும் போந்தெழுகுகலாற்
பொருவில்பல்வளங்களும் பொங்கிடுந்தகைத்தாய்ப்
பூவலயத்திற் புகழ்கெழீஇயறங்களை
நாவினராகிய நான்மறையாளர்கள்
இருக்கோதுஞ்சீர்த் திருக்கோளூர்க்கண்
ஆயிரங்கதிர்கொடு மாயிருநிலமிசை
விரிதரும்புறவிருள் வீட்டுவோனுகிய
அரியுதயக்குமுன் னருணேதயமென
ஆயிரஞ்சாகைகொ ளருமறைப்பொருளும்
ஆயிரஞ்செய்புளா மங்கதிர்களைக்கொடு
தெண்டிரையெறிதருங் குண்டுநீர்க்குரவை
சூழுங்குவலயம் வாழுமன்பதைகடம்
உள்ளிருளொழிப்பான் கள்ளவிழ்விரைகமழ்
வகுளபாற்கரனென மகிமிசைவந்தனின்
உதயந்தனக்குமுன் னெளிர்ந்திடுமருண
உதயமென்ன வுதித்தவனென்னவுஞ்
சேலாயுலகினைச் செவ்விதிற்காத்தமால்

நூலோர்மகிழ்தரு நாலாயிரங்களாம்
அருமைசான்மறையெனும் பெருமைசானூல்கள்
தழங்குநீருலகினில் வழங்குதலின்றிக்
கிலமாய்க்கழிந்து கிடக்கவவைதமை
எப்போதையும்போ லிலங்குறச்செய்திட
மூப்போதுஞ்சீர் முனிவரரேத்திடு
நாராயணனுறை நகரெனும்வீர
நாராயணபுர நண்ணிநலனுறூஉம்
நாதமுனிகளாம் போதமாகிதிக்கு
மூலகாரணமாய் ஞாலமீதிருந்த
கண்ணிநுண்சிறுத் தாம்பெனுங்கலிதனை
அண்ணித்திடமுன் னுக்கியோனென்னவு
நந்தாநலந்தரு மைந்தாநெறிதனின்
மூட்டொன்றில்லா நிட்டையனென்னவும்
அறிஞர்களாரண நெறிஞர்களுரைத்திடும்
மதுரகவிப்பெயர்ச் சதுரனைச்சாற்றுமெம்
பெருந்தகைதனையவன் றிருந்துமுமன்பையே
அடியுறையாக்கொண் டடிநிலையாக்கிய
புண்ணியகுருகா புரியுறைபுங்கவ
அண்ணியவாத்த வருட்சடகோபவென்
செடியார்வினைகளா மொடியாமலகலா
நெடியார்பொழுதினி னுவலுறின்னருளெனும்
வச்சிரவேதியால் வகிர்ந்தொழித்தடியனேன்
உச்சிமீதுறின் னெளிர்ந்திடுந்திருக்கழல்
உபயமும்வைத்தனை யோம்புதியெனவந்
தபயம்புகுந்தன னக்கழல்களுக்கே. (கூஉ)

வெண்பா.

கழலுந்தகைத்தாமிக்காயநிற்குங்காறும்
உழலுமென்னுள்ளம்முழலாதுன்ரு—டொழுதுநிற்க
நன்குருகுசிந்தையராகல்லோர்கணுடஞ்சீர்த்
தென்குருகைமாறவருள்செய். (கூகூ)

சட்டலோக்கலித்துறை.

அருளாக்கமுஞ்ஞல்லறவாக்கமுமில்லல்லதுதேர்
தெருளாக்கமுஞ்சிறிதேனுங்கொள்ளாதுதெறுமவித்தை
இருளாக்கங்கொண்டவிழுந்தகையாகியவென்னையுமோர்
பொருளாக்கியாட்கொண்டவன்குருகாபுரிப்புண்ணியனே

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புண்ணியப்புலவர்புகழ் மாறநிற்பொருவுவோர் பூதலந்த
னிலுமில்லை - பொற்பரந்தாமத்து மில்லைநின்னிலை
நூல் புகன்றதோர்சாதனத்தை
நண்ணிப்படைத்ததல் லாமையாற்றென்குருகை நாதநீ
தானுமறியாய்-ஞானிலத்துன்போ லிருப்பவரிலாமை
யா னரருமறியார்கடன்சீர்
ஒண்மைக்குணங்கணின் னுழியன்றிவேறுருழி யொளிர்
தரக்காணுமையால் – உந்திபூத்தவனுமறி யாதலா
லிந்த வுலகோர்களெளிவிசும்பிற்
பண்ணவர்கடம்மினும் வேறுய்வினங்கிடும் பான்மையோ
னென்றுநின்னைப் - பழமறைப்பொருளையு ணந்திரி
பறக்கண்ட பருணிதர்பணிப்பர்மாதோ. (௧௫)

நிலமண்டிலவாசிரியப்பா.

பணித்தடங்காப்புகழ்ப் பராங்குசப்பண்ணவ
மணித்தடமாளிகை மன்னும்வண்வீர
நாராயணபுர நண்ணிவாழ்வோன்மறைப்
போதமுன்னீரொனு நாதமுனிகளாம்
அடிகளுக்கடிநா ளவனியோர்க்காப்பான்
கோலமாவருமெதிர் காலவாரிய
விக்கிரகந்தனைப் பொக்கறவருளிய
கருணையாரகத்தமுக் காலமுமுணர்ந்தவ
தெருணிதியானவ தேசிகர்தேசிக
மூப்புடைக்காய்க்குலை யெப்புடைதம்மினுந்
தாக்குற்றுதிர்தர மேக்குற்றெழீஇப்பெரு
வாளைமீன்பாய்தரு நாளிகேளத்தருத்

தோட்டமுங்கோட்டமுஞ் சுற்றுமும்பழனமும்
மூட்புறக்கனித்தொகை விட்புறக்கோடாங
கோடிறக்குதிபலாக் கோடாப்படப்பையும்
அகந்தொறுமூட்டிடு மகினறும்புகையும்
மகந்தொறும்வேதியர் மறைமுறைவழாது
நீம்பல்லவிசொரிந் தோம்பிநிஞ்செந்தீக்
குண்டந்தோறும் விண்டெழுந்தூமமுங்
கண்ணுடையாலியிற் கண்ணுடைத்திழிந்த
கன்னற்சாற்றினைக் கன்னலுங்குளமுமா
அடுதருஞ்சாலியி லிடுபெருந்தீயிடை
எழுதந்தெழுதந் துழிதருபுகையும்
மங்குலெங்கணு மங்குலின்மொய்த்தலாற்
கண்டுதஞ்சிறகரை விண்டிடவிரித்துச்
சிகாவளமகவிடு முகாவளப்பொழில்களுங்
கிக்குங்கிகந்தமுஞ் செலீஇமணங்கமழ்தரும்
இக்குமுகுமலர் மொய்க்குநந்தனமும்
மேற்பான்முதலிய நாற்பாற்பாங்கருஞ்
சூழ்தருங்குருகையில் வாழ்தருந்தலைவ
கணக்கறநிகழ்ந்திடுங் காலதத்துவமெலாம்
உணக்குறவப்பிணி யொழித்தெனைக்காத்திடல்
வேண்டும்வேண்டும் வேண்டுமென்றேத்தி
உலகினில்வாழ்தரு மலகிலாவுயிர்கட்
கொருதாயாகி யிதாவளர்த்திடும்
பொங்குறுகொங்குறை பங்கயமாமலர்
வீட்டில்வாழெம்பெரு மாட்டிதனக்கும்
இயங்கியனிலையிய லெனுமிருவுருக்களில்
வயங்செழுமாயையின் மயங்குபுரிதரும்
ஆருயிர்தமக்கெலா மோருயிராயவை
அறியாநன்மைக ளமைத்தோர்பிறப்பிற்
குறியாநோக்கிகன் னெறியாரோடிணக்கிக்
குரவனருளையுங் கொளச்செய்தவற்றின்

கருமாறுடைக்குமெம் பெருமான்றனக்கும்
பூமிப்பிராட்டியின் பொற்கேலதன்னுல்
நேமிப்பிரான்றிரு நெஞ்சகமகிழ்தரப்
பூத்தொடைபாத்தொடை புனைந்திடவந்த
மேதைநாயகியெனுங் கோதைநாயகிக்குங்
காளமாமுகிலெனக் கருணைபொழிகுண
வாளனுகியமண வாளமாமுனிக்கும்
மருட்படலத்தான் மறைந்திருப்பவர்தமைத்
தெருட்படத்திருத்தித் திருநாடுறச்செயத்
திருவநந்தாழ்வான் றிருவவதாரமா
வந்தவருட்கட லெந்தையெதிகடம்
பெருமானெனுமெம் பெருமானுர்க்கும்
மங்கையர்கொங்குறு கொங்கையிளம்பிறை
நுதலாழ்மாந்தனை நோக்கவந்தருளிய
மூதலாழ்வார்களா மூவர்கடமக்கும்
எனக்கம்மனேபிதா விறைவன்றெய்வமா
னினக்குநெஞ்சக நெகிழ்தரவுமவணமெலாஞ்
சொன்முறையெடுத்துப் பன்முறைபகர்ந்தனன்
கொடியேனுகிய வடியேனுள்ளக்
குறைகளையெடுத்துறக் கூறிமிக்கிரந்து
முறையிடத்தக்கவர் முறைமையினேக்குறின்
நமக்குமேலாயவ ரமைக்குமெவ்வுலகினும்
இலரிலரிலரெனு மிதுசத்தியநீ
காக்கினுமலதுகா வாதுகைவிட்டு
நீக்கினுநின்பர நின்பரமென்றுநின்
சரணந்தன்னிற் சரணமடைந்தனன்
பொக்கறநன்கெணித் தக்கதுசெய்தியால்
அரணுகியவச் சரணுகதிப்பேர்
அறத்துறையறிந்த வறத்துருவோயே. (கூ-கூ)

வெண்பா.

அறமுமறத்தாறடைந்தோரொழுக்கத்
திறமும்வளர்தென்குருகைச்செம்மால்—மறமே
பெருத்துதிக்குமாயைதனைப்போர்த்துநன்ஞானம்
இருத்துதியென்னெஞ்சத்திடை. (கூஎ)

கட்டளைக்கலித்துறை.

இடையாட்டங்கொங்கையினணையாட்டம்பொற்சிறையேந்தெனின
நடையாட்டங்காட்டிடுநாரியர்போகநரலிதனிற்
குடையாட்டநீக்கிக்குருகைமன்னுகின்குணக்கடலிற்
குடையாட்டமென்னுளங்கொள்ளத்திருவுளங்கொண்டருளே.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருளுருவென்கோவமுதுருவென்கோ
வறுசுவையமியுருவென்கோ
தெருளுருவென்கோவாழிமாவருக்கைத்
தீஞ்சுவைக்கனியுருவென்கோ
பொருளுறும்பானெய்தேனயிர்கண்டாம்
பொருள்களினுருவென்கோவவித்தை
இருள்வலித்தலினெண்மதிக்கதிரென்கோ
வெழிற்குருகூரிறைவனேயே. (கூகூ)

கிலிமண்டிலவாசிரியப்பா.

இறைமைநிலைதனக் கின்றியமையா
முறைமைசாலிலக்கண முற்றவுமுடையோன்
நறைநிறைநறவ நளினக்கிழத்தியும்
பொறைநிறைபுந்திப் பூதலக்கிழத்தியும்
நிறையிறைநீங்கா நீலக்கிழத்தியும்
அறைவலமிடமுற வகட்டில்வீற்றிருப்போன்
மாவுறைவெண்டா மரைமலர்க்கிழத்தியை
நாவுறைவைத்திடு நான்முகக்கடவுளும்
பூவுறையாகிப் பொலிதருமைந்தருக்
காவுறைவைகுறுங் கடவுளர்கூட்டமுந்
தாவருந்தெய்வத் தாபதரீட்டமும்

மூவறும்பிரம முனிவரர்கோட்டமும்
பணிந்துவழங்குறூஉம் பாத்தொடைபூத்தொடை
அணிந்தழகலர்ந்திடு மம்புயக்கழலினேன்
ஆரணமுடிமிசை யமர்ந்தருளுரணன்
காரணமிலாததோர் கருணையினியாவையுங்
கண்கூடாகக் கண்டவமுயலின்
றண்கூடலரி தவழ்தருந்தண்டலை
நிறையுங்குருகூ ருறையும்பராங்குச
மூலமென்றடிநா லோலமிட்டழைத்த
ஆனைக்கோனிட ரகற்றியவரிந்தமன்
சேனைக்கோனெனச் செப்புறுஞ்செம்மல்
சேடசயநணுண் சேடாசநன்மறைத்
தோத்திரவாணியன் வேத்திரபாணியன்
சூத்திரவதியிரு நேத்திரமணியனன்
வழுக்கிலாதகல் லொழுக்குடையுரவோர்
சடங்கெனுமோர்வினை தொடங்குறுமெல்வையில்
இடைநேர்வனவா மிடையூறிரிந்திட
மொழிமனமுடலால் வழிபடுமண்ணல்
தோற்றமாஞான சூரியவாரிய
ஆற்றல்சான்றகல் லருட்கடலானவ
தொக்கவெண்ணிலைலாந்தொடர்வினைத்தொடர்பால்
துக்கவெம்பரம்பனா துய்த்தனன்றுய்த்தனன்
எத்துக்கலியுனை யெல்லாப்பிறவியும்
எடுத்துச்சாலவு மெய்த்தனனெய்த்தனன்
வெய்யபிறவிகள் வேண்டேன்வேண்டேன்
ஐயபவப்பிணிக் காற்றேனுற்றேன்
மூடிவில்பல்வகையாங் கொடியபிறவிகள்
எதிர்தருமோவென வெண்ணினென்னுள்ளந்
துண்ணென்றுட்கிச் சோகாக்கின்றது
விண்ணென்றதிர்ந்து விதிர்விதிர்க்கின்றது
சுவிவருபிறவியிற் சுழன்றுதிரியுமென்

எளிவருகிலதனை யெண்ணியிரங்கின்
பெருகருள்விழியினு லரிலறநோக்கியென்
மூவகைவினைகளு மோவிடச்செய்தெனைச்
சுத்தனுக்கியென் சூழலிற்பெறவொணு
முத்தவிலக்கண முற்றுமுண்டாக்கிச்
சித்தாகுலமிலா வந்தாமத்தினில்
நித்தியர்குழுவிடை வைத்திடினேதியேற்
பகட்டுமாயை புகட்டுமவிஞ்சையான்
மருண்மதிமாற்றின் மாபுனைகழலினைற்
கருண்மதியழிவில்பே ரன்பெனுந்திருவே. (அ)

வழுதிநாட்டிற்குருகாபுரியில்வந்த
வள்ளலெங்கள்பராங்குசமாமுனிவனுக்கோர்
வழுவினுன்மணிமாலையென்னும்வாடா
மாற்றமாமாலையொன்றுவனைந்தணிந்தான்
தழுவியசெந்திராசதாசனென்றுந்
தாசியகமமுந்தாசர்தாசனுஞ்
செழுமையுமேமாப்புடையபள்ளிகொண்டா
னெனுமியற்பேரும்படைத்தியல்வல்லோனே.

நம்மாழ்வார் நான்மணிமாலை

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

கோதைநாயகித்தாயார் மாலை.

காப்பு.

விதுவைநிகராநநத்தாள் வேயர்குலதீபப்
புதுவைநகர்க்கோதை புனைய—மூதுதமிழ்ச்சொற்
பாமாலைபன்னப் பணித்தருள்வன்றண்வகுளப்
பூமாலைமாறன் புரிந்து.

நூல்.

நிலமங்கைதன்கலையானிலமுய்யநினைத்துவந்த
குலமங்கையர்க்கரசாகியகோதைகுளிர்கழலிற்
பலமங்கலக்கவிபாடிப்புனைபவர்பார்மிசைநற்
பலமங்கைபெற்றுமறுமையிற்சேர்வர்பராங்கதியே. (க)

செல்லுங்கலியினிற்றெண்ணூற்றின்மேனளச்செய்யசமை
புல்லுங்கடகக்கணைகாளில்வில்லிபுத்தூரடிகள்
கல்லுந்திருத்துளவத்தடியாங்கலசக்கடலிற்
சொல்லுஞ்சுதர்கரன்போற்றேன்றிணைத்தொழுதெஞ்சே.

மட்டார்குழன்மடவார்மையல்வாஞ்சைமகோததியிற்
பட்டாழுகம்மைப்புரப்பான்றிருப்பாற்பரவைதனை
விட்டாளைவிண்டுசித்தன்விளையார்விருந்தாவனத்தை
நட்டாளைநம்புதிநெஞ்சேநமக்கோர்நலிவில்லையே. (உ)

தூண்டாமணிவிளக்கைத்துளங்காதசுடர்க்கொடியை
ஆண்டாளைப்புத்தூரவதரித்தாளையணிமணிப்பூண்
பூண்டாளைப்போற்றிற்புராணவினைப்பயன்போந்துநம்மைத்
தீண்டாமற்செய்தருள்வாடிண்ணமாமிதுதேர்திநெஞ்சே.

சாதித்தருமஞ்சதுமறைத்தன்மந்தழைக்குமநு
நீதித்தருமநிகரிலதாம்பிரபத்திநிட்டை
ஆதித்தருமநிலைக்கவடியரகவிருடீர்
ஆதித்தனில்வந்தவாண்டாள்சரணேயரணமக்கே. (ரு)

பூதத்தலைவன்புவியோர்ப்புரக்கும்பொருளுரைக்கும்
வேதத்தலைவன்விரிஞ்சித்தலைவன்விண்ணோர்விரும்பும்
பாதத்தலைவன்பணியாலுயிர்க்குப்பரிந்துவந்த
போதத்தலைவியெனுங்கோதைபாதத்தைப்போற்றுநெஞ்சே

ஆவிசெங்கஞ்சவணிவிளக்கேந்தவலர்ந்துநிற்குங்
காவிகணேக்கக்களிவண்டுபாடக்கலாபமஞ்ஞை
மேவிநடிக்கநம்விண்டுசித்தன்வனவேரில்வந்த
தேவியையேத்துதிநெஞ்சேநந்தீவினைதீர்ந்திடுமே. (எ)

அன்னையிற்பைந்துளவந்தேனளிக்கவருகுநிற்கும்
புன்னைமுதலைபொழிமலர்த்தொட்டிலிற்பூங்குயில்கள்
தன்னைகளாமெனத்தாலாட்டக்கண்வளர்தாய்தனைநம்
முன்னைவினையறநெஞ்சேவழுத்தமுயலுதியே. (அ)

வெள்ளைச்சிறகர்விரித்தன்னநின்றுவெயின்மறைக்கக்
கிள்ளைக்குழாங்கண்மழலைக்கிளவிகிளைத்திநிற்கக்
கொள்ளைப்பசுந்தென்றல்வீசவிருந்தங்கோதையன்னைப்
பிள்ளைப்பருவப்பெருமைபிரமற்கும்பேசரிதே. (கூ)

செந்தாமரைத்திருவோதிருப்பாற்கடற்றெள்ளமுதோ
நந்தாதொளிர்விளக்கோசெய்யஞானத்தினற்கொழுந்தோ
சிந்தாமணியோவெனவிண்டுசித்தன்றினமுமிழ்
கொந்தார்குழற்கோதையைவாழ்த்திவாழென்றன்கோழைநெஞ்சே

கற்றவர்கண்மணியோவெண்கமலக்கலைமகளோ
உற்றிடுமன்பர்க்குயிரோவுயிர்த்துணையோவுலகைப்
பெற்றுவளர்ப்பவளோவென்றுபட்டர்பிரான்புகழ்ந்த
பொற்றொடிக்கோதைதன்பூங்கழலென்றும்புனமக்கே. ()

பூதாதியானபொருட்கும்புவனக்கும்பொங்குயிர்க்கும்
ஓதாதியானவொருபொருளோவுயிரைப்புரக்கும்
வேதாதிதாலுருவோவென்றுவிண்டுசித்தன்வியந்த
மாதாதிகழ்புகழ்க்கோதையைநெஞ்சேவழுத்துதியே. ()

பட்டர்பிரான்வடபத்திரப்பாயற்பரணருளாற்
சிட்டர்தொழுந்தன்றிருமாளிகைதனிற்சேர்த்துநிதம்

)ட்டமுடனேவளர்க்கவளர்ந்தவளேயியற்கை
ட்டவிழ்கோதையன்னுயிர்நின்னையேத்தவரமருளே. (கஊ)

ாலோகரும்போபழமோசெந்தேனேபரம்பொருள்சேர்
ாலோவுதன்பயனேவிவ்வுருவினோற்றதென்று
மாலோடும்பார்ப்பனமங்கையர்பேசிமகிழுநங்கள்
சேலோடியகட்டிருக்கோதைபாதநஞ்சேமவைப்பே. ()

தெள்ளமுதத்திரட்டோபெரியாழ்வார்தினஞ்செய்தவ
வெள்ளமுருக்கொண்டதோவென்றுவேதியர்மெல்லிழையார்
மெள்ளவெடுத்துக்கொண்டாடுநங்கோதை விளைமலர்த்தாள்
உள்ளமதனில்வைப்பாருண்மையாகவுயர்தவரே. (கஙி)

மாசறுநீதிகருணைதிரண்டவடிவமென்றும்
ஆசறுஞானியரன்பர்களந்தணராவியென்றும்
வாசவனுதியர்வண்செல்வமென்றுமதிபடைத்தோர்
பேசுபெரும்புகழ்க்கோதையடியென்றும்பெணெண்ணெஞ்சே.

அண்டமனைத்தினுமுள்ளவழகையணைத்தெடுத்துப்
புண்டரிகத்தவனேருருவாக்கியிப்பூவிடுத்தான்
கண்டிர்நமர்காளெனக்காரிகையார்களித்துரைக்கும்
ஒண்டொடிக்கோதையையுன்னுவர்முத்திக்குரியவரே. ()

உலகிருணீக்குஞ்சுடர்விளக்கென்றுமுணர்வுதரும்
பலகலைமாதின்படிவமிதென்றும்பரம்பரன்றன்
இலகுயிரின்வடிவீதென்றுமன்பர்களெண்ணுகின்ற
அலகில்புகழுடையாண்டாளேயேத்துவரந்தணரே. (கஅ)

பின்னைகொல்லூமிப்பிராட்டிகொலெம்மான் பிரியையெனும்
அன்னைகொலோவென்றயிர்க்கும்படியிவ்வவனியில்வந்
தென்னையடிமைக்கிசைவித்தகோதையிறைவிதன்முண்
முன்னைவினையறநெஞ்சேமுதமொடுமுன்னுதியே. (கசூ)

தாழ்வாருடலுயிரொன்போர்நன்முகத்தமையுணர்ந்தோர்
ஆழ்வார்கள்பட்டர்பிரானிலுமொண்மையறிவின்செல்வ
வாழ்வார்ந்தவண்மைத்திருக்கோதைநாயகிமாமலர்த்தாள்
வீழ்வார்கண்மாயைவிறலினென்றிடும்விதத்தகரே. (உ0)

ஏந்தையுணர்த்தித்தனைக்காட்டக்கண்டவிதயத்தராந்
தந்தையர்போலன்றித்தானேசென்றன்னேன்னேயெழுப்பிச்
சிந்தைக்குறையைத்தெரிவித்தசெல்வியைச்சிந்தைவைப்போர்
நிந்தைப்பிறவிநெடுங்கடனீந்துவர்நிச்சயமே. (உக)

ஆடவராடவரைக்காமுறுதலினங்கனைமார்
ஆடவரைக்காமுறுதலியற்கையையந்தாண்டுதொட்டுப்
பாடவத்தோடெம்பரன்பண்பளக்கர்படிந்துருகி
நீடவசம்பெறுநின்மலைபாதநினைநிநெஞ்சே. (உஉ)

கோனைபட்டர்பிரான்மகளாய்வந்தகொள்கையினுங்
தானைதன்மையினுலும்பெருகித்தழைதுதிற்கும்
ஆனைதஞானமுமன்பும்வடிவிலமைந்தநங்ஈள்
தேனைர்குழலியைநாடோறுஞ்சிந்தனைசெய்திநெஞ்சே. ()

மானுடர்வாழ்வைமறுத்துவடபெருங்கோயில்வளர்
கோனுடன்கூடக்குறித்தநங்கோதைகுரைகழலிற்
கானுடைமாமலரிட்டுவணங்குங்கருத்தினரே
வானுடையார்நிதம்வந்துவணங்கிடும்வண்மையரே. (உச)

கண்டுமொழியர்க்கலந்தகண்ணன்முன்கண்ணுமவர்க்
கொண்டவன்சென்றசுவடுநுகியுங்குலவையுங்
கண்டுதரிக்கக்கருதியகோதைகழலிணையிற்
றொண்டுசெய்வோரைத்துதிப்பார்கணித்தியசூரிகளே. ()

சாற்றுஞ்சனகன்றனையநப்பின்னைதவர்விடையால்
ஆற்றும்படிக்கோரவதிபெற்றுய்ந்தனரங்ஙன்றன்னைத்
தேற்றும்விரகென்னெனத்தேடியசெல்விசேவடியைப்
போற்றும்புனிதரடிநிலையென்முடிப்பூடணமே. (உசு)

சூரவைபிணைத்தபின்கோவிந்தனீங்கிடக்கோவியர்கள்
அரவிலவனடித்தாங்குநடித்தார்ந்தமைவினவி
விரவியநுகரித்துத்தேறவெண்ணியவித்தகிதாள்
பரவுமவரெனையெம்மையுங்காக்கும்பரமர்களே. (உள)

இடமுடைப்புத்தூரிடைப்பாடிபெண்களிடைச்சியர்கள்
வடபெருங்கோயில்வளநந்தன்வீடதில்வாழுமவன்

குடமுடைக்கோவிந்தனென்றெண்ணுங்கோதையைக்கூர்ந்துநெஞ்சிற்
றிடமுடன்வைப்பவர்தேவர்கள்யாரினுஞ்சீரியரே. (உஅ)

கூறியவண்ணந்திருவுள்ளம்பாடிகுடிபுகுந்து
தேறியபாவினையாலநுகாரஞ்சிறந்துமுற்றி
ஈறியவாய்ச்சிநடைநொடியாதியநன்குறப்பெற்
றூறியகோதையடியேசரணமடைந்தனனே. (உக)

மார்கழித்திங்களின்மாயவன்றன்னைமணந்தொழுகும்
ஈர்கழியாவதிகாரிநெறிபலனற்சொருபச்
சீர்கழியாதுசுருக்கினிற்செப்பியசிற்பரைதன்
பேர்கழியாவன்பிற்பேசுதலுவிற்பெறும்பயனே. (ஈ0)

வையத்துவாழ்வினின்மேலதிகாரிகள்வாய்த்தவண்ணஞ்
செய்யத்தகுந்ததகாதவிவையென்றுசெப்பியதைக்
கையத்தமென்னக்கழறியகோதைகழலிணையை
உய்யத்துதிப்போரடியனையாட்கொளுமுத்தமரே. (ஈக)

ஓங்கியுலகினிலவ்வதிகாரிகளுக்கமுற்றுத்
தீங்கின்றிநோன்பினோற்கவுமதிசெய்தவர்க்குப்
பாங்கில்வரும்பயன்பன்னியதைச்சொலும்பண்ணவிதன்
பூங்கழல்பூசிப்பவரெனாளும்புரப்பவரே. (ஈஉ)

ஆழியிலாய்ச்சியர்பான்மழைத்தேவனடைந்தடியேன்
வாழிசெயத்தக்கசொன்மினெனவிவ்விவ் வண்ணஞ்செய்தி
பாழிமொய்ம்போயென்றவர்கள்பணித்தபரிசைச்சொன்ன
வீழியிதழிவிமைமலர்ப்பாதம்விரும்புநெஞ்சே. (ஈஈ)

மாயனிற்கோவியொருத்திமறுத்திடமற்றுருத்தி
மாயனன்னமசங்கீர்த்தனஞ்செய்யமதிக்கினங்கள்
தீயபவந்தீத்துகிலாகுமென்றதைச்செப்பியநம்
வேயர்குலக்கொழுந்தின்பெயர்சொல்லவினையறுமே. ()

புள்ளுமுதலெல்வளைமுன்னர்ப்போந்தபொதுவியர்கள்
எள்ளலில்கண்ணனைக்கூடிக்களிக்கமற்றேனையரை
நள்ளியெழுப்பியவாற்றையெமக்குநயந்துரைத்த
தெள்ளியகோதைதன்சீரேயெமக்குச்செவியுணவே. (ஈ௫)

நாயகனென்பதிற்கோவியர்நந்தனரிர்மனையும்
வாயினுங்காக்குநர்க்கூய்நீவிர்வந்துமணிக்கதவ
நேயமொடுதிறவீரென்றிரந்தைநேர்ந்துரைத்த
நாயகனைத்தொழுவார்க்குப்பிறவித்துயரிலையே. (நகசு)

அம்பரத்தேநந்தகோபாலனையுமசோதையையும்
எம்பெருமானையுமுத்தபிரானையுமிப்பர்பெண்கள்
அம்பொழுப்பியவாற்றையறைந்தவருட்கடலாம்
எம்பெருமாட்டிசரணேசரணென்றுமென்றனக்கே. (நகஎ)

உந்தினிற்கோவியர்நப்பின்னைதன்னையுகந்தெழுப்பிக்
கந்தக்குழலின்கைவளையேங்கக்கடைதிறவாய்
வந்தெனக்கூறியவாற்றைநமக்குவருத்துரைத்த
பைந்தொடிக்கோதைபதம்பணிவார்வினைப்பற்றறுமே. ()

குத்துவிற்கண்ணின்வாய்திறவாயென்றுங்கோலப்பின்னுய்
ஒத்துநின்னுதற்றுயிலெழுவொட்டாயொருவகில்லாய்
தத்துவமன்றுதகவென்றுகோவியர்சாற்றியதை
நத்துநமக்குரைகோதைபொற்றுணங்கணற்றுணையே. ()

மூப்பதற்றுமூவரின்முல்லையர்பெண்கண்முகுந்தனையும்
நப்பின்னையையுமெழுப்பிநங்காய்நின்றனுதனையும்
வெப்பியவெம்மையுநீராட்டுதியென்றுவேண்டியதைச்
செப்பியகோதைதிருவடியேநிதஞ்சிந்திநெஞ்சே. (சo)

ஏற்றகலத்திலிடைச்சியர்கண்ணனிருங்குணத்திற்
றோற்றவர்தோற்றினசொல்லியவனைத்துயிலுணர்த்தும்
மாற்றமக்குமகிழ்ந்துரைகோதைமலரடியை
நேற்றமுடன்சிந்தித்தேத்துநெஞ்சேவினைதீர்ந்திடுமே. ()

அங்கணிற்கண்ணனையாய்ச்சியரண்டியமலர்ன்றன்
பங்கயக்கண்ணிணைகொண்டுபரிவொடுபார்த்தியெனின்
எங்கடஞ்சாபமிழியுமெனலியிசைந்துரைத்த
திங்கள்வதனத்திருக்கோதைதாணஞ்சிரக்கணியே. (சஉ)

மாரியிலாய்ச்சியர்மாயநின்பள்ளிமனைவிடுத்துச்
சீரியசிங்காதனத்திருந்தெம்முடைச்செய்திகளை

ஆரியவாராய்ந்தருளென்றதைநமக்காய்ந்துரைத்த
காரியல்கோதைகழலிணையென்மனக்கண்ணனவே. (சஈ)

அன்றிலடைந்தகருமம்பொச்சாந்தந்தவாய்ச்சியர்கள்
நன்றுநங்கண்ணனடைச்செவ்விக்காப்புகவிற்றியதை
ஒன்றவுரைத்தகோதைநாயகியாண்மலர்த்தாண்
மன்றநெஞ்சேநம்பவப்பிணிமாற்றிடுமாமருந்தே. (சச)

ஒருத்தியிற்கண்ணனுளைத்திற்றும்முள்ளத்துவந்தவென்ன
அருத்தியினுய்ச்சியர்சொற்றவையாவையுமன்புடனே
திருத்தமுறச்சொல்லியகோதைநாயகிசேவடிநம்
பருத்தவஞ்ஞானவிருள்பாற்றுஞானப்பகலவனே. (சடு)

மாலேமணியிற்றங்கோன்புக்குவேண்டுவனபொருளைச்
சேலேய்கண்ணுயச்சிறுமியர்தேவகிதன்சிறுவன்
பாலேயிரந்தபண்ணியகோதைச்செம்பங்கயகேர்
வேலேய்விழியருணெஞ்சேநம்பேற்றைவிளைவிக்குமே. ()

கூடாரைவெல்லினிற்கூறியகோவியர்கோவிந்தன்பால்
பீடார்ந்திடப்பெறத்தக்கநற்பெட்புடைப்பேதுகோ
நாடாவிரந்தைதல்கியகோதைநயப்புகழைப்
பாடாதநாவினர்பல்பிறப்பும்பவம்பண்ணவரே. (சள)

கறவையிற்கோவியர்கண்ணனைக்கண்டுகழற்றவொண்ணு
உறவினைக்கூறித்தம்முத்தேசியத்தையுரைத்ததைநம்
பிறவியைப்பேர்த்திடப்பேசியகோதைப்பிராட்டிநற்சீர்
மறவியையின்றிமனத்துவைப்பார்மிக்கமாட்சியரே. (சஅ)

சிற்றமதிலாய்ச்சிறுமியர்கண்ணனைச்சேவித்துத்தாம்
பெற்றிடும்பேறுஞ்சுவையுமப்பேறுபெறும்பரிசும்
மற்றையகாமங்கண்மாற்றலும்பேசிமகிழ்ந்ததனைச்
சொற்றிடுங்கோதைதுணையடியென்றுந்துணைநமக்கே. ()

வங்கத்தினிற்றிருப்பாவைமுழுதும்வழாதுகற்றோர்
செங்கட்டிருவுதனத்திருமாலருள்சேர்ந்தெவணும்
துங்கச்சுகந்துன்னுவரென்றகோதைசுடர்க்கமலப்
புங்கக்கழனம்பவக்கடனீந்தும்புணைநெஞ்சமே. (ஙo)

தையொருதிங்கடலேயாக்கருப்புவிற்முன்கடையாச்
செய்யொருபத்திற்றிருமாலுடன்றனைச்சேர்க்கும்வண்ணங்
கையொருவாதகணைமலர்க்காமனைக்கைதொழுத
மையொருவாக்கண்மடமல்லிநாடியைவாழ்த்தென்னெஞ்சே!

சிற்றிடையாயச்சிறுமியர்கண்ணவெஞ்சிற்றிலுள
சிற்றடியாற்சிதையேலென்றிரந்ததைத்தெள்ளியர்கள்
கற்றிடாமமென்முேதியபத்திற்கனிந்துரைத்த
பொற்முேடிக்கோதைபுகழ்நெஞ்சமேசெவிப்போனகமே.

அடித்துறுபத்திலறலாடுமாய்ச்சியராடைகளே
எடுத்துக்குருந்திடையேறிநங்கண்ணனிருக்கவவர்
கொடுத்தியெங்கூறையெனக்கூறியதைமுற்கோழியென்று
தொடுத்துரைகோதையெஞ்சேனினைந்துயரறவே. ()

கோவியர்கோவித்தனைக்கூடக்கூடவிழைத்ததனைத்
தேவியலுந்தெள்ளியார்பலர்கைதொழுந்தேவனெனும்
பாவினம்பத்திற்பகர்ந்தநங்கோதைபனிமலர்த்தாள்
நாவியலாற்றுதிப்பார்கண்ணுவார்முத்திகன்னகரே. (நிச)

மன்னுபெரும்புகழ்ப்பத்திற்குருக்கத்திவண்செருந்தி
புன்னைப்பொதும்பினில்வாழ்குயிலேயெங்கள்பூவைவண்ணன்
றன்னைவரக்கூவுதியென்றுசாற்றுந்தமிழ்த்தலைவி
அன்னைநங்கோதையடிகளென்சென்னிக்கணிமுடியே. ().

தூயர்குலமறைச்சொற்படித்தோழிக்குச்சொற்பனத்தில்
ஆயர்குலமுதல்வேட்டதைவாரணத்தாய்ந்துரைத்த
வேயர்குலக்கொழுந்தானநங்கோதையைவேண்டுநெஞ்சே
தீயர்குலத்தையிரீஇத்தெள்ளியதொடுஞ்சேர்த்துவளே. ()

கருப்பூரமென்றெடுத்தோதும்பதிகத்திற்கார்க்களிற்றின்
மருப்பூறுசெய்தவன்செவ்வாயின்வாசமும்வண்சுவையும்
விருப்பூர்ந்துவெண்சங்கைக்கேட்டநங்கோதைவிரிக்குந்
திருப்பூங்கழனினெஞ்சேநன்முத்தித்திருப்பெறவே. ()

விண்ணீலப்பத்தினம்வேங்கடவாணற்கென்வேட்கையெல்லாம்
ஒண்முரலோடுமுரைத்தியென்று

கொண்மூக்குழாந்தமைத்தூதுவிடுத்தநங் கோதையந்தாள்
கண்மூடியோர்கணஞ்சிந்திநெஞ்சேநங்கசடறுமே. (டுஅ)

அத்தன்றிருமாலிருஞ்சோலைவெற்பனவயவங்கட்
கொத்தபொருள்களுடற்றநங்கோதையுடன்மெலிந்து
சித்தங்கரைஇச்சிந்துரமென்றெடுத்துத்தெரித்தசெய்யுள்
பத்தும்படிக்கவல்லார்படர்வார்நற்பரகதிக்கே. (டுகூ)

தெரித்தபருவம்பருவப்பொருள்கள்செகுக்கவினித்
தரித்துயிர்வாழ்தலரிதெந்தையாற்கண்ணன்முளடைதல்
உரித்தெனவுட்கொண்டுகார்க்கோடலென்றெடுத்தோதும்பத்தும்
பரித்தநற்சிந்தையர்பாரோரைக்காக்கின்றபாவனரே.(கூo)

அரங்கத்தமலனருளாமையாற்முனடைந்தநிலை
இரங்கத்தன்முய்க்குமிருளைக்குஞ்சுட்டுமின்னுமையைப்பாற்
றரங்கத்தைவிட்டவடாமுகக்கும்பத்திற்சாற்றியதை
இரங்குற்றுளம்பதிப்பாரின்பவீட்டினையெய்துவரே. (கூக)

மற்றிருந்தீரென்னும்பத்தினிற்கோதைமதுரைமுதன்
மற்றிருந்தீரிருதோட்கண்ணன்வாழும்வளம்பதிகட்
குற்றிருந்தீரென்னையுய்த்திடுமென்றதையுள்ளமதிற்
பெற்றிருந்தீடுபடுவோரெமக்குப்பிராப்பியரே. (கூஉ)

கண்ணனிற்கோதையெங்காரிகையீரென்னைக்காக்கதுமக்
கெண்ணமிருக்கினவுடையாதியவேந்திவந்தென்
கண்ணவிடரைக்களைஇக்காமினென்றதைக்கற்றுணர்ந்தோர்
திண்ணநமரைத்திருத்திப்பணிகொள்ளுந்தேசிகரே.(கூங)

கருந்தாம்புதரற்கண்டீரோவென்கின்றகடாவினுக்கு
விருந்தாவனத்திற்கண்டோமென்றுசொல்லும்விடையிறுத்து
மருந்தாமெனப்பட்டிப்பத்திற்சொல்கோதைவண்மாற்றம்வல்லார்
திருந்தாவெனைத்திருத்திப்பணிகொண்டிடுஞ்சீரியரே. ()

பூமாலைவேய்ந்தெம்பிராற்களித்தாளைப்பொய்யாமொழியைப்
பாமாலையாகப்பணித்தாளைப்பார்த்தன்றன்பாகனுழி
மாமாலையேற்றுமணந்தாளைவாழ்த்துதியேன்மனனே
தோமாலைத்தாயபிறவித்துயரந்தொலைந்திடுமே. (கூரு)

சுருப்பார் குழலியைச் சுந்தரத்தோகையைத் தூயவளைத்
திருப்பாவைபாடியசெல்வியைத்தேவியைச்சேயிழையை
விருப்பாகவேண்டிதிருஞ்சேயினியோர்விளங்கிழையாள்
கருப்பாசயம்புகவொட்டாமற்காப்பள்கடைக்கணித்தே.

கருக்கோதைநீக்கக்கருதுதியேலென்றன்காதனெஞ்சே
யிருக்கோதையென்றுமிரியாப்புத்தூர்வந்தவேந்திழையாள்
திருக்கோதைநாயகிதாள்களிற்செய்யுட்டெரியலொடு
மருக்கோதைவேய்ந்துவழிபட்டிறைஞ்சுவழுத்துதியே. ()

தீமகள்வேண்டிடச்சித்ரவிசித்திரச்சேலைதந்த
பாமகள்மாமற்குப்பல்லாண்டுபாடியபட்டர்பிரான்
மாமகளைப்புவியோர்தமைவாழ்விக்கவந்தவருட்
கோமகளைத்தொழுவார்க்கொருநாளுங்குறைவில்லையே. ()

மூத்தத்துவநிலைமும்மறையின்கண்முடிந்தபொருள்
அத்தத்திலங்கமலகம்பழுத்தவருங்கனியிற்
சித்தத்திலங்கச்சிறியேனுணருந்தெருட்சிதந்தாள்
மூத்தத்தொளிர்நகையாய்கோதைநாயகிமுன்னவியே. ()

சுருதிமுடிவினிற்சொல்லும்பரம்பொருடோய்சுகத்த
பருதியநந்தத்தொளிரும்பரமபதந்தருவான்
கருதியிச்சாயங்கழல்கின்றகாலத்தென்கண்களிக்க
வருதிநின்சேவைதரக்கோதைநாயகிவானவியே. (எ0)

உறிஞ்சொண்டவெண்ணெயுண்டோன்பண்டுபார்த்தற்குரைத்தருள்பின்
னெறிக்கொண்டநின்னடியார்க்கடியார்கணிகழொழுக்கக்
குறிகொண்டொழுகக்கிருபைசெய்தந்தகன்கிட்டிங்காற்
குறிக்கொண்டுகோதையன்னையெனக்காக்கக்குணித்தருளே.

ஓட்டகமானவரிபோர்த்தவூன்மச்சையுற்றவெற்புச்
சட்டகநாமலைமூத்திரங்குடர்சான்றபுழுப்
பெட்டகமாம்பரந்தாங்கிநிலிகின்றபேதைநின்முள்
கட்டகம்வைத்துத்தொழக்கோதைநாயகிநல்குதியே. ()

கருப்படுமென்விணைக்காட்டைக்களைந்துகமலமலர்த்
திருப்பதிநின்னடிப்பத்திமைச்செல்வந்திளைக்குமன்பர்

மருப்படுபாதம்வணங்கிவழிபடுவானென்சிந்தை
ஒருப்படுமாறருள்செய்கோதைநாயகியுத்தமியே. (எஜ)

புண்ணியவில்லிபுத்தூர்வந்தபொன்னேபொலங்குகிரே
மண்ணியமாமணியேமுத்தமேமரகதமே
திண்ணியநெஞ்சந்திருந்தியடியனின்சீர்நிதமும்
உண்ணியவண்ணமருள்கோதைநாயகியுத்துங்கையே. ()

விண்மணியென்னவிளங்கிவளர்சீர்விரிவிபுலப்
பெண்மணிபச்சைப்பெருமணிபேணும்பெரியருளக்
கண்மணிநங்கடிருக்கோதைநாயகிகற்பகமாம்
ஒண்மணித்தாளிலுயரன்பலர்பெய்வருத்தமரே. (எஞ)

அருளுருவேகல்லணியுருவேயறமாமுருவே
தெருளுருவேசின்மயவுருவாந்திருமந்த்ரமுதம்
பொருளுருவேபுண்ணியவுருக்கோதைப்பொலனுருவே
மருளுருவேய்ந்தவிம்மைந்தனுய்வண்ணமகிழ்ந்தருளே. ()

வனமாலைமாமணிமாலைவயங்குமணியுரத்த
கனமாலைக்காமித்துக்கள்ளவிழ்மாலைகவின்செயும்பா
வினமாலைசூடியும்பாடியுந்தந்தவிறைவியையென்
மனமாலைநீக்கத்தினமாலைவேய்ந்துவணங்குவனே. (எட)

கற்பகமேவியகாரிகையார்சிரங்கைகுவிக்குங்
கற்பகமேயென்னைக்கட்டிக்கவற்றுங்களவிருளாங்
கற்பகமேதைகனத்தோங்கநின்னடிக்காமருசீர்
கற்பகமேவவருள்கோதைநாயகிக்காருணியே. (எஅ)

நெருங்கநிமிர்ந்துநிரந்தரநீங்காநிகளவிண
முருங்கவெனைமுற்றுமூடிமுருக்குமும்மோகவிருள்
ஒருங்கநின்சேவடியொண்மலர்த்தேனுவந்தெனுளப்
பிருங்கமுணச்செய்தருள்கோதைநாயகிப்பேரன்னையே. ()

தாகந்தருமந்தவஞ்சத்தியந்தத்துவமுணர்மெய்ஞ்
ஞாகந்தயைசற்றுமில்லாதகாயடியேற்கிரங்கிக்
கோகந்தன்மைந்தன்மகிழ்கோதைநாயகிநின்குணச்சீர்
ஆகந்தவாரியமைந்தாடுவானின்னருள்புரியே. (அ0)

சேனேடியோடிச்செவிகாறுநீண்டதிருக்கணியைப்
பானேடியோடிப்பழிக்குமதுரப்பணிமொழியைக்
கோனேடியோடுங்கொடியன்னவேயர்குலக்கொழுந்தை
மானேடியோடுமனத்தாளைவாழ்த்தென்மடநெஞ்சமே. (1)

இடைச்சிங்கடையுமுடையுகொடியுமிச்சித்தருள்சிற்
றிடைச்சியையெங்குமிலங்குமிருங்குணத்தாளையன்ன
நடைச்சியைநாடுமவர்வினையீர்ந்திடுநல்லருளாம்
படைச்சியைவாழ்த்துமென்னுவென்னபாக்கியம்பண்ணியதே.

சுரிகுழற்கட்டுந்துவர்ந்தசெவ்வாயுஞ்சுடர்முகமும்
சுரிவளைக்கண்டமுந்தொல்லருளார்ந்ததுணைவிழியுஞ்
சரிவளைக்கையுமிடையுமுடையுந்தயங்குங்கஞ்சப்
பரிபுரத்தாளுமெனக்கென்றுமுன்னிற்கும்பான்மையதே.

வேதத்தலைவிநல்வேள்வித்தலைவிவிளங்குதுண்ணூற்
போதத்தலைவியிப்பூமித்தலைவிபொருவில்விண்ணும்
நாதத்தலைவிநன்ஞானத்தலைவிநகைமுகஞ்சேர்
கோதைத்தலைவிகுரைகழனங்கள்குலதனமே. (அசு)

சீரார்கலுழனைக்கண்டையசென்றுதிருவரங்கத்
தாராவமுதைக்கொணர்கெனவவ்வாறவனிமழைக்க
மாராயமோடம்மணவாளன்றன்னைமணந்துகந்த
பேராற்தகோதையென்கண்ணுளம்விட்டென்றும்பேர்கிலமே

நாகாசனனேநயந்தேயரங்கநன்னயகனே
டேகாசனத்திலிருத்தியகோதையிறைவியென்றுஞ்
சோகாசனமுணுந்தொண்டனின்பாதச்சுகாநந்தமாம்
போகாசனமுண்டுபூரிக்கும்வண்ணம்புரிந்தருளே. (அசு)

இந்திரன்சென்றுமகட்பேசவெண்கணனுமஞ்செய்ய
மந்திரக்கோடிமணமாலைகொண்டுமகிழரங்க
மந்திரச்சுந்தரன்கைப்பற்றவுள்ளமகிழ்வதன
சந்திரகோதைதளிரடியென்றைக்குஞ்சார்பெனக்கே. (1)

இருக்கோலமிட்டுரைக்கும்பேரரங்கனிடவருகில்
உருக்கோலப்புள்ளிறைவேலப்பாகத்துறைந்திருக்குந்

திருக்கோலந்தன்னைத்திருக்கோதைநாயகிசெவ்வனுள்ளத்
திருக்கோயில்வைத்தென்றும்பூசனைசிந்தனைசெய்குவனே.

கடிந்ததிற்செல்லுளங்கோதைகல்யாணகுணக்கடலிற்
படிந்துகுடைந்தாடியபின்னரென்னைப்படுத்தவினை
மடிந்ததுவாளாமயக்கித்துயக்கியமாயக்கங்குல்
விடிந்ததுதித்ததுமெய்ஞ்ஞானமாகியவிண்மணியே.(அகூ)

இங்கூழ்வினையினிடர்படுமேழையியதயச்செய்யிற்
றங்கூர்மியாங்களைகட்டன்புநீர்பெய்துசாரியற்கைக்
கொங்கூருங்குந்தளக்கோதைகல்யாணகுணகணமாம்
பைங்கூழ்வளர்ப்பனவளுகப்பாகும்பயன்பெறவே. (கூ0)

கடலேய்கட்காரிகைகாஞ்சனங்காசினிக்கண்ணசையாங்
கடலேயழுந்திக்கவலடியேற்குன்கழற்கண்ணன்பு
கடலேயச்செய்துதிருக்கோதைநாயகியாங்கருணைக்
கடலேபிறவிக்கடனீந்துமாறுகடைக்கணியே. (கூக)

பவநெறிநோக்கிப்படருமிப்பாரினர்பற்றிநிற்கும்
அவநெறிநீக்கியருளினருமையதாகுமுத்தத்
துவநெறிகாட்டித்தன்றிருவல்லடியாரைத்தொழுதுயுநற்
றவநெறிகாட்டியகோதைசரணைசரணெனக்கே. (கூஉ)

மங்கையர்கோன்முதலாழ்வார்களுமகிழ்மகளைச்
செங்கைமுக்கோலகொண்டசிதிராசசிகாமணிதன்
தங்கையைநங்கண்ணன்றுரத்தையன்பர்தந்தாயைப்புத்தூர்
நங்கையைக்கோதையைநரடோறும்போற்றுவர்நல்லவரே.

ஆராதகாதனம்பாண்பெருமாளினணியரங்கத்
தாராவமுதனெனுமோரமுதாயணங்துணிதம்
பேராச்சுகாகந்தப்பேரின்பவாரிபெருகவுணர்ந்
தோராந்தகோதைதிருவடியென்னுட்டிகழ்ந்திடுமே. (கூச)

சிட்டர்கள்போற்றும்புதுவைகர்வந்தெள்ளுதே
பட்டர்பிரான்செய்தவருவாகியபைங்கிளியே
துட்டர்சிகாமணியாகியவென்னைநின்றிருண்டாடிக்
கிட்டர்களைசங்கத்திருத்திப்புரந்திடவெண்ணுதியே. (கூடு)

அழுத்தாளையள்ளலின்பரையாண்டைந்திலன்பறிவிற்
பழுத்தாளைப்பட்டர்பிரான்பந்தனையைப்பரும்பணிலக்
கழுத்தாளைக்கண்ணைறைக்கஞ்சனைக்காய்ந்தநங்கண்ணன்கஞ்ச
விழுத்தாளையேத்தும்விமலையையேத்தென்விதேயநெஞ்சே.

மக்கணமகார்தம்மழலைச்சொற்கேட்டுமகிழ்வதென
இக்கள்வன்சொல்லையுமேற்றுமகிழ்தியிரும்பழனம்
புக்கள்ளற்கண்ணிறைதம்பிள்ளைக்கூட்டும்பொருட்டுச்சின்மீன்
கொக்கள்ளுமல்லிக்குளப்பதிக்கோதைக்குணமணியே. ()

கலித்துறைக்காலத்தடியேனியற்றுமிக்கட்டளைசேர்
கலித்துறைநூற்றையுமேற்றடியாருளக்கஞ்சமதிற்
சொலித்துறைகின்றதிருக்கோதைத்தாயென்றன்முல்விணையை
மெலித்துறையாமளிதந்தென்பவப்பிணிவீட்டுவளே.(கூஅ)

பத்தியில்லாதவன்பாமரன்பாவப்பசைப்பதகன்
புத்தியில்லாதவன்பொய்யன்பொல்லாதவன் பொங்குமனச்
சுத்தியில்லாதவன்கோதையன்னுய்நின்சுகிர்தஞ்சொல்லச்
சத்தியில்லாதவன்செய்நூலுமேற்றுத்தையபுரியே. (கூக)

சொற்பிழையோடுபொருட்பிழைநின்னடியைத்தொடரா
முற்பிழைமுன்னவினைப்பயன்மூட்டமுயன்றுசெய்த
பிற்பிழையாவும்பொறுத்தாளநிற்கேபெருங்கடனும்
அற்பிழையெங்கடிருக்கோதைநாயகியம்மனையே. (க00)

ஆவாழ்கவந்தணர்வாழ்கவவர்களறங்கரைகன்
ஞவாழ்கநான்மறைவாழ்கநயக்குநல்லோர்பதின்மர்
பாவாழ்கவப்பாப்படிப்பவர்வாழ்கபரிக்குமிந்தப்
பூவாழ்கவாழ்கநிருக்கோதைநாயகிபொன்னடியே. (க0க)

திருப்பதிவாழ்கதிருவாழ்கநூற்றுடன்சேர்ந்தவெட்டுத்
திருப்பதிவாழ்கநிருத்தொண்டர்வாழ்கதெறுஞ்சிறையாங்
கருப்பதியாமனமைக்காக்குங்கோதைகழலிணையாம்
மருப்பதிமாமலர்வாழ்கவென்னுள்ளமடிவகத்தே. (க0உ)

ஆடிப்பகவதிநாவிலவதரித்தாயர்தங்கள்
பாடிச்சவரிக்குப்பாமாலைதந்துபைம்பூம்படலை
சூடிக்கொடுத்தசுடர்க்கொடிக்கோர்சதச்சொற்றுடையல்
பாடிக்கொடுத்தனன்பள்ளிகொண்டானெனும்பாவலனே.

கோதைநாயகித்தாயார் மாலை
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவல்லிக்கேணி
வேதவல்லித்தாயார் மாலை.

காப்பு.

விண்புகழல்லிக்கேணி வேதவல்லித்தாயடிமேற்
பண்புடனேர்பாமாலை பாடவே—நண்புடனே
வேதந்தமிழ்செய்த மெய்ஞ்ஞானதேசிகன்றன்
பாதந்துணைமனனே பற்று.

நூல்.

பூமகணீளையிவர்க்குந்தலைமையைப்பூண்டமகள்
பூமகள்பொன்மகள்புண்டரிகாதனேபோதமல்கும்
பூமகளாதியர்பன்னித்தொழும்பதபங்கயத்தாள்
மாமகள்வேதவல்லித்தாயைவாழ்த்தென்மடநெஞ்சமே. (க)

மூலப்பகுதிமுளாகாரியவர்க்கமூட்டுறவாம்
ஞாலப்பகுதியினண்ணியுநண்ணுகில்லாவியலாள்
காலப்பகுதிகடந்தமறைவல்லிக்கற்பகத்தின்
சீலப்பகுதிநிசைமுகனுலுந்தெரிக்கரிதே. (உ)

உழுவைவனத்திலுழைக்கன்றுறைதலுக்கொப்புடைத்தாங்
கழுவைநிகரிர்த்தக்காயத்துங்காலத்துங்கன்மமதாற்
புழுவைநிகர்புல்லியன்வாழ்தலாரணப்பொற்கொடியென்
வழுவைப்பொறுத்தந்தவைகுந்தகாட்டினில்வைத்தருளே.

நன்மையைநாடியிக்காயத்தைநல்கினேனானதனும்
றுன்மைகள்செய்துதுயரப்பவக்கடலேய்ந்தனனென்
புன்மைபொறுத்துமறைவல்லிநின்னருட்போதந்தென்
றன்மைதயங்கச்சதாநந்தவீட்டினைத்தந்தருளே. (ச)

பண்ணுஞ்சுவையும்பழுத்தசுந்தமிழ்ப்பாவின்விண்ணும்
மண்ணுந்தொழுநின்புகழ்பாடிமாக்கதிமன்னவெற்குக்
கண்ணுங்கருத்துங்கழலாதுநிற்கின்றகற்பகமே
எண்ணுமெழுத்துமருள்வேதவல்லியெனுமன்னையே. (ஞ)

கிள்ளைமொழிகேகயவியலன்னக்கிளர்நடைவார்
வள்ளைவள்வாண்மதியாகநவாரணவல்லியன்னாய்
சள்ளைசெய்யைவர்தமியேனறிவாந்தனத்தையென்றுங்
கொள்ளைகொண்டுண்டிடக்கோதிருக்கின்றகொள்கையென்னே.

என்னேயெனதுவிணையின்வலிகின்னியற்கையதாய்த்
தன்னேரிலாதவருசோத்தகைந்திடுந்தன்மையதே
பொன்னேபுகழ்க்கணியேயெப்புவனமும்பூத்தளிக்கும்
அன்னேமறைவல்லியேயம்புயாதனவம்மனேயே. (எ)

கட்டக்கரவடன்காமுகன்காதுகன்கன்மனமாந்
துட்டக்கரணந்துலங்குறும்வண்ணந்துகடிடைக்கும்
இட்டக்கரணவருள்கொண்டிரண்டென்றிசைமதுவும்
எட்டக்கரமுமருள்வேதவல்லியெனுமன்னேயே. (அ)

பல்லவிப்பண்ணவரேத்தும்பதுமைக்குப்பன்னவித்தை
அல்லவிக்குஞ்சுடராரணவல்லிக்கடியிணையாம்
பல்லவிக்கன்பர்பரிவுடனுரும்பணிந்திறைஞ்சிச்
சொல்லவிர்மாலையுந்தூமலர்மாலையுஞ்சூட்டுவனே. (கூ)

குற்றம்விளைப்பவராசுங்குடும்பினிகுட்டன்முதற்
சுற்றந்துணையென்றுநின்றுணைகைவிட்டதுட்டனென்றன்
அற்றம்பொறுத்தெனையாட்கொளவாரணவல்லியன்னாய்
கொற்றந்தருகின்குணாகழலேத்தக்குறித்தருளே. (கo)

வறுத்தவிதையங்குரியாதுநின்னருள்வண்மையினாற்
பொறுத்தபிழைசன்மப்புன்கண்டராதிப்புடவிமையல்
வெறுத்தவர்போற்றல்லிகசேணியிலவாழ்கின்றவேதவல்லிச்
சிறுத்தவிடையன்னேயெயித்துணையருள்செய்தருளே. ()

அயனுர்பலர்கற்பமார்ந்துமருவினேயான்விவித
வியனுர்பிறவிப்பெருவேலைவற்றும்விரகிலையாற்
பயனுர்சொற்பாவலரேத்தாரணவல்லிப்பார்க்கவியே
நயனுநின்பாதகளினமெஞ்ஞான்றுநணுகுவனே. (கஉ)

அஞ்ஞானத்தாலடியேன்செய்யநில்கட்கவதியிலை
விஞ்ஞானமில்லாவிவிதப்பிறவியில்வீழ்த்துகின்ற

சுஞ்ஞானமேவுநின்முண்டர்கடொண்டினத் தோமறுத்து
மெய்ஞ்ஞானமீதிமறைவல்லிபாவவிமோசனையே. (ஈஈ)

எத்தனைசன்மமெடுத்தனமேவின்னுமிப்புவியில்
எத்தனைசன்மமெடுப்பான்விதித்திருக்கின்றனையோ
எத்தனையேனுமிரங்காய்மறைவல்லியென்னுழிநிற்
கெத்தனைகாலஞ்செலுமோகருணையியல்வதற்கே. (ஈசு)

பெற்றவளாகியநீயேயென்மீதுபெருங்கருணை
யற்றவளாயினடியேனென்செய்வலினத்துயிர்க்கும்
உற்றவளேயன்பர்க்கூழ்வினையூட்டுமுகணெல்லாஞ்
செற்றவளேதிகழும்வேதவல்லிச்செழுந்திருவே. (ஈடு)

ஓலமெலாமிட்டுக்கூயமும்பிள்ளாயையுற்றுழில்
காலமெலாஞ்சற்றுங்காவாமலன்னையர்கைவிடுதல்
ஞாலமெலாவற்றினுமில்லையுண்டெனினன்குரையாய்
சீலமெலாங்கொண்டருள்வேதவல்லித்திருமகளே. (ஈகூ)

தேக்குத்தெவிட்டிடுஞ்செந்தமிழ்ச்சொல்லெனுந்தேமலரால்
வாக்குப்பொறியேபொருண்மணம்வீசவருத்திடுநற்
றூக்குத்துதிகளேச்சொல்லிமறைவல்லித்தொல்லருள்சேர்
நோக்குப்பெறுவானுவறியெந்நோன்புகணேற்றனையே. ()

ஏதமெனும்பிறவிக்கடலன்பரினங்கடக்கப்
போதமெனும்புணையாம்வேதவல்லிபொற்கோயில்வலம்
நீதமெனும்படியன்புடனித்தியநீர்செய்யப்
பாதமெனும்பொறிகாளைத்தவமுன்பயின்றனிரே. (ஈஅ)

சுரேந்திரனுதிச்சுவர்க்கத்தவருந்துறவியரும்
நரேந்திரரும்பணிந்தேத்துமறைவல்லிநாயகியாம்
வரேந்திரைபாதத்திலஞ்சலிசெய்துமலர்வழங்கக்
கரேந்தியங்கள்பண்டைக்காலத்தென்புண்ணியங்கண்டனிரே.

நீப்பொறியாகுந்திறத்திற்செல்லாதுதினந்தினமும்
பாப்பொறிமாமலர்மாலிகையாரணவல்லியன்னை
தூப்பொறிகல்கும்புகழ்ப்பாச்சுவையிற்புனிதமெய்த
பாப்பொறியேகற்றவமென்னைமுன்னர்நயந்தனையே. (உ0)

சாத்திரமாமறையோதிமுனிவர்தமுதமுதத்துத்
தோத்திரஞ்செய்யுநந்தாய்வேதவல்லித்துணையடியைக்
காத்திரோமஞ்சிலிர்த்திடக்கண்டுகளிதுளங்க
நேத்திரங்காண்மூன்னர்நீரெத்தவநிலைநின்றனிரே. (உக

கன்னமெனும்பொறிகள்கடிவீசுங்கமலமனை
அன்னமெனுநங்களாரணவல்லியகளங்கமாஞ்
சொன்னமெனும்புகழ்கேட்டுக்களித்துச்சுகிக்கும்வண்ணம்
என்னநன்னெஞ்சேபுகணீவிர்முற்காலத்திழைத்தனிரே.(உஉ)

காக்குங்கடமையைக்கைக்கொண்டுகாருங்கருணைவெள்ளந்
தேக்குந்திருக்கண்மறைவல்லிசேவடிசேர்துளவ
மோக்குநிலையின்முயன்றுமுயன்றுமுதமடைந்து
மூக்குமனனேநமக்குநலஞ்செய்யமுந்துற்றதே. (உங)

வள்ளவனசமலர்மாலிகையமகிழ்கருணை
வெள்ளமெனுநங்கள்வேதவல்லித்தல்லிமெல்லடியைக்
கள்ளமிலாமனின்கண்வைத்துக்கண்ணிக்களித்திடுவான்
உள்ளமெனும்பொறியேயெச்சுகிர்தமுஞற்றினையே.(உச)

திருமகடெய்வமணந்திக்கணவுஞ்செழுங்கமலந்
தருமகள்முத்தங்கொழித்திடுங்கிரச்சலதிமுன்னம்
வருமகளாரணவல்லியடியில்வண்பூசனையாம்
பெருமகஞ்செய்பவர்நாளுமெனக்குப்பிராப்பியமே. (உஞ)

பாமகளாதியபாவையர்போற்றும்பதயுகத்தாள்
மாமகணங்கண்மந்நாதன்மகிழ்ந்துதன்மார்பிருத்தும்
பூமகள்போதத்தபோகிதியென்னப்புகழ்பிருகுக்
கோமகள்வேதவல்லித்தாயைவாழ்த்தென்றன்கோழைநெஞ்சே.

இந்திரையெண்டிசையேத்துமல்லிக்குளமென்றுரைக்கும்
மந்திரைமாமகள்மாதேவியுக்கமருவுமடிச்
சந்திரைசந்திரவத்திரையன்பர்தமைப்புரக்குந்
தந்திரைதேர்திமனனேயெவர்க்குஞ்சரணியையே. (உஎ)

தோகைமயிலியலாரணவல்லியைத்தூயவளை
ஓகைபெறுபரமேகாந்திகளுள்ளுறைபவளை

வாகைபெறும்வரஞ்சியுயிரின்வகுப்புக்கெல்லாஞ்
சாகைமறைகளனந்தமுந்தண்ணளித்தாயெனுமே. (உஅ)

பெருத்தாளஞ்ஞானப்பிழம்பினிற்றள்ளித்தம்பேணிநாளை
வருத்தாளவர்களைவைகுந்தநாட்டினில்வைத்துவக்குங்
கருத்தாள்கமலமறைவல்லிநாமக்கனங்குழையின்
றிருத்தாளறிதிமனனேநமக்கென்றுஞ்சேமவைப்பே. ()

அல்லியங்கேணியடைவோர்க்குச்சேவையளிக்குமறை
வல்லிவரோதயைவானவியாருமகிழ்மதுரச்
சொல்லிசுகாவகைதொண்டர்க்கருளுஞ்சுரசுரபித்
தல்லிமனனேயறிசர்வபூததயாபரையே. (கூ0)

சாதாரணவண்டமிழ்கட்குஞ்சராசரச்சார்புயிர்க்கும்
ஆதாரபூதையெனும்வேதவல்லியருட்புகழைக்
காதாரக்கேட்டுக்கருத்தாரச்சிந்தித்துக்கட்டழகார்
பாதாரவிந்தம்பணிவோர்க்குச்சன்மப்பயமில்லையே.(கூக)

கரமணிக்கங்கணங்கைவிரன்மோதிரங்கண்டமுத்துச்
சரமணிமாலதலைக்கோலந்தாடங்கந்தாவின்மறைச்
சிரமணிதாளிற்பரிபுரதூபுரஞ்சேர்ந்திலங்கும்
வரமணியாரணவல்லியைவாழ்த்தென்மடமனனே. (கூஉ)

அளியுருவாளையறவுருவாளைவணியங்கீ
வளியுருவாளைகல்வாணுருவாளைமழகதிர்சேர்
ஒளியுருவாளையுபயவிபூதியுயிர்கட்கெல்லாங்
களியுருவாளைக்கனமறைவல்லியைக்கண்டனனே. (கூங)

பாலைப்பழித்தபணிமொழியார்பகுவாய்ப்பகழி
வேலைப்பழித்தவிழியார்விழைச்சைவெறுத்துமின்னே
நூலைப்பழித்தவிடைமறைவல்லிநின்னூபுரப்பூங்
காலைப்பழிச்சுமவரொனைக்காக்குங்கடவுளரே. (கூச)

அருவையுருவையருண்மறைவல்லியையன்புருவாங்
திருவைஞ்சேனையர்கோற்குரியாசந்தெரித்தசுர
தருவைமருக்கமழ்தாமமையாளைச்சரணடைந்தென்
கருவைக்கடந்திடுங்காட்சிகண்டுள்ளங்களித்தனனே. ()

கருமிழலைவருங்கம்பலைநீங்கக்கருதினர்க்குப்
பெருமிழலை யிவராணவல்லிபெறற்கரிய
ஒருமிழல்பெற்றுய்ந்தவுத்தமர்தங்களுபயவடித்
தருமிழல்சார்ந்தென்றன்சன்மவிடாயைத்தணிப்பனின்றே.

தித்திலையபாகுதிகமக்கொடியன்னேரீரசத்தாள்
சத்தியமாகச்சரணடைந்தேனற்றவர்களடை
முத்தியடையக்கருணையுறைதங்துமொய்யொழுக்கப்
பத்தியம்வைத்தென்பவப்பெரும்பையுளைப்பாற்றுவளே.

கன்மலிபோன்றவென்னெஞ்சகெகிழ்ந்துகசிந்துருகிச்
சொன்மலிவின்றின்றெழுபுகழ்பாடித்துதிக்கும்வண்ணம்,
பொன்மலியேமறைவல்லிப்பெயர்கொண்டபுத்தமூதே
நின்மலியேயருள்வாயல்லிக்கேணிகேதனியே. (கூஅ)

மூருடன்முதுக்குறைவில்லாமுழுமகன்மூர்க்கன்முற்றுங்
கிருடன்றிருக்கனெனினுமறைவல்லிச்செந்திருவே
மிருடன்விழிவெந்தமீனக்கொடியோன்மிறைசெய்கலி
புருடன்னிவைப்புறங்காணவிரகுபுரிந்தருளே. (கூகூ)

வேகத்தலைவிமுப்பத்துமுக்கோடிவின்ணோர்தலைவி
பூதத்தலைவிபதினென்குலகும்புகழ்தலைவி
போதத்தலைவிபுராணபுருடனைப்புல்லிமகிழ்
நீதத்தலைவிநிகழ்மறைவல்லியாமகையே. (சஅ)

கருக்குழிகட்டுக்கருக்குழிவீழுங்கடையனிரு
செருக்குழிச்செல்லாதெழிலாரணவல்லிச்செந்திருவே
இருக்குழிவாழ்நின்னிணையடியென்னிதயத்துழியும்
திருக்குழியும்வைத்துச்சிந்திக்கச்செய்திதிருவருளே.(சகூ)

வாமவைப்பென்னமயக்கிளையாருழிவஞ்சன்கொண்ட
காமவைப்பென்றுகழித்திடுமோகழியக்கனிசெய்
சேமவைப்பேநின்லைச்செல்வவைப்பேயிச்சகத்துக்கெல்லாம்
ஏமவைப்பேமறைவல்லியன்னையென்றனின்பவைப்பே. (ஙஅ)

விதிவிலக்கின்டாச்செல்லாதவனரவேடங்கொண்ட
மதிவிலங்காலாரணவல்லியன்னாய்விணையாஞ்

சதிவிலங்கைத்தறித்திதம் குன்றனிர்ப்புரைதாட்டுணையாங்
கதிவிலங்காமற்கருணைசெய்தாருங்கடனினக்கே. (சங)

சீதவல்லிப்பல்வலப்பதிவாழ்நிறைமெல்வல்லி
போதவல்லிப்பெயர்ப்புண்ணியவல்லிபுனிதவன்பர்
கேதவல்லிக்கென்றுங்கேடுசெய்வல்லிகொளொளிசேர்
வேதவல்லித்தல்லிமெல்லடிநாளும்விரும்பென்னெஞ்சே.

தருமத்துறைநற்றவத்துறைதானத்துறையவற்றின்
மருமத்துறையொன்றுங்கேணின்மறைவல்லிமாமகளே
கருமத்துறைபயின்றின்னுமொர்மாதின்கருவிலவந்து
சருமத்துறையிற்றவியாமற்செய்தருடண்ணுவியே. (சடு)

நின்பூசனையுநிகழ்த்தினனில்லினதடியார்
இன்பூசனையுமியற்றினனில்லையெம்மன்பருக்கில்
முன்பூசனையுமுயன்றனனில்லைமுரணிதென்ற
றன்பூசலுக்கென்னசெய்வேன்மறைவல்லித்தாக்கணங்கே.

நார்த்தனவாஞ்சையுநானிலவாஞ்சையுநாரியர்தஞ்
சீர்த்தனவாஞ்சையுந்தீராத்திருக்குளன்றேசமெங்கும்
போர்த்தனவாநின்புகழ்பாடியாடிநின்பொன்பெயர்ச்சங்
கீர்த்தனஞ்செய்துமறைவல்லியுய்யக்கிருபைசெய்யே. ()

கோட்டையெனவெண்கோச்சூழ்ந்துவோர்தங்கொடும்பவமாங்
காட்டையழித்துக்கதிபேதத்தன்னிற்கதிகினருங்
கூட்டையொழித்துன்குலவடியார்களுள்ளதிருநாட்டையளித்தருள்வேதவல்லிப்பெயர்நவிலியே. (சஅ)

இந்திரனெண்ணனீசானனென்றாழியக்கர்பதி
சந்திரனுத்தவம்புரிந்தோரைச்செய்தாக்கணங்கே
சந்திரவாடைதரித்தமறைவல்லித்தல்லியெனைத்
தந்திரமாநற்றவத்தினருகத்தயைபுரியே. (சக)

எல்லையில்காலத்தியற்றியபாவத்தினீட்டமெல்லாம்
ஒல்லையொழியுமென்மேனின்கருணையுதிக்குமெனில்
இல்லையெனினில்லைநீயேயெளியவெண்ணீர்த்தரங்கித்
தொல்லைமறைவல்லியன்னையவற்றைத்தொலைத்தருளே. ()

நின்னேநினைக்கப்புகுந்தவென்னெஞ்சமிங்நீளுலகந்
தன்னேச்சலதியைச்சக்கரவாளத்தைத்தாவியப்பால்
முன்னேப்பகோளககோளவிசாரமுயற்சிவிடா
தென்னேயியற்றுவலெந்தாய்மறைவல்லியிங்கிரையே.(நிக)

பூலோகமெங்கும்புகுந்துபுதுமைப்புவர்முதலா
மீலோகமுஞ்சென்றுவேட்கைமுற்றுதுவிஞைந்துமனங்
கோலோகமுஞ்செல்லுமென்னென்றிக்கூத்தைக்குறித்திடுவல்
சாலோகமாதிதருவேதவல்லித்தயாம்புதியே. (நிஉ)

கால்வேகமுங்கலுழன்வேகமுங்கதிரோனிரதக்
கால்வேகமுங்கான்மகன்வேகமுமங்கள்காகுத்தன்கைக்
கோல்வேகமுமறைவல்லியன்னுயென்கொடுமனத்தின்
மால்வேகம்வெல்லுமதுநின்னடிநிற்கும்வண்ணஞ்செய்யே.

காலமெலாம்பெருங்காற்றிற்கறங்குகறங்கலென
ஞாலமெலாஞ்சுழன்றுலுந்தளர்வில்லோன்மகவான்
சாலமெலாஞ்செயுமன்னதைநின்னடிசாரவைப்பாய்
கோலமெலாங்கொண்மறைவல்லியெங்கள்குலக்கொழுந்தே.

இன்னியவோதையியலல்லிக்கேணியெனும்பதியின்
மன்னியமாமறைவல்லியன்னுயென்மனோரதத்தை
உன்னியளித்தருள்வாயுலகோர்கட்குளத்துணர்ந்து
பன்னியநான்குவிதபுருடார்த்தபலப்ரதையே. (நிந)

சகத்துக்கிறைவிசராசரக்கூட்டந்தனக்கிறைவி
மகத்துக்கிறைவிமகப்பயனல்கிமகிழிறைவி
இகத்துக்கிறைவிபரத்துக்கிறைவியெய்தாதமுத்திச்
சுகத்துக்கிறைவிசுருதிக்கொடியெனுந்தூயவளே. (நிசு)

மண்ணுக்கினியவள்வானுக்கினியவள்வாய்ந்தநல்லோர்
கண்ணுக்கினியவள்காதுக்கினியவள்காசொன்றில்லா
எண்ணுக்கினியவளின்பந்தருமிசைதூலில்வல்லோர்
பண்ணுக்கினியவணம்வேதவல்லிபராபரையே. (நிள)

அறத்தினுள்ளாளிவ்வகிலாண்டகோடியகத்தினுள்ளாள்
புறத்தினுள்ளாளன்பர்புந்தியுள்ளாள்புயல்வண்ணனெம்மான்

நிறத்தினுள்ளாணிகமத்தினுள்ளாணிறையொன்றுமிலேன்
றிறத்தினுள்ளாள்மறைவல்லிகரந்துறைசெப்பரிதே.(நிஅ)

வீட்டையடையக்கொடுத்தவிச்சன்மத்தின்வீழ்நரகக்
கேட்டையடையத்தகுமோமறைவல்லிகேதகெஞ்சின்
சேட்டையொழித்துன்றிருவடிசிந்திக்கச்செய்தடியேன்
கூட்டைவிடுங்காற்கொடுபோயந்தாமத்திற்கூட்டுதியே. ()

பவித்திரமாநின்சரிதைச்சுவைகொள்பராவமுதைச்
செவித்திரமூட்டியென்சென்மச்சிறைதனைத்தீர்த்தருள்வாய்
சவித்திரளன்னவுருவார்சரோருகசம்பவையே
புவித்திரளோர்புகழாரணவல்லிபுராதனியே. (கூ0)

பெண்மணியேயென்னஞதியஞ்ஞானப்பிழம்பறுக்கும்
விண்மணியேவியன்பாலாழிதன்னில்விரும்பிவந்த
ஒண்மணியேயெவ்வுயிர்க்குமுயிராயொளிர்ந்துநிற்குந்
திண்மணியேயெனையாள்வேதவல்லிச்சிந்தாமணியே. ()

அத்தியமுதமரவணையானுரத்தாரமுதஞ்
சித்தியடைபவர்சித்தத்துத்தித்திக்குந்தெள்ளமுதம்
பத்தியுடையோர்பவந்தீரவுண்ணுநற்பாலமுதம்
முத்தியமுதமறைவல்லிநாமத்தைமுன்னுநெஞ்சே. (கூஉ)

புத்தியளிப்பவள்போகமளிப்பவள்போற்றுமெட்டுச்
சித்தியளிப்பவள்செல்வமளிப்பவள்சேர்ந்தவெற்குப்
பத்தியளிப்பவள்மெய்ஞ்ஞானந்தந்துபரமபத
முத்தியளிப்பவளாகுமறைவல்லிமுன்னவளே. (கூங)

கோளென்செயுங்கொடுங்கூற்றமென்செய்யுங்குறிக்குங்கெட்ட
நாளென்செயுந்திக்கினண்ணுமிருவகைநாகங்களின்
ரூளென்செயுமபிசாரமென்செய்யுந்தரியலர்கள்
வாளென்செயுமறைவல்லியருளெற்குவாய்த்திடினே. ()

கல்லாதவரெக்கலைகளுங்கற்றகவீச்சுரராம்
பொல்லாதவர்புண்ணியர்க்கரசாவர்பொருள்களொன்று
மில்லாதவரியக்கேந்திராவரிருட்பிழம்பை
வெல்லாதவரினெளிர்மறைவல்லிவிரும்பிடினே. (கூரு)

பதிவாய்க்குமன்பதைப்பாலநம்வாய்க்கும்பகருமொன்பா
னிதிவாய்க்குகேரினிருபர்குழாம்புடைநின்றுசொல்லுந்
துதிவாய்க்குமீறில்சுகாநந்தந்துன்னிடத்தூண்டிடுகன்
மதிவாய்க்குநம்மறைவல்லியருள்விதிவாய்த்தவர்க்கே. ()

கமலாலயைகருணாலயையல்லிக்கயாகராம்
விமலாலயையன்பர்மெல்லுள்ளவாலயைவேதவுச்சி
யமலாலயையலிபாரங்கொழியமுதாதரியாம்
நிமலாலயைமறைவல்லியந்தாமநித்யாலயையே. (கூள)

சரோருகசம்பவையாமறைவல்லிதரிசனத்தில்
உரோருகமார்பன்மணிவடங்கான்றிடுமொள்ளொளியுங்.
கரோருகங்கானகமாகுங்கலாநிதிகாலொளியுஞ்
சிரோருகக்காந்தியுங்கண்சும்புளித்திடச்செய்திடுமே. ()

சிதாரவிந்தத்திருமகளாமறைவல்லிச்செல்விப்
பாதாரவிந்தங்கள்பற்றறுத்தோர்பரிசுத்தமனப்
போதாரவிந்தத்தும்புண்ணியவேதத்தின்பொன்முடியாம்
நீதாரவிந்தத்தும்பூத்துக்கமழ்ந்துநிலாவிடுமே. (கூக)

விரதச்செருஞாணியர்வேண்டுமறைவல்லிவித்தகியின்
இரதச்செவ்வாயுமுலவுங்கண்களுமின்முகமும்
வரதக்கரமுமபயக்கரமுமலரடியுஞ்
சரதத்தெப்போதுமென்கண்முன்னர்நின்றுதயங்கிடுமே.()

ஆவித்துணைநங்களாரணவல்லிதன்னம்புயத்தாள்
பாவித்துநும்பரமானந்தவாரிபடிந்துநின்று
சேவித்துப்போற்றித்திசைமுகன்செய்கையுஞ்செந்திருக்காற்
கோவித்துப்பார்த்திடுங்கூற்றுவன்கொள்கையுங்கொய்குவனே.

மாயையிற்சிக்கிமயங்கித்திரியுமதியுடையேன்
தூயையகைசுயம்பிரகாசைசுருதிவல்லித்
தாயையடைந்தேன்றமியேனைத்தாக்குந்தவாப்பிறவி
நோயையிரித்துதுவல்வீட்டில்வைத்தென்றுநோக்குவளே.

சீர்பூத்தநின்புகழென்றுமெனதுசெவிக்குணவாம்
ஏர்பூத்தநின்னிணைச்சேவடியெங்கண்ணிணைக்குணவாம்

ஈர்ப்புத்தரின்றிருநாமமென்னுவக்குநல்லுணவாம்
பார்ப்புத்தவல்லிகுளம்வாழ்மறைவல்லிப்பண்ணவியே. ()

நின்றன்கிரீடைப்பரிகரமாய்நிறைமுக்குணங்கள்
ஒன்றியதாகியுயிர்க்குணந்தோன்றுதுறவுமறைத்
தென்றுமஞ்ஞானமிழைக்குநின்மாயையிகலெவெல்ல
என்றரமோசொல்லுநியாரணவல்லியிந்திரையே. (எச)

ஒத்திமையோர்கடொழுதின்னடியிலுழுவலன்பு
நத்திமைப்போதிலுமில்லாதகன்னெஞ்சநாயடியேன்
சத்திமைக்குஞ்சித்தத்தார்பெறுமுத்தியைச்சாரநின்றூட்
பத்திமைச்செல்வம்பணித்தாள்மறைவல்லிப்பங்கயையே.

இருட்செல்லன்மூடியிடருற்றிரங்குமென்மீதுசற்றுன்
அருட்செல்வமெய்தினென்னல்லலெல்லாமறுமன்பெனும்போர்ப்
பொருட்செல்வம்பொங்குமுபயவிபூதிமெய்பொய்யுணருந்
தெருட்செல்வஞ்சேருமறைவல்லியாகியசெய்யவளே. ()

அல்லிக்குளப்பதியார்ந்துறையாரணவல்லியென்னுங்
கல்லிக்குளமுருகித்தயைவெள்ளங்தவப்பெருகிற்
சொல்லிக்குளசுவைச்சொற்கவிபாடியென்மெல்விணாள்
கல்லிக்குளம்பறிப்பேன்கடிதோதுங்காப்பிடத்தே. (எஎ)

வாணிப்பதிமுதலானவர்போற்றமநிழல்லிக்
கோணிப்பதியுறைகம்வேதவல்லிகிருபையென்மேற்
பேணிப்பதியிற்பெரும்பாவக்கூட்டம்பெயர்ந்துநனி
ராணிப்பதிவிருந்தோடுகரலியினுப்பணின்றே. (எஅ)

மூன்னைப்பழவினைகாண்முறையாகமுனிந்துமுனிந்
தென்னைப்புறங்கண்டநீவிர்புறங்கொடுத்தேகறகும்
என்னைப்பரிசித்திடவிடமில்லையிருக்குவல்லி
அன்னைப்பரமவருள்சூழ்ந்தெற்காக்குமரணெனவே. ()

வினைநிலையானதியேனிவ்வுடலம்விடும்பொழுதிற்
கனைநிலையையங்கதித்தெழுங்கான்மரங்கற்கடித்து
மூனைநிலைமுற்றுமுன்னீயென்றன்கண்முன்னர்முந்திநின்னை
நினைநிலையெற்கருள்வாய்வேதவல்லிகிருமலையே. (அ0)

சுடர்சுடரெய்தச்செய்யாரணவல்லிதுணையிருக்கின்
இடரிடரெய்துமிரும்பகரேமியமன்விடும்
படர்படரெய்துவர்பண்டைவினையிற்படர்பிறவித்
தொடர்தொடரெய்துமனனேயிதனைத்துணிந்துகொள்ளே.

விண்வாழ்குரர்கள்விளக்கமுறுவதும்வேலைசுற்றும்
மண்வாழ்குரர்கண்மகிழ்ச்சியடைவதுமாப்பதவிக்
கண்வாழ்குரர்கள்களிப்புற்றிருப்பதுங்காமர்சுவைப்
பண்வாழ்மறைவல்லிதன்கடைக்கண்ணினிற்பார்த்தலினே.

மாதனத்தாள்மறைவாணர்வணங்குமணக்கமல
வாதனத்தாளன்பர்க்காதரத்தாளணியாருவணக்
கேதனத்தாளல்லிக்கேணிமறைவல்லிகேடின்முத்திச்
சாதனத்தாணமைக்காத்தருள்வாள்சந்ததமனனே. (அசு)

வாத்தியவோதையருவல்லிக்கேணிவளருகர்வாழ்
வேத்தியமாமறைவல்லியன்னுய்ந்தின்விரைமலர்த்தாட்
பாத்தியங்கொண்டுபணிந்தனனென்பவம்பாற்றனிற்கே
சாத்தியங்கைவிடனின்குணபூர்த்திக்குத்தக்கதன்றே. ()

சாத்திரத்தாள்மெய்யம்வேங்கடஞ்சோலைச்சயிலமெனுங்
கேத்திரத்தாள்புயக்கேயூரத்தாள்கிளருங்குழைசேர்
சோத்திரத்தாள்சுருதிக்கொடித்தாயென்றன்மூத்திரக்குப்
பாத்திரத்தாருணர்வீர்பைந்தமிழ்க்கவிப்பண்டிதரே. ()

விம்பநிகரிதழ்வாயாளைத்தண்கதிர்வேந்தனெளிப்
பிம்பநிகர்முகத்தாளைமறைவல்லிப்பேரிணையை
நிம்பநிகரென்பவவோங்கலெவட்டிநீறுசெய்யுஞ்
சம்பநிகரருளாளையடையென்றனிநெஞ்சமே. (அசூ)

மூத்தாரக்கந்தரிமூவாமூதல்வியிம்மூதுலகார்
வித்தாரக்கீர்த்திவிழுச்செல்வியாகங்கள்வேதவல்லி
நத்தாரக்குங்குமகல்லங்கராகத்தணரணன்றன்
நத்தாரப்பூமகணேக்கினெழியுநங்கல்குரவே. (அஎ)

அருத்தியினாரணவல்லியடியையகநிலயத்
திருத்திமதிவிளக்கேற்றியிசைப்பூவிலம்பகத்தைப்

பொருத்தியன்பாகும்புனறீபதூபம்புரிந்துநல்கி
விருத்தியடைபத்தியன்னிவேதித்துவேண்டுவனே.(அஅ)

எண்ணற்கரியசராசரங்கட்கோரிறைவிமதிக்
கண்ணற்றவர்கட்குக்காண்பரிதானவள்கல்விவல்லோர்
தண்ணற்குரியபுகழாரணவல்லிநல்லடியை
மண்ணற்குரியனசெய்துவழுத்தென்மடநெஞ்சமே.(அகூ)

அமரபயத்தொடுநம்பயந்தீர்ப்பதுமைங்கணேவேள்
சமரநிவாரணஞ்செய்வதுந்தண்டதரன்றருக்கை
பமரவடக்குவதுநங்களாரணவல்லியன்னை
பமரமடுப்பப்பைந்தேன்பொழியும்பதபங்கயமே. (கூ1)

ஆவத்தைத்தீர்க்குமருந்துணையாவதுமான்றமும்மைத்
தாவத்தைத்தீர்த்திடுந்தண்டடம்போல்வதுந்தண்டலிலாப்
பாவத்தைக்காற்றிற்பறந்தோடச்செய்வதும்பண்புருவந்
தீவத்தையொத்தமறைவல்லிபாதச்செந்தாமரையே.(கூக)

மும்மையுலகத்தவர்முறையீட்டுக்குமுன்னிடமுஞ்
செம்மைமறைபுகச்சிந்தையுட்கொள்பவர்சேரிடமும்
இம்மைமறுமைப்பயனெய்துவோரெண்ணியேத்திடமும்
அம்மைமறைவல்லியாரியச்சேவடியம்புயமே. (கூஉ)

தேவர்கள்சிந்தையுள்வைத்தெண்ணிப்பூசனைசெய்வதுமிப்
பூவர்கள்புந்தியுள்வைத்துப்புகழ்வதும்பூங்கலைசேர்
நாவர்கள்வாழ்த்திநன்மாலையணிவதுநங்கையர்கள்
மூவர்களின்முந்திருக்குவல்லிப்பதமுண்டகமே. (கூங)

வேதச்சிரமுடன்வேதங்களொத்துவியப்பதுவும்
வேதப்பொருளுணர்வித்தகர்நாளும்விரும்புவதும்
ஓதப்புவியினரேத்துமல்லிக்குளத்துற்றுறையுங்
கீதப்புனிதமறைவல்லிபாதபங்கேருகமே. (கூச)

நோய்க்குழுநோக்கத்தினைக்காமலுதவலாசையெனும்
பேய்க்குழுவென்னைப்பிடிக்காமலும்பெட்குமைம்பொறியாம்
நாய்க்குழுவென்னைநலியாமலுன்னைநாடிநிற்குஞ்
சேய்க்குழுச்சேர்ந்தவெனையாள்மறைவல்லிச்செந்திருவே.

வாய்மையினின்றுவழுவாமலுமனவிந்திரியத்
தூய்மையினின்றுசுருங்காமலுநின்றன்றெண்டருக்குச்
சேய்மையினின்றுதியங்காமலுஞ்செகத்தின்னுயிர்க்குத்
தாய்மையினீங்காமறைவல்லியெற்குத்தையபுரியே. (கூசு)

சத்துவநீர்மைசததந்தழைக்கவுஞ்சால்புறுமுத்
தத்துவஞானந்தலைப்பெய்துநிற்கவுஞ்சாரடியேன்
சொத்துடையாய்நீசுவாமிநியென்னத்துணியுணர்வு
தத்துவமோங்கவுஞ்செய்வாய்மறைவல்லித்தம்மனேயே. ()

பிறப்புமத்துன்பினுக்கெண்மடங்காம்பெரும்பிழைதரும்
இறப்புமியமன்றமர்செய்யிடருமிரித்திடின்
சிறப்புறுநாமசங்கீர்த்தனஞ்செய்துதிளைப்பதிலோர்
மறப்பும்வராதெனையாள்மறைவல்லிமலர்மகளே. (கூஅ)

எம்மின்மிக்கார்களிலரென்றிதயத்தெண்ணுதலகில்
நம்மின்மிக்காரும்பலரிருப்பாரென்றுநாவலர்காள்
வம்மின்மகிழ்ந்துநல்வண்டமிழ்மாலைவகுத்துரைத்துத்
தம்மின்புகழ்ந்தணிவோமறைவல்லிதன்முள்களுக்கே. ()

புத்தமிழ்தாமெனப்புத்தேட்புலவர்புகழ்ந்தணிந்த
அத்தமிழ்ப்பாத்தொடை முன்னரென்புன்கவியாமலங்கல்
உத்தமமாமணிசூன்றிமணிதனையொத்தலெனக்குஞ்
சித்தமகிழ்ந்தருள்வாய்வேதவல்லித்திருவன்னையே. (க00)

வாழிவளங்கொடிருவல்லிக்கேணிவளநகரம்
வாழியடியவர்வாழியுபயமறைமொழிகள்
வாழிகலசக்கடனின்றும்வந்தமந்நாதவள்ளல்
வாழிநம்வேதவல்லித்தாயெனுமலர்மாமகளே. (கoக)

சீராரல்லித்தடவேதவல்லித்தாய்திருவடிமேல்
நாராரார்தமிழ்க்கவிநன்மாலைநூறுநன்ஞானநிதி
யேராரார்ந்தகச்சிக்கடாம்பியிராமானுசவிறைவன்
சூராரடிசேரெதிராசதாசன்சமைத்தனனே.

வேதவல்லித்தாயார் மாலை
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவல்லிக்கேணி
உருப்பிணித்தாயார் மாலை.

காப்பு.

கருப்பிணியைநிக்குங் கமலையல்லிக்கேணி
உருப்பிணியாமல்னை யுபயத்-திருப்பதத்திற்
பாமாலைசூட்டப் பணித்தருள்வான்றண்வகுளப்
பூமாலைமாறன் புனிந்து.

நூல்.

திருவளர்செந்தாமரைமலர்மாளிகைசேரனமே
உருவளரெம்மானுரப்பஞ்சரத்திலுறைகிளியே
மருவளரோதியுருப்பிணித்தேவிமயிலன்னையே
கருவளரென்மனக்கண்வாழ்ந்திருக்கக்கருணைசெய்யே. (அ)

நெஞ்சகமேநந்நிராதாரைநின்மலநித்தியைசெங்
கஞ்சமலர்மாளிகைவீற்றிருக்குங்கனங்குழைகார்
மஞ்சனவோதியுருப்பிணியன்னைமலரடியைத்
தஞ்சமெனநம்புநிநம்மூத்தாபந்தணந்திடுமே. (உ)

அமலையகையபூலையசலயநிப்பிரியை
கமலைகமலாசனைகமலாக்கிகராம்புயைநங்
நிமலையுருப்பிணியன்னையெஞ்சேநினைநிவினை
அமலையுரம்பரமுற்றும்வற்றவருளுவளே. (ஊ)

நிரந்தரைநித்யகல்யாணிநிராமயைநிர்விகற்பை
தரந்தருசர்வஞ்ஞசத்யசங்கற்பைதழையசர
சரந்தருசத்தியகாமையுருப்பிணித்தம்மனையை
நிரந்தரின்றுநினைதிநெஞ்சேபவநீங்கிடுமே. (ச)

அநந்தவிபவையயோகையயோநிசையாவருஞ்சொல்
அநந்தநிருவபிதாகையகளங்கையாமதுலை
அநந்தைநல்லாநந்தருபையுருப்பிணியன்னையைநீ
அநந்தலொழிந்தேத்துதிநெஞ்சமேநம்மயர்வறுமே. (ஙு)

அப்பிரமேயையபராசிதையநசூயைநல்ல
சுப்பிரசந்நைசுகாவகைசொல்லுந்துதிப்பிரியை
ஒப்பிலுருப்பிணியன்னைநமையுளமேயுவக்கின்
இப்பிரபஞ்சத்திடர்நீக்கிமோக்கத்திருத்துவளே. (சு)

அருளுக்கணியையயழகுக்கணியையறக்கணியைப்
பொருளுக்கணியைப்புகழுக்கணியைப்பொறைக்கணியைத்
தெருளுக்கணியையுருப்பிணிச்செல்வியைத்தேர்ந்துநெஞ்சே
மருளுக்கணிசெயுமாயையைமாய்த்திடவாழ்த்துதியே. ()

மூழுமதிபோன்றமுகத்தாளைமுத்தியைமுன்னிநிற்குஞ்
செழுமதியோர்க்கருள்செய்யுஞ்செய்யாளைநற்றெள்ளமுதை
டெழுமதிசேகவுருப்பிணியன்னையையென்றுநெஞ்சே
தொழுமதிநந்தொல்லைத்துன்பத்தைதொகுதிதொலைந்திடுமே.

பாவனநாமிபதுமைபராபரைபல்லுயிர்க்குஞ்
சீவனகாமியுருப்பிணிசின்மயைசிற்பரைதாள்
நீவனமாலையும்பாவினமாலையுநித்தநித்தம்
ஆவனவாக்கியணிதிநெஞ்சேயல்லலற்றிடுமே. (கூ)

பரசரஞ்திப்படிவர்க்குந்தேவப்படிவர்கட்கும்
இராசரதாங்கர்க்குமெண்கணஞ்தியிலேகர்கட்குஞ்
சராசரம்யாவைக்குந்தண்டலைசூழல்லிக்கேணியில்வாழ்
தராசரண்போலுமுருப்பிணித்தேவியைத்தாயென்பவே

ஆரணியம்புயையாதாரபூதையனைத்துயிர்க்குங்
காரணிகாருணியக்கடலெங்குங்கலந்தபரி
பூரணியாகுமுருப்பிணியன்னையைப்போற்றுநெஞ்சே
தாரணியின்புமந்தாமவின்புந்தந்துதாங்குவளே. (கக)

சுரமங்கையரானவர்களெவர்கட்குந்தோயுநில
நரமங்கையர்கட்குநாகவுலகத்துநங்கையர்க்கும்
வரமங்கலந்தருந்தாயாமுருப்பிணிமாமகளைத்
திரமங்கைகூப்பித்தொழுதிநெஞ்சேவினைத்தீதறுமே. ()

எண்வகைச்சித்தியுமெண்வகையோகமுமேன்றுவரும்
எண்வகைச்செல்வமுமெண்வகையானவிலக்குமியாய்

எண்வகையாவுமிசைக்குமுருப்பிணியெண்குணியை
எண்வகையெண்ணுதிநெஞ்சேயிடர்களிரிந்திடுமே. (கக)

அசனமளிப்பவளாடையளிப்பவள்யாருமெச்சும்
வசனமளிப்பவள்வண்ணமளிப்பவள்வாய்ந்துதொழும்
யசனமளிப்பவளாகுமுருப்பிணியன்னைநெஞ்சே
விசனமொழித்தருள்வாளவணுமம்விளம்புதியே. (கச)

பரமாளிகைதிருப்பாற்கடன்மாளிகைபத்தருள்ள
வரமாளிகைகல்லவாரிசமாளிகைமாயன்மணி
யுரமாளிகைகொளுருப்பிணித்தாயையுள்ளேயுனினம்
புரமாளிகையையும்பொன்மாளிகையாப்பொருந்துவளே.

பண்ணின்சுவையைப்பழத்தின்சுவையைப்பழுத்தகல்லோர்
எண்ணின்சுவையையிறுற்றேன்சுவையையிலங்குமிரு
கண்ணின்சுவையையுருப்பிணியன்னையைக்கண்டவடாள்
நண்ணின்னடலேனன்னெஞ்சேநடுங்கிநசித்திடுமே. (கஎ)

பூத்திடுந்தாயைப்புவனசராசரபூதமெல்லாங்
காத்திடுந்தாயைக்கதிதருந்தாயைக்கவலையெல்லாம்
நீத்திடுந்தாயையுருப்பிணித்தாயைநினைதிநெஞ்சே
யாத்திடுந்தாவத்தஞரஞ்சியம்றிடுமக்கணத்தே. (கஅ)

வறிஞரைச்செல்வர்களாக்கவல்லாளவன்மண்ணையரை
அறிஞரெனச்செயவல்லாளத்தன்னடியம்புயத்தைச்
செறிஞர்தந்தீவினைதீர்க்குமுருப்பிணித்தேவியைநீ
எறிஞமனென்னவிடர்செய்வினையறவெண்ணுநெஞ்சே. ()

ஆட்டார்க்கரும்பையமைக்காக்கற்கண்டையறுபதங்கள்
ஈட்டார்தமேனையெரிக்காதபாகையெண்ணேடதியாற்
கூட்டாவமுதையுருப்பிணியன்னையைக்கூர்ந்துநெஞ்சே
கோட்டாலைக்கூட்டப்பவங்குன்றநிதங்கூறுதியே. (கஙக)

கறவாதபாலைக்கடையாதவெண்ணெயைக்காய்த்திறக்கப்
பிறவாதநெய்யைப்பெருமக்களின்பப்பெருக்கையன்பர்
மறவாமருந்தையுருப்பிணியன்னையைவாழ்த்துதியேற்
பிறவாதபேறுபெறச்செய்வணெஞ்சேபெரிதுவந்தே. ()

தலைக்கோலந்தாடங்கமூக்கணிமாமணித்தாழ்வடங்கள்
கலைக்கோலமங்கதங்கங்கணமாழிநற்காலணியிற்
நிலைக்கோலங்கொண்டவுருப்பிணித்தாயைநினைதிநெஞ்சே
மலைக்கோலத்துன்பமனுக்கோலமாகிமறைந்திடுமே. (உக)

அவனிவணென்னதெவனுநிறைந்தவ்வவ்வாவிதொறுஞ்
சிவனியுறைந்துதிகழுமுருப்பிணித்தேவிநந்தாய்
சுவனவடியைத்தொழுதிநெஞ்சேயவடொல்லருளாம்
உவணன்வரிலிவ்வுலுவலுரகமொழிந்திடுமே. (உஉ)

அரிமாமுரலவவிழலர்க்காவல்விக்கேணியன்னை
விரிமாமலராசனையாமுருப்பிணிவித்தகிதாள்
புரிமாயமின்றிப்புகழ்திநெஞ்சேயவள்பொங்கருளாம்
அரிமாவரிலிவ்வுரைக்கரிமாகமக்கஞ்சிடுமே. (உங)

பரவியபற்பலவண்டத்துயிர்களும்பாங்குபெறப்
புரவியைநங்கருப்பிணியன்னையைப்பூமகளைக்
கரவியையாதுகருதுநெஞ்சேயவள்கட்கருணை
இரவிவரினமையிவ்விடும்பைத்தமமென்செயுமே. (உச)

பன்னிருபாலென்படிவத்தினின்னைப்பதிட்டைசெய்துன்
பன்னிருநாமமும்பன்னிப்பரவாப்பகலுளதோ
என்னிருகண்ணுமுருப்பிணியன்னுயிதயவின்னுத்
துன்னரிதுஞ்சவருட்சரபத்தினைத்தோற்றுவியே. (உஙி)

எவ்வவதாரமெங்கோனிச்சையாலெடுக்கின்றனனே
அவ்வவதாரந்தொறுமகலாமலவதரிக்கும்
எவ்வமிலாநம்முருப்பிணியன்னையெண்ணினெஞ்சே
பவ்வப்பிறவிப்படர்ப்படலங்கள்பறந்திடுமே. (உசு)

அதிதிக்கரிமகனுங்காற்பதுமையென்னங்கனையாய்த்
துதிதிக்கணவமுருப்பிணித்தம்மனேதோன்றினையாற்
கதிதிக்கிலாதகடையேனுழிநின்கருணைவரின்
மதிதிட்கொழிந்திடும்வாய்த்திடுமாக்கதிவாழ்வெற்குமே.

தரணியிலாதியிராமனெனவரிசார்ந்தவெல்லை
தரணியெனவீயுருப்பிணித்தம்மனைசார்ந்தனையால்

அரணியனின்னருளென்மீதிலேசமமையினெற்கு
மூரணியவல்வினைமோசனமாம்வருமோக்கமுமே. (உஅ)

மூந்தைப்புவியெந்தைநேமியன்சேயாய்முளைத்தவெல்லை
தந்தைச்சனகன்றிருமகளாகத்தரணிவந்தாய்
இந்தைத்தொடும்பொழிலல்லிக்குளத்தன்னையேயெளியேன்
சிந்தைச்சிறுமையைத்தீர்த்தாருருப்பிணிச்செய்பவளே.

பூவைவண்ணன்கண்ணயிப்புடவியிற்போந்தவெல்லை
பூவையுருப்பிணித்தாய்நீபுவியிற்புகுந்துதித்தாய்
பூவையெரியிட்டனவினையென்னைப்புலர்த்திநிற்கும்
பூவையயிற்கண்ணருண்மழையாலெற்புரந்தருளே. (கூ)

தேவப்பிறவியிலெம்பெருமான்றிருவுள்ளங்கொள்ளின்
மேவப்பிறவிவருகியுருப்பிணிவித்தகியே
கோவப்பிறவிகுணத்தினன்மீதருள்கூரினென்றன்
பாவப்பிறவிப்படரோடுநெஞ்சப்பயமறுமே. (கூக)

மானுடசன்மமெம்மான்கொளினீயுமொர்மாதுடையாய்த்
தானுடனண்ணுகிசந்தத்தகஞ்சயன்சாரதியாங்
கோனுடனண்ணுமன்னுயிர்நீகுறிக்கிற்கொடுவினைகள்
வானுடன்வாரிவனம்வரையோடிமறைந்திடுமே. (கூஉ)

என்றுமில்லாவிறும்பூதொளியெத்திசைக்கண்ணும்விம்ம
மன்றலந்தாமரையாசனையாய்மனிப்பாற்கடற்கண்
அன்றுவந்தாயெம்முருப்பிணிநங்கையன்னையடியேன்
துன்றுமனத்துயர்நீங்கவொர்சூழ்ச்சிதுணிந்தருளே. ()

தொல்லிசைதூல்வல்லவராகுந்தும்புருநாரதர்கள்
நல்லிசைபாடவரம்பையராடநயந்துவந்தாய்
சொல்லிசையோங்குமுருப்பிணித்தோகையன்னைத்தொடர்ந்து
மல்லிசைமம்மரைமாற்றியெற்காக்கமகிழ்ந்தருளே. (கூச)

அருணேதயத்திற்றுவாதசிக்காலத்தமர்தம்பாற்
கருணேதயகாரணத்தாற்கடல்வந்தகற்பகமே
தருணேதயத்திருமேனியுருப்பிணித்தம்மனையே
மருணேயிமத்தையருட்சூரியற்கொடுமாய்த்தருளே. (கூடு)

மதியறவோர்மறைமந்திரஞ்சொல்லிவழுத்திநிற்க
நதியறனல்கத்திங்ஙாகமணிப்பொன்னெழிர்க்குடத்தால்
விதிவழிநன்மஞ்சனஞ்செய்யவந்தவிளங்கிழையே
கதியறமேயல்விக்கேணியன்னையென்னைக்காத்தருளே. ()

தேவத்தபதிதருந்தெய்வமாமணிச்சேயிழையுந்
தாவக்கடறந்ததாமரைத்தாருந்தரித்தவளே
ஆவத்தனமேயுருப்பிணிங்கையன்னையடியேன்
பாவத்தின்வந்தபடர்படரெய்தப்பணித்தருளே. (ஙஎ)

பரமன்பிரமன்சுரமன்முதலினர்பார்த்துநிற்க
வரமன்னும்வானோர்குழாம்வீற்றிருந்தவெம்மான்மணியார்
உரமன்னிலக்குமியேயல்விக்கேணியுருப்பிணியே
திரமன்னியென்னைச்செறுக்குஞ்சிறுமையைத்தீர்த்தருளே.

வானவர்கோன்மனவெப்பந்தணிந்துமகிழ்ந்திடவுந்
தானவருள்ளந்தளரவும்பாற்கடறன்னின்முன்னுள்
தானவதாரஞ்செய்தம்மினேயதறுகட்டுயரக்
கானவர்கைவிடுவித்தெனைக்காக்குங்கடனினதே. (ஙக)

நிரந்தரமூவுலகத்துந்தையெனதுநிற்றியென்று
புரந்தரன்போற்றிடவங்ஙனமேயான்புரிவலென்று
வரந்தருங்கருப்பிணிங்கையைவாழ்த்துதியேற்
பரந்தருநம்வினைப்பையுள்பறந்திடும்பார்த்திருஞ்சே. ()

அனைத்துலகத்துக்குமன்னையையவ்வவ்வகிலத்துள்ள
அனைத்துமுள்ளாளையுருப்பிணித்தாயையடியர்வெஃகும்
அனைத்துமருளுமமலையைநெஞ்சேயடைதிவினை
அனைத்துமொழியுநம்மல்லற்பகையுமழிந்திடுமே. (சக)

கஞ்சமலராசனையையுருப்பிணிக்காரணியைக்
கஞ்சமலர்கொடிருக்கங்கணக்கரக்காருணியைக்
கஞ்சமலர்த்திருக்கண்முகத்தாளைக்கருதுநெஞ்சே
கஞ்சமலரவன்காலன்செய்கவ்வைகழிந்திடுமே. (சஉ)

வேள்விக்கருமநல்வேதாந்தம்பன்மதுவித்தைகட்கும்
ஆள்விக்குமிந்திரஞாலவித்தைக்குமதிபதியா

மூள்வித்திடுகம்முருப்பிணியன்னையைமுன்னுநெஞ்சே
மாள்வித்திடுகம்மனத்துயரோடிமறைந்திடுமே. (சஙூ)

நீதந்தருமேருழுவுவணிகநிரைபுரத்தல்
வேதந்தருக்கமுதலாம்வித்தைக்கும்விளைநிலமாப்
போதந்தருகம்முருப்பிணியன்னையைப்போற்றுநெஞ்சே
எதந்தருபிறவித்துயரின்றேயிரிந்திடுமே. (சச)

எல்லாவுலகுக்குமீடுமெடுப்புமிலாவிறைவி
எல்லாஞ்செயவல்லலெல்லாமுணர்பவளேய்ந்திலங்கும்
எல்லாவுருவுளுமேயுமுருப்பிணியென்னன்னையை
எல்லாவினையுமிரிந்திடவெண்ணுதியேழைநெஞ்சே. ()

அருளுறினெவ்வுலகத்துப்பொருளுமமைந்திலங்கும்
அருளறினெவ்வுலகத்துப்பொருளுமழியுமென்ப
அருளுருவாகுமுருப்பிணிநங்கையன்னையிரங்கி
அருளுதிநின்னடியண்மிக்களிக்கவடியனுக்கே. (சகூ)

தாழ்ந்தோருயர்ந்தோரெனும்பேதமின்றிச்சமநிலையா
வீழ்ந்தோர்க்கருள்செயும்வித்தகியேமறைமெய்ப்பொருட்கண்
ஆழ்ந்தோர்தொழுமல்லிக்கேணியுருப்பிணியம்மனையே
போழ்ந்தோங்குபுன்கணைப்போக்குத்தமியற்புரந்தருளே.

என்றைக்குமெம்பெருமானைப்பிரியாதிருப்பவளாய்
என்றைக்குங்கன்மவயச்சகநாதிகளில்லவளாய்
என்றைக்குங்காக்குமுருப்பிணியன்னையையென்மனனே
என்றைக்குமேத்துதியீறிலிருஞ்சுகமெய்துதற்கே. (சஅ)

எங்குங்கமலக்கண்ணெம்மானெனவிடையீடின்றியே
தங்குங்குணகணையாமல்லிக்கேணித்தலவியைச்சீர்
பொங்குங்கருணையுருப்பிணியன்னையைப்போற்றுநெஞ்சே
கங்குங்கரையுமில்லாக்கவ்வைவாரிகரந்திடுமே. (சகூ)

பதமும்பொருளும்பகலுமொளியும்பனிமலரும்
இதமுண்மணமுமிரியாவணமெனவெந்தையுடன்
நிதமுமுறையுமுருப்பிணியன்னையைநேயநெஞ்சே
சதமுநினைதிசதாநந்தவீட்டின்பஞ்சார்வதற்கே. (கூ0)

அனலிலுருப்பமுமாசிலரதனவாதபமும்
புனலினிற்சீதமும்போலெங்குமேவும்புராதனனம்
இனலிரித்தாளுமுருப்பிணிப்பேர்கொளிறைவிதன்னுள்
உனலின்புளத்துக்குரைத்திடுவுக்குருசியதே. (நிக)

இடாதுண்ணுவார்களிலாவல்லிக்கேணியிறைவியைக்கை
விடாதன்பர்க்காக்குமுருப்பிணியன்னையைமேவுதியேற்
சுடாதுசுட்டுக்கவற்றுந்துயர்த்தீச்சற்றுந்தொட்டுநம்மை
அடாதருண்மாரிபொழிந்தவிப்பாளீதறிதிநெஞ்சே. (நிஉ)

வாணிக்கலிமகள்வல்லபன்வாழ்த்திவணங்குமல்லிக்
கேணிக்கண்வாழுமுருப்பிணியன்னையைக்கிட்டியவள்
தோணிக்கமலத்துணைத்தாதித்தியெனிற்றுயர்கள்
நாணிக்கவிழ்த்தலையிட்டோடும்பார்த்தியென்னன்னெஞ்சமே.

வையப்பட்டாரகர்வாழ்த்துமல்லிக்குளம்நீழுங்கள்
சையப்பட்டாதபன்றன்மணவாட்டிதன்னுற்கருணை
செய்யப்பட்டார்தஞ்சிறப்பினைச்செய்யுளிற் செப்பலுடன்
உய்யப்பட்டோலைகொளுருளித்தாமுயர்தவர்க்கே. (நிச)

சகலவுலகுக்குந்தாரகையானதயாபரையே
சகலசுகுணநிதியாமுருப்பிணித்தம்மனையே
சகலசுபகரன்னருளென்னுழிச்சற்றமையின்
சகலவிகபரசாதனந்தன்மந்தமைத்திடுமே. (நிரு)

விண்பான்மண்பாலார்விபுதமனிதவிலங்குகளுட்
பெண்பாற்பொருள்கடன்கூறெனக்கொள்கொம்பிராட்டியையித்
திண்பார்புகழ்ந்திருவல்லிக்கேணித்திருவைநெஞ்சே
நண்பாகவெண்ணுதிநற்பிருநாட்டினலம்பெறவே. (நிசு)

மூவர்க்குமுன்னவனுங்கண்ணன்மார்பமுளாரிவைகும்
ஓவர்க்குந்தீட்டவொண்ணுவுருவார்ந்தவுருப்பிணியை
யாவர்க்கும்யாவைக்குமந்தாமத்தின்பமநுபவிக்குந்
தேவர்க்குந்தாயைச்சிறியேனென்னென்று சிறப்பிப்பனே.

பரந்தெரிந்தோங்கும்படிவர்களோடுபழமறையின்
சிரந்தெரிந்தோரும்புகழுருப்பிணித்தேவியருள்

வரந்தெரிந்தோர்தமைவாய்மையின்வாழ்த்தி வணங்கியுய்யுந்
தரந்தெரிந்தோர்சரணேசரணுகுந்தமியனுக்கே. (நிஅ)

தீயகியுச்சிநடித்தருடேவகிசெம்மன்மகிழ்
நாயகியாகுமுருப்பிணிநின்னருணன்மைபெற்றோர்
போயகிலேசர்களாம்போதனுதியர்புன்பவமாய்
மேயகிலேசமொழிகுநராவர்கள்மெய்ம்மையிதே. (நிகூ)

அனைத்துலகங்களுமீன்றவுருப்பிணியன்னைநின்னை
நினைத்துநிதமுமெகிழாதநெஞ்சமுநின்புகழே
நினைத்துணையேனுந்நினையாச்செவியுநிற்றெண்டனிடாப்
பனைத்துணைக்காயமுநின்சுதனெற்கேன்படைத்தனனே. ()

மருப்பிணிவின்னுமலர்க்காவல்விக்குளவாணன்மகிழ்
உருப்பிணிநாமவன்னுயிவ்வுலகத்துறுபொருட்கட்
பருப்பிணிநீக்கிநின்பாதத்திற்பத்திமைபல்கச்செய்தென்
கருப்பிணியின்னேகடிந்தெனைக்காக்குங்கடனினதே.(கூக)

நினக்குமெனக்குமிந்நீளண்டகோடிநிலவுமுயிர்
தனக்குங்களைணுருப்பிணித்தாயின்றடுப்பரிய
கனக்குங்கருணையென்காத்திரியுண்டென்றன்கையின்முன்போற்
சினக்குந்தொழில்சற்றுஞ்செல்லாதென்மேற்றென்றிசைச்சமனே.

காசத்தைநல்குமரக்கியராமெனுநாரியர்பால்
நேசத்தைநீக்கியதைநின்னடியினிறுவியமன்
பாசத்தைப்பற்றிப்பரம்வீழ்பதத்திற்பரமபத
வாசத்தைத்தந்தாருருப்பிணிநாமவராகனையே. (கூக)

வேதனைப்பெற்றவிமலையையல்லிக்குளம்விளங்கி
வேதனையுதியவிண்டுவின்பாடுறைவித்தகியை
வேதனைதீர்க்குமுருப்பிணியன்னையேவேண்டுநெஞ்சே
வேதனைத்துங்கொண்டவெங்துயர்பாவும்விளிந்திடுமே. ()

பாரியைபுத்திரர்பந்துக்களன்பர்பணிவகைகள்
நேரியைவீடுநிலந்தனமூர்திகணேர்ந்தருளுஞ்
சீரியைநற்குணச்செல்வியுருப்பிணித்தேவியன்னாய்
போரியையென்மனப்புன்கணைப்போக்கிப்புரந்தருளே. ()

அறப்பெரிதாந்தன்னருட்கிலக்கானவர்க்கன்பினென்றுஞ்
சிறப்பதிகாரந்திடகாத்திரஞ்சுகஞ்சேரலர்கள்
விறப்புறும்வெற்றிதந்தாளுமுருப்பிணிவித்தகியை
மறப்பறவென்றுமனனஞ்செய்நெஞ்சேமயக்கறவே. (சுசு

நித்தியநின்றனருட்கிலக்காகுநெறிமையிலார்
சத்தியஞ்சௌசசந்தவம்பொறையாதியசாரகிலார்
சித்தியளிக்குமுருப்பிணித்தாயாஞ்செழுந்திருவே
நத்தியநாயேனவைப்பவந்தீரநயந்தருளே. (சுள

உன்றிருவுள்ளக்குரித்தானவரேயுயர்குலத்தோர்
ஒன்றியவுத்தமருதியர்மேதையரோங்கறத்தோர்
வென்றியராவருருப்பிணியன்னைவிரும்புமென்றன்
கன்றியநெஞ்சக்கலக்கங்கடிந்தெனைக்காத்தருளே. (சுஅ)

நிதியாநினதுகல்யாணகுணங்கணிகிலமறை
மதியார்விதியுமதிக்ககிலானெனின்மாண்மதியே
உதியாதவனெங்ஙனமூரைக்கேனுலகம்புரக்கும்
விதியாருருப்பிணியன்னையென்வெவ்வினைவீட்டுதியே. (

பத்தர்க்கினியசெந்தேனேநற்பாலேபரவுநித்தர்
முத்தர்க்கதுபாவியமாம்பராநந்தமுக்கனியே
சுத்தச்சுகவுருவாகுமுருப்பிணித்தோகையன்னாய்
சித்தச்சிறுமையைத்தீர்த்தருள்செய்யச்சிந்தித்தருளே. (

ஐப்படுமீயினவலமுறுதல்லிக்கேணியில்வாழ்
மைப்படுகண்ணியுருப்பிணியன்னையவாழ்த்துதியேல்
வைப்படுதூறெரியிற்படுமாநம்வருத்தமறுங்
கைப்படுநெல்லிக்கனியெனக்காண்டிகவலனெஞ்சே. (எக)

எட்டனையேனுமிதயத்தினின்னடியிரமில்லாத்
துட்டனைத்தொன்றுதொட்டுன்பொருளாமுயிர்ச்சோரனெனும்
பட்டனைநீயேயுருப்பிணியன்னைப்பனிப்புடன்கை
விட்டனையேன்மற்றுக்காப்பாரெவரிவ்விபூதியிலே. (எஉ)

செய்யாளையல்லிக்குளத்தாளையன்புதிகழ்திருக்கண்
மையாளைமைத்தமலர்க்குழலாளைத்தண்மாதுளம்பூ

மெய்யாளமெய்ம்மையின்மேதக்கநம்மையிம்மேதினிமேல்
வையாளவானத்துவைப்பாளவாழ்த்தென்மடநெஞ்சமே.

இலக்குமியைத்திருவல்லிக்குளத்திந்திரையைநன்னூல்
துலக்குமிறைவியைத்தோந்தீருருப்பிணித்தாயவளைச்
சலக்குமிழிக்குநிகர்தருவீழ்சமயத்தினமைக்
கலக்குமியமபடர்க்கடிவான்முற்கருதுநெஞ்சே. (எச)

இளையாளையல்லிக்குளப்பதியாளையிலாங்கலிக்கை
வளையாளவான்மதிமானுமனேகரமாம்வதனக்
களையாளநெஞ்சேகடைப்பட்டநம்மையுங்காத்தளிக்கச்
சளையாளநங்களுருப்பிணித்தாயைச்சரணடையே. (எடு)

அகிலாண்டகோடியுயிர்கள்படைத்தவையாங்கமைய
நகிலாண்டபாலன்றிநல்லருட்பாறந்துகாட்டுமென்னுய்
முகிலாண்டமேனியன்பாஞ்சாலிமானத்தைமுன்னருளாந்
துகிலாண்டவாறென்றன்மானமுங்காத்துத்துணைநிற்றியே.

நனையார்பொழிலல்லிக்கேணியுருப்பிணிநங்கையெனும்
அனையேநங்கண்ணனடிக்கலினக்களித்தமைபோல்
வினைமேகம்பெய்துக்கச்சோனமழையின்மெலிந்துநிற்கும்
எனையேயருட்குடையேந்திப்புரக்கவிசைந்தருளே. (எள)

சொக்கக்கருணைசுதந்தரமின்மைச்சுணமற்றும்
ஒக்கப்பிறர்க்குரித்தாகாமைகொண்டெம்முடையவற்குப்
பக்கச்சொற்சொல்லுமுருப்பிணித்தாயைப்பழிச்சினெஞ்சே
துக்கப்பிறவித்துயர்தொலைந்தோடத்தொடங்கிடுமே. ()

மூன்றுகுணத்தையுமூதலிப்பானெண்ணிமுற்பவத்தின்
மூன்றுமுறைபிரிந்தாளமுங்கீர்வளைமூதுலகோர்
ஏன்றுதொழுநம்முருப்பிணியன்னையேத்துதியேற்
றேன்றுதுயரநெஞ்சேநம்மைவிட்டுத்தொலைந்திடுமே. ()

பிரிந்துழிச்சேதநனைப்பிரியாவுழிப்பேணியெங்கும்
விரிந்துறைவிண்டுவைவேட்டுத்திருத்தும்விமலையைநூல்
தெரிந்தவர்போற்றுமுருப்பிணியன்னையைத்தேர்ந்தெஞ்சே
சரிந்தலைந்தோடுமைத்தாக்குஞ்சன்மத்தனித்துயரே. ()

வரதந்திரவுபதேசத்திருவர்க்கும்வாய்கருமம்
பரதந்திரமொழிப்பாலையல்லிக்குளப்பண்ணவியைச்
சுரதந்திரர்தொழுந்தூப்பதத்தாளைத்தொழுதிநெஞ்சே
சரதந்திரணமெனத்தீர்ந்தறுசம்மைச்சார்துயரே. (அக)

தெருளார்மொழியிற்றிருந்தாதிருக்கின்றசேதகரை
அருளாற்றிருத்தியுமவ்வாறுறையண்ணலையழகாம்
மருளாற்றிருத்துமுருப்பிணியன்னைமலரடியை
இருளாரிடரறவெப்போழ்துமேத்துதியென்னெஞ்சமே.

அறியாப்பொருள்களனைத்தையுமன்பர்க்கடைவுடனன்
னெறியார்சுரவற்கொடுதெரிவிக்குமிலைதன்னை
வறியார்தனத்தையுருப்பிணியன்னையைவாழ்த்தினெஞ்சே
பிறியாவினைத்துயர்பிரிட்டுப்பேதுற்றுப்போந்திடுமே. ()

தன்னிலைமேலாம்பரநிலைசார்புருடார்த்தநிலை
யுன்னுமுபாயவிரோதநிலைகளுணர்த்துவிக்கும்
அன்னையுருப்பிணியம்புயத்தாளையடைதிநெஞ்சே
முன்னவினைப்பயனுந்துயர்முற்றுமுடிந்தறுமே. (அச)

பெருமாறுடைத்துப்பிறங்கொளிவைகுந்தப்பேறுதருந்
திருமால்பரனென்னுஞ்செஞ்ஞானக்ஷியைத்தேக்குவிக்கு
பெருமாட்டியைகம்முருப்பிணியன்னையைப்பேணுநெஞ்சே
கருமாட்டுறவினைதாமேகழியுங்கலகலக்கே. (அஞ)

பொருடூஞ்சொற்பூவையர்பூமிப்புரிவிற்புருந்துநிற்கும்
மருடூர்த்தெம்மாணுடன்வாதுகள்பேசிவழக்குரைத்துப்
புருடூகரிக்குமுருப்பிணியன்னையைப்போற்றுநெஞ்சே
இருடூர்ந்தவரஃதிலாதவரோடுமியைவிப்பளே. (அசு)

பெற்றவர்பிள்ளையின்பிழையைக்கண்டுபொறுக்கவுற
வற்றவர்போலப்பராமுகமாகவமைந்திருத்தல்
சுற்றவனீர்ப்புவிதன்னிலுண்டோசொல்லுதியவித்தை
அற்றவர்போற்றுமுருப்பிணிநாமவகளங்கையே. (அள)

நோக்குமிடந்தொறுமுள்ளவணீயென்றுநானுவலுந்
தேக்குமென்னுள்ளத்துயரைத்தெரிவித்துந்தீரத்திலையாற்

சூக்குமமொன்றிருக்கின்றதெனக்கதுதோன்றவில்லை
ஆக்கியளிக்குமுருப்பிணியென்னுமென்னம்மனையே. ()

அடியன்முறைநின்செவியமையாமலடித்துநின்றென்
இடியன்னவல்வினையீர்க்கின்றதுபோன்மியங்குமதைக்
கடியன்புகூர்ந்தெனைக்காத்தாளுதிகருணலையையே
பிடியன்னமேயெம்முருப்பிணிநாமப்பிராப்பியையே. ()

பெற்றேருபயவிபூதிப்பெருஞ்செல்வராய்ப்பிறங்க
அற்றேரெனநந்தரல்லலம்புதியாழ்ந்திருத்தல்
கற்றோர்தொழுமெம்முருப்பிணிப்போர்க்கருணைக்கடலே
எற்றேவதனையிதயத்திரங்கியிசைத்தருளே. (கூ)

இருட்செல்விழுங்குறுமீர்ங்குழலாளெளியோர்க்கிரங்கும்
அருட்செல்வியாவுமுதமமரடியார்க்கருளுந்
தெருட்செல்வியல்லிக்குளம்வாழுருப்பிணித்தேவியன்னை
பொருட்செல்விபூங்கழனெஞ்சேநமக்குப்பொன்னுப்புகலே.

பிறர்துயர்சற்றும்பொருக்குணத்தாயென்றுபெட்புறுதூல்
திறமுறக்கூறுமென்சிந்தைத்துயர்கண்டுந்திக்கரித்தல்
அறமன்றடைக்கலமென்றவடியனையாதரித்தாள்
அறவுருவாகுமுருப்பிணிநாமவயோநிசையே. (கூஉ)

தீராவியற்கைச்சிறுமியர்சிற்றின்பந்தீர்த்துமற்றை
ஆராவியற்கையவாவினடியறுத்தல்லலென்றும்
பேராவியற்கைப்பிறப்பறுத்தாளுதிபேணுமருள்
சோராவியற்கையுருப்பிணிநாமச்சுகோதயையே. (கூக)

மயற்கைப்படைகொண்டுமாய்க்குநின்மாயைமறைக்கவந்த
செயற்கைக்குணங்கடிருமிவராதறத்தீர்த்துவிட்டென்
இயற்கைக்குணங்களெந்நாளுமிலங்கவினிதருள்வாய்
புயற்கைக்கொடைகொளுருப்பிணித்தாயெனும்பூமகளே.

அண்டமெலாம்பெற்றளிக்குமுருப்பிணியம்மனையே
பிண்டமெலாம்பெற்றுக்கீழ்மேலுலகம்பிறங்குஉவ
கண்டமெலாஞ்சுழன்றெய்த்தேன்கதியிலிகாலனிழை
தண்டமெலாந்துடைத்துன்றிருத்தாணிழறந்தருளே. ()

கடைக்கலங்கிட்டிக்கனநோய்க்கணங்கள்கறுவிமொய்க்கக்
கிடைக்கலந்தையக்கிழவன்றன்கேதக்கிரீடைசெய்ய
மூடைக்கலம்வீழ்முன்னுருப்பிணிகாமமுதல்விகின்றன்
அடைக்கலநாயேனணியடிநீழறந்தாதரியே. (கூசு)

சீர்க்கவிவாணர்புகழல்லிக்கேணிசிறந்துவளர்
பார்க்கவியேயெம்மூருப்பிணித்தாயெனும்பண்ணவியே
கார்க்கவிகைக்கைக்கமலாதனுய்கடையேன்கவிதை
நார்க்கவினற்றதெனினுமதனேநயந்தருளே. (கூள)

எழுத்துக்கிளவிபொருளாதியேதங்களேய்ந்தவென்றன்
வழுத்துக்கவிகளோவாளினமைந்தர்மழலையெனப்
பழுத்துக்கனிந்தபழமெனவேற்றடியேன்பகரும்
வழுத்துக்களீக்கியெற்காத்தாளுருப்பிணிமாமகளே. (கூஅ)

மூழுமூடனின்மூளரிக்கழலின்கண்முறைமொழிந்த
வழுமூடியகவிதம்மைவண்மாலையெனமகிழ்ந்து
குழுமூடியதுயர்தீர்த்தென்கருமங்கைகூடும்வண்ணம்
எழுமூதருள்செய்துகாத்தாளுருப்பிணியென்னம்மையே.

சங்கிதவேதைதமிழ்மறைச்சும்மைசதுமறையில்
அங்கிதவேதவமலையருவல்லிக்கேணியில்வாழ்
எங்கிதைவள்ளன்மகிழுமுருப்பிணியென்னம்மையே
அங்கிகரித்தருளென்செய்புள்யாவுமகமகிழ்ந்தே. (கஅ0)

வாழிகயிரவக்கேணித்திருப்பதிவண்மையென்றும்
வாழியுருப்பிணித்தாயுளமேய்ந்தமனுளனெடும்
வாழியவளடிசேருங்குரவர்தம்வர்க்கமெலாம்
வாழியெப்போதுமென்மீதவண்மைக்கண்வளரருளே.

கொண்டாளெடுங்கைரவக்கேணியுள்ளங்குளிர்ந்துகுடி
கொண்டாளுருப்பிணித்தாய்மலர்த்தாளிற்குலவும்பள்ளி
கொண்டான்கடாம்பியிராமானுசனேக்குலதனமாக்
கொண்டான்சொற்பூந்தொடைசூட்டினன்றன்பவக்கோதறவே

உருப்பிணித்தாயார் மாலை

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

4251
(2305)

திருநீர்மலை

அணிமாமலர்மங்கைத்தாயார்மாலை

காப்பு.

ஆய்நீர்மலைவா ழணிமாமலர்மங்கைத்
தாய்மேற்றமிழ்மாலைசாத்தவே—பாய்நீர்ப்
பொருகைத்துறைக்குருகைப் புங்கவன்மாறன்சீர்க்
கருணைக்கடற்கழலே காப்பு.

நூல்.

பார்மலிநின்புகழ்பாடவொட்டாதெனைப்பற்றிநின்னோ
போர்மலிந்தெற்றைக்கும்புன்கண்டருமென்புராணவினை
வேர்மலிந்துண்மைவிளக்குமெய்ஞ்ஞானம்விழைந்தருள்வாய்
நீர்மலைவாழுமணிமாமலர்மங்கைநித்தியையே. (க)

கச்சகக்கொங்கையர்காமக்கலவியென்காலமெல்லாம்
நச்சகத்தேனுநின்னியிரநாமநவின்றுமனக்
கச்சகச்சேட்டைகழிந்துகளிக்கக்கடைக்கணித்தாள்
நச்சகம்போற்றுமணிமாமலர்மங்கைமுன்னவளே. (உ)

மாயாத்திரிகுணமண்டிமயக்கமயங்கியென்றும்
ஓயாத்திரிகையினுற்றுப்பிறந்துலகெங்கணுமோர்
நாயாத்திரியுமென்மீதுநினக்கருணண்ணிடுமோ
தோயாத்திரிவாழணிமாமலர்மங்கைத்தூயவளே. (ங)

கதகாத்திரிகொண்டுகாலனென்கண்வருங்காற்கலுழப்
பதகாத்திரிமேற்படர்ந்தருள்வாயெம்பழவினைகட்
கதகாத்திரியமலாத்திரியென்றென்றுமண்டர்தொழும்
உதகாத்திரிவாழணிமாமலர்மங்கையுத்தமியே. (ச)

புவிபயனெய்துநின்பொங்கருளாலென்புலத்தவிழி
செவிபயனெய்துநின்சேவையினின்சீர்ச்சிரவணத்தின்
கவிபயனெய்துநின்காதுறிற்காமுறிற்காழ்மறையோர்
அவிபயனெய்துமணிமாமலர்மங்கையம்மானே. (ஞ)

ஞாலமுண்டாலெனுநாரகத்துறைநாயகியே
காலமுண்டாயினவெல்லாம்விடயக்கலுடமெனும்
சூலமுண்டேனும்பிழைப்பனின்சீர்த்தியமுதமுணுஞ்
சீலமுண்டாயினணிமாமலர்மங்கைச்செந்திருவே. (சு)

கன்றுகொலுய்த்தவித்தாலெனுகின்கழல்காண்குறுநாள்
இன்றுகொலன்றுகொலென்றிருப்பேற்கஃதியைந்திடுவ
தென்றுகொலென்னையிம்மாயப்புலிக்கிரையாக்கவெண்ணல்
நன்றுகொலோசொல்லணிமாமலர்மங்கைநாயகியே. (எ)

மாலாழியேந்துமெம்மானுடன்மூத்தமணிவரன்றும்
பாலாழிப்பக்தனையன்றுவந்தென்பவப்படலை
நிலாழிநிகியென்னெஞ்சநிலாவதினைதியொளி
காலாழியங்கையணிமாமலர்மங்கைக்கண்மணியே. (அ)

தேயமலையடிக்கண்ணுஞ்சுருதிச்சுடர்ச்சிரத்துங்
தேயமலைத்திருவேங்கின்றிருவடித்தொண்டுசெயும்
தேயமலைக்கடனேரப்பெருகநினைவினைக்குப்
பாயமலைக்குமணிமாமலர்மங்கைப்பண்ணவியே. (கூ)

நண்ணுதலனின்றிருக்கோயினின்னடிநண்ணியன்பு
பண்ணுதலனென்றுநீசெயுகிருடிபரம்பரையை
யெண்ணுதலுயிலுமடியேனெவ்விருணரகம்
நண்ணுதருள்செய்யணிமாமலர்மங்கைநற்றிருவே. (கo)

கல்லாதலின்கனச்சீர்க்கவிகணின்கட்டளையில்
நில்லாதலனெஞ்சநேயநிலாதலனீள்பொறியை
வெல்லாதலுயிலுமடியேனின்றும்வீண்பிறவி
புல்லாதருள்செய்யணிமாமலர்மங்கைப்புங்கவியே. (கக)

பொறைக்கடலேபுண்ணியக்கடலேபவப்புன்கணுக்கோர்
உறைக்கடலேநல்லொளிக்கடலேயுவர்ப்பாம்விடயக்
கறைக்கடலேயுமெனைநின்றன்கிர்த்திக்கதாவமுதத்
துறைக்கடல்சேர்த்தியணிமாமலர்மங்கைச்சோபனியே.( )

பாவக்கனலும்பதப்பாவையர்பற்றுப்பாழ்ங்கனலுங்
கோவக்கனலுமொண்குக்கிக்கனலுங்கொளுத்திடுமுத்

தாவக்கனலுந்தணிக்கைத்தினின்றண்ணருளால்
ஆவத்தனமாமணிமாமலர்மங்கையச்சுதையே. (௧௫)

பாக்கியமாகப்பகுத்தகுரவர்பரம்பரையின்
வாக்கியவல்லிபிடித்தேறினின்மணவாளனடி
ஊக்கியவென்னெயுயரயுதியவும்பரெலாம்
நூக்கிலராமணிமாமலர்மங்கைநோன்மையனே. (௧௬)

பன்னியகாரணமாயுலகாகப்பரிணமிக்கு
நன்னியமங்கொண்டகாரணனாயதியேகருணை
மன்னியநின்னெமறைபுகுந்தேனென்மலமறுத்தான்
அன்னியனல்லேனணிமாமலர்மங்கையம்மனையே. (௧௭)

ஊழாய்வகுத்தபதினென்குலகமுமுள்ளடக்கி
ஏழாவரணமுமேற்கொண்டவண்டவினங்களின்றன்
காழார்கடகக்கரமேந்தியாநிருக்கந்துகமாம்
யாழாமொழிகொளணிமாமலர்மங்கையம்புயையே. (௧௮)

சக்குறுசந்திரசூரியகாந்தமென்சையமெண்ணிற்
புக்குறுநீர்கனனெய்யெனவென்புரம்புக்குநிற்கும்
மூக்குணச்சேய்களுமொய்த்தாயுநின்னருளான்முசித்து
நெக்குணச்செய்தியணிமாமலர்மங்கைநின்மலியே. (௧௯)

சொத்துத்துவங்கொளெனக்குச்சுவாமினியாகியநீ
பத்துத்தலையிட்டமூன்றுமிலக்கணப்பான்மையெலாம்
ஒத்துத்தயங்கிடச்செய்தசத்தென்னவுறங்குமெனைச்
சத்துப்பொருள்செய்யணிமாமலர்மங்கைத்தாக்கணங்கே.

வேதத்தடிப்பணவப்பொருளேமிகுமேதையுருப்
பூதத்தடிகள்புகழ்புனற்பூகரப்பொற்கொடியே
மாதத்தடியுணும்வல்வினையேற்கென்றும்வண்டுணைநின்
சீதத்தடிகளணிமாமலர்மங்கைச்செய்யவளே. (௨௦)

டுணகலிசன்றியடிகள்செய்வாழ்த்துடையாயெனது
கண்கலிதீரநின்காட்சியுங்காதல்கொள்காதிரண்டும்
அண்கலிதீரவபயவின்சொல்லுமளித்தருள்வாய்
மண்கலிதீர்க்குமணியேயணிமாமலர்மங்கையே. (௨௧)

விண்டலமோங்குங்குவட்டறல்வேதண்டவித்தகியென்
கண்டலங்கண்டுகளிக்கக்கனகக்கதேச்சுரன்மேற்
புண்டலமெய்விட்டியானெழும்போதென்முன்போந்தருள்வாய்
மண்டலங்காக்குமருந்தேயணிமாமலர்மங்கையே. (உக)

பத்திநெறியும்பகர்பிரபத்திப்பதவையுமென்
சத்திநெறிக்குத்தகாதனவாரியன்றண்ணெயின்
சித்திநெறியெற்குச்சித்திக்கச்செய்துதிறம்பலிலா
முத்திநெறிதாவணிமாமலர்மங்கைமுன்னவளே. (உஉ)

சவிப்பெரும்பூணவிர்மார்பன்சுறவத்தகைக்குழைசேர்
செவிப்பெருமானருளாற்றிருக்கோஞர்செனிமதுர
கவிப்பெருமானிட்டைகைகூடச்செய்திகலிமறையோர்
அவிப்பெருமாட்டியணிமாமலர்மங்கையம்மனேயே. (உங)

மகவைமணாளனமையநின்றூட்டுமடவியர்போல்
உகவையினுரமயனத்திடையுற்றுறைபவளே
முகவைநிகர்க்குமிம்மூடனேயாருமுறைமையினின்
றகவையென்சொல்வலணிமாமலர்மங்கைத்தம்மனேயே. ()

தேவாதிதேவன்றிருத்தேவித்தன்மையுந்தீச்சிறையின்
ஓவாவிழிபுமுன்னுதும்பரொண்டொடியார்க்கிரங்கி
மேவாதகாவலின்மேவியவர்சிறைமீட்டனின்சீர்
ஆவாவென்சொல்வலணிமாமலர்மங்கையம்மனேயே. ()

குழவிவிழுகுழிதானும்விழுமன்னைகொள்கையென
இழவுமெம்மொடுமீண்டியெந்துன்பமிரித்தலினின்
எழவுமும்வாற்சல்லியாதிகுணங்களிலங்கிடுமால்
நிழலுமிழ்மேனியணிமாமலர்மங்கைநித்தியையே. (உசு)

விணவயத்தாற்சிறைமேவலிழிபுவிதிர்விதிர்த்து
கினையடைந்தோர்சிறைநீக்கக்கருணையினீவலிந்து
மூனையடையாதுசெயலினின்சீர்புவிமுற்றிடுமென்
வினையறுத்தாளணிமாமலர்மங்கைவிளக்கொளியே. (உஎ)

அடலறியாதாரறைபபலவதுமானையங்கி
சுடலெனுநிற்கத்துரோகியைத்துஞ்சுகவென்றுசொல்ல

மிடலிலையோபிறர்துன்பறச்செய்தலின்மேன்மையதே
மடலவிழ்பூங்குழலாயணிமாமலர்மங்கையன்னே. (உ அ)

விதித்தனவிட்டுவிலக்கியனசெய்வினைகுரையும்
கதித்துக்கைக்கொண்டுகைக்கோடற்குமன்னவைகையுறையாய்
மதித்துக்கொளலின்புருடகாரத்தினல்லைபவமாம்
மதித்துணிமானுதுதலணிமாமலர்மங்கையன்னே. (உ கூ)

சாற்றுமவரைக்கைக்கோடலுக்கேதுதையொறையாம்
ஏற்றுகுற்றங்களைக்கையுறையாக்கொளற்கேதுசொலில்
ஊற்றுறும்வாற்சல்லியமாகுநின்புகழோதவல்ல
ஆற்றலளித்தாளணிமாமலர்மங்கையம்புயையே. (ஈ 0)

காற்பட்டபுல்லைக்கயிராக்கபிலைதன்கன்றுடம்பின்
மேற்பட்டதானவழும்பின்பமாகவிரும்பலினின்
பாற்பட்டவிப்பண்பினுக்குறழ்ந்தோங்குமொர்பண்புமின்றுச்
சேற்பட்டகண்ணணிமாமலர்மங்கைத்திகழ்விளக்கே. ( )

இக்குணமெம்பெருமானினுநின்னுழியெப்பொழுதுந்
தொக்குமிக்குள்ளதுதாய்த்தன்மைத்தன்மத்தொடர்பதனும்
பொக்குடையேனெனவெண்ணப்புறத்தினிற்போக்கவொண்ணு
திக்குமொழிகொளணிமாமலர்மங்கையென்னம்மையே. ( )

தோடத்தொடுகுணவாளியெனுமித்துகளிரண்டும்
ஈடற்றெழியினெனையேற்றுக்கொள்ளுவலென்றிருக்கின்
பீடற்றவவ்விருகுற்றமுநின்கட்பிறங்கிடுமால்
மாடற்றவர்க்கருள்வாயணிமாமலர்மங்கையன்னே. (ஈ ஈ)

ஆருயிர்க்கெல்லாநிருபாதிகவன்னையாயிருந்தும்
ஊருமென்னன்மையுமூறுநினதென்றுன்னுதெனைக்கை
சோருதியேலவ்வுறவிற்கரிதன்றுந்தூய்க்கருணை
வாருதியேயணிமாமலர்மங்கைவரோதயையே. (ஈ சு)

என்னலக்கண்கண்டிரங்காமையானுமென்னேதகஞ்சில்
ன்னலமாகக்கொளாமையினுநின்னற்கருணை
ன்னலவாற்சல்லியத்திற்குந்தோடம்வருமருங்குல்
மின்னலங்கொண்டவணிமாமலர்மங்கைமெய்ப்பொருளே.

எம்பெருமானேயுமேதங்கள்காணவொட்டாவியற்கை
யெம்பெருமாட்டியவைநினைந்தென்னையெடேனெனிலிவ்
வம்புவிதன்னில்விலக்கியனசெய்யுமாறெக்குமால்
விம்பவிதழாயணிமாமலர்மங்கைவித்தகியே. (கூசு)

என்குற்றமாகியவெண்ணுதுகைக்கொண் டெம்மானுடனே
நன்குற்றடையச்செய்நீயேபொச்சாந்தென்னவைநினைக்கின்
புன்குற்றமாகும்விதித்தனவிட்டபுகருமுண்டென்
றன்குற்றுநீக்கணிமாமலர்மங்கைத்தயாம்புதியே. (கூஎ)

ஏகாக்கியாதியெழுநூறரக்கியரேசினேநீ
வாகாக்கிக்கொண்டதெவனும்வயங்கிடும்வாய்மையன்றே
சேகாக்கியவினைதீர்த்தெனையாட்கொள்ளல்சீரியதே
பாகாக்கியசொல்லணிமாமலர்மங்கைப்பங்கயையே. ()

கபாலம்பனரினென்னுலோக்கழித்துநல்லோர்கடமை
டபாலம்பனஞ்செய்தொறுத்தேபுரனியாயொழிந்தேன்
கபாலம்பனந்தெறுங்காலத்தெனக்குநின்கான்மலரே
பபாலம்பனமாமணிமாமலர்மங்கைத்தூயவளே. (கூகூ)

ரமந்தமாதங்கமானதவாவிச்சுகோதிமத்தின்
வரமத்தமென்னடைமாதர்விழைச்சின்கண்மையல்கொளென்
பிரமந்தைப்பேர்த்துப்பெருஞானந்தந்திப்பிறவிதனைச்
சரமத்ததாய்ச்செய்யணிமாமலர்மங்கைத்தற்பரையே. (சூ0)

என்னகத்தாளெறிந்தென்னைத்திருத்துகைக்கென்னுபலம்
என்னகத்தாரியையாடிருப்பாடண்ணிமகரனேர்
என்னகத்தாமரையேய்கழலாளிலங்கப்புமலி
என்னகத்தாணம்மணிமாமலர்மங்கையென்பவளே. (சூக)

மும்மைப்பொழிற்குமுதல்விமுயற்கூடனுமுகத்தி
மும்மைப்பொழுதுமுனிவர்தொழும்பதமுண்டகத்தி
மும்மைச்சுடர்களினுங்கவிர்மூர்த்தத்திமோசனிப்பாள்
மும்மைப்பளகுமணிமாமலர்மங்கைமுன்னவளே. (சூஉ)

மூதண்டமுற்றவும்பெற்றமொய்த்தாய்மொய்ச்சிகரநன்மே
வேதண்டத்தானுலகமெனுமன்மதவேள்கரங்கொள்

கோதண்டத்தான்கடைநாளர்ச்சிராதியிற்கூட்டியெனை
மாதண்டத்தப்புறஞ்சேர்ப்பாளணிமாமலர்மங்கையே. ()

திலம்படுநெய்யிற்றிகழ்பொருள்யாவுந்திளைத்துநிற்கும்
பொலம்படுபூணவிர்பூமகளேபொற்புனற்பொருப்பார்
நலம்படுநின்கழற்கெங்நாளுஞ்சோத்தநவின்றுதொழா
திலம்படுவேனென்னணிமாமலர்மங்கையிந்திரையே. ()

கட்டுவடமலையான்மணிமார்பிற்கதிர்த்துறையுங்
கட்டுவடப்பூங்கதுப்பாய்கடையிலென்கன்மமெலாங்
கூட்டுவடகிரிநேர்ககமேல்வந்தெற்காத்திகளக்
கட்டுவடத்தாயணிமாமலர்மங்கைக்கற்பகமே. (சுரு)

பூண்டாத்திரிக்கும்புராணவிணையிற்பொருந்திவரும்
வேண்டாத்திரிகுணமெய்யின்னுமேவாவிரகுசொல்வாய்
காண்டாத்திரிக்கமலாலயையேயிக்கடல்புடைசூழ்
மாண்டாத்திரியோர்க்கருளணிமாமலர்மங்கையன்னே. ()

கவைத்தாட்கரும்பகடுர்திகபம்வந்துகட்டுமுன்னின்
சுவைத்தாட்டரிசனந்தந்தாளவென்னெதிர்தோன்றுதியால்
நவைத்தாளவித்தைமுதலநினைநிதநட்பவர்கட்
கவைத்தாளருணிதியேயணிமாமலர்மங்கையன்னே. ()

சூழ்கொண்டகற்பகக்கண்மலர்க்கண்ணிக்கடவுளரும்
படிகொண்டபண்ணவரும்பன்மறையும்பகர்துதிகள்
குடிகொண்டநின்னடியென்றுளங்குடிகொள்வதென்றே
தொடிகொண்டகையணிமாமலர்மங்கைச்சுகாவகையே. ()

மிச்சையடியனின்மேதகவொன்றும்விதந்தறியாக்
கொச்சையனின்றன்குலவடியார்குழுக்கூடிமலர்
செச்சையணிந்தவர்சேவடியேத்தித்தெருளடைவான்
விச்சையளித்தாளணிமாமலர்மங்கைமெய்விளக்கே. ()

சூலையளியார்பூக்கொழுதிவண்டாலுங்குளிர்பொழினீர்
மலையளிமாமருந்தேமணியேகன்மரகதமே
நிலையளிநீள்கடலேநினைநேடுமிந்நீசனுய்யத்
தலையளிசெய்தாளணிமாமலர்மங்கைத்தற்பரையே. (ருக)

விரைக்கின்றபூம்பொழில்வீறுதகாத்திரிவித்தகியே
திரைக்கின்றவிம்மெய்சிதையாமுனம்பொற்சிறுசதங்கை
குரைக்கின்றகின்கழல்கொண்டாடியுய்யக்குறிக்கொளுல
குரைக்கின்றகீர்த்தியணிமாமலர்மங்கையொண்மணியே.()

சுருக்கவிபெய்துசெந்திராளுமோம்புந்தொழுகுலத்தோர்
செருக்கவிசேடத்துவகிட்டையோர்தொழுஞ்சேவடியாய்
திருக்கவிர்ப்பூநிறச்செய்யவளேயுட்டிருக்கறத்தென்
திருக்கவிர்வாயணிமாமலர்மங்கைத்திருமகளே. (நிஉ)

எண்கரிமாவொளிநீங்காதகீர்மலியேய்ந்தசெல்வி
வெண்கரிவேந்தன்விபூதியும்விழுமிமாமகிமா
நிண்கரிமாமுதற்சித்தியும்வேண்டிலன்செப்புமிதற்
கொண்கரிநீயேயணிமாமலர்மங்கையுத்துங்கையே. (நிஊ)

பொருப்பணியாகும்புனன்மலிமேவும்புராதனையே
குருப்பணிலங்கோகனகங்குசிசங்கொடிமுதலாம்
விருப்பணிரேகைவினங்குநின்றுளில்விதம்விதமாந்
திருப்பணிதந்தாளணிமாமலர்மங்கைச்செந்திருவே. ()

மிருந்தத்தைமேவியடியளிச்சட்டகம்விட்டெழுங்கான்
முருந்தத்தலைவனுகியுமணிமலிபோன்முடிகுஞ்
சருந்தத்தலைவன்புயம்வந்தளித்திர்சலத்தடம்வாழ்
நருந்தத்தைச்செல்வியணிமாமலர்மங்கைநாயகியே. (1)

குவட்டிமரகதவில்லைப்புல்லென்றுகுளிர்மதிமான
கவட்டுத்தண்ணீர்மலியாயெனையாதியங்காலந்தொட்டுச்
சவட்டும்வினையைச்சவட்டிப்புரந்தருடண்கருணை
உவட்டிங்கண்ணணிமாமலர்மங்கையுயிர்க்குயிரே.(நிகூ)

கொடிமுடியாதிநற்கூழ்மணிதுன்னலிற்கூமகட்கோர்
நெடிமுடியன்னநன்னீர்மலியாயிந்தநீசன்விழுந்
தொடிமுடிவில்பவப்பௌவத்தெடுத்தாள்சுருதிக்கையால்
நடிமுடிபற்றியணிமாமலர்மங்கைநாயகியே. (நிஎ)

அம்பரக்கம்பலம்வேய்ந்துநாலியலங்கலவிர்
அம்பணவத்திரியத்தாணிதன்னிலரசியற்றும்

எம்பெருமாட்டியெளியேன்முறைசெவியேற்றுச்செங்கோற்
றம்பமளித்தியணிமாமலர்மங்கைச்சற்குணியே. (நிஅ)

மருத்தமலர்ப்பொழில்சூழ்திருநீர்மலைமாமகளே
திருத்தமுடனின்றிருத்தாளிற்றேமலர்சிந்துவித்துப்
பொருத்தமுடனின்றன்பூசனைசெய்வித்தென்புன்பிறவி
வருத்தமறுத்தாளணிமாமலர்மங்கைவானவியே. (நிக)

ஓயாத்திரையினுகண்டெழுதுன்பத்துடற்பருவஞ்
சாயாத்திரைநசைசார்ந்தனகாலன்றமர்கயிற்றூற்
காயாத்திரைப்புழிக்கண்முன்னர்வந்தெனைக்காத்தருடிண்
மாயாத்திரைதீர்த்தணிமாமலர்மங்கைமாமகளே. (க0)

தசும்புந்திடதனத்தையலர்மையலிற்றங்கிமண்ணும்
விசும்புந்திரிதருவேனுநின்பொன்னடிமேவுவன்கொல்
விசும்புந்தியோங்கறல்வெற்புறைவாய்நல்விமைமலர்த்தேள்
அசும்புந்திருக்குழலாயணிமாமலர்மங்கையன்னே. (கக)

மானுறழ்நோக்கியர்வாஞ்சையின்மூழ்கிமதிமயங்கிக்
கானுறழ்தீவினைகண்டகயவன்கடவுளர்தம்
ஆனுறழ்நின்னையடைந்தனன்காத்தியருட்பரவை
தானுறழ்மைக்கண்ணணிமாமலர்மங்கைத்தம்மனே. ()

அதர்த்தவகமங்களண்மியரிகளருங்கனிகள்
இதர்த்தலிற்செப்பங்கள்சேறுபடுநீர்ச்சிகரியன்னுய்
பதர்த்தபடிறனைப்பாங்குடன்காத்தனின்பாரமதாம்
மதர்த்ததிருவிழியாயணிமாமலர்மங்கையன்னே. (கங)

பிறையேக்கறுப்பப்பிறங்கிடுமொண்ணுதலாய்புவியின்
பொறையேக்கறுப்பப்பொலிபொறையாய்தெய்வப்பூவையர்கள்
நிறையேக்கறுப்பநிமிர்நிறையாய்நின்னடியனெஞ்சக்
குறையேக்கநீக்கணிமாமலர்மங்கைக்குசேசயையே. (கச)

கருப்புச்சிலையன்கணைவிளைவித்தகும்பவமாம்
இருப்புச்சிலையினிறுமாப்படக்கியிகழ்துலவத்
திருப்புச்சிவணெநொய்தாக்கியெளியனே யென்றுகொணீர்ப்
பொருப்புச்சிவணுமணிமாமலர்மங்கைப்பொன்மகளே. ()

காற்றுப்பொரக்கழைக்கோற்றேன்ஞெமிர்ந்தென்றுங்கானறவ
ஆற்றுப்பெருக்கொடருவிப்பெருக்குமைமந்தெவணுஞ்
சேற்றுப்பழனஞ்செயுநீர்மலையாய்சிறியன்முறை
யேற்றுப்புரத்தியணிமாமலர்மங்கையிற்றிரையே. (சுசு)

ஒன்பான்முகைகொண்டொளிர்கோளுடிக்கலினூங்குதிகழ்
ஒன்பான்மணிகொண்டுருற்றுமிழைகளொளிர்களத்தாய்
ஒன்பான்றுளையுடல்வீழ்கால்வந்தாளொழியாதவுற
வொன்பானுமெண்ணியணிமாமலர்மங்கையுத்தமியே. ()

பான்மதியைப்புறங்கண்டெக்கழுத்தம்படுமுகத்தாய்
தூன்மதியைக்கொண்டுனைவழுத்தாதெட்டுதூற்றினுக்கும்
மேன்மதியைக்கடந்தெய்த்தேனென்செய்வல்விழைந்தருள்வாய்
வான்மதிக்கும்புகழாயணிமாமலர்மங்கையன்னே. (சுஅ)

குடப்பால்வளைகடவழ்வயனீர்க்குன்றக்கோட்டங்கொண்டாய்
திடப்பாடுடனின்றிருவடித்தொண்டுசிறந்துசெய்யுங்
கடப்பாடிலாதகயவனையாளுங்கடினெதே
படப்பாவையேயுமணிமாமலர்மங்கைப்பண்ணவியே. ()

நித்தியமாகநிகழ்த்தும்பொருளினிகாயக்கெல்லாந்
தத்தியநீயன்னைமாறந்தையென்னுஞ்சதுமறைகள்
சத்தியமாயினென்றத்தைத்தணந்திடத்தக்கவர்யார்
நத்தியளித்தியணிமாமலர்மங்கைநாயகியே. (எஎ)

மாளாவினையான்மறுகியயான்செய்மனுத்தனீ
கேளாமறுமொழியொன்றுங்கிளக்ககில்லாதுவர்த்து
வாளாவிருத்தலெவ்வையகக்கண்ணும்வழக்கலகாண்
தோளாமணியணிமாமலர்மங்கைச்சுடர்மணியே. (எக)

கருமக்களஞ்சியங்காஞ்சிரைநேர்கயவோனெனினுந்
தருமக்கடலேதவிர்த்தியெந்துன்பென்றுசார்ந்தவர்க்குப்
பெருமக்களோர்மொழிபேசிற்பிழையென்பிரமன்றந்தை
மருமக்கலாநிதியேயணிமாமலர்மங்கையன்னே. (எஉ)

பொருளாரருச்சைச்சமாதிவழக்கெனப்போற்றுதியேல்
அருளாளனம்பிக்கறுமொழிகூறலவத்தியமாந்

தெருளாருமற்றைநிலைக்குஞ்சிறப்பிலவாஞ்சிறியேன்
மருளாய்ந்தறுத்தியணிமாமலர்மங்கைமன்னவியே. (எக)

அருளாளனண்டர்பிரான்கச்சிநம்பியடிகளுக்கோர்
இருளாரும்காலத்திராவணமேந்தியியங்கியதும்
மருளாருநீர்மலைவாழுங்கருணைமகோததியே
இருளாருங்கூந்தலணிமாமலர்மங்கையிந்திரையே. (எச)

மூன்றைமறைகளாந்தமுநாருமுறைகளிட
என்றைவெஃகாவண்ணலெம்பத்திசாரரெனுமடிகள்
பைந்தமிழ்ப்பின்சென்றதென்னுகும்பாணிப்பறம்புமன்பர்
சிந்தையும்வாழுமணிமாமலர்மங்கைச்செந்திருவே. (எடு)

ஆழிவளைதொண்டைமானெனுமன்பற்கரவமலை
ஊழிமுதல்வனுகந்தன்றளித்ததுமுண்மையன்றும்
வாழியவென்றடியார்கள்வழுத்தும்வனமலைவாழ்
ஆழிவிரற்கையணிமாமலர்மங்கையம்புயையே. (எசு)

அத்தனரங்கநகரப்பன்புத்தூரடைந்துமுனம்
புத்தமுதொத்தநங்கோதையைவேட்டதும்பொய்யெனலாம்
சித்தமுநீர்மலைவாழ்நின்மலையேநெடுந்தகையோர்
சித்தமுகக்குமணிமாமலர்மங்கைச்செய்யவளே. (எஎ)

திகழ்ந்தொளிர்சீர்த்திக்குறுங்குடிநம்பிக்குந்தேமறையோர்
புகழ்ந்தொளிர்சீர்த்தியெதிராயமாமுனிபுங்கவற்கும்
நிகழ்ந்ததொர்நீதிச்செயல்களும்பொய்யாநிகழ்த்துமெனை
யிகழ்ந்துவிடற்கவணிமாமலர்மங்கையென்னம்மையே. ()

நாதமுனிகளெனுமெம்மடிகட்குநற்குருகைப்
போதமுனிவன்புராணத்தமிழ்மறையும்பொருளும்
நீதமுறமுன்றிருவாய்மலர்ந்ததுநீர்ப்பொறியாம்
வேதமுதல்வியணிமாமலர்மங்கைவித்தகியே. (எகூ)

சீர்க்கண்டியாதிதிருவாபரணந்திகழ்களத்தாய்
நீர்க்கண்டியூரடியூர்களினீர்மலைநேர்ந்துகந்தாய்
மார்க்கண்டியோடுபிருகுக்கருள்செய்வகையெவனென்
சூர்க்கண்டிதஞ்செய்யணிமாமலர்மங்கைத்தொல்லமுதே.

சக்கரவர்த்துலத்தாரணியாடொண்டைமானெனும்பேர்ச்
சக்கரவர்த்திக்கருள்செய்தவாறெவன்தண்சலில
சக்கரம்வர்த்திக்குந்தாயேயெனக்கருடையலர்கள்
சக்கரவர்த்தியணிமாமலர்மங்கைத்தம்மனேயே. (அக)

பன்னுமருச்சையினீயுமெம்மானும்பகுத்தசெயல்
இன்னும்பலவுண்டவையெளியேனுலிசைப்பரிதால்
உன்னுமென்னின்னலொழித்தாளவுள்ளத்துவத்தியெங்கும்
மன்னும்பெரும்புகழாயணிமாமலர்மங்கையன்னே. (அஉ)

கருவுருவாங்கண்ணன்காதலியாகியகாரணிநின்
றிருவுருவாடொறுஞ்சிந்தையிற்சிந்திக்குஞ்செல்வமுற்றும்
கருவுருக்கட்டறுங்கார்தோயுநீர்மலிக்காமவல்லி
மருவுருவாகியவல்லியணிமாமலர்மங்கையே. (அங)

அபிபூதமாயையறுத்தாளும்வல்லியவிரனந்த
வபிதானவல்லியணிநீர்மலைவாழசாதவல்லி
அபிராமவல்லியடித்தோரையெவ்வாற்றினுமளிக்கும்
அபிமானவல்லியணிமாமலர்மங்கையம்வல்லியே. (அச)

பொங்கணுமேருப்பொருப்பெனவேபுகலும்பொருள்கள்
எங்கணுமேவியிருக்கின்றநீயெளியேனுடலாம்
இங்கணுநிற்றியிதன்றுயர்யாவுமிலக்குகின்றன்
அங்கணுக்காகிலெகொல்லணிமாமலர்மங்கையன்னே. (அ)

சன்மம்பலபலசெய்துயிர்காக்குந்தலைவியென்றன்
கன்மங்கடைப்பிடித்தென்னைக்கைவிட்டிடக்கண்ணிநனி
வன்மஞ்செயினிந்தமண்ணையென்செய்வல்வதானியைக்குத்
தன்மம்மிதுவன்றணிமாமலர்மங்கைத்தம்மனேயே (அசு)

செருத்தற்கபிலைதன்றீம்பானெய்யுண்டுசிறுத்தவுடல்
பருத்தற்குவேண்டும்பணநேடிக்காலத்தைப்பாழ்ப்படித்த
வருத்தற்றொழிலினன்வாளூட்டுப்பேரின்பவாழ்வுதுகர்ந்
திருத்தற்கென்செய்வலணிமாமலர்மங்கையிந்திரையே. ()

எற்றுந்திரைக்கடலெல்லைப்புவிபிறந்தெய்ப்புறுதன்
மூற்றுங்கணித்திடினெவ்வொன்றுமென்பிழையாய்முடியுஞ்

சற்றுங்தவறிலெங்ின்னுற்றவத்தர்சரணடைந்து
பற்றுங்திருத்தாளணிமாமலர்மங்கைப்பார்க்கவியே.(அஅ)

சுந்தரிநீர்மலிச்சோமாகுனிவெண்சுரிமுகேர்
கந்தரிகந்தக்கமலாலயத்திகராம்புயத்தி
அந்தரியாதியர்வாழ்த்தடியம்போருகத்தியம்ம
மந்தரிதேர்திமனனேயணிமாமலர்மங்கையே. (அக)

தென்னுதெனுவென்றுதேன்பாடுங்காநீர்ச்சிகரியன்னுய்
மன்னுதெனுவிம்மகிப்பொருளொவ்வொன்றுமற்றுமன்ற
உன்னுதெனுமனமுன்பெயரன்றிமற்றோர்பெயரும்
புன்னுதெனுவணிமாமலர்மங்கைப்பராபரையே. (கூ0)

கயப்படுதாமரைக்காடலர்ந்தன்னகின்காட்சிதந்து
பயப்படச்செய்யென்படிவமுகாளும்படர்பொறிகள்
வயப்படச்செய்நியென்வஞ்சகெஞ்சுடன்யாறுமென்றன்
மயப்படச்செய்தியணிமாமலர்மங்கைமாமகளே. (கூக)

சித்தைத்தொடர்பைச்சிதைத்துன்சீர்த்திக்தெளியமுதப்
பாத்தைப்பருகிப்பகாப்பரமானந்தப்பத்தியுற்றுக்
கூத்தைப்புரிின்குலவடியார்குழுக்கூட்டியென்றன்
ஊத்தைக்குடிறீரணிமாமலர்மங்கையொள்ளொளியே. ()

உடங்குறுதீவினையென்றுமுடற்றவுழல்புழுப்போல்
நுடங்குறுமெற்குன்னூபுரமாக்கழலெஞ்சிநிழற்
படங்குறுமேலிப்பரவையினூங்குபடரவித்தை
யடங்குறுமுய்வலணிமாமலர்மங்கையம்மனேயே. (கூஙு)

ஒளிததும்பும்பணியாடைகல்லுண்டியொளிர்புனறேத்
துளிததும்பும்மலர்கொண்டுகிற்பூசித்துத்தோத்திரித்துக்
களிததும்பிக்கண்கணீர்வார்ந்தெக்காலுகிற்கண்டுகிற்க
அளிததும்பச்செய்யணிமாமலர்மங்கையம்புயையே. ()

மாற்றற்கரியகின்மாயையைமாற்றிமனமுவந்து
போற்றற்கரியகின்பொன்னடிபோற்றப்புரிந்தெவரும்
பாற்றற்கரியபவப்பிணிபாறப்பணித்திவிண்ணோர்
சாற்றற்கரியாயணிமாமலர்மங்கைத்தம்மனேயே. (கூடு)

பூந்தாற்றுக்கந்திப்பொழில்சூழ்புனன்மலைப்புண்ணியையே
சாந்தாற்றிவீசிடலாதிப்பணிகணின்சந்திக்குப்
போந்தாற்றகில்லாப்புலையனின்றுளிற்புகக்கருணை
பீந்தாற்றுவாயணிமாமலர்மங்கையிறையவளே. (கூசு)

ஐயெனச்சொல்லுமமித்திரனென்னையடர்த்திடுங்கால்
ஒய்யெனவல்விரைந்தோடிவந்தென்னுன்பொழித்தருள்வாய்
மெய்யெனிற்றிகினேமேவினேர்க்கங்ஙன்மேவலர்க்குப்
பொய்யெனிற்றியணிமாமலர்மங்கைப்பொன்மகளே. ()

ஆகாத்தவண்ணறன்னகமும்பத்திரியுமுறை
மாகாத்தமாமலர்மாளிகையாயென்மனமுடம்பு
நாகாத்தல்செய்யாநவையினிங்நாயனேயனுழக்குஞ்
சோகாத்தனீத்தியணிமாமலர்மங்கைச்சுந்தரியே. (கூஅ)

நாரினுஞானத்தினும்யாப்புண்ணீர்மலைநாயகியே
பாரினும்விண்ணினும்பாதலத்தன்னினும்பற்றறுத்தோர்
யாரினுஞ்சீரியனுவளீன்னருட்கடைக்கண்
கூரினுசிதமணிமாமலர்மங்கைக்கோமகளே. (கூகூ)

கருவிகரணங்கலங்காக்காலத்துனைக்கண்டுகண்ணீர்
அருவியின்வாரப்புளகுடல்போர்ப்பவவசநனி
மருவியிருக்கப்பெறினெனைச்சூழ்ந்தடும்வல்வினைகள்
வெருவியொழியுமணிமாமலர்மங்கைமெய்ப்பொருளே. ()

வாழ்கநன்னீர்மலைவாழியநீர்வண்ணமாயனென்னும்
வாழ்கமறையவர்வாழ்கவடமொழிமாமறைகள்
வாழ்கபதின்மர்கள்வாழ்கநல்வண்டமிழ்மாமறைகள்
வாழ்கவணிமாமலர்மங்கையன்னையிவ்வையகத்தே.

நீர்மலைவாழுமணிமாமலர்மங்கைநின்மலைக்கோர்
சீர்மலிசெந்தமிழ்ப்பாமாலைநூறுதிகழ்புகழின்
ஏர்மலிகச்சிக்கடாம்பியிராமானுசவிறைவன்
நார்மலியுள்ளத்தெதிராசதாசனவின்றனனே.

அணிமாமலர்மங்கைத்தாயார் மாலை
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜார்யநம:

திருநின்றவூர்

என்வினைப்பெற்றதாயார் மாலை.

காப்பு.

நனையின்றநாண்மலர்க்கா நாப்பணுறைநின்றை
யெனையின்றதாயி னினையில்—கனையின்ற
நூபுரத்தாண்மீதுகவி நோன்மொழைசாத்தக்குருகை
மாபுரத்தான்காப்பன் மகிழ்ந்து.

நூல்.

திங்கடினகரனன்னசங்காழிதிகழ்திருக்கைப்
பங்கயநோக்கெம்பிரான்பத்தராவிப்பரமன்மகிழ்
பங்கயையேயென்பவப்பிணிபாறப்பரிந்தபய
அங்கைகவிநின்றவூர்வாழெனைப்பெற்றவம்மனையே. (க)

அழுதவுணவினரேத்தவழுதவளக்கர்வந்தாய்
அழுதமொழிதொடுத்தன்பிற்பழிச்சுமடியவர்கட்
கழுதழுதவுந்திருவேயடியன்கணன்புவைத்தாள்
அழுதகிரணமுகத்தாயெனைப்பெற்றவம்மனையே. (உ)

பொருட்கண்ணும்பூவையர்கண்ணும்புவிக்கணும்பொங்கவித்தை
யிருட்கண்ணினீ இனின்னடியாரினையடியென்றுமெண்ணுக்
தெருட்கண்ணுதவியென்செஞ்ஞானநன்னிலதிண்ணகண்ண
அருட்கண்புரிநின்றவூர்வாழெனைப்பெற்றவம்மனையே. ()

பிறந்தங்குமிங்கும்பெரிதலைப்புண்டுபெயர்த்துழுடல்
இறந்தங்குமிங்குமிடும்பையுற்றேனினியேனுநின்றன்
நிறந்தங்குதாணினைந்துய்யவோர்சூழ்ச்சினைத்தருள்வாய்
அறந்தங்குநின்றைப்பதிவாழெனைப்பெற்றவம்மனையே. ()

தீக்கால்புனல்விண்புவிசெய்செகத்தைச்செழுங்கருணை
நோக்காலளிக்குமளிக்குநொதுமலர்நோக்கருட்கும்
வாக்காலொருவகைவாசிவகுக்கின்வண்வாரிதியும்
ஆக்காலறலுங்காமெனைப்பெற்றவம்மனையே. (ங)

அடுக்கலுமண்டகோடியுளார்ந்தவனைத்துயிர்க்கும்
இடுக்கண்செய்மாயையொரீஇக்காத்தளிக்குநின்னின்னிசைக்கும்
எடுக்கும்பிறர்தம்மிசைக்குமுவமையிசைக்கின்மூகட்
டடுக்கலணுங்கராகுமெனைப்பெற்றவம்மனேயே. (கூ)

கலைக்கும்புராணவகைக்குந்தலைமைக்கனமறையின்
றலைக்குமெட்டாநின்றகவார்குணகணச்சால்பிணக்கும்
மலைக்குமற்றோர்மாட்சிமைக்குமுவமைவகுத்திடற்குண்
டலைக்குங்கழிக்குங்கராமெனைப்பெற்றவம்மனேயே. (எ)

காணிக்கருமட்கடம்போன்றகாயங்கழிந்திடுங்கான்
மாணிக்கச்செப்பின்வருந்திப்பியவுடன்மன்னிமறை
வாணிக்கணங்கொடுவாழ்த்தடியார்குழுமன்னவைப்பாய்
ஆணிக்கனகமுடியாயெனைப்பெற்றவம்மனேயே. (அ)

கூரத்தினுலுயர்ந்தோனென்றெனைநின்கொழுநனென்றுங்
கோரத்தினுலுயரிச்சிறையிட்டனன்கூப்புருட
காரத்தினுலெனைக்காத்தருள்வாய்நற்கனகமணி
ஆரத்தினுயின்னமுதேயெனைப்பெற்றவம்மனேயே. (கூ)

கன்புடையன்பிலனென்றுசுதந்தரனுங்கலைவன்
என்புடையிச்சிறையிட்டனனென்றுமிவர்க்கெழும்பேர்
இன்புடைவீட்டினையெய்தும்விரகொன்றிழைத்தருள்வாய்
அன்புடையார்க்கரணுவாயெனைப்பெற்றவம்மனேயே. ()

ஓராவியற்கையொருமாயையானின்னுடையவன்செய்
தீராவியற்கைச்சிறுமியர்சிற்றின்பச்சேற்றையொரீஇத்
தூராவியற்கைச்சுடர்ச்சடரக்குழிதூர்த்துநின்பால்
ஆராவியற்கையவாநல்கெனைப்பெற்றவம்மனேயே. (கக)

கவித்தையவேடனுங்காலன்றமருஞ்செய்கவ்வைதம்மாற்
றவித்தையவோவம்மவோவென்றரற்றுஞ்சமயமதிற்
புவித்தையலோடுநின்னன்பனுநீயும்புரிந்துவந்தென்
அவித்தையினுற்றலறுத்தாளெனைப்பெற்றவம்மனேயே. ()

தீர்த்தப்பெருமைத்திருநின்றைவாழ்திருவேகொடிய
தூர்த்தப்படிறர்தொடர்பாற்றொடர்ந்ததுகளையெல்லாந்

நீர்த்தப்புறநின்றிருப்பதஞ்சேர்ந்துயத் திண்ணமெண்ணும்
ஆர்த்தப்பிரபன்னனுச்செயெனைப்பெற்றவம்மனையே. ()

மலக்கண்மகிழ்புழுமானநிரந்தரமம்மர்செய்யும்
நிலக்கண்ணிதமுநன்னீலக்கண்ணேரிழையார்நிதம்பப்
பிலக்கண்விரும்பும்பெரும்பேதைமையிற்பிறந்திறக்கும்
அலக்கண்டவிர்த்தலறமாமெனைப்பெற்றவம்மனையே. (கச)

பூத்திகழ்பொய்கைபொலிதிருநின்றைப்புரித்திருவே
ஆத்திகநாத்திகனுகியறத்தைவிட்டல்லவைசெய்
தோத்திகழ்ந்தேனென்னுறுபிழைநீத்தென்னுமுள்ளத்தண்மை
யாத்திகனுக்கியருள்வாயெனைப்பெற்றவம்மனையே. (கடு)

மூலப்பாலருந்தாமுதிர்ஞானமாமுனிமுன்னியருள்
கலிப்பாற்பொருளென்கருத்திற்பதித்தவன்காட்டுநெறி
நிலைப்பாலிருக்கநினைத்தருள்வாய்நின்றைநித்திலமே
அலைப்பாலுததியமுதேயெனைப்பெற்றவம்மனையே. (கசு)

படியார்தொடர்பைப்பரீஇப்பரமானந்தப்பத்திவெள்ளப்
படியார்படியிற்பயில்வித்தெனைநின்றன்பங்கயத்தாட்
டுடியாரடியார்க்கடியாரடியார்தமக்கடியார்
அடியார்க்கடியவனுச்செயெனைப்பெற்றவம்மனையே. (கள)

ஆழ்வார்கடம்புகழாரியர்தஞ்சீரமைத்தமுத
வாழ்வாரநல்கிடும்வண்டமிழ்மாலைவகுத்துரைத்தென்
சூழ்வார்பிறவிதணப்பானருள்சன்மசாகரத்தில்
ஆழ்வார்தமக்கம்பியாவாயெனைப்பெற்றவம்மனையே. ()

மருங்கலநீர்வயல்சூழ்நின்றைமாமகளேவினையாஞ்
சிருங்கலந்தேய்க்கும்படைபவச்சிந்துவிற்சேர்ந்தெடுக்கும்
பெருங்கலநின்பெயர்பேசுமென்சென்னிப்பெருமகுட
அருங்கலநின்னடியாகுமெனைப்பெற்றவம்மனையே. (கசு)

கார்க்கோலமாயவன்கண்மணியாநின்றைக்காரணிநின்
சீர்க்கோலங்கண்டுசிறக்காதசிந்தையன்றீயசமன்
போர்க்கோலங்கொண்டுபொருக்கெனவென்னுழைப்போதருங்கால்
ஆர்க்கோலமிட்டழைப்பேன்செல்லெனைப்பெற்றவம்மனையே.

விதுரன்சுதன்மாவிழைகூனிமுன்னம்விமலனுக்கு
மதுரவடிசிலுமாலையுஞ்சாந்தும்வழங்கியபோற்
சதுரர்கள்வாழ்கின்றைத்தாக்கணங்கேகிற்குத்தண்பிறவி
யதுரனளிக்கவலனெவெனைப்பெற்றவம்மனையே. (உக)

முத்திநிலையைமூகுந்தனின்னைமொழிமதுவைச்
சித்திசெய்தேசிகனைச்சீர்ச்சமந்தமஞ்சேர்க்கவல்ல
சத்தியவன்னதழைத்திடச்செய்திதழங்கிடும்பால்
அத்திபெறுகந்தனையெனைப்பெற்றவம்மனையே. (உஉ)

வலைப்படுமீனினிவ்வையத்துமாயைமயக்கவென்று
நிலைப்படுநெஞ்சமிலாதுழல்வேனுக்குநேயின்பாற்
றலைப்படும்வண்ணந்தையெய்துகாத்திதரையுடித்த
அலைப்படுநித்திலமன்னையெனைப்பெற்றவம்மனையே. (உ

தாதேயுமிச்சடந்தள்ளியிலிங்கத்தனுவுடனே
மீதேயமையர்ச்சிராதிவழியினைமேவிடுங்காற்
பாதேயகின்பெயர்பாடல்பரிக்கும்பரம்பொருணீ
ஆதேயகானெனையாள்வாயெனைப்பெற்றவம்மனையே. ()

கோணைப்படுகின்பொருள்கொளனிகுமிக்கொண்டுகொள்ளும்
ஊணைத்தடுத்தலுயர்குருமந்திரமுள்ளுறைதே
ஏணைப்பரிபவஞ்செய்தலிவற்றையிரித்தெனைகின்
ஆணைப்படியொழுகச்செய்யெனைப்பெற்றவம்மனையே. ()

சூரியையிந்தத்துவக்கெனைவிட்டுத்தொலைதுணையுஞ்
சிரியையாரியன்செய்ங்ஙன்றியென்றுமென்சிந்தைதன்னிற்
கூரியையன்பிற்குறித்துய்யநிகுறிக்கொண்டருள்வாய்
ஆரியையேயின்றவூர்வாழெனைப்பெற்றவம்மனையே. (உசு)

நினக்குமெனக்குமுபகாரகன்குருநேருதவி
தனக்குத்தகுதியதாகுங்கைம்மாறுசமைக்கவெனின்
எனக்குப்பலருந்தகுபொருளெங்கணுமில்லையென்ப
அனக்குமரன்றெழுந்தாளாயெனைப்பெற்றவம்மனையே. ()

சிர்பூத்தகின்றன்கல்யாணகுணத்தின்சிறப்பினையும்
பார்பூத்தகின்னருட்பத்தர்கள்பாவனப்பண்பினையும்

நார்பூத்தவெண்ணெஞ்சிலூட்டியருளுதிறம்பழனத்
தார்பூத்தநின்றைப்பதிவாழெனைப்பெற்றவம்மனையே. ()

தெருடிசுழ்வண்ணஞ் சிருட்டிதொடங்கித் தினஞ்செயுநின்
கிருடிபரம்பரைகேழ்பெறவின்னேகிளத்திடுமைம்
பொருடிரிபுந்தியென்புந்தியிலுள்ளிதிற்போந்துதிக்க
அருடிருநின்றையூர்வாழெனைப்பெற்றவம்மனையே. ()

ஐந்துவிதமாமரும்பாதகத்தையுமாற்றுவிக்கும்
ஐந்துபுலனுமவிக்கறியேனறிதற்கரிய
ஐந்துபொருள்களுமன்னவையொவ்வொன்றினுமடங்கும்
ஐந்துபகுப்புமறிவியெனைப்பெற்றவம்மனையே. (கூ0)

பாவப்பரப்புப்பெரும்புறவாழிப்பரப்படக்குங்
கோவத்துருப்பங்கொடுமுற்கக்கோரங்குளிர்த்திவிடும்
ஓவத்தமில்லனவன்னவைநீக்கியுணர்வுதந்தாள்
ஆவத்தரும்பொருள்வைப்பேயெனைப்பெற்றவம்மனையே.

காலமெலாம்விழைச்செய்தினுமாபிரங்கண்ணன்றன்பேர்
சாலமெலாஞ்செயுந்தையலராசைதவிர்தலில்லை
ஞாலமெலாமிதநச்சிநசிக்குநவிற்றுமிதற்
காலமெலாநல்லனவாமெனைப்பெற்றவம்மனையே. (கூஉ)

அகற்றவொண்ணுவன்பமைந்திடுமன்னையரினத்தால்
அகற்றினுமன்னளருணினைந்தேயழுமக்குழவி
இகத்திலெனும்பெரியோர்மொழிகேட்டிலையோவெனைநீ
அகற்றிவிடுதலறமன்றெனைப்பெற்றவம்மனையே. (கூகூ)

விரதிகள்போற்றுந்திருநின்றைவாழ்கின்றவித்தகியே
இரதிங்கிரில்லவளின்பமாதியிகச்சுகமுஞ்
சுரதிருவாதிச்சுகமுந்தவென்றெற்குத்தோற்றுமவ்வண்ணம்
அரதிபிறப்பதென்றேசொல்லெனைப்பெற்றவம்மனையே.()

வியர்த்துவினைவழியிவ்விளையாட்டுவிபூதியிலெற்
பெயர்த்தும்பெயர்த்தும்பிறப்பிக்கினல்லபிராப்பியமா
உயர்த்துரைபூமியுறுவதென்றேவிவ்வுடலொழிகால்
அயர்த்தொழியாதருள்செய்வாயெனைப்பெற்றவம்மனையே.

சேட்பட்டதீவினைத்தெட்பாற்சிறுமியர்சிற்றின்பத்தே
கோட்பட்டசிந்தையனையவோவல்குயிற்றெனின்
மூட்பட்டபத்திமைத்தாளாண்மையோர்திருத்தாள்களுக்கே
ஆட்பட்டடிமைசெயச்செய்யெனைப்பெற்றவம்மனையே. (

முத்தத்துவமுழுகுரப்பொருளைமுற்றுமென்றன்
சித்தத்திரீஇச்சித்திச்சிந்தையஞ்யெனைச்செய்திடீ
சித்தத்துவக்கிற்றிருநாட்டுப்பேரின்பச்செல்வமென
தத்தத்தடைந்ததலவோவெனைப்பெற்றவம்மனையே.(கூ

போகம்பலவும்புராதனவீடும்புகுத்துங்கன்ம
யோகம்பயிலுணர்வாதியில்லேனுரியனலேன்
சோகம்பலவுந்தருமிப்பிறவிதொலைவதெங்ஙன்
யாகம்பயினின்றவூர்வாழெனைப்பெற்றவம்மனையே. (கூ அ

எட்டங்கங்கூடியயன்ஞானயோகமிசைந்தியற்றல்
கட்டங்கடைப்பிடியில்லாவெனக்குநின்காமருதாள்
எட்டங்கமுநிலனேயவிறைஞ்சினனென்வினையை
அட்டங்கமுதமருள்வாயெனைப்பெற்றவம்மனையே. (கூ கூ)

நிகழ்தல்செயாதுனையெண்ணுமவரிதயாம்புயத்திற்
றிகழ்தல்செயுநின்றிருவடித்தாமரையைத்தினமும்
புகழ்தல்செய்வித்தென்றன்பொல்லாவினையின்புகர்க்கிழங்கை
யகழ்தல்செய்தாளலறமாமெனைப்பெற்றவம்மனையே. (

நாயுந்தகப்பனுஞ்சந்ததியுந்தமரும்பெருமை
வாயுங்குவனுந்தெய்வமுமற்றும்வளனுநன்மை
யேயும்பதங்களுமீறினல்வீட்டின்புமென்றுமெனக்
காயும்பொழுதுன்னடியாமெனைப்பெற்றவம்மனையே. ( )

மடியாநின்மாயைமயக்கமெனுமங்குன்மாற்றுவதும்
வடியாப்பவக்கடல்வற்றிடச்செய்வதும்வாரவித்தை
விடியாவிரவைவிடிந்திடச்செய்வதுமெய்ம்மையெற்குன்
னடியாருமாதித்தியனேயெனைப்பெற்றவம்மனையே. (சஉ)

அவத்தைக்கொடுத்தடையாவரும்பேற்றையளிக்கவல்ல
தவத்தைக்கெடுத்துச்சதாநந்தவாழ்வைத் தடுத்திருள்சேர்

பவத்தைக்கொடுத்தெனைப்பாழாக்குமாயை பயிற்றிநிற்கும்
அவத்தைக்கொருமுடிவின்றிவெனைப்பெற்றவம்மனையே.

பொறுக்கவொண்ணாப்பெரும்பொல்லாப்பிழைப்பொறைப்பொக்கணத்
குறுக்கவொண்ணாகுமார்க்கவஞ்ஞானத்தின்கொட்டகத்தன் [தன்
இறுக்கவொண்ணாதவிருசெருக்கேனென்னிருவினையும்
அறுக்கவொண்ணாதவுத்தாளெனைப்பெற்றவம்மனையே.

வறிஞர்க்குச்செல்வம்பசியார்க்குண்வல்சிவறந்திடுநாச்
செறிஞர்க்குத்தீம்புனலேயார்க்கதகந்தெறும்படையால்
எறிஞர்க்கிசைந்திடுமீரிரண்டோடடியேதமிலா
அறிஞர்க்குநல்லமுதாவாயெனைப்பெற்றவம்மனையே. ()

என்னையுடம்பையினத்தைக்குடும்பியையெண்ணயற்றேத்
தன்னையணைவர்தம்மையெனகருள்சற்குருவை
நின்னையெம்மானினைத்திருக்கும்வண்ணமேர்ந்தருள்வாய்
அன்னையருக்கனையாயெனைப்பெற்றவம்மனையே. (சசு)

வேதமிருதிமுதனூல்வீறிவிளங்குலக
நாதனுறுபொருளாகிநம்மாரியர்நற்றனமாய்
ஏதமறுசரணகதியின்பொருளீந்தையும்
ஆதமுறவெற்கருள்வாயெனைப்பெற்றவம்மனையே. (சஎ)

சோதரர்புத்திரர்சொல்லன்னைதந்தையர்தொல்லையன்
ஓதரஞ்சியரோவுறுவற்பொழுதோம்பல்செய்யார்
காதரநீக்கிக்கைசோராதடியைக்காத்தளிக்க
ஆதரங்கொள்பவணீயேயெனைப்பெற்றவம்மனையே. (சஅ)

குரவர்குலங்குலங்கூடிங்குகுரவர்புகழ்
பரவியென்குற்றம்பகர்ந்துகுரவர்பரம்பரைமந்
திரமணிகன்குசெவித்துய்யச்செய்திசெய்யாமறையின்
அரவமருங்கின்றவூர்வாழெனைப்பெற்றவம்மனையே. (சகூ)

ஆதிக்குரவருரையுமொழுக்கமுமாய்ந்துகொண்டு
வாதிக்குமற்றையர்வார்த்தையும்வாகையும்வாய்ந்தொருவி
நீதிக்குரவன்பணிநின்பணிசெய்துநிற்கவருள்
ஆதிக்கமலத்தணங்கேயெனைப்பெற்றவம்மனையே. (கூ0)

அருச்சித்தசித்தொடுநின்னிலைநன்னரறிந்தவித்தை
வருச்சித்துகாரும்வளருமொருமையாய்வயங்குன்
னுருச்சித்தம்வைத்தெண்வகைமலர்சொண்டுவட்டாசவன்பின்
அருச்சித்துநிற்கவருள்வாயெனைப்பெற்றவம்மனையே. ()

எண்ணிக்குரம்பையையேனுறச்செய்யவிழிபொருளை
நண்ணிச்சுவைத்தவென்னுயிரைநின்னருளமுதான்
மண்ணிப்பழமையைமாற்றிமறப்பித்துன்மாண்பையோ
அண்ணிக்குமாறருள்செய்வாயெனைப்பெற்றவம்மனையே.

பாகாரடையுடனிற்குநிவேதித்துப்பாவனமாம்
ஆகாரநீருண்டுன்னட்டாக்கரத்தினடைவறிந்து
வாகாரதன்முப்பதமுமுறையேவகுத்துரைக்கும்
ஆகாரமூன்றுமளித்தாளெனைப்பெற்றவம்மனையே. (நிகூ)

ஓங்காரணமுரைப்போர்தவர்வாழ்நின்றையுத்தமியே
தூங்காரவாரத்தொடுகடல்போனின்று தொன்றுதொட்டு
வீங்காரஞர்செய்பிறவிவித்தென்னவிளம்புமிரண்
டாங்காரமுமறுத்தாள்வாயெனைப்பெற்றவம்மனையே. ()

மாய்ந்துபிறந்துவருந்துமண்ணோர்க்குற்றவல்வினையைக்
காய்ந்துகழறரிந்றைப்பதிவந்தகற்பகமே
வாய்ந்துவரம்பின்றியெங்கும்வழங்குநின்வான்புகழை
ஆய்ந்துசொலவல்லவராரெனைப்பெற்றவம்மனையே.(நிஙி)

கழலைக்குயமுடைக்காந்தையர்நெஞ்சங்கையவுரை
மழலைச்சொற்காமுற்றுமாழாந்தவல்வினையேன்பிறவி
நிழலைத்துமித்தென்னுநீடுமுத்தாபகெடுவிடவை
அழலைத்தணித்தெனையாள்வாயெனைப்பெற்ற வம்மனையே.

விருப்பங்கொள்பஞ்சாக்கினிவித்தையின்படிவிண்ணெருவி
உருப்பக்கதிருறையுண்கூழ்புருடர்பின் ணெண்டொடியார்
கருப்பத்தில்வந்துகவற்சியுறச்செய்கடுவினையாம்
அருப்பத்தைவெட்டியருள்வாயெனைப்பெற்ற வம்மனையே.

உவாவின்மதியொத்தவொண்முகத்தாய்நின்றவூரகத்தாய்
தவாவின்மைசெல்வந்தழைக்கினுங்குன்றிற்பத்தன்மையுற்றுச்

சுவாவின்படித்துப்பிறுச்சப்பொருள்களைத்துய்க்கவெண்ணும்
அவாவின்மைகல்கியருள்வாயெனைப்பெற்றவம்மனையே. ()

மூவாவென்றூழின்மிளிர்மணிமோலிமுடிகவித்தாய்
ஓவாவென்னூழ்வினையோவும்படிநினக்கோலமிட்டால்
நீவாவென்றன்பினைனைக்கூயென்காரியநீர்மையுடன்
ஆவாவென்றுராய்ந்தருள்வாயெனைப்பெற்றவம்மனையே.()

மருளார்ந்துகன்மரம்போன்றுலவுதுமனதுநின்பாற்
றெருளார்ந்துதானிந்தத்தேகம்விடுமோதெரியகிலேன்
பொருளாகவெண்ணிப்புகல்புகுந்தேனென்புகையெண்ணி
ஆருளாதொழிதலறமன்றெனைப்பெற்றவம்மனையே. (கூ0)

பாவத்தின்மிக்காய்படர்கென்றியமபடர்கயிற்றுற்
கோவத்தின்வீக்கிக்கொடுபோகுங்காலங்குறுகுமுன்னர்
மாவத்திவண்ணவெம்மானுடனென்முன்னர்வந்துநின்றென்
ஆவத்தைத்தீர்த்தருள்செய்வாயெனைப்பெற்றவம்மனையே.

பந்தோபயோதரம்பாலோமொழிமுகம்பான்மதியோ
தந்தோவிடைதரளப்பந்தியோதந்தாங்குகளன்
நந்தோவெனைநைந்துநாரியர்ப்பேணியென்னுள்களெலாம்
அந்தோவழித்தேனருள்வாயெனைப்பெற்றவம்மனையே. ()

செந்தாமரைமலர்ச்செந்திருவேநின்றைச்செய்யவளே
சிந்தாமணிதினஞ்சிந்தாகுலமுறுதீனசன
மந்தாரமென்றுநின்மாமலர்த்தாளின்மறைபுகுந்தேன்
அந்தாமவாழ்வையளித்தாளெனைப்பெற்றவம்மனையே. ()

சுரும்பேய்மலர்ப்பொழில்சூழ்நின்றைவாழ்ஞசுகாவையையே
துரும்பேயெனைப்பொருளாக்கிநிற்பேணுஞ சுமதிதந்தாள்
கரும்பேகனிந்தகனியேகற்கண்டேகடிகமழும்
அரும்பேயலரேயமுதேயெனைப்பெற்றவம்மனையே. (கூ)

நாடேனெந்நாளுநின்னற்றுணைளினகலங்கனிந்து
கூடேனின்றுண்டர்தங்கூட்டங்குறுமயிர்க்குச்செறிந்து
பாடேன்பளகறுபல்லாண்டுபத்திப்பரவசனாய்
ஆடேனுய்வெங்ஙனருள்வாயெனைப்பெற்றவம்மனையே. ()

தாயத்தமருந்தயருந்தாரமுஞ்சார்பினரு
நேயத்தமைந்துநிலன்வீழ்ந்துநெஞ்சநெகிழ்ந்தரற்றக்
காயத்தைவீழ்த்தியெனைக்காலதூதர்கவர்ந்திடுங்கால்
ஆயத்தமாய்நின்றருள்வாயெனைப்பெற்றவம்மனையே.(சுசு)

தொட்டகுட்டவிருவர்தஞ்சோணிதசுக்கிலத்தாஞ்
சட்டகந்தாழ்பொருளென்பனயாவுஞ்சமைத்துவைத்த
பெட்டகம்பேர்காற்பிறந்தலைக்கும்பிணிபில்குபுரி
அட்டகக்கூடறுத்தாள்வாயெனைப்பெற்றவம்மனையே. ()

அஞ்சுபொறிகளுமவ்வவற்றின்செயலாற்றகிலா
தெஞ்சியெவற்றையுமெண்ணுமுணர்வுமிறந்துகபம்
விஞ்சிவிளம்பவெண்ணுவிழுமத்தைவிளைத்திடுங்கால்
அஞ்சலெனவந்தருள்வாயெனைப்பெற்றவம்மனையே.(சுஅ)

நிறமானமானுடதேகிகணீதிநெறிதனக்குப்
புறமாகெறிபுகல்பொல்லாதுசன்மத்தைப்போக்கவல்ல
திறமானஞானநெறிநிற்றவெள்ளிகிற்றெள்ளியகல்
அறமாமதனையருள்வாயெனைப்பெற்றவம்மனையே. (சுசு)

போதன்முதலாப்பிபீலிகையீறும்பொருளனைத்தும்
நீதன்மவாணையினுண்டுபைங்கூழ்குனன்னீர்நிலைபோற்
காதன்மையினுலவற்றிற்கரந்துறைகாரணியே
ஆதன்மனத்துறைந்தாள்வாயெனைப்பெற்றவம்மனையே. ()

உலகிலுயிர்களைவீடைகாறுமுன்னூழ்முறையே
பலகிலக்கூட்டிற்படைத்துப்புரந்துபரிசரித்து
விலகலிலாதுசுழற்றிடுகின்விளையாடல்களோ
அலகில்லனவென்கதியென்னெனைப்பெற்றவம்மனையே. ()

விழித்தங்கிக்காண்பொருள்காணுப்பொருள்கள்விளங்குகின
தழித்தங்குவனவென்றுண்மையுணர்த்தியுளத்தைமற்றோர்
வழித்தங்கவைக்காதெனைக்காத்தியாவும்வகுத்தளித்தே
அழித்தங்குகக்குமமலாயெனைப்பெற்றவம்மனையே. (எஉ)

வீறுபெறும்விழுவோங்குந்திருநின்றைமேயவளே
ஊறுதருமென்னுருகவுறுவலொழித்தடையாப்

பேறுபெறும்படிசெய்தியெவர்கட்கும்பேசரிய
ஆறுகுணங்களுமான்றோயெனைப்பெற்றவம்மணையே.(எக)

சத்தைகொணீராம்சரீரமூஞ்சத்தியத்தான்மனமூ
லித்தியந்தூய்மையுறல்போலநின்றன்னிலையுணர்த்தும்
வித்தையிலுலெனைமேத்தியஞ்செய்துலல்வீடருள்வாய்
அத்தையுலகினுக்காவாயெனைப்பெற்றவம்மணையே. (எச)

மன்னிலைமாடங்களோங்குந்திருநின்றைமாமகளே
முன்னிலைப்போகம்புசிப்பித்துப்போதம்பொசிசுகமாம்
சன்னிலைநின்றுமிரீ இயிருந்துன்பமியற்றவித்தை
அன்னிலைநீக்கியருள்வாயெனைப்பெற்றவம்மணையே. (எஞ)

மூடிநிழனெற்றியணிநிழல்குண்டலமூசுநிழல்
தாடிநிழலங்கதநீழல்முத்தாரத்தொகுதிநிழல்
படிநிழல்சன்மவிடாயைத்தணிக்காமைபுரைகின்
அடிநிழலேயதுசெய்யுமெனைப்பெற்றவம்மணையே. (எசு)

படியாக்கருணைநல்வாரிதியாகின்றைவானவிதின்
அடியார்க்களித்திடல்யாகாக்கினிபெய்யவியதுபோன்
றடியாதொளிருமம்மாட்சியர்ப்பேணுமதியளித்துன்
அடியாநிழல்வைத்தளித்தியெனைப்பெற்றவம்மணையே.(எஎ)

புவியார்புகழ்த்திருநின்றைப்பொலப்பதிப்பூமகளே
கவியார்நின்கண்ணென்றுங்காதலிலாக்கயவர்க்களித்தல்
சவியார்தழல்சற்றுஞ்சாராததாம்வெறுஞ்சாம்பரிற்பெய்
அவியாகுமன்னதுநீத்தாளெனைப்பெற்றவம்மணையே.(எஅ)

வாக்குந்தவுமனமுமறைகண்மறமெனவே
நீக்குநெறியினிகழாதுநீத்தென்றுநேயநின்பாற்
றேக்கும்படிச்செய்தென்றீமைபொறுத்தெனைச்செய்யவரு
ஆக்குங்கடமைநினதேயெனைப்பெற்றவம்மணையே .எகூ)

சத்துவமாக்குணச்சால்பேயென்றுனந்தழைத்துநிற்க
நத்துவனேனெனினுனெனதென்னுரையறுத்தென்
சொத்துவமென்றுந்துலங்கச்செயுங்கிஞ்சுகச்சுமம்போல்
அத்துவடிவமமைந்தாயெனைப்பெற்றவம்மணையே. (அ0)

திருவேசரணந்தெருளேசரணஞ்சிறக்கும்பஞ்ச
தருவேசரணந்தவமேசரணஞ்சகமயமாம்
உருவேசரணமொளியேசரணமுணர்வரிய
அருவேசரணஞ்சரணமெனைப்பெற்றவம்மனையே. (அக)

மாவேசரணமறையேசரணமறைவிளக்குங்
கோவேசரணங்குணமேசரணங்குறைபொறுக்குங்
கூவேசரணமிக்கூவோர்விழைந்தகொடுக்கவல்ல
ஆவேசரணஞ்சரணமெனைப்பெற்றவம்மனையே. (அஉ)

சொல்லாதிசொற்பொருளாதியுலகினிற்றோன்றிநிற்கும்
புல்லாதியானபொருளாதியன்னபுலப்படுத்தும்
எல்லாதியெல்லினிலங்கொளியாதியிருடனைக்கும்
அல்லாதியாவையுமாதியெனைப்பெற்றவம்மனையே. (அங)

ஆதியளவற்றவண்டமுமண்டத்தவிர்விளக்கும்
ஆதிபதினன்குலகுமுலகத்தமைபொருளும்
ஆதிமறையுமிருதியுநூல்களுமாதியென்றும்
ஆதிகுமுடிவில்லாயெனைப்பெற்றவம்மனையே. (அச)

அடைக்கலமையென்னமித்திரனென்னையடர்த்திடுங்கால்
அடைக்கலமந்தகன்வந்தெனைப்பாசத்தசைத்திடுங்கால்
அடைக்கலம்யானிந்தயாக்கையைநீக்கவமைந்திடுங்கால்
அடைக்கலநின்னடிக்கென்றுமெனைப்பெற்றவம்மனையே. ( )

அடைக்கலமம்பகமோரிரண்டுஞ்சவியற்றிடுங்கால்
அடைக்கலங்காதுகடம்புலன்கொள்ளாதடைபடுங்கால்
அடைக்கலங்கன்மரம்போன்றென்றன்மேதையழிந்திடுங்கால்
அடைக்கலநின்னடிக்கென்றுமெனைப்பெற்றவம்மனையே. ( )

திறனென்றியநின்றிருவடிசிந்தனைசெய்தலன்றிப்
புறனென்றும்புந்திபுரிந்திலன்பூசல்பொரமறவி
மறனென்றிமண்டிடுங்காலெனைக்கைவிடன்மாட்சிமைத்தன்
றுயனன்றனன்றனன்றெனைப்பெற்றவம்மனையே. (அள)

நயவாசகாண்மலர்க்காவுகள்சூழ்நின்றைநாயகியே!
சயவாசகஞ்சொல்லிச்சண்டன்றமொன்னைச்சார்ந்தொறுக்கும்

பயவாசரத்திலென்பக்கத்துநிற்றியென்பாவப்பஞ்சிற்
கயவாகனன்பொறியாவாயெனைப்பெற்றவம்மனையே. ()

நளிவிசுவந்தொழுநற்றிருநின்றைநளினமின்னே
ஒளிவிசுவம்பரனுகந்தலைனையுட்படுத்தித்
தெளிவிசும்பாந்திருநாட்டடியார்குழுச்சேர்ந்திடவைத்
தளிவிசுவாசமகங்கொளெனைபபெற்றவம்மனையே. (அகூ)

கோடியருக்கொளிக்கூங்கொளிரும்வைகுந்தகர்
நாடியருத்தியினுநின்னுமகவின்றுநின்சீர்
பாடியருச்சனைபண்ணுமென்னெண்ணம்பலிக்கவருள்
ஆடியருக்குங்கவுளாயெனைப்பெற்றவம்மனையே. (கூ0)

கவசந்தனியறங்கொண்டாய்திருநின்றைக்கற்பகமே
துவசந்தங்கைகளெடுசூர்க்காலதூதர்கடொட்டிழுக்குந்
திவசந்தனிற்சிந்தையுட்கிவட்கித்திடுக்கிட்டயர்க்கும்
அவசந்தனில்வந்தருள்வாயெனைப்பெற்றவம்மனையே.(கூக)

கலர்மகவாகப்பிறந்ததமையுமிக்காசினிக்கட்
பலர்மகவாகவினும்பிறவாமற்பணித்தியுயர்
சூலர்மகமாற்றியிறைஞ்சவவர்க்கருள்கூர்ந்தளிக்கும்
அலர்மகளேநின்றவூர்வாழெனைப்பெற்றவம்மனையே. (கூஉ)

பெற்றூர்க்குங்கூடப்பிறந்தார்க்குநட்புற்றபெற்றியர்க்கும்
உற்றூர்க்குஞானத்துயர்ந்தார்க்குமிவ்வுலகத்துகளை
செற்றூர்க்குந்தீயவனின்றன்றிருவடிசேர்தலெனுங்கன்
அற்றூர்க்கருந்துணையாவாயெனைப்பெற்றவம்மனையே. ()

கொங்காரமாப்பொழில்சூழ்திருநின்றைக்குலக்குடிலே
செங்காந்தளங்கைச்சிகியேயென்றீவினைதீர்த்தருள்வாய்
சங்காரகாலத்துதரத்தில்யாவுந்தனித்தொடுங்க
அங்காக்குங்காந்தற்கணியேயெனைப்பெற்றவம்மனையே. ()

நல்வழிநல்லவர்நாட்டடியிருக்கநடத்தலின்றிப்
புல்வழிமுள்வழிபொல்லாப்புதர்வழிபோகவொண்ணாக்
கல்வழிசெல்லுங்கயவரினின்வழிக்காப்பைவிடுத்
தல்வழிசெல்வேனரணன்னெனைப்பெற்றவம்மனையே. ()

தெருள்வாய்ந்தவேதச்சிரமானுங்கிதைச்சிரமூரைக்கும்
பொருள்வாய்ந்தென்புத்தியிற்பொங்கறம்யாவும்பொருக்கெனவிட்
டிருள்வாய்ந்துதித்தவொருவனேயேசரணுற்றுநிற்க
அருள்வாய்திருநின்றையூர்வாழ்ணப்பெற்றவம்மனேயே.
மனக்குற்றம்வாக்குமெய்க்குற்றந்தமியன்வகுக்குமிப்பா
வினக்குற்றநின்னையடியாரெள்ளியிகழ்ந்தகுற்றம்
தினக்குற்றஞ்சிற்றின்பக்குற்றந்தினமுநிற்சேவித்துண்ணு
அனக்குற்றம்யாவும்பொறுத்தாளெணப்பெற்றவம்மனேயே.
சாவவொட்டாதமருந்தனையாய்மும்மைத்தாவமதால்
வேவவொட்டாமல்விலக்கிவிடயவிருப்பின்மனம்
மேவவொட்டாமற்றடுத்தெனையாள்விறல்வேள்வெரிநார்
ஆவவொட்டாமுழந்தாளாயெணப்பெற்றவம்மனேயே. ()
தராமுகத்தோர்விண்முகத்தோர்தொழுநின்றைத்தாக்கணங்கே
யிராமுகமன்னவியமன்படையிரித்தெனையாள்
பராமுகமின்றிவியாதன்செய்சூத்திரபாடியஞ்செய்
அராமுகநோக்கியெளினுமெணப்பெற்றவம்மனேயே. ()
அதிபதிதன்னளிக்கப்படிவோனலனுயினுகன்
னதிபதிசூழ்புவிகன்றுறகண்ணியஞானநிதி
எதிபதிசெய்யஞசலிநோக்கியேனுமிலங்குநின்றைக்
கதிபதியேயமுதந்தாவெணப்பெற்றவம்மனேயே. (கஅ0)
வாழ்கதிருநின்றைவாழிய வுற்பலமானவள்ளல்
வாழ்கவெணப்பெற்றதாயாம்வனசமலர்மனையாள்
வாழ்கவடமொழிதென்மொழியாகியமாமறைகள்
வாழ்கபதின்மர்கள்வாழ்கநம்மாரியவர்க்கநன்றே.

திருநின்றைவாழுமெணப்பெற்றவன்னேதன்சேவடிமேற்
கருநின்றுநீங்கியுய்வானெருதூறுகவித்தொடையல்
கருநின்றகாகசச்சிவாழுமிராமாதுசத்தலேவன்
மருநின்றதாள்சேர்திராசதாசன்வணந்தனனே.

எண்ணப்பெற்றதாயார் மாலை
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவெவ்வுளூர்
கனகவல்லித்தாயார் மாலை.

காப்பு.

கனகவகிவல்லி கடிக்கும்வினைதீர்
அனகவெவ்வுள்வாழு மமலை—கனகவல்லித்
தாயடியிற்பாமாலை சாத்தவுடையங்கைச்
சேயடியைச்சிந்திநெஞ்சே தேர்ந்து.

நூல்

கடல்வண்ணன்காமருமார்பமுறையங்கேமணியைக்
கடல்வந்தகாரிகையாருடிக்கூட்டக்கலாநிதியைக்
கடல்வண்ணமாலுங்கனகவல்லிக்கருணலையையை
கடல்வண்ணக்காதலிற்கண்ணுநெஞ்சேநற்சகுபெறவே.()

கனகவல்லிப்புண்ணியவினைகாழ்த்துக்கனத்தகருங்
கனகவல்லிப்பாதகவினைதீர்த்துக்கருத்துள்வைத்துக்
கனகவல்லிக்கஞ்சவிட்டுந்திருவெவ்வுட்கண்ணுமுறை
கனகவல்லித்தன்னைகாப்பணைஞ்சேகொள்ளல்காதரமே.()

எஞ்சியபொன்புடமாதியின்மாற்றுயர்ந்தென்ன வென்றும்
விஞ்சியநின்னடியார்தங்குழுவில்விரவச்செய்தென்
துஞ்சியளானைந்துலங்கச்செய்திப்பவத்துக்கவலைக்
கஞ்சியவென்னைக்கனகவல்லித்தல்லியாதரியே. (கூ)

சந்திரன்வேணிலிருதுவின்வெப்பந்தணித்தலென
மந்திரநின்னடியார்க்கடியாரருண்மன்னியுய்யுந்
தந்திரஞ்செய்தென்முத்தாபந்தணியச்சமைத்தருள்வாய்
இந்திரையெவ்வுட்கனகவல்லித்தன்னையென்பவளே. (சு)

இந்தனத்தோங்குமெரியெனநல்லுணர்வின்மையெனும்
பந்தனத்தோங்குமென்பாவமீரிரினின்பணியருள்வாய்
சந்தனத்தோங்குந்தடமூலைத்தாமரைத்தாக்கணங்கே
நந்தனத்தோங்குந்திருவெவ்வுட்பொற்கொடிநாயகியே.()

துட்டரிணக்கந்தொகையில்பிறவித்துயர்க்குவித்தாம்
சிட்டரிணக்கநற்சித்திக்குவித்தெனச்செப்புவரால்
பட்டர்கள்போற்றுங்கனகவல்லித்தல்லிபத்தசனர்க்
கிட்டர்கள்சங்கத்தடியேனிணங்கிடவெண்ணுதியே. (கூ)

அபயம்பெறவெண்ணிநின்னம்புயப்பூவடியையண்மி
அபயம்புகுந்தவடியேன்கண்முன்னர்வந்தஞ்சலென்றெற்
கபயந்திருவரதந்தருமாய்மலரத்தங்களாம்
உபயமுதல்குதியொண்பொற்கொடியன்னையுத்துங்கையே. ()

அலைதீர்ந்தவாழியெனவடியேனுள்ளமார்ந்தவித்தை
சிலைதீர்ந்துநின்னடிநேயத்தினின்றுநெடும்பிறவி
வலைதீர்ந்துவாகைக்கனகவல்லித்தன்னைவானவியே
தொலைதீர்ந்தவைகுந்தந்துன்னிச்சுகிக்குவொர்சூழ்ச்சிசொல்லே.

அசத்தாம்பொறிகளைலக்கவலைப்புண்டலந்தவற்றின்
வசத்தாயனேகபவமெடுத்துக்கும்பிவாசமுறீஇ
நிசத்தாபமெய்தியநீசனிச்சன்மத்தினின்னருளின்
வசத்தாற்கனகவல்லித்தல்லிதின்னடிவந்தனனே. (கூ)

புகுந்திடுஞ்சன்மந்தொறுநானெனதெனும்பொய்ச்செருக்கின்
மிகுந்தவனநிவிருப்புவெறுப்பினேமேவியிருள்
வகுந்துவினின்றுமயங்குமென்மையலைமாய்த்திடநீ
தகுந்தவளென்றுனைச்சார்ந்தேன்கனகவல்லித்தன்னையே. ()

மோகத்தைமூர்க்கத்தைமூட்டும்வழியின்முயன்மனது
சோகத்தையின்பந்தனைச்சமமாவெண்ணுந்தூயபரி
பாகத்தைப்பற்றின்பாதத்திற்பத்திமைபண்ணியுய்யும்
யோகத்தைத்தந்தாள்கனகவல்லித்தன்னையுத்தமியே. (கக)

நல்லவர்நண்ணலரில்லவரொன்றினையப்புவெறுப்
பில்லவரிந்தியமோடிதயத்தையுமேன்றுவெல்ல
வல்லவராநின்னடியார்குழாத்தினைவைத்திமறைச்
சொல்லவரேத்துங்கனகவல்லித்தன்னைச்சுந்தரியே. (கஉ)

இயற்கையடையடையிவ்வேழையின்மீதிரக்கமெய்திப்
புயற்கைக்கொடைச்செல்வப்பொங்குதிருவெவ்வுட்பொற்கொடியே

செயற்கைகின்மாயையிற்சேர்ந்தகிரிபகரூர்த்தினியென்
இயற்கைக்குணங்களிலங்கவிழைத்தருளின்னருளே. (கக)

எல்லாவருத்தியும்விட்டின்னன்பரிணகசுந்தங்தென்
எல்லாவழுவுமிரித்துன்னிசையின்னமுதையொல்லும்
எல்லாவழியினுமுண்டியும்வண்ணமினிதருள்வாய்
எல்லாவறமும்வளரொல்வுட்பொற்கொடியென்னம்மையே. ()

மோகாந்தராக்குழுஷையில்லவண்முதன்முற்றுமொரீஇ
ஏகாந்தபத்தியிழைப்போரிடர்களிரித்திடுகின்
மாகாந்தனுக்கொருமாற்றம்வகுத்தெனைவைகுந்தமாம்
மாகாந்தந்தன்னிற்கனகவல்லித்தல்லிவைத்தருளே. (கஞ)

பகுதியின்பான்மையைப்பாற்றிடுந்தத்துவப்பண்பினையும்
விகுதிசெயுமகங்காரத்தைவீட்டும்விஞ்ஞானத்தையுந்
தகுதியிலெனைனிலுந்தங்துமற்றுருதையல்பண்டி
புகுதிசெயாதருள்வாயெவ்வுள்வாழ்கின்றபொற்கொடியே. ()

சீர்பூத்தவெவ்வுட்கனகவல்லித்தல்லிச்சிற்பரையே
ஏர்பூத்தசிஞ்ஞபிதாசங்கீர்த்தகவீட்டினரை
கார்பூத்தயோகந்தவமறையோதனதிழுழுகற்
பேர்பூத்தபுண்ணியஞ்செய்தவரென்பபெரியவரே. (களு)

இன்னுமதையுணர்த்தவிற்கேட்டவினிடுபவ
இன்னுமடியுமழுதாமதைகளங்கிசைத்தலினல்
உன்னுமனச்சண்டாளனும்யாகமுஞற்றுகனும்
என்னுமறையோர்கனகவல்லித்தல்லியேத்துவரே. (கஅ)

சன்மத்துயரத்தழலாற்புலனசைத்தாவமதான்
மன்மத்துயவுற்றவென்மனவும்பணின்வான்கதையாங்
தன்மச்சுதாகதிதாழ்ந்துசதாகந்தஞ்சாரவைப்பாய்
கன்மப்புனிதர்தொழுமெவ்வுட்பொற்கொடிக்கற்பகமே. ()

தாக்குமிடியனைர்சக்கரவர்த்தியைச்சார்ந்துவரி
நூக்குமிவேண்டலெனவன்றென்வேண்டலுவினது
காக்குங்கடமைகொள்காஞ்சனவல்லிகின்காற்பணிசெய்
பாக்குமிதமில்பரமபத்திப்பெரும்பாக்கியமே. (உ0)

பவச்சமவாயஞ்செய்மாயையின்வஞ்சிக்கப்பட்டடியேன்
சவச்சமமெய்ச்சுகநச்சும்புத்தையலர்தங்கலவி
அவச்சமரத்திலைதலறுமாறருள்புரிவாய்
தவச்சமநோக்கினோத்துங்கனகவல்லித்தல்லியே. (உக)

நுறக்கவசந்தச்சுனிரஞ்சிதச்சுரர்துதிக்கும்
அறக்கவசம்புனையாடகவல்லியன்னயவித்தை
உறக்கவதன்வயத்துற்றவெற்குன்னிலையுன்னமனஞ்
சிறக்கவசப்படுங்காலமென்றுவதைச்செப்புதியே. (உஉ)

நிலைனிகரானனனிநிவல்லியன்னயடியன்
டலைவையெவனுமுலவியுமொன்றினென்றுதுபோற்
செலவையுடையதிருணத்தோடுசெறிந்திருந்துங்
கலவையவற்றிற்கொளாநிலைநிற்கக்கருணைசெய்யே. (உங)

அன்னையெனுமெவ்வுளாடகவல்லியறைவெளிசப்
பொன்னைவிழுங்கியமினைவித்தைபுரியும்பொம்மல்
தன்னைவிரும்பித்தெளவாதுதமியனின்றுள்விரும்பிப்
பின்னையொன்றெண்ணுதிருந்துபெறவருள்பேரின்பமே. ()

பெருங்காற்றடியுண்பெருங்கலத்தென்மனம்பேரவித்தை
ஒருங்காற்றுமூறுகளாலுலைப்புண்டொல்குமவ்வுலவு
ஈருங்காற்றினுய்த்துச்சுகந்தந்தருள்பிறர்துன்புறுதல்
ஒருங்காற்றகில்லாநிவல்லியெவ்வுறைபவளே. (உடு)

னன்றுமிருபாடெரிகொள்ளிக்கட்டையிடையெறும்பின்
னென்றுமிருவினைத்தீச்சுடுமிம்மெய்யிதயமிருந்
தென்றுமிருளினிடர்படுமெற்கருள்வாயிமையோர்
னென்றுமிருதிசெய்தேத்திடும்பொற்கொடியிந்நிலையே. ()

கன்மாந்தரமுக்கரணங்களாலுங்கடியற்றிச்
சன்மாந்தரத்திற்றடுமாறுமேழைநின்றுளடையுந்
தன்மாந்தரவழிசார்ந்துதனவல்லித்தல்லியிருண்
முன்மாந்தலரிவழிமுத்தியான்பெறமுன்னுதியே. (உஎ)

வானந்திகழ்புகழாடகவல்லிநின்மாயைதரு
மானந்திகழும்பிமன்னவழிசெயதென்மனவிருத்தி

ஈனந்திக்காரஞ்செய்தெப்போதுநின்னடியெண்ணியெண்ணி
ஆனந்திக்குந்தன்மையென்றோவடியேனடைவதுவே. ()

கோளாண்மையரையுங்கோள்செய்குசுமக்கொடுங்கணைகொள்
வேளாண்மைவீட்டிவெருட்டுமாயைவிறலிவெல்லுந்
தாளாண்மைதந்துன்சரோருகத்தாணிழல்சாரவைப்பாய்
வேளாண்மைவாழ்க்கையர்வாழெவ்வுட்பொற்கொடிவித்தகியே.

இராகத்தைநீத்தவிருடிகளேத்தெவ்வுளிந்திரையே
பராகத்தைத்தேனைப்பொழிபதுமாதனப்பண்ணவியே
இராகத்தையெய்செல்லிரணியவல்லியன்னையெழும்பூ
பராகத்தையெண்ணினுனின்குணமெண்ணப்படாவென்பவே.

கங்குலைச்செங்கதிர்க்காவலன்காய்ந்துகடிதலென
மங்குலைச்சின்னபின்னப்படமாருதமாய்த்தலென
இங்குலைப்புண்ணுமெளியேன்பவத்தையிரித்தருள்வாய்
அங்குலைக்கந்திப்பொழிலெவ்வுட்பொற்கொடியம்மனியே.

திருட்டுடன்காமஞ்சினங்கொலைபொய்த்தல்செருக்குவதம்
வெருட்டுமுசூதாதியவிளைத்துத்தனைவேட்டவனை
மருட்டுறும்பொன்மயன்மாற்றிநின்பாதம்வழுத்திநிற்கும்
பொருட்டென்மனத்தைப்புணர்த்துதிபொற்கொடிப்பூரணியே.

தாய்தந்தையர்க்குஞ்சகோதரர்கட்குந்தகவெனவாய்
தந்தவர்க்குமற்றோர்க்குமெந்நாளுமனமழுங்குநோய்
தந்திடும்பொன்னனையறநின்கடைநோக்கருணூல்
ஆய்தந்தவர்கள்புகழெவ்வுட்பொற்கொடியன்னையெற்கே.

இகத்திற்குமேலாம்பரத்திற்குமாவெண்ணியீட்டுநர்தஞ்
சுகத்தின்பொருட்டுந்துறவோர்பொருட்டுநின்றொண்டர்தங்கள்
மகத்தின்பொருட்டுமுதவாப்பொருணசை மாற்றிநின்றுள்
அகத்தின்புறவெண்ணியுய்வானருளாடகவல்லியே. (சு)

ஓருமித்தவுள்ளத்தவருநட்டோருமுறவினரும்
பொருமித்தலைப்பட்டுப்போர்புரியச்செய்யும்புன்பகையைத்
தருமித்தமனியவாசைத்தவிர்த்துநின்றூளிலன்பு
நிருமித்தருள்செய்திபொற்கொடியாகியநின்மலியே. ()

மண்ணுற்றுநீருற்றுத்தீயுற்றுக்காலுற்றுவானமுமுற்
றெண்ணுற்றுதோக்குறுங்கேட்குறுமெவ்வெப்பொருள்களொறும்
நண்ணுற்றுநிற்கின்றபொற்கொடித்தாய்நின்னோனாமெனுங்
கண்ணுற்றுக்கண்டுகளித்தேத்தியுய்யக்கருணைசெய்யே. ()

பந்தப்புராரிதருகவவாயில்படைத்தழியும்
இந்தப்புரத்தினிடையாரியகமலமெனும்
அந்தப்புரம்விட்டடியேனெழுங்காலளித்தியெவ்வுட்
சந்தப்புரம்வாழ்தமனியவல்லிசரோருகையே. (கூஎ)

குக்கன்மனைதொறுஞ்சென்றடிகூழ்கொள்ளுங்கூற்றின்விரி
தக்கன்மசன்மந்தருமபலன்றுய்த்துத்தளர்தியேன்
விக்கன்முகலுற்றிம்மெய்விடுங்காலிங்கமிசை
மிக்கன்பின்வந்தாள்வெறுக்கைக்கொடியெனும்வித்தகியே.

தேகத்தினுலயற்சிவாகளாற்றெய்வத்தாலடையுஞ்
சோகத்தின்மூழ்குறுந்தொண்டன்றிருலீலைசுகமயமாம்
போகத்தின்மூழ்குறினிறுண்டாகள்வாழும்புகழ்ப்பரம
மாகத்தின்மன்னமகிழ்ந்தருளாடகவல்லியன்னே. (கூக)

தலைச்சுமையத்தலைநெயங்காற்புயத்திடைதாங்கிடினும்
நிலைச்சுமைநீங்கிற்றலைதுயர்நீங்கநிழற்றுமவினை
வலைச்சுமையென்னைவருத்துந்தமனியவல்லியன்னுய்
புலைச்சுமைநீங்குமுன்னல்வழியுய்த்தெற்புரந்தருளே. ()

புண்ணியபாவத்திகிரிபொறியாம்புரவிகளூண்
டுண்ணியதேகரதத்திதயமென்னுதருந்தில்
நண்ணியவென்னைமனச்சாரதிதிருநாட்டினின்பம்
உண்ணியநல்வழியுய்ககநிவல்லியுன்னுதியே. (சக)

புனிங்கக்கனவிற்பொலிமணிப்பூண்கள்புனைந்தவிர்பொற்
கலிங்கக்கனகவல்லித்தல்லிகாருத்தன்காதுகளை
குலிங்கக்குறியுய்த்தென்னைவடியற்குறித்துவிட்ட
இலிங்கக்கடத்தையிரிக்குமியலையிசைத்தருளே. (சஉ)

சிட்டியிற்றக்கதுமண்டச்சிதைவிற்சிதைவதுமா
ஓட்டியதுட்டவுடலைடைநிங்குமுபாயமென்னே

கிட்டியுயிர்க்குயிராந்துணையேயென்றன்கேதகெஞ்சுந்
திட்டியுங்காக்கனகவல்லித்தல்லிச்செய்யவளே. (சஙூ)

அஞ்ஞானிகளறியாவணமாவியடங்கிநிற்பாய்
சுஞ்ஞானிகடொழுதேத்தவருளந்தோன்றிநிற்பாய்
கைஞ்ஞானியாமிக்கடையேன்கனகவல்லித்தல்லியே
மெய்ஞ்ஞானிகணிட்டைமேவியுய்வாரேர்விரகுசெய்யே.

அமங்கலமாகுமவித்தையருரையடியறுப்பான்
சுமங்கலம்பூண்டுன்றாழ்தூர்த்தமுஞ்சுடர்ச்சோதிமயச்
சுமங்கலமாகின்செருபமுங்காட்டியித்துட்டனென்னுந்
தமங்கலவாதபரிசருள்பொற்கொடித்தம்மனையே. (சஙி)

வண்டானதுபரிசாதமலர்கண்டுமற்றோர்மலர்
உண்டாயிருக்கினுமன்னதைக்கண்டுகவாததுபோற்
றெண்டாமடியன்சுவணக்கொடித்தல்லிதூயநின்றூட்
டண்டாமரைமலரன்றிமற்றென்றினைச்சார்கிலனே. (சஙுு)

யூகித்துணரவொண்ணுதகின்மாயையுண்டாட்டினுற்று
மோகித்துநிற்குமென்சன்மந்தொலுங்கின்மூளரியங்தாள்
பாகித்துகொண்டுண்ணும்பாகவதர்பதம்பற்றியுய்வான்
தாகித்துநிற்கத்தயைசெய்கனகவல்லித்தல்லியே. (சஙஎ)

எண்ணுன்குகோடியிரட்டியிரட்டியெண்ணேய்ந்தவராய்
கண்ணுர்சிருட்டிதிதிலயந்தான்செயுஞ்சத்திகட்குக்
கண்ணுரிறைவியெனுங்காஞ்சனவல்லிக்கான்மலரை
நண்ணுதவர்மூத்திநண்ணுதவரெனுநான்மறையே. (சஙஅ)

பூதங்களைக்கொண்டுபூதச்சிருட்டிபுரிந்துநிற்றி
பூதங்களைக்கொண்டுபூதப்புரவுபுரிந்துநிற்றி
பூதங்களைக்கொண்டுபூதத்தழிவுபுரிந்துநிற்றி
பூதங்களைப்புரமாகக்கொள்பொற்கொடிப்பூமகளே. (சஙூ)

முலைக்கின்றமுக்குணமுத்திவழிமூயலாமலெனை
வலைக்கின்றவாரணித்தேயவைதம்மைவயப்படுத்தி
யிலைக்கின்றதுண்ணிடையேமவல்லித்தல்லியென்னுநின்றூட்
டலைக்கின்றபத்திமைச்செல்வந்தந்தெனைத்திதித்தருளே.

பிடியன்றனம்பசியுற்றழுனனம்புனல்வேட்கையுற்றழுன்
குடியம்புதம்பெற்றருந்திமனங்களிகூர்தலென்னக்
கடியம்புயக்கட்கனகவல்லித்தல்லிகாமர்நின்றுள்
அடியன்விழிகள்கண்டானந்தவாரியடையச்செய்யே.(நிக)

இருமைப்பயனையுமீறிலின்பத்தையுமீவதுவும்
இருமைப்படவருமின்னவிடர்களிரிப்பதுவும்
பெருமைப்பிறவிக்கடற்கோரணையாப்பிறங்குவதும்
அருமைக்கனகவல்லித்தல்லியன்பரடிப்பொடியே. ()

காழ்த்தபொறிக்குப்புலனுங்கடன்மைகள்கண்டிறுத்துப்
பாழ்த்தவென்னெஞ்சம்பயிர்படும்வண்ணம்பதப்படித்தந்
தாழ்த்தலிலாதநிற்குவரநேர்நிலைசார்ந்துநிற்பாய்
வாழ்த்தற்குரியபெரும்புகழ்க்காஞ்சகவல்லியன்னே. ()

அருள்வாளுருவியகச்செய்யகத்தூறறுத்தமுற்றித்
தெருள்வாய்பத்திப்பயிர்செய்வித்துணர்வறேக்குவித்தே
இருள்வாய்செருக்குக்களைகளைவித்துனதேவலின்பப்
பொருள்வாய்த்திடவருள்வாயெவ்வுட்பொற்கொடிப்புண்ணியையே.

வெதந்தருநல்விவேகப்பொருளைவிரித்திடுங்காற்
போதந்தருநினைகின்னுதன்றன்னைப்புரிந்துபற்றல்
ஏதந்தருபிறவிச்சிறைநீத்தலெனமுடியும்
நீதந்தரும்பொற்கொடித்தல்லியின்னனநேர்ந்தருளே. ()

துன்புப்பரமாவதிபிறவிக்கடழுேய்ந்தமுந்தல்
இன்புப்பரமாவதிதின்னடியிலியைந்திருத்தல்
என்புப்பரமுமஃதில்லாப்பரமுமெடுக்கினுநின்
அன்புப்பணியையருளாடகவல்லியம்மனேயே. (நிசு)

நிரதிசயாநந்தநீங்காததுக்கநிதானஞ்சொல்லின்
இரதிசயவைம்பொருளுணர்வுண்மையுமின்மையுமாம்
அரதிசயித்தப்பொருளேந்துந்தேறவருள்புரிவாய்
விரதிசயந்தொழும்பொற்கொடித்தாயெனும்வித்தகியே.

ஒண்மையவாமிப்பொருளேந்தினையுநன்குள்ளுமுணர்
வெண்மைக்கடிசத்துவகுணமின்மைக்குரைக்குமடி

தண்மையிராசதந்தாமதமாஞ்சத்துவமளித்தி
வண்மைத்திருவெவ்வுள்வாழ்பொற்கொடிப்பத்தவற்சலையே.

மூற்குணமூலநின்கோனருணைக்கத்தின்மூழ்குதலாம்
பிற்குணமூலமிப்பேரிருண்ஞாலப்பிறவியென்ப
முற்குணமென்றுமொர்மூட்டின்றியென்னுழிமூட்டவிப்பாய்
நற்குணவாரிதியேபொற்கொடியெனுநாயகியே. (நுகு)

அருணைக்குக்காரணமெம்மாவியற்கையருட்குணமே
இருணைக்கியபிறவிக்கடியெண்ணினிருவினையே
அருணைக்கடியேன்பெறவொருமாற்றமறைந்தருள்வாய்
தெருணைக்கினர்புகழ்சீதேவிபொற்கொடிச்சின்மயையே.

சொல்லுமருளுக்கடிசுகிர்தத்துவந்தோமதரிற்
செல்லுமிருவினைக்காரணமென்றுஞ்செறுமவித்தை
புல்லுஞ்சுகிர்தத்துவத்தைப்பொருத்திப்பொய்ஞ்ஞானமதை
வெல்லும்படிக்கருள்வாய்பொற்கொடித்தல்லிவேண்டலிதே.

அறைந்தவவித்தைதிதானமதாதியசித்துறவாம்
நிறைந்தசெளவார்த்தத்தடியயநத்தினிகழுறவாம்
பறைந்தவசித்துத்தொடர்பறின்னருட்பார்வைதந்தாள்
உறைந்தபுகழெவ்வுஞர்வாழும்பொற்கொடியுத்துங்கையே.

கிட்டமரதனக்கேழ்தின்முருவைக்கெடுப்பதெனத்
தொட்டவசித்துயிர்த்தொன்மைக்குணங்கடொலைத்தழிக்குங்
கூட்டவசித்தின்றொடர்பறுத்தென்றன்மைதோன்றுவித்தென்
இட்டமளித்தருள்வாயெவ்வுட்பொற்கொடி யிந்திரையே.

வேட்டுவன்கீடத்தையூகித்தன்போற்செய்விதமெனவே
நாட்டுமையநமூஞானம்பெறும்வழிநன்குறுவித்
தீட்டுமுயிரையுந்தற்சமமாக்குமிவ்வீடுதந்தாள்
ஈட்டும்புகழ்கொள்கனகவல்லிப்பேர்த்திருமகளே. (கூச)

திகந்தங்கமழைந்தருமலர்தேவர்கள்சிந்தியுளம்
உகந்தங்கமாமறையோதிப்பராவுமொளிப்புகழ்முச்
சகந்தங்கிப்பொங்குந்தமனியவல்லிநின்றிருணீனையா
திகந்தங்கமுற்றுழல்வேனுய்யநின்னுளத்தெண்ணுதியே. ( )

ஊரகநீரகங்காரகமாதியுயர்பதிபோல்
வாரகவெவ்வுரும்வாழ்மவல்லியையிந்திரையைத்
தாரகவாச்சியன்றன்மணவாட்டியைத்தாழ்ந்துதொழச்
சோரகமேயெங்ஙன்றுன்னுதிமூத்திச்சுகத்தினையே. (கூசு)

பிரபஞ்சவாழ்க்கைப்பெருமயல்பேர்த்திடும்பெற்மைத்தாம்
வரபஞ்சவத்திரவானவரண்டவாசிலையின்
ஊரபஞ்சனஞ்செய்துலகையொழுத்தவெள்வாளரக்கன்
சிரபஞ்சனஞ்செய்தசீராமன்றேவிதிருவருளே. (கூள)

பிறவிப்பிணிக்குப்பெருமருந்தானதுபேசிடுங்கான்
மறவிப்பிரபஞ்சமாயையைமாய்த்துமணமொருக்குங்
குறவிப்பிருந்தமுந்தொண்டர்தொகையுங்குளறுசீர்
அறவிப்பிரசுந்தொழும்பொற்கொடித்தாயகத்தருளே. ()

நன்மவியாதிமுதலானதோய்கட்குக்கொள்கலனுய்க்
கன்மவிபாசத்தினுக்கதிதோறுங்கடித்தெடுக்குஞ்
சன்மவிடாயைத்தணிப்பதுபொற்கொடித்தல்லிகபத்
தன்மவிலாசத்திருவடித்தெய்வத்தருமிழலே. (கூக)

கம்பகத்தாள்மும்மைக்காசினியோர்தமைக்காத்தளிக்கும்
அம்பகத்தாளமுதக்கடலாலயத்தாளருளாம்
பொம்பகத்தாள்புலமைப்பாவலர்புகழ்பொற்கொடித்தாய்
கம்பகத்தாரைக்கருதுகெஞ்சேகற்கதிபெறவே. (எ0)

மண்ணினுதித்தமணப்பூங்கொடிமறையோரிதய
விண்ணினுதித்துவிளங்கிடுமின்கொடிமெய்ம்மைகண்டோர்
எண்ணினுதித்திடுமிறினின்பக்கொடியேழையிற்பப்
புண்ணினுதித்தலைப்போக்கிப்புரந்திடும்பொற்கொடியே.

பெருந்தன்னேபேருலகத்தோரெவர்க்கும்பிறங்கி யெங்கும்
பொருந்தன்னேபுங்கத்தபோதனர்வாழ்புரை தோறும்புக்க
விருந்தன்னேவேதவிளக்கன்னேயென்பவவேரறுக்கும்
மருந்தன்னேபொற்கொடிப்பேர்கொண்டெவ்வுட்பதிவாழன்னேயே.

கரர்தொழுதாய்கல்லஞானியர்கண்ணிகவிற்றிடுதாய்
சுரர்தொழுதாய்சுருதிச்சிக்கறுத்தோன்சுகாதிமுனி

வரர்தொழுந்தாய்நல்வரந்தருந்தாய்வளர்வைகுந்தமா
புரர்தொழுகாபெவ்வுட்பொற்கொடித்தாயெனதுபோற்றுகெஞ்சே.

தொல்வினையேதொல்லிடிங்கோத்திரைதீர்கொடுங்கோதண்டப்போர்
வில்வினையேவட்டவிதேகர் கலவிளக்காமூலகத்
தல்வினையாவரும்வேண்டும்வரங்கடருங்கனக
வல்லியைவாழ்த்தின்வருந்திருமாமணிமண்டபமே. (எச)

எழுநூறரக்கியரீண்டிப்பகலுமிரவுமிழை
வழுநூலுமாற்றியவண்மையில்வல்விணையன்செய்வழுக்
குழுநூறிக்காத்திருகுத்தொலுமெவ்வுட்குறித்துவந்து
தொழுநூறுகோடியுயிர்கட்கருள்சுவணக்கொடியே. (எஞ)

கழுகுகரசன்முன்னில்லிலகண்டுகனலிடைசேர்
மெழுகுக்குமேற்பட்டுருகியமென்னெஞ்சமேன்மைநிலை
புழுகுக்கடிகமழ்பூங்குழற்பொற்கொடிப்புங்கவியே
தொழுகுக்கனேற்குஞ்சுரந்திடுங்காலத்தைச்சொல்லுகியே.

வீடணன்வேகவிழுப்பவொழுக்கினன்மெய்ம்மையன்புப்
பூடணன்புத்திரிக்குன்னுழிப்போந்தபுரிவெவருந்
தூடணனென்றுசொலுமெற்குந்தோன்றிடுமோசுரர்கள்
தேடணன்மாதவன்சேர்பொற்கொடியெனுஞ்செய்யவளே.

புனமானெனவந்தபொன்மான்செய்புள்ளுவம்போலடியேன்
மனமான்செய்வஞ்சனைமாண்டிடும்வண்ணம்வரமளிப்பாய்
தினமான்மநிட்டையர்சிந்தையுள்வைத்தெண்ணுஞ்செய்யவளே
கனமான்மியவெவ்வுட்பொற்கொடிப்பங்கயக்கண்ணன்னையே.

மகோதரன்பிண்டிவனக்கண்புரிபெருமாயைகட்குச்
சகோதரமாயைபுரிமனமாயைதவிர்த்தருள்வாய்
ககோதரப்பள்ளியன்கற்பத்துயிர்கள்களித்தடங்குஞ்
சுகோதரன்றோளணைசுந்தரப்பொற்கொடித்தூயவளே. ()

குயந்தலைக்குன்றிற்கொடியுருவாய்க்குத்திக்குற்றமிழை
சயந்தனைக்காத்திட்டதன்மையினுருங்கின்முமைத்தாள்
வியந்தனையேயென்னுவேண்டுமென்குற்றம்விமோசனிக்க
நயந்தனையாயினலம்பொற்கொடிநளிநாதனையே. (அ)

வீட்டும்படைதசைவெட்டும்படையங்கவேதநன்னூல்
தீட்டும்படைசித்தர்வேதகப்பொன்முடிற்றேசிகமாம்
ஈட்டும்பரமவருளூறின்யான்முத்தனென்பவனும்
நாட்டும்புகழ்ப்பொற்கொடியன்னையேகடனந்தனையே. (

பத்துக்களத்தன்பவநத்திருப்பினும்பாழ்த்திழிந்த
வத்துக்களாமுடல்வன்சிறைவாசம்வயாவுடைத்தாம்
நத்துக்களநரிநாதநப்பொற்கொடிநாயகியென்
தத்துக்களேந்துநின்னந்தாமவாழ்க்கையைத்தந்தருளே. (

அரக்கியரீட்டத்துறவிற்கொடிதாலடியனுக்குத்
தரக்கியற்றுரந்தயர்களாகியர்தம்முறவு
குரக்கியலாமனச்சேட்டையிரீஇப்பொற்கொடியன்னையே
அரக்கியற்றுமனாதாணினைவண்ணமருள்புரியே. (அஉ

பெருவடிவுற்றுப்பெருநீர்கடந்துநிற்பேணிவந்த
திருவடியைக்கண்டதென்னவடியனின்சீர்த்தகொண்கன்
றிருவடிவானநற்றேசிகன்றுளாச்சிறந்துபற்றல்
மருவடிவுற்றதெனத்தோன்றும்பொற்கொடிமாமகளே. (

நினக்குப்பிரியமுடனஞ்சனைசுதனேர்ந்துரைத்த
மனக்குப்பிரியகரனெம்மான்குணமாட்சிமைபோல்
எனக்குப்பெரியர்தம்மின்னவொழிக்குமிருங்கதையாங்
தனக்குப்புரையிலதாமெவ்வுட்பொற்கொடித்தாக்கணங்கே

திருவாழிதந்துதிருவடிசெப்புந்திறங்களெனத்
திருவாழிசங்கம்புயத்திற்பொறித்திடுந்தேசிகன்சொல்
கருவாழிநீக்குங்குரவர்பரம்பரைக்கட்டுரையாம்
திருவாழிலக்குமிபொற்கொடியம்பொருட்செல்வியன்னே

தலைமணிதன்னைத்தகைமாருதிகையிற்றந்ததொக்கும்
அலைமணியாழிப்பவநீக்கவத்தனருள்செய்மறைக்
கலைமணியாகுந்திருமந்திரம்பொற்கனங்குழையே
சிலைமணிப்பூருக்கனகவல்லித்தல்லிச்சிற்பரையே. (அஎ

திரிசடைச்செல்வினிலக்குத்துணையெனச்சேர்ந்ததொக்கும்
கரிசடையேழைகருவாழிவற்றிடக்காத்தளிக்கும்

பரிசடைபுண்ணியராகுநின்பத்தர்பதத்துணைகள்
விரிசடையோர்புகழ்பொற்கொடியாரணவேத்தியையே. ()

இராவணகும்பகருணதிமாற்றலரிவ்வுலகில்
இராவணங்கொல்வித்ததென்னவெனையென்றுமீடழிக்கும்
இராவணமாயையிகுவித்தருள்பெரியோரிதய
இராவணமேயெங்கனகவல்லித்தன்னையிந்திரையே (அகூ)

பானீர்பிரித்திடுமன்னத்தினுரியன்பண்புரையாற்
காணீர்கனன்மண்ணகனத்திற்கண்டவிக்காயத்தன்மை
மேனீர்மையுற்றவுயிர்த்தன்மைதேறவிழைந்தருள்வாய்
சூனீர்முகிறவழ்காவெவ்வுட்பொற்கொடிச்சுந்தரியே.(கூ0)

நினக்காகச்செய்யணையென்னப்பவக்கடனீந்துகிற்பான்
எனக்காகவன்பணைகட்டிமுத்திக்கரையேற்றுவிப்பாய்
சினக்காகங்காத்திட்டசீர்த்தியினுனிறைசெய்யவளே
புனக்காகதுண்டப்புகைகமழ்வீட்டெவ்வுட்பொற்கொடியே. ()

பெட்பகலாதகனகவல்லிப்பெருமாட்டிமுன்னி
புட்பகமேறியோத்திபுக்கென்னப்புலிச்சிறையாங்
கொட்பகநீக்கிப்பிரணவத்தேர்மிசைக்கொண்டுசென்று
கட்பகலாதவர்வாழ்திருநாட்டெனைநாட்டுதியே. (கூஉ)

செல்லுழியென்னெடுசெல்லாதவர்க்குச்சிறப்பளித்துச்
செல்லுழியென்னெடுசெல்லுநினக்கொன்றுஞ் செய்தறியேன்
அல்லுழிதந்தவென்னுசையறப்பொறுத்தாதரித்தாள்
எல்லுழிதந்தவிழையேமவல்லியிலக்குமியே. (கூக)

பழித்துணைக்காரணமாம்பாவையர்பண்டிப்பாழ்த்தகருக்
குழித்துணைகூத்துணைகோத்துணைகும்பித்துணைகுலவும்
விழித்துணைமீளாக்கதித்துணையக்கதிவீட்டினுய்க்கும்
வழித்துணையெவ்வுட்கனகவல்லித்தல்லிவானவியே.(கூச)

பெருநாடுமன்பதைபேசிசையெம்பெருமாட்டிசெங்கேழ்
மருநாட்டுமாமலராதனையாடகவல்லியன்னை
கருநாட்டுமென்விணைக்காட்டைக்களைந்துகலக்கமில்லாத்
திருநாட்டுமாமணிமண்டபத்தென்னைத்திகழ்த்துவளே. ()

இலங்கைவிட்டேகுழியெம்மானிடப்பண்பிசைத்தனை
அலங்கையஞரங்கம்விட்டெழுங்காலர்ச்சிராதிவழி
அலங்கைவகைசொல்லியாற்றைக்கடப்பித்தமாகவர்தம்
வலங்கைதொடுவித்தப்பொற்கொடித்தாய்வைப்பள்வைகுந்தத்தே.
மெத்தியசூரியையிக்குடில்விட்டெழும்வேலையன்பாம்
உத்தியசூரிகளேத்திடும்பொற்கொடியுற்றெவரும்
நத்தியசூரியமண்டலவாயினடத்துவித்து
நித்தியசூரிநிகாயத்திலென்னைநிறுத்துவளே. (கூ௯)
செத்துப்பிறக்கின்றதேவர்க்குமானுடதேகிகட்கும்
செத்துப்பிறவாவமரர்க்குந்தாயெனுஞ்செய்யவளே
கத்துப்பிறங்குங்களப்பொற்கொடியெனுநாயகியே
தத்துபபிறவிதவிர்த்தெற்கந்தாமதைத்தந்தருளே. (கூ அ)
மைத்தன்மறையவன்மார்த்தாண்டனென்றமறையெனும்
மைந்தன்றிருழில்களிம்மைந்தன்வயின்மருவாதொழிய
மைத்தன்பின்மாற்றிகின்மாளாச்சுகாகந்தவாரியாம்
மைத்தன்பெரும்பதம்வைத்தருளாடகவல்லியன்னே.
திக்குற்றிர்த்திக்கனகவல்லித்தல்லிசெய்மழலை
எக்குற்றமேயினுமீன்றோருளத்தின்பினேற்பதுபோற்
சொக்குற்றகெஞ்சன்றெழுத்தவித்தண்டமிழ்ச்சொற்றொடையல்
பொக்குற்றதேனுந்திருவுளங்கொண்டுபூணந்தருளே. ( )
வாழிதிருவெவ்வுள்வாழியுட்டாபம்வரையிலஞ்சி
வாழிவிரிகியவிழுமாகுணமன்பதிக்கை
வாழியதிண்வளர்வீரராகவமாயனென்னும்
வாழிகனகவல்லித்தாயென்னுள்ளமலரகத்தே.

உவ்வுட்பொருளாயுலகுமுயிருமுயிர்த்தளிக்கும்
எவ்வுட்கனகவல்லித்தாய்க்கொருதூமிசையலங்கல்
அவ்வுட்பொருள்சொலிராமானுசாரியனம்பதத்தான்
செவ்வுட்பகைதீரெதிராசதாசன்றெரித்தனனே.

கனகவல்லித்தாயார் மாலை

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

அத்திகிரிப்
பெருந்தேவித்தாயார் மாலை.

காப்பு.

திருக்கச்சிமேவுபெருந் தேவித்தாய்தாண்மேல்
உருக்கத்தமிழ்மாலை யோதத்—திருக்கருணை
வாரிமாறன்பதமே வாழ்த்தியுய்ந்தகென்குருகைக்
காரிமாறன்பதமே காப்பு.

நூல்

பூவிற்சிறந்ததம்போருகப்பூமணம்பூத்துயிர்க்குங்
காவிற்சிறந்ததுகற்பகக்காவெனக்கற்றுணர்ந்தோர்
பாவிற்சிறந்ததுநம்பெருந்தேவியைப்பன்னிடும்பா
ரவிற்சிறந்ததவள்பேர்நவின்றிடுகாவென்பவே. (க)

அருந்தேவியன்பிற்றலைப்பிரியாதவடியர்முன்னர்
வருந்தேவிவானவர்மண்ணவர்வேண்டும் வரங்களெல்லாந்
தருந்தேவிதந்தித்தரணிச்சகரர்த்தனன்றன்றுணையாம்
பெருந்தேவிதன்புகழ்பேசநெஞ்சேயென்றும்பேணுதியே. (ங)

அத்திகிரிப்பதிவாழமாசனன்பாந்துணைவி
நத்திகிரிக்கரநான்குடையாணலினைனையாள்
அத்திகிரிகொளிவ்வண்டமெலாம்பெற்றளிக்குமகா
சத்திகிரீசைபுகழ்பெருந்தேவிசரணெனக்கே. (ஙு)

கச்சித்திருப்பதிவாழ்கனகாம்பராகாதலுடன்
மெச்சித்திருப்புகழ்பாடுநர்க்காக்கும்விமலிவிண்ணோர்
உச்சித்திருப்பொறியாம்பெருந்தேவிதன்னுள்ளடியை
இச்சித்திருப்பதுநெஞ்சேநமம்பேற்றுக்கிலக்கணமே. (ச)

வரத்திற்சிறந்தபெருந்தேவியன்னவடிவவொளி
சிரத்திற்றிருவுத்திநெற்றியிற்சுட்டிசெவிக்குழைகள்
உரத்திற்பெருமணிமாலையொண்காலணியூற்றுமொளித்
தரத்திற்புகுந்துகரிசித்தல்கண்ணின்றரமலவே. (ஞ)

அளியின்கடலேயழகின்கடலேயறக்கடலேக்
களியின்கடலேக்கலையின்கடலேக்கற்புக்கடலேத்
தளியின்கடலன்னதந்திகிரிப்பெருந்தேவியென்னும்
ஒளியின்கடலேயுளக்கடல்வைத்துவக்கின்றனமே. (சு)

அவிப்பாத்திரருமறவோருமந்தமிழாரியத்தின்
கவிப்பாத்திரருங்களிக்குறின்கீர்த்திக்கரும்பிரதஞ்
செவிப்பாத்திரத்தின்மடித்துண்டுகாலுந்திளைக்கும்வண்ணம்
புவிப்பாத்திரர்தொழுந்தாட்பெருந்தேவிபுரிந்தருளே. (எ)

புலிவாயினின்றும்புல்வாயைப்புரப்பதுபோற்பொறியின்
வலிவாயினின்றும்வதைக்குமறவிதன்வாயினின்றுங்
கலிவாயினின்றுமெனைக்காத்தளித்திடவுளர்கள்
பொலிவாயிற்கோயிற்பெருந்தேவித்தாயெனும்புண்ணியையே. ()

சருப்பத்தின்வாய்கொடவலையைக்காத்திடுந்தன்மையென்னக்
கருப்பத்தில்வந்துபிறந்துகுடும்பமென்காட்டழலின்
உருப்பத்தினையுமெளியனைக்காத்தியர்புலவர்
விருப்பத்தின்மேவும்பெருந்தேவிநாமவிசித்திரமையே. (கூ)

காயமயக்கமுங்காரிகையார்தங்கலவிதனில்
நேயமயக்கமுநேமிமயக்கமுநேடுபொருண்
மாயமயக்கமுமாகுமலினங்கண்மாயவருட்
டோயமளித்தருள்வாய்பெருந்தேவிசுகோதையையே. (கo)

வரற்குமரற்கும்வளர்பூதங்கட்கும்வகுக்கும்பஞ்ச
சரற்குந்தகுகட்புலியாதிகட்குந்தடித்ததண்ட
கரற்குன்னன்பர்கள்சற்றுமஞ்சாரித்தரணியில்வாழ்
நரர்க்குஞ்சுரர்க்குமருள்பெருந்தேவிநளினமின்னே. (கக)

கண்டென்கெனேகன்னற்பாகென்கெனேகைத்தோங்குமிக்குத்
தண்டென்கெனேதழைவாழைபலாமாத்தருக்கடரும்
பண்டென்கெனேபசும்பாலொடுதேனென்கெனேவழுதத்
துண்டென்கெனேபெருந்தேவிநின்னுமைச்சுவையினேயே. ()

செவிக்குமமுதநற்சிங்குவைக்குந்தெவிட்டாவமுதங்
கவிக்குமமுதங்கடிந்தோர்மனங்களிகொள்ளமுதம்

புவிக்குமமுதம்பொன்னுட்டவர்க்கென்றும்புத்தேளமுதங்
குவிக்கும்புகழ்ப்பெருந்தேவிகல்யாணகுணகணமே.(கஙூ)

மணியென்கெனவிம்மகிதலத்தோர்க்குவயங்குமுத்து
மணியென்கெனமம்மர்மாரியைமாய்த்திடவந்தசித்த
மணியென்கெனமந்திரமென்கெனமெய்ம்மதிதருங்கண்
மணியென்கெனபெருந்தேவியென்சூடாமணியினையே. ()

பூவைநிகர்த்தமென்சொல்லாள்பொன்னுடுபுகழ்தருவின்
காவைநிகர்த்தகரத்தாள்கண்ணுடிக்கபோலத்திளுள்
பாவைநிகர்த்தபடிவத்திளுள்பதுமப்பதத்தாள்
மாவைநிகர்த்தவிழிப்பெருந்தேவியைவாழ்த்துநெஞ்சே.()

போதனத்தாற்கும்புருகூதனுக்கிப்புலவர்கட்கும்
மாதனத்தாற்கும்வருணுக்கிகட்குமறலியெனுஞ்
சோதனத்தாற்குந்துறவோர்க்குமாந்தர்க்குஞ்சுத்தசித்த
சாதனத்தார்தொழுதும்பெருந்தேவிசரணியையே. (கசூ)

எல்லாவுலகமுமின்புறவேண்டிமுன்னீன்றவளாம்
எல்லாவுலகுக்குமென்றுமெவணுமிரட்சகையாம்
எல்லாவுலகத்தவர்க்குநியாமகையாமியங்கும்
எல்லாவுலகும்புகழ்பெருந்தேவியிறையவளே. (கள)

விரத்தியில்லார்கட்குமெய்ஞ்ஞானங்கூறல்வியர்த்தமென்றே
தரத்தியல்சாத்திரஞ்சாற்றுமதனற்சகத்துக்கெல்லாங்
குரத்தியெனுநீயதுநன்குவாய்த்திடுங்கொள்கைசொல்லிப்
புரத்தியெனப்புண்ணியம்பெருந்தேவிபொற்பூமகளே. ()

பொறிக்கள்வர்நின்பூசனைக்கேயுரியபொருளைச்செந்நாய்
கொறிக்கொண்டுபோவதெனக்கொடுபோவர்குறித்திடுநன்
னெறிக்கொண்டுநின்றுன்றிருப்பணிசெய்துநிதமுமுய்யக்
குறிக்கொண்டுகாத்தருள்வாய்பெருந்தேவிகுணக்குன்றமே. ()

புகுவழிமாயையிற்போந்திட்டுநல்லபொல்லாதவெனப்
பகுவழிக்கன்மரிபம்நின்பகட்டுப்படர்கூடும்பச்
செகுவழிக்கானந்திரிகின்றவென்னைத்திருத்தருடின்
பிகுவழியோர்புகழும்பெருந்தேவியிலக்குமியே. (உ0)

மனநிலைஞானவசுவெரிக்காவிடின்மற்றுமற்றும்
வினைநிலைவியாவரிதாள்கொளுத்தாவிளைநிலத்திற்
றினைநிலைப்பூடுசெழிப்பெனச்செய்வனசெய்தருள்வாய்
அனைநிலைநீங்காப்பெருந்தேவித்தாயாமருணிதியே. (உ

கருப்பூரமின்றியுமப்பேழையவ்வினைகால்வதென
விருப்பூர்மனநசையின்றியும்வாசனைவீறிற்கும்
மெருப்பூர்துகிலினதைநீத்தருடிகிமிர்ந்ததந்திப்
பொருப்பூர்சினகரம்வாழ்பெருந்தேவிபுராதனையே. (உ

நின்கதைகேட்குநியமநின்னுமநிதமுரைத்தல்
நின்பலிநிட்டைநின்மூர்த்திரநின்பணிநேசமென்றும்
நின்வழிபாடுநினக்காப்பொருள்சுகநீத்தலிவை
நின்னளிக்காரணமாம்பெருந்தேவிநிருமலியே.

புராதனைபொன்மகள்பூமகள்மாமகள்பூங்கமல
வராதனைவாரிசக்கண்ணிமணிவண்ணன்வண்மணிசேர்
உராதனைநங்கள்பெருந்தேவியுய்வின்கண்ணுக்கமிலாக்
கிராதனையாளும்பரமகல்யாணிக்ருபாகரியே. (உ

வேதனையின்றவளேவேழவெற்புறைவித்தகியே
வேதனைசெய்யும்வினைப்பகையாலும்விறற்பொறியின்
சாதனையாலுந்தளர்வேனையின்னுந்தளரும்வண்ணஞ்
சோதனைசெய்தல்பெருந்தேவியன்னுய்சுகிர்தமன்றே.

ஓலவட்டத்துவரோதவொலியலுத்திருக்கும்
ஞாலவட்டத்தினுநல்லின்பவீட்டினுநாயடியேன்
காலவட்டத்தென்றுமெம்பெருந்தேவிகளித்துநினக்
காலவட்டப்பணிசெய்துய்யும்வண்ணமருள்புரியே. (உ

பாக்கியவானச்சுதன்மாவைப்போலப்பழுத்தவுள்ளந்
தேக்கியவன்புடன்றேமலர்கொண்டுதினந்தினமும்
ஆக்கியமாலினின்னம்புயத்தாளிலணிந்துயவே
வாக்கியநல்லருள்செய்பெருந்தேவிவரோதையையே. (உ

அந்தரங்கப்பணிப்பாற்கடறன்னையரிதின்விட்டு
வந்தரங்கப்பெருங்கோயிலும்வாரணவெற்புமுறை

இந்தரங்கப்பண்முகப்பெருந்தேவியிறைவிகின்றன்
அந்தரங்கப்பணிசெய்துய்யும்வண்ணமருள்புரியே. (உ)

சோகாந்தகாரத்தொடுகடனீத்தபின்முகையர்கள்
மோகாந்தகாரமுன்னீர்மூழ்குமூடனுமோனமுற்ற
எகாந்தசிலரிறைஞ்சுநின்பாதமிறைஞ்சியுய்வான்
மாகாந்தகாட்டில்வைப்பாய்பெருந்தேவிமறைக்கொழுந்தே.

வானத்தில்வையத்தில்வாழ்வோர்கள்வந்துவணங்குஞ்சந்தி
தானத்திற்சந்ததநின்பணிசெய்துதழைக்கும்வண்ணம்
ஈனத்தின்மிக்கவெளியேற்கிரங்கியினிதருள்வாய்
ஞானத்தின்மிக்கோர்புகழ்பெருந்தேவிநயாசலையே. (ங)

கர்த்திற்சிரத்திற்முழுதிறைஞ்சாதகயவர்கட்கும்
மரத்திற்குமாவிற்கும்வேற்றுமையொன்றுமதிக்கிலேன்
வரத்திற்சிறந்தோர்புகழ்பெருந்தேவியிம்மானுடமாந்
தரத்திற்சிறந்தபிறப்புமந்தோதவத்தாழ்வுற்றதே. (ஙக)

சேராதனமுதலாகவெண்ணெண்வகைசேர்வளமும்
தீராதனமடவார்நசைமண்ணைசெம்பொனசை
வாராதனகநல்வைகுந்தவாழ்வும்வழுத்திநினை
ஆராதனம்புரியார்க்கத்திமாமலையம்புயையே. (ஙஉ)

அந்திகிரிப்புவிபோற்றருளாளனருளுஞ்சங்கஞ்
சென்திகிரிப்புயஞ்சேர்ப்போனருளுந்திகழுமொற்றை
வெந்திகிரித்தேரவர்போலொளிர்முத்திவீடுமெய்துங்
கந்திகிரிப்பெருந்தேவிதிருவருள்சார்ந்திடினே. (ஙங)

பொருள்வருநல்லபுவிவருமெண்வகைபம்பாகமவருந
தெருள்வரும்பத்திமைச்செல்வம்வருநற்றிருக்குரவன்
அருள்வருமன்னதனலழியாதவமுதம்வரும்
இருள்வருகூந்தற்பெருந்தேவிசீர்த்தியிசைப்பவர்க்கே. ()

எவ்வழியெண்ணிலிருணரகங்களிரித்தொழிக்கும்
அவ்வழிதன்னையடியேற்கிரங்கியறைந்தருள்வாய்
செவ்வழியோர்தொழுஞ்சேவடியாய்சிறைத்தேன்கணங்கள்
செவ்வழிபாடும்பொழிற்கச்சிவாழ்பெருந்தேவியன்னே.()

தனுவாதியாற்செய்பவக்கழுவாயினைச்சாற்றிடுங்காற்
றனுவாதியாற்றனதுசெய்துகோடறகுதியென்று
மனுவாதியர்சொல்வர்செய்துய்யவுள்ளமகிழ்திமறை
மனுவாதியாற்றெழுமெம்பெருந்தேவிமலர்மகளே. (கூசு)

பவர்க்கந்தரும்பவமென்றுபன்னூல்கள்பணித்திருந்துங்
கவர்க்கமுதளிருபாணன்கின்மூலங்கவற்றமின்னுர்
சுவர்க்கம்விரும்பித்துயர்தேடுமென்மதிச்சூனியத்தைச்
சுவர்க்கந்துதிபெருந்தேவிநிற்கென்னென்றுசொல்குவனே.

யாதியரசனில்யெளவனமங்கையரின்பமையல்
யாதிவருத்தவிளைமைக்குமூப்பினைவிற்கவெண்ணுங்
தியாதியறிவினனெவ்வாறுநின்பதங்கிட்டியுய்வேன்
தயாதிகுணமுடையாய்பெருந்தேவிசரோருகையே.(கூஅ)

வருத்தும்பிணிநிலைக்கேற்றபடிகல்வயித்தியர்கள்
திருத்துஞ்சிகிச்சையிற்சீர்த்துஞ்சிறத்துஞ்செறுக்குந்தன்பைப்
பொருத்தும்பவங்கட்குப்போக்கைவிதித்தனர்போற்றகிலேன்
மருத்துன்றடியடைந்தேன்பெருந்தேவிமலர்மகளே.(கூக)

போதகநீராட்டினும்பின்னுந்தூளியைப்போர்த்தலென
ஓதகநீக்குமுபாயமியற்றினுமூற்றுமற்றும்
பாதகஞ்செய்தலின்வீணினதருள்பார்த்துநிற்பன்
சாதகமென்னப்பெருந்தேவியன்னுய்தயைபுரியே. (சூ0)

அதிகாரியானவடியேனஞ்ஞானத்தனன்னதனுல்
உதிகாரியமெனும்பாவங்களொட்டற்றெழியகில்லா
வித்திகாரியமதியேபாவவேரறவெட்டிவிடும்
அதிகாரிகைகொள்பெருந்தேவியன்னதருள்புரியே. (சுக)

பத்தியமாவுண்பவர்க்குப்பிணிபருக்காதடியேன்
நித்தியமாகநியமவொழுக்கத்தினின்றுமெல்லத்
தத்தியந்தத்துவஞானமடையத்தயைபுரிவாய்
சத்தியகாமிப்பெருந்தேவித்தாயாஞ்சரோருகையே. ()

ஐந்துபொறியையவித்துமரிவையராசையற்றும்
ஈந்துகருமபலனெவிடுத்துதவையொழித்தும்

மூந்துசரணாகதிசெய்துமுப்புவர்மொய்கருணைச்
சிந்துவெனும்பெருந்தேவியெளியனென்செய்குவனே. ()

நத்தியிழைத்தகழுவாய்பலவுநின்னல்லடியிற்
பத்தியிலாதவர்க்கென்னேபயக்கும்பரமபத
முத்தியடையமுயல்வோர்க்கருளுமுதல்விநின்பாற்
பத்தியளித்தருள்வாய்பெருந்தேவிபராபரையே. (சச)

எவர்நின்குணத்தன்பும்பாதத்திதயமுமேயவைப்போர்
அவர்கழுவாய்களனைத்தும்புரிந்தவராருயிரைக்
கவர்சமன்றன்னேயுங்காணுரவர்பதக்காதறந்தாள்
தவர்துதிபாதப்பெருந்தேவித்தாயெனுந்தாக்கணங்கே. ()

மங்கையைமன்னாமாதாபிதாவைமறையவரைச்
சங்கையறக்கொல்லறன்குருபன்னியைத்தான்முயங்கல்
கொங்கைக்குடித்தல்முதலகுற்றங்களைக் கொல்லுநஞ்சாம்
நங்கைக்கரசிபெருந்தேவிநாமநவில்வதுவே. (சசு)

சீருற்றநின்றிருநாமங்கள்செப்புந்திறத்தினரை
நேருற்றுநின்றதுநின்மலராக்கிநீர்மையென்னச்
சூருற்றிடுகன்மயோகஞ்செய்யாதுதொடுகடல்சூழ்
பாருற்றகீர்த்திப்பெருந்தேவித்தாயெனும்பண்ணவியே. ()

தோலடியன்னநடையாரிரதித்துணைவன்மலர்க்
கோலடியுண்டுங்குவிகொங்கைமங்கையர்குத்திரக்கண்
வேலடியுண்டுமிளைத்தசிறுவனின்வேதமுடி
மேலடிவாழ்த்தியுய்வான்பெருந்தேவிவிழைந்தருளே. ()

மூப்பொருணீர்மையொர்மூட்டின்றிமுற்றுமுறையினுள்ளங்
கைப்பொருளென்னக்கடையேனிதயக்கண் கண்டுணர
எப்பொருளும்பெற்றளிப்பவளேயிருக்கின்றலையார்
அப்பொருள்வேட்கும்பெருந்தேவியன்னையருள்புரியே. ()

எண்கூடெனுநின்னிடம்வைத்திபக்குன்றிறைவிதனைப்
பண்கூடெனும்பசும்பாப்பாடியேத்திப்பணிதியெனிற்
புண்கூடெனுமிப்புரநீக்கிமுத்திப்புரத்தில்வைப்பள்
கண்கூடெனவிதைக்காண்டிகவலலென்காதனெஞ்சே. ()

வாரணமாமலைவாழ்பெருந்தேவிமலரடியை
ஆரணவாணருமந்தரவாணருமன்பறிவிற்
பூரணபூதரும்போற்றிடநீயங்ஙன்போற்றகில்லாக்
காரணமென்மனனேநீயெனக்கதைக்கட்டுரையே. (நிக)

திலத்தினினெய்யெனத்திக்காலம்விண்புவிசேருமெவ்வெத்
தலத்தினுமத்தலஞ்சார்ந்தபொருளினுஞ்சார்ந்துறைவாள்
நலத்தினுயர்பெருந்தேவிபொன்றுப்பதநல்கடியைப்
புலத்தினுழல்மனனேயென்றுஞ்சிந்தித்துப்போற்றுதியே.

மைப்பட்டகூந்தற்பெருந்தேவிவண்புகழ்வாழ்த்தலொரீஇச்
சைப்பட்டவேனையர்தம்புகழ்வாழ்த்தறடையொன்றின்றிக்
கைப்பட்டகாமரமிழ்தைக்கமரிற்கவிழ்த்துவிட்டுப்
பைப்பட்டபாம்பின்பழிகஞ்சயின்றிடும்பான்மையதே . ()

நெய்யிடுந்தோறுநெருப்பவியாதந்தநீர்மையென்ன
மையிடுங்கண்ணியர்மையனுகர்தொறுமாய்தலில்லை
செய்யிடுசெந்நெற்பயிரோங்குங்கச்சித்திருப்பதிவாழ்
கையிடுகங்கணமாதேவியஃதுகடிந்தருளே. (நிச)

கறையடிமாமலைவாழ்பெருந்தேவியென்கற்பகமே
கறையடித்தாலெனத்தப்பாமலெற்குச்சரமகின்றன்
உறையடிச்சேவையுறுமோவுரோவெனவெனுள்ளம்
பறையடிக்கின்றதுகின்றிருவுள்ளப்பரிவென்னையே. (நிந)

குறவருமஞ்சிடுங்குன்றக்கொடுமுடிகொள்கழையில்
உறவருதேனூடவனுற்றுண்டிடவன்னலொக்கும்
அறவருங்காணவரியநின்சேவையையான்விரும்பல்
துறவருவந்துதொழும்பெருந்தேவிசுகோதயையே. (நிசு)

மகரக்கொடியோன்மலர்க்கணைமாரிவருத்தவந்த
திகரக்களையுடன்சென்மக்களையுந்தீர்த்தருள்வாய்
தகரக்கருங்குழற்றூயதெரிக்கைத்தந்திகிரிச்
சிகரச்சிகரம்வாழ்பெருந்தேவிதிருமகளே. (நிஎ)

சத்தியஞ்சாந்தம்பொறைசுகதுக்கச்சமத்துவமுட்
சுத்திபொறிவெற்றிசூழ்ந்திடும்பூதத்துரோகமின்மை

பத்தியிலைகொணின்பத்தர்பெருமைபகர்வதற்குச்
சத்தியிலேனெனையாள்பெருந்தேவிதயாபரையே. (நி அ)

அயலவர்துக்கங்கண்டாற்றுமையன்பர்கட்கன்புசெய்தல்
மயலவர்கேண்மைமறுத்தனெஞ்சுன்னுழிவைத்தலித்தச்
செயலவராகின்னடியார்பெருமைகள்செப்பரிதாற்
கயலவிர்கட்பெருந்தேவியன்னுய்பொற்கராம்புயையே. ()

வீறங்கவேதச்சிரத்திணுமெட்டுவிதங்களெனக்
கூறங்கயோகியருள்ளத்தும்வாழ்நின்குரைகழலிற்
றேறங்கமானபுளகாதியுற்றுத்தினமிரண்டோ
டாறங்கந்தோயப்பணிவேன்கரிகிரியம்மனேயே. (கூ0)

வாசனைவாய்ந்தவனமாலைமார்பில்வயங்கிருடி
கேசனைநின்னைக்கிளருளத்தான்மிக்ககேண்மையொடும்
பூசனைசெய்யுமடியேனைப்புல்லிப்பொரும்விடய
வாசனைதீர்த்தருள்வாரணமாமலைவானவியே. (கூக)

மும்மையுலகமுதல்வியுமக்காலமுமோர்தலைவி
இம்மைமறுமைப்பயனெயளிக்குமிறைவிநம்மை
எம்மையுமாட்கொளுமெம்பெருமாட்டியிபமலைவாழ்
அம்மையெனும்பெருந்தேவியிதனையறிதிநெஞ்சே. (கூஉ)

தருக்கறுத்துச்சன்மச்சக்கரம்வற்றுத்தகவுசெய்யுஞ்
செருக்கறுத்துச்செல்லறீராமைசெய்துதெறுமவித்தைதத்
திருக்கறுத்தன்பர்தஞ்சிந்தையிற்செம்பொருடேருணர்வாம்
பெருக்களித்தாளும்பெருந்தேவியெங்கள்பெருந்தனமே.

தாமக்கருங்குழற்றையலர்தாய்தந்தைசாருறவோர்
ஈமக்கடமுடைப்போரிவ்வுடற்கேயியைந்தவராம்
நாமக்கடற்புவியீர்கேண்மினென்மொழிநாளுநங்கள்
சேமக்கருத்துடையாள்பெருந்தேவியென்சிற்பரையே. ()

தேவப்பிரமவிராசமுனிவருந்தேவர்களும்
ஓவப்படிவவுமையாதியருமூலகினரும்
மேவப்பகட்டுக்கிரிக்கோயிலிற்கொலுவீற்றிருக்குங்
காவப்பன்காந்தையைக்கண்டென்றன்கண்கள்களித்தனவே.

எண்ணிலையும்மறந்தில்லத்துமோகவிருளிற்சிக்கிச்
சின்னிலைக்காலம்பொருடேடலாதிச்செயல்புரிந்தும்
புன்னிலைப்பேபாகம்புகித்துமுறங்கியும்போக்கியன்னாய்
நின்னிலையும்மறந்தேன்பெருந்தேவியென்னீர்மையென்னே

மன்னுவுடம்புமனைவிமதலைமனைபொருட்கண்
மன்னுசைவைத்துமரணமறந்துமகிமையங்கி
இன்னுயிற்றுமிவ்வேழைக்கிரங்கியினிதினுய்யப்
பொன்னுருகூறுதிபோதகவெற்புறைபொன்மகளே. (சூஎ)

காரந்தருபவள்சந்ததியூர்திதனம்பலபூண்
ஆரந்தருபவளம்புவியாளதிகாரமுடன்
வீரந்தருபவள்வெற்றிதருபவள்வேதவிழுச்
சாரந்தருபவடந்திகிரிப்பதித்தம்மனையே. (சூஅ)

யோகத்தினவ்வவ்வருணச்சிரமத்தொழுகுபலப்
பாகத்தைநோக்காதியற்றலினெய்தும்பயன்களினும்
மோகத்தைநீத்துங்கினையெண்ணிடும்பயன்முக்கியமாம்
மாகத்தைநண்ணியமாதங்கமாமலைமன்னவியே. (சூகூ)

திராதசன்மஞ்செறுத்தமுதம்பெறுஞ்சிந்தையர்கட்
காராதவன்புடனின்றிருநாமமனவரதஞ்
சோராதநாவிற்சொலலன்றிவேறுருசூழ்ச்சியில்லை
ஓராதவுள்ளத்துறையாக்கரிகிரியுத்தமியே. (எ0)

விஞ்சியவாயுள்குடும்பிக்கிருப்பினும்வீண்மிகவும்
எஞ்சியவாயுளிரதியிலார்க்கின்பவீடளிக்குங்
கொஞ்சியகின்னடியேனுடைக்காலத்தின்கூறுதனைப்
பஞ்சியல்பாகப்பெருந்தேவிசெய்திபயன்படவே. (எக)

அந்தியகாலமணித்தாகலினென்றனசையெல்லாம்
நந்தியஞானவயிராக்கியமெனுநாந்தகத்தான்
முந்தியறுக்குமுயற்சிதந்தாளுதிமூவுலகும்
உந்தியகீர்த்திப்பெருந்தேவித்தாயெனுமுத்துங்கையே. ()

பரணியெனப்பவப்பஞ்சரம்பூரிக்கும்பாவிநின்னைச்
சரணியையென்றடைந்தேனென்சழக்கைச்சமித்தருள்வாய்

அரணியிலங்கியெனவெங்குமார்ந்துறையம்மனையே
கரணிபுகழுஞ்சகாதகபுண்யசரித்திரையே. (எக)

சாத்திரச்சக்கினர்சால்புறும்யோகக்கருமூணர்வாம்
நேத்திரரென்னவடியேனினதுநிலையறியும்
பாத்திரனல்லேனெனினுனின்பாதப்பணியளித்தாள்
தாத்திரியோர்புகழும்பெருந்தேவிசகாதனையே. (எச)

தீதேவிளைத்துப்புறந்திரிசேரலர்தீயநட்புங்
கோதேவிளைக்குமுட்கூடார்குறும்புங்குலைத்தருள்வாய்
பூதேவிநீளையுடனெம்பிரான்கட்புரிந்திருக்குஞ்
சீதேவிசீர்த்திப்பெருந்தேவித்தாயெனுஞ்சின்மயையே. ()

ஈயாரிரக்கமிலாதாருயிர்கட்கிடும்பைசெய்வார்
ஆயாரருங்கலையாயார்நின்னன்பரருச்சனைக்குச்
சேயாரிணைக்கத்தைத்தீர்த்தருள்வாய்பெருந்தேவியன்னாய்
தூயாரிதயசுகந்தகளிலசுகாசனையே. (எசு)

வையத்தின்மையல்வருத்தாமலுங்கடைவைகலென்னை
ஐயத்தின்பையுளணுகாமலுமென்னகமலரின்
மையத்தினுமறைவாணர்வழுத்துநல்வாரணமாச்
சையத்தினுமுறையும்பெருந்தேவிதயைபுரியே. (எஎ)

வானேக்கியோங்கியவாரணமாமலைமாமகளே
சேனேக்கியதிருக்கட்பெருந்தேவியென்சிற்பரையே
பானேக்கிநிற்கின்றபாலனினின்னருட்பார்வையென்செங்
கோனேக்கிநிற்பனெனதியல்பெற்குக்கொடுத்தருளே. ()

பொறிவழியோடிப்புலன்மேயுமென்மனப்பூசல்வண்டு
குறிவழிவந்துன்குரைகழற்கோகனகத்தினின்றும்
வெறிவழிதேனுண்டுவேட்டைகடீர்ந்துவிரும்பிநின்னை
நெறிவழியுன்னவருள்வாய்கரிகிரிநின்மலையே. (எசு)

மாயையின்மம்மர்மருவிக்குணம்பொறிமன்னுதன்மச்
சாயையடைந்தென்றன்றன்மைத்தருமந்தவிர்ந்துபவ
நோயையடைந்ததைத்தீர்ப்போர்களின்றி நுடங்குமிந்தச்
சேயையளித்தல்பெருந்தேவியாதினுஞ்சீரியதே. (அ0)

செடியார்வினையின்றிறத்தன்சினத்தன்றெருள்கொளுநின்
அடியார்பெருமையறியாவவலனரும்பொருளால்
படியார்பகுப்பினருகுமெம்பாலிக்கும்பாரநிற்கே
கடியாரளகப்பெருந்தேவியாங்கருணையையே. (அக)

நின்னேச்சரணவரணமடைந்திடுகிட்டையிலான்
றன்னேச்சனனமரணநிதாபந்தணக்கஞ்சில்லா
அன்னேத்திறப்பெருந்தேவிநின்பாதத்தடைக்கலமாம்
என்னேப்பகரவையெய்தாவிரகொன்றிழைத்தருளே. ()

சிரியதேசிகன்சீரருளின்றித்தெறும்பொறியைப்
போரியனெஞ்சத்தைப்போதத்தடக்கிடப்புந்திசெய்வோன்
பூரியன்றேசிகனேவலிற்போதகப்பூதரம்வாழ்
ஆரியவர்க்கத்தரசியவற்றையடக்குவனே. (அங)

புரந்தரனுதியர்போற்றுநின்பொன்னடிப்போதைநெஞ்சில்
நிரந்தரமெண்ணியுநின்னன்பர்பாதநிருமலநீர்
உரந்தரவுண்டுமென்னேவாப்பவப்பிணியோவவெற்கோர்
வரந்தரவெண்பெருந்தேவியன்னையத்தவற்சலியே. (அச)

ஒத்துமறைப்பொருளோர்ந்தோர்களுநன்குணர்வரிய
ஆத்துமதத்துவமத்தத்திலங்காமலகமெனப்
போத்துமதியற்கும்போதருமோபுவிபூத்தலொடு
காத்துமறைக்கும்பெருந்தேவித்தாயேகருணைசெய்யே. ()

தாவரசங்கமமானசரீரந்தனைத்தமியேன்
மூவரசின்னுமெடுக்கினுமுக்குணமோகவிருள்
மாவரவென்னைமறைக்காதுநின்னேவமுத்திநிற்க
மாவரமீந்தருள்வாய்பெருந்தேவிமலர்மகளே. (அசு)

ஈனவொழுக்கோரிணக்கம்பெருதுமிழுக்குறுந்துன்
மானவொழுக்கினர்மாடையாமலுமன்னுநல்ல
ஞானவொழுக்கங்கணல்குநிதாலவாய்நகத்தலைவி
தானவொழுக்கத்தவரேத்துஞ்சத்தியசங்கற்பையே. (அள)

வெருவந்ததுன்பமுமின்பமுந்தாமேவினீதல்கண்டுந்
தெருமந்தசிந்தையனுய்த்தினீகளைச்செய்துசெய்தென்

அருமந்தகாலத்தையந்தோவழித்தவறிவிலியாம்
பெருமந்தனேக்காத்தருள்பெருந்தேவிப்பிராட்டியன்னே.

ஆதிக்கமலையகளங்கையாவினுமாய்ந்துபரிச்
சேதிக்கவொண்ணுத்திருமாலுரத்துறைசெல்வியெற்குப்
போதிக்கத்தக்கனபோதித்துன்மாயையைப்புந்தியெஃகால்
வேதிக்கச்செய்தருள்வாய்வேழமாமலைவித்தகியே. (அகூ)

விண்ணேறுமாப்புகழ்நம்பெருந்தேவிவியனியற்கை
மண்ணேறுமாட்சிவடிவழகாகுமகோததிக்குக்
கண்ணேறுதன்னேக்கழிப்பான்கவிகாள்கடிதுவம்மின்
பண்ணேறுபாவினிற்பல்லாண்டுபாடிப்பரவுதுமே. (கூ0)

கபநாமநோய்கண்டங்கண்டுகவற்றுங்கடைப்பொழுதுன்
சுபநாமஞ்சொல்லித்துதித்துநின்றேயிந்தத்தொல்லைவினை
நிபநாமசிவுடனீத்திடநினைத்தருள்வாய்
இபநாமமாமலைவாழ்பெருந்தேவியிறையவளே. (கூக)

ஆற்றுப்பெருக்கிற்சுருக்கிற்பெருக்கஃகலாற்றகில்லா
வூற்றுக்கடலினுறுபேறிழவினிலுள்ளமென்றும்
வேற்றுக்குணமடையாநின்றமர்குணவீற்றினுக்குத்
தோற்றுத்தொண்டாகவருள்பெருந்தேவிசுகாசனத்தியே. ()

பூத்திரணின்றும்பொறிவண்டுதேனைப்புசிப்பதெனச்
சாத்திரசாரந்தனேக்கொளுநின்றமர்தாளினையை
நேத்திரங்கண்டுநிருமலமாமவர்நீள்புகழைச்
சோத்திரங்கேட்டும்பெருந்தேவியுய்ந்திடுஞ்சூழ்ச்சிசெய்யே.

விளக்கினில்வீழ்திடும்விட்டிலொவ்வாதுயனுலகைத்
துளக்கிடுமாயையுருவாகுந்தோகையர்துச்சவின்பங்
கொளக்குறியாநின்குலவடியார்குழுக்கூடியுய்வான்
கிளக்குறுங்கேண்மைதந்தாள்பெருந்தேவிக்குபாகரையே.

கானத்துவேடர்தங்கானத்தின்மான்கணங்கட்டமுறும்
ஈனத்தையெண்ணியவைபோல்வவிட்டுநின்னெண்ணில்புகழ்க்
கானத்தைக்கேட்டுக்கரிக்குநின்னன்பரைக்காதலித்துய்
ஞானத்தைத்தந்தாள்பெருந்தேவிபாற்கடனந்தனையே. ()

ஷீட்டின்கணெண்ணமுமானபிமானமும்விட்டுவிஷ
யாட்டுறுபாலனிலல்லலொழிந்ததத்தும்புறத்துங்
காட்டுறுநின்னைக்கருதும்பெருமதிக்கண்ணுடையோர்
மாட்டுறும்வண்ணமருள்பெருந்தேவிமநோகரையே. ()

நயக்கும்பயனல்குவதாய்முயற்சியினண்ணரிதாய்
இயக்குமவன்குருநின்னருளுதையியக்கமைந்து
பயக்குமுடலம்பிகொண்டும்பவக்கடல்பாயகிலான்
துயக்குந்துரோகியன்றேபெருந்தேவிசுகோதயையே. ()

புருடார்த்தசாதனமாமிப்புரம்பொன்றுமுன்னர்மும்மைப்
புருடார்த்தநீக்கிப்புகற்கரிதாகப்புகல்மூடிவாம்
புருடார்த்தசித்திக்குரியகுணங்களைப்பூரித்தெவ்வெப்
புருடார்த்தமுந்தந்தருள்பெருந்தேவிபுரந்தருளே. (கூஅ)

புதைத்தமண்டோண்டப்புனறேன்றுமாபோற்புகுந்திடையி
புதைத்தவஞ்ஞானத்தைப்போக்கியென்போதம்புனிதமொ
கதைத்தநல்லானந்தந்தோன்றிவிளங்கக் கருணைசெய்வாய்
புதைத்தபொன்னேபெருந்தேவியன்னேபுண்டரிகமின்னே

முத்தமிழ்வல்லமுதிர்ஞானிகணின்முளரியந்தாள்
புத்தமிழ்தென்னப்பெருந்தேவியன்னுய்புனைகவிபோல்
இத்தமிழ்மாலையினியதன்றேலுமிரும்பிறவிப்
பொத்தமிழ்வேனைப்புரப்பான்மகிழ்ந்துபுனைந்தருளே. (

வாழ்கதிருக்கச்சிவாழ்கவிபமலைவாழ்கவெம்மான்
வாழ்கநந்தாய்பெருந்தேவிதிருமுகமார்பமுந்தி
வாழ்கவரதாபயகல்குமத்தகல்வாரிசங்கள்
வாழ்கதிருவடித்தாமரையென்மனவாக்கினுமே. (கஅ

மன்னும்புகழ்க்கச்சிவாழ்பெருந்தேவிதன்மாணடியை
உன்னுந்தமிழ்த்தொடைநூறுமிராமானுசவுரவன்
பன்னுஞ்சரோருகபாதந்தொழுதுய்யும்பள்ளிகொண்டா
என்னும்மியற்பேரெதிராசதாசனியம்பினனே. (கஅ

பெருந்தேவித்தாயார் மாலை.
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருச்சுகனூர்

அலர்மேன்மங்கைத்தாயார் மாலை.

காப்பு.

வண்மைத்திருச்சுகனூர் வாழலர்மேன்மங்கைத்தா
யொண்மைத்திருவடிமே லோர்சதமா—மூண்மைத்தாஞ்
சொன்மாலைசூட்டநெஞ்சே தொல்குருகைத்தண்வகுள
நன்மாலைமாறன்றுணம்பு.

நூல்

மணிமேவியவாரிதிமிகுமாந்தரும்வானவரும்
பணிமேவியபாதலரும்பணிகின்பதாம்புயமென்
றிணிமேவியவுட்சிலபூக்தெந்நாளுந்திகழ்ந்திடச்செய்
அணிமேவியசுகனூரலர்மேன்மங்கையம்மனையே. (க)

வஞ்சகவல்வினைவித்திட்டுமாயைவண்ணீர்மடுத்து
விஞ்சகங்காரம்விளைத்துப்பிறவிவிழுமநல்கும்
நெஞ்சகச்செய்யினின்பத்திப்பைங்கூழ்நிலைநிற்கும்வண்ணம்
அஞ்சகப்புன்களைபோக்கலர்மேன்மங்கையம்மனையே. (உ)

காற்றிற்கறங்குகறங்குதலென்னவெக்காலமும்வீண்
பேற்றிற்றியுமென்பேதைமனத்தைநிற்பேணுமன்பாம்
ஊற்றிற்றிளைப்பித்துயர்நியாசநிட்டையுதவிமுத்தி
ஆற்றிற்செலுத்தியருளலர்மேன்மங்கையம்மனையே. (ஊ)

கோற்றேனெழுகும்பொழிற்சுகனூர்வாழ்குலவிளக்கே
காற்றேனுமோர்நிலைநிற்குமதினுங்கடிதெஞ்சங்
கூற்றேயெனவெனைக்கொல்லுமதுசெய்கொடுமைதனை
ஆற்றேனடக்கியருளலர்மேன்மங்கையம்மனையே. (எ)

அலையேனுமோர்காலடங்கியுமோர்காலடங்கவிலா
நிலையேயுமென்னுளநிச்சலுமோர்நிலைநிற்றலின்றிப்
புலையேய்வழியேபுகுமினியானப்புலைவழிபோய்
அலையேனெனித்தெனையாளலர்மேன்மங்கையம்மனையே. (ஏ)

துன்பக்கடலிற்சுழற்றிச்சுழற்றித்துரத்திடுஞ்சிற்
றின்பக்கடற்கேயியைநெஞ்சையென்றுமினித்தெழும்பே
ரின்பக்கடற்கணினிதாடும்வண்ணமிசைவிகல்ல
அன்பக்கயத்தர்தொழுமலர்மேன்மங்கையம்மனையே. (சு)

அலகைச்செயலினலியுமென்னெஞ்சநின்னன்பர்தமை
உலகைத்திருத்தவுதித்தவரென்றுணராதவர்பாற்
பலகைத்திடுஞ்செயல்பண்ணுமவர்தம்பதப்பெருமை
அலகைத்தெரித்துத்திருத்தலர்மேன்மங்கையம்மனையே.

நவைநவைநெஞ்சகநாடொறுஞ்செய்தவினண்ணுகின்ற
குவைகுவையாம்பவக்கூட்டமிவ்வண்டமுங்கொள்ளகிலா
சுவைசுவையென்றெனைத்தோற்பையிடியென்சொல்குவல்யான்
அவையவைத்தன்னதடக்கலர்மேன்மங்கையம்மனையே. ()

கடிப்போதில்வாழயன்கற்பம்புசித்துங்கழிவில்பவ
நொடிப்போதிற்செய்வலதாமென்னெஞ்சத்தினேண்மையென்னே
பிடிப்போதகநடைப்பெண்ணணங்காமெம்பிராட்டிநின்றன்
அடிப்போதடைந்தேனருளலர்மேன்மங்கையம்மனையே.

அல்லவைசெய்தெனக்காகாதகாகியலியுமனம்
நல்லவைசெய்துநலம்பெறுகாலென்றுநண்ணிடுமோ
பல்லவையோர்சொல்சுகாச்சிரமத்துறைபார்க்கவியே
அல்லவைத்தன்னதடக்கலர்மேன்மங்கையம்மனையே. (க0)

குடக்குங்குமமூலைக்கோகனகாய்சுகக்கோப்பதியாய்
கடக்குஞ்சராதியடக்குவனல்லகருமஞ்செய்யத்
தொடக்கும்பொழுதற்கூறுசெய்தேநிற்குந்துட்டநெஞ்சை
யடக்குந்திறமென்னருளலர்மேன்மங்கையம்மனையே.(கக)

விடத்தைமுறிக்குமருந்துண்டெவரும்வியக்கவயத்
தடத்தைபொன்னைச்சமைக்குங்குளிகைகடாமுண்டு
வடத்தையிலைவயிற்றெம்பெருமாட்டியென்வஞ்சநெஞ்சின்
அடத்தையடக்குவதென்னலர்மேன்மங்கையம்மனையே. ()

பகத்தையுந்தன்றிருழிலால்வென்றெழிலிளம்பாவையர்தம்
பகத்தையுங்கச்சுப்பறம்பையுமெண்ணியவர்பணைத்தோட்

சுகத்தைவிரும்பித்தொலையாநரகத்திற்றுன்னு மென்னெஞ்
சகத்தைத்திருத்தியருளலர்மேன்மங்கையம்மனையே. (கஈ)

கனைக்குங்கடற்புவிகண்ணுஞ்சுகப்பதிக்காரணியே
நினைக்குங்கருவியெனத்தந்தநெஞ்சகநின்னையென்றும்
நினைக்கும்படிநிருமித்தென்னையின்னுமொர்நேரிழையாம்
அனைக்கும்பியண்டாதருளலர்மேன்மங்கையம்மனையே. ()

சித்துப்பொருளாமெனக்களிநெஞ்செனச்செப்புசட
வத்துப்பொருளென்வழிபடராதவகையெனினின்
சொத்துப்பொருளெனைக்காத்தனினக்குச்சுகிர்தமன்றே
அத்துப்பதபங்கயவலர்மேன்மங்கையம்மனையே. (கஙி)

பந்தமுமோக்கமும்பார்க்கினென்னெஞ்சகப்பண்பினிற்கும்
பந்தமுறுதைப்பக்குவஞ்செய்தனின்பாரமதாங்
கந்தமும்பூவுமெனவெம்பிரான்கட்கலந்திருக்கும்
அந்தமுமாதியுமில்லலர்மேன்மங்கையம்மனையே. (ககூ)

புனலுறுபங்கத்தையப்புனல்கொண்டறப்போக்குதல்போல்
உனலுறுமுள்ளத்தினுற்றநவையையவ்வுள்ளங்கொண்டே
கனலுறுதூசெனக்கண்டருளன்பர்கசட்டையருள்
அனலுறுத்தித்துடைத்தாளலர்மேன் மங்கையம்மனையே.

தடித்தினுஞ்சஞ்சலஞ்சாலவும்வாய்ந்துதகாப்புலனே
பிடித்ததையேயெண்ணிப்பேராதுநிற்கின்றபேதைநெஞ்சை
வடித்தென்வயநிற்கும்வண்ணஞ்செய்வாயென்றுன்வாரிசநேர்
அடித்துணையண்டைகொண்டேனலர்மேன்மங்கையம்மனையே.

சாத்துவிகவகங்காரத்திற்றோன்றியுஞ்சாத்துவிகம்
நீத்துவிகடவிராசததாமதநேர்ந்தவித்தைக்
கூத்துவிகற்பங்கொளுநெஞ்சைநின்னடிகூடநிற்க
யாத்துவிகசிதஞ்செய்யலர்மேன்மங்கையம்மனையே. (ககூ)

பத்துப்பொறியையுமாளுந்தலைமைப்பராக்ரமத்தின்
சித்துப்பொருளென்னோடுமங்ஙனுளச்சிந்திக்குமதன்
பித்துப்பொடித்துப்பிரபஞ்சவாழ்க்கையைப்பேணித்துய்க்கும்
அத்துப்புரவொழித்தாளலர்மேன்மங்கையம்மனையே. ()

உபலமனமிவ்வுலகவுஞற்றிலுழைத்துழைத்து
விபலமடைந்தினியேணுன்னடிவீழ்ந்திறைஞ்சிச்
சபலமுறுமோவுருதோலறியேன்றயைபுரிவாய்
அபலமில்லாச்சுகனூரலர்மேன்மங்கையம்மனேயே. (உக)

வியர்த்தவினேயெவிரும்பிவிரும்பிவெறுப்பிலதாய்ப்
பெயர்த்தும்பெயர்த்துமதுதனேயென்றும் பேணிநின்று
மயர்த்துமயர்த்துவருந்துமென்பேதைமனத்துக்கென்றும்
அயர்த்தலிலேகொலருளலர்மேன்மங்கையம்மனேயே.(உஉ)

அறன்கடையான தெனதாலறையவறிந்திருந்தும்
பிறன்கடைநிற்பவட்பேணிவருந்துமென்பேதைநெஞ்சத்.
திறன்கடையான தித்திக்குணந்தீர்த்துத்திருமியென்றும்
அறன்கடையெண்ணுதருளலர்மேன்மங்கையம்மனேயே. ()

நின்னேப்பெறின்மனனேயென்குறையினேர்ந்தென்செய்யேம்
என்னப்பராங்குசமாமுனிசொற்றவியலின்மனந்
தன்னேப்பெறிலெற்குன்சாயுச்சியமுத்திதான்கிடைக்கும்
அன்னத்துவசன்றொழுமலர்மேன்மங்கையம்மனேயே. (உச)

நின்புகழ்பாடிநிருத்தமிடநின்னிமலவுரு
இன்புறவெண்ணியிறைஞ்சிடலாதியியற்றிடவிப்
புன்புரம்வேண்டலினன்னதைமொய்த்திடும்புன்கணெலாம்
அன்புடனீக்கியருளலர்மேன்மங்கையம்மனேயே. (உரு)

சூரணங்கைத்தருமந்தோய்கடம்மைத்துடைக்கவொண்ணுக்
காரணமுண்டெனிலகாரணத்தையுங்கட்டுரையாய்
நாரணனுகத்தினண்ணுநங்காய்நினேநம்பிநின்றேன்
ஆரணம்போற்றித்தொழுமலர்மேன்மங்கையம்மனேயே. ()

எளியேன்முறைகேட்டிரங்காயெனினுலகெங்கணுநிற்
கிளியேயியையுமியைத்தாலுனானின்றனெண்ணின்வணம்
அளியேனெனிலென்னைசெய்வலதுவென்னகச்செயலே
அளியேதிருவுருவாமலர்மேன்மங்கையம்மனேயே. (உள)

ஓல்லியியற்றினுமொல்லாதென்றேதினுமுள்ளநிலே
சொல்லிவிடுவனென்றெல்லிவிணையிற்றொடர்ந்தபவ

வல்லியறுத்தெனைவைகுந்தநாட்டின்கண்வாழவைப்பாய்
அல்லிமலர்க்குழலாயலர்மேன்மங்கையம்மனேயே. (௨அ)

கடுங்காலதூதுவர்போலவெருட்டிக்கடுகெடுத்து
நெடுங்காலமெண்ணெருக்கியதோய்களுநீர்மைகொண்டு
விடுங்காலம்வந்ததுவேண்டினனின்னேவிளம்பவற்றை
அடுங்காலமீதேயருளலர்மேன்மங்கையம்மனேயே. (௨க)

சரணவரணப்பெருமையறிந்ததலைவினின்னைச்
சரணமடைந்தவெனைக்கைவிடுதறருமமன்றுன்
சரணகமலமென்னெஞ்சகமலர்தயங்கவமைத்
தரணமெனின்றளியலர்மேன்மங்கையம்மனேயே. (க0)

தீர்க்குணையோகஞ்சிறந்ததயாபரையென்றுசெப்பும்
பேர்க்குரித்தானவளாயெனக்கென்றும்பிராப்பியையாய்
கார்க்குரித்தானின்பாலன்றியென்றனிவையெல்லாம்
ஓர்க்குரைப்பேனருளாயலர்மேன்மங்கையம்மனேயே. ()

நம்பியவென்னையெங்காரும்பிணியினடுநடுங்கி
வெம்பியழுங்கவிடுதலறமெனவேண்டுதியேற்
பம்பியபாவக்கடனின்றுமென்னைப்பரிந்தெடுக்கும்
அம்பியனையவராரலர்மேன்மங்கையம்மனேயே. (கஉ)

நேயின்சிறுமையைத்தீர்த்திடுவானைச்சேர்ந்தொறுக்கும்
நோயின்றகவுக்கருணைமுண்டதைநோக்கல்பெற்ற
காயின்செயலெனிற்றண்ணருளாற்சகந்தந்தளிக்கும்
ஆயின்கடனென்னருளலர்மேன்மங்கையம்மனேயே. (கக)

அண்டப்பிணிகுடர்வாதமிருமலுக்காகரமாங்
கண்டக்கபாமயக்காரணந்தன்னைக்கழித்தருள்வாய்
துண்டப்பிறைக்குளத்தாய்சுகனுரெஞ்சுடர்க்கொடியே
அண்டக்குலாதிபன்போற்றலர்மேன்மங்கையம்மனேயே. ()

கபவர்க்கநோய்நெடுங்காலம்வருத்திக்கவற்றுமதைச்
சுபவர்க்கம்யாவுஞ்செயவல்லகின்னருளாற்றுடைத்தாள்
நிபவர்க்கஞ்சொற்றதைநீக்காவிடுதனியாயமன்றுல்
அபவர்க்கமார்க்கமருளலர்மேன்மங்கையம்மனேயே. (கடு)

கொடுநோய்க்குவாற்குங்குமைக்குங்குசுமக்கொடுங்கணையான்
விடுநோய்க்கும்வீணைமனத்தையெப்போதும்விடாதுபற்றித்
தொடுநோய்க்குஞ்சூர்க்கட்சுடுமுகத்தொன்னமன்றூதுவர்வந்
தடுநோய்க்குமஞ்சாதருளலர்மேன்மங்கையம்மனேயே. ()

குற்றஞ்செய்யாதெற்றிருத்தியென்னற்பணிகொள்ளுதியேற்
றுற்றங்கள்கோடினைக்குறுமோநற்குலமறைகள்
குற்றங்கள்கூறிடுமோவெனைக்காக்கக்குறித்திருக்கும்
அற்றம்வரவிலையோவலர்மேன்மங்கையம்மனேயே. (கூ எ)

பொறுக்கவொண்ணாப்புரைசெய்தாரையுநீபொறுத்தளித்தாய்
பொறுக்கவொண்ணாப்பிழைசெய்தவனென்றெனைப்புந்திதனில்
வெறுக்கவிடுக்கணிரகில்லைநந்தம்விய னுறவோ
அறுக்கவொண்ணாநுநம்மாலலர்மேன்மங்கையம்மனேயே.()

இப்பவநீங்கிடினெப்பவம்வாய்க்குமெனவறியேன்
இப்பவத்தேநீயிரங்கியருளாயெனினெதிரும்
அப்பவத்தல்லலுக்காற்றேனகமுமழுங்கியஞ்சும்
அப்பவப்பாகொடிதாமலர்மேன்மங்கையம்மனேயே. (கூ கூ)

அடியேனெடுத்தவயனமநந்தமவற்றிலென்றுந்
துடியேனுனின்னைத்துதித்திலனுந்துதித்திருக்கிற்
கடியேய்பிறவிகழியாதிராதுகவலையுற்றுன்
அடியேயடைந்தேனருளலர்மேன்மங்கையம்மனேயே. (சூ 0)

எடுத்தபிறவிகள்யாவும்பதராயிழுக்கினவித்
தொடுத்தபிறவியின்காலமும்வீணேதொலைந்தநிங்நன்
விடுத்தனையாயினென்செய்குவல்யானென்விதியறியேன்
அடுத்தனனின்னையருளலர்மேன்மங்கையம்மனேயே. (சூ க)

அத்திரவின் பத்தடியேனழுந்தியலையச்செய்கின்
மித்திரனென்னினைக்குமின்றேனினைவேண்டிநிற்கும்
புத்திரவாற்சல்லியமென்வினையகின்பொங்கருளாம்
அத்திரத்தாலறுத்தாளலர்மேன்மங்கையம்மனேயே. (சூ உ)

எத்தனைகாலமெளியேனிறைஞ்சியிரங்கினுமெண்
ணத்தனையேனுமந்தோவென்றிரங்கியருளகில்லாச்

சித்தனேன்கொண்கனேயெற்கருளோர்சிறியதினை
அத்தனேசெய்யச்செய்வாயலர்மேன்மங்கையம்மனேயே. ()

அகிலாண்டவாவியளகமதிமுகமாடகநூற்
றுகிலாண்ட சிற்றிடைத்தோகாய்சிறியனேத்தொண்டுகொண்டாள்
முகிலாண்டசே லேலத்திருச்சுகனூர்ச்செம்முளரிமின்னே
அகிலாண்டநாயகியேயலர்மேன்மங்கையம்மனேயே. (சச)

மோக்கத்திலிச்சையிலனுயடியன்முரணவித்தைத்
தூக்கத்திருக்கின்றனனந்தவிச்சையைத்தோன்றுவித்தெற்
காக்கத்திருவுளங்கொள்வாய்சுகப்பதிக்கற்பகமே
ஊக்கத்திருமகளேயலர்மேன்மங்கையம்மனேயே. (சரு)

ான்னேயென்சைதந்தியமோக்கவிச்சையெழாமலன்றே
கொன்னேகழிந்தன்றிதுகாறுங்கோகனகாதனம்வாழ்
பொன்னேயதுவினியேனும்பயன்பெறப்புந்திசெய்வாய்
அன்னேயருட்கடலேயலர்மேன்மங்கையம்மனேயே. (சசு)

நடும்பத்தைப்பூண்கட்டிக்கொள்ளுமெனக்கதன்கோளறுத்து
யிடும்பத்தியில்லேனீயேகமையென்றும்விட்டொழியாக்
டும்பத்தநோக்கிச்சுகப்பதிவாழ்கமலாயதனே
அடும்பத்திரவருள்செய்யலர்மேன்மங்கையம்மனேயே. ()

ன்னேயுன்னன்பனேயும்விதியினேர்ந்தடையும்
முன்னேமுத்தத்துவஞானமுண்டாக்கிமுறைப்படியே
ான்னேனின்றெருண்டரினத்தொடுஞ்சேர்த்தியெல்லாவுயிர்க்கும்
அன்னேயெனும்பின்னேயேயலர்மேன்மங்கையம்மனேயே. ()

த்துவஞானமடையாத்தமோகுணத்தன்னெனினும்
த்துவஞானிகள்சார்புறுத்தித்தமியேனையவர்
சாத்துவமாக்கியவரபிமானத்திற்றெருண்டுகொண்டாள்
அத்துவமேனிப்பொன்னேயலர்மேன்மங்கையம்மனேயே. ()

லங்குபறவைமிகுசடரேனுமம்விண்டுசித்தர்
லங்குமருவினிலெய்தாதமுத்தியுமெய்துமென்ப
லங்குங்கடையனேயன்றேர்கருணையிற்காத்தருள்வாய்
லங்குமணியணியாயலர்மேன்மங்கையம்மனேயே. (ரு0)

பாதவமாயினுநின்னடிக்கன்புசெய்பண்புடைய
மாதவர்கைதொடின்கண்பார்க்கின்மாயைமயக்கமென
ஓதவநீங்கியுயர்வீடையுமெனவுரைப்ப
ஆதவர்கோர்குழையாயலர்மேன்மங்கையம்மானேயே. (நிக)

அசித்துறவான்வருமஞ்ஞானநின்னேயண்டாதவணம்
விசித்தெனைநாடொறும்வீழ்நதியிற்றள்ளிவீண்பயனே
புசித்திடச்செய்யுமென்செய்கேனதைநின்றன்பொங்கருளாம்
அசித்துமித்தென்றனேயாளலர்மேன்மங்கையம்மானேயே. ()

சொற்றவஞ்ஞானமென்றுண்மைக்குணங்களோத்தொட்டழித்து
வெற்றமுற்றென்றும்விதிப்பிறவியில்வீழ்த்தியங்ஙன்
பெற்றவுருக்கநினைன்றெண்ணச்செயும்பெற்றியதை
அற்றென்றுனேயடைவேனலர்மேன்மங்கையம்மானேயே. ()

தேகத்தில்வேறெனுஞானமெனக்குச்செனித்தகுண்டேல்
ஏகத்தனிமுதல்போகசுதந்தரனென்றெண்ணுவேன்
பாகத்தப்புத்தியைப்பாற்றிவாய்பணிப்பாதவத்தான்
ஆகத்துறையமலாயலர்மேன்மங்கையம்மானேயே. (நிச)

சேடத்துவமதிசேர்ந்திடமேலதைத்தியர்கள்பால்
வீடத்துவமாவினியோகித்தென்றும்விபலமுறுங்
கூடத்துவத்தைக்குலைத்தேனின்னன்பர்கூட்டநிறீஇ
ஆடத்துவனேயலர்மேன்மங்கையம்மானேயே. (நிஎ)

உயிரபகாரஞ்செய்தூழிதொறூழியுண்டாலுமருச்
செயிரனைத்துஞ்செய்துதிப்புலத்தற்பரஞ்சிறிவேன்
வயிரவினையறுத்தென்னைநின்பாதம்வணங்கச்செய்வாய்
அயிரநற்பாகனேயாயலர்மேன்மங்கையம்மானேயே. (நிஅ)

ஒன்றுமிலாமற்கிடந்தவென்றூர்த்தசைக்குற்றிரங்கி
நன்றுநின்பாதத்தைநண்ணியுய்வானல்கியவுடல்கொண்
டென்றுநின்னுள்ளத்துகப்பாங்கருமமெனைத்துஞ்செய்யா
தன்றினனுனேனருளலர்மேன்மங்கையம்மானேயே. (நிஎ)

ஆறுகடக்கவருளம்பிபற்றியதன்கரையை
யேறுதலின்றியிருங்கடலெய்துவனென்னினைக்

கூறுசெய்தனுமுயன்றிருவுளத்துன்னிமுத்தி
ஆறுநடத்தியருளலர்மேன்மங்கையம்மனையே. (19அ)

பிறவிப்பெருங்கடனீந்தக்கொடுத்தவிப்பிண்டமதைப்
பிறவிப்பெருங்கடற்கேயுடலாக்குமென்பேரவித்தை
அறவிப்பிரமந்தொலையவருள்செய்யணிச்சுகனூர்
அறவிப்பிரர்தொழுந்தாளலர்மேன்மங்கையம்மனையே. ()

அநாதியென்றுரணநூலாதிசொல்லுமவித்தையினுன்
மநாதிசெய்பெண்ணற்றபுண்ணியபாவமரபின்வணம்
வநாதிபலபிறப்பும்பிறந்தெய்த்தவிவ்வஞ்சகனுக்
கநாதிகல்வீடளித்தாளலர்மேன்மங்கையம்மனையே. (20)

இறந்துமுன்சென்றவினிச்செல்பவாராவியற்கையினுற்
பிறந்தபிறவிகடோறுமுத்தாபப்பெருங்கனலின்
வறந்தனனங்ஙன்வறந்துஞ்சிறிதும்வருத்தமிலேன்
அறந்தவிராச்சுகனூரலர்மேன்மங்கையம்மனையே. (21)

கருப்பஞ்சனனமிளமைகல்யௌவனங்காழ்முதுமை
விருப்பறுசாக்காடிருளாமவத்தைவிளைவித்தென்றும்
உருப்பவுலுவற்பரம்பரையுண்பித்துறைபிறவி
அருப்பமொழித்தருள்வாயலர்மேன்மங்கையம்மனையே. ()

அனந்தவரந்தைகட்காகரமாமயனக்கடலில்
அனந்தவிதத்துமழுந்தாவணநீயுதினஞ்செய்
அனந்தமுயற்சியையுந்தடுத்தென்னையலையவித்தை
அனந்தலொழித்தருள்வாயலர்மேன்மங்கையம்மனையே. ()

பிறந்தபொழுதுன்கடைவிழிநோக்கினைப்பெற்றிருக்கிற்
சிறந்தநற்சாத்துவிகனுய்விஞ்ஞானச்சிறப்பினுய்த்
துறந்தகிலேபினனுய்முத்திச்சிந்தையைத்துன்னிநிற்பன்
அறந்தலைநின்றவர்போற்றலர்மேன்மங்கையம்மனையே. ()

உண்மைமதியுதியாதாயினல்லீடுறுதலிலை
உண்மைகன்னூலினுபதேசந்தன்னினவ்வுண்மைமதித்
திண்மையுண்டாகுமெனச்செப்புபவச்சிறந்தமதி
அண்மையுண்டாகவருளலர்மேன்மங்கையம்மனையே. ()

சாத்திரஞானம்பிறத்தலருமைதவத்துயராஞ்
சாத்தியமானதுமன்றுபதேசத்தடத்தின்வரு
மேத்தியஞானம்விளைத்தெனைக்காத்திமுன்மேய்த்துகந்த
ஆத்திரளானுரத்தாயலர்மேன்மங்கையம்மனையே. (சுசு)

என்னிலேதேகம்பொறியுள்பிராணனிலங்குபுத்தித்
தொன்னிலைக்கென்றும்விலக்கணமாகுமெனத்துணிப
இந்நிலையென்றுமெனக்குவிளங்காதியற்றிநிற்கும்
அன்னிலைதீர்த்தாளுதியலர்மேன்மங்கையம்மனையே. (சுள)

ஞானந்தனையொழிந்துந்தோன்றலினைனைஞானகன்னூல்
ஈனந்தவிர்ந்தசுயம்பிரகாசனெனவுனைக்கும்
எனந்தவிர்ந்தென்றுமிந்நிலைநிற்கவெனக்கருள்புரிவாய்
ஆனந்தவாரிதியேயலர்மேன்மங்கையம்மனையே. (சுஅ)

சுகவுருவாகவிருத்தலினென்னைச்சுடர்மறைகள்
தகவுறுமானந்தத்தன்மையனென்னுமத்தன்மையென்றும்
உகவுறுமாயையொழித்தெனக்கந்நிலையுற்றுநிற்க
அகமகிழ்ந்தின்னருள்செய்யலர்மேன்மங்கையம்மனையே.()

எப்போழ்திலும்யானிருத்தலினித்தியனிவ்வுடலம்
எப்போழ்துஞ்சேர்தல்பிறத்தலொழிதலிறத்தலென்ப
ஒப்போதரியசுகப்பதியாயிவ்வுடலம்விடும்
அப்போதென்முன்வந்தருளலர்மேன்மங்கையம்மனையே.()

இருக்குமிதயகமலவிருக்கையிருந்தெழும்பிப்
பொருக்கெனப்போதல்வருதல்புரிதலிற்போற்றுமெனை
அருக்கனுவென்பவதைக்கண்டுதேறவருள்புரிவாய்
அருக்கர்பலரொளியாயலர்மேன்மங்கையம்மனையே. (எக)

மணியாதியோருழிஞ்றுமொளியின்மலர்தலெனத்
திணியாரிதயத்திருந்துந்தெருட்சியிற்றோமுறும்
பிணியாதியானன்குதேர்ந்திடும்பெற்றிபிறங்கச்செய்வாய்
அணியார்சுகப்பதியாயலர்மேன்மங்கையம்மனையே. (எஉ)

விழியாதிகட்குக்கடாதிகள்போல்விளங்காமையினால்
இழியாப்பொறிகளுக்கெட்டான்வியத்தனன்றென்றுரைப்ப

கழியாதநானிந்தக்காட்சியைக்கண்டுகளித்திருக்க
அழியாப்பதவியருளலர்மேன்மங்கையம்மனையே. (எசு)

ஏண்ணுரசித்தோடியையுஞ்சசாதியமென்றுணர
ஒண்ணுமையிற்றுனசிந்தியனென்றெனையோதுவராம்
றிண்ணுர்ந்தவிந்திலேதோர்வித்தெனையுண்டதீநிரயம்
அண்ணுத்தல்செய்யவருளலர்மேன்மங்கையம்மனையே. ()

சொல்லாரசித்துப்பொருள்போலவயவத்தின்றுருகுதி
இல்லாமையிலுலவயவமில்லானெனவுரைப்ப
வில்லாருணர்வுருவேனென்னுமீதுவிளக்கிடுவாய்
அல்லார்குழன்மணத்தாயலர்மேன்மங்கையம்மனையே. ()

ஏய்ந்தவசித்தின்விகரிக்கையின்றியிருத்தலிலுல்
வாய்ந்தவிகாரமிலானென்பவிவ்வுரைவாய்மையதே
தோய்ந்தவெனதுசதைகவுருவந்துலங்கச்செய்வாய்
ஆய்ந்தவரேத்திப்புகழலர்மேன்மங்கையம்மனையே. (எசு)

ஏதிப்படையெரிநீர்வாயுவெய்யிலிவ்வாதியிலுற்
சேதித்தலாதிச்செயலென்கட்சேராத்தெளிவுதந்து
நீதித்தருமநிறுத்திநின்பூசனைநிட்டைதந்தாள்
ஆதிக்கமலவணையலர்மேன்மங்கையம்மனையே. (எஎ)

சாக்கியராவியையவ்வச்சரீரத்தனையதென்ப
தூக்கினதுமுரணுகுஞ்சுருதிக்கத்தோமதரி
னீக்கியெனையாளுதிகமாந்தநிகழ்த்தனந்த
ஆக்கியையேசுகனூரலர்மேன்மங்கையம்மனையே. (எஅ)

ஊனுச்சிரயவுடனேடியென்றுமுழலுமெனை
ஞானுச்சிரயனெனநவில்வாரதைநன்குரைத்தென்
நானுச்சிரமமுநம்பிநசிக்கச்செய்நான்மறையின்
ஆனுச்சிரத்துறைவாயலர்மேன்மங்கையம்மனையே. (எக)

வித்தானஞாதாவெனவெனைக்கூறலின்வேட்கையுறுங்
கத்தாவுந்துய்த்திடும்போக்தாவுமாயினன்கண்ணுமிந்தச்
சத்தானசாரவிடயத்தைச்சாற்றுதிதாசருள்ள
அத்தாணியார்ந்துறைவாயலர்மேன்மங்கையம்மனையே. ()

நீக்கவரியவிலக்கணமாகுநியாமியத்தோ
டோக்கமுறுதாரியஞ்சேடமென்னுமுவையுளத்திற்
றேக்கிடும்வண்ணந்தெளிந்திடச்செப்புதினைசனர்க்
காக்கமளித்தருள்செய்யலர்மேன்மங்கையம்மனையே. ()

நன்றுசெய்சேடத்துவத்தொடுஞாதுர்த்துவமடியற்
கொன்றுமிலக்கணமென்றேத்துரைக்குமுரைத்தபெற்றி
நின்றுதமியனினையிக்களேபரநின்றெழும்பும்
அன்றுநினைக்கவருளலர்மேன்மங்கையம்மனையே. (அ)

நிலக்கணிலவிநினைநினைப்போரைநிகழ்த்துமுத்தித்
தலக்கணுறுவிக்கத்தண்சுகனூர்வாழ்தலிவியென்றன்
இலக்கணமுற்றுமிலங்கச்செய்தின்னவிடர்ப்பிறவி
அலக்கணறுத்தருள்வாயலர்மேன்மங்கையம்மனையே. ()

ஈட்டினைத்தினைகான்முறைசொல்லினுமென்னையென்று
கேட்டுரையொன்றுகிளக்கினினக்குறுங்கேதமென்னே
காட்டுதனுட்டுதல்வீட்டுதலென்னுங்கருமவினை
யாட்டுடையாய்சுகனூரலர்மேன்மங்கையம்மனையே. ()

பாவிகளிற்றலையாயவெனக்கருள்பண்ணவெண்ணிற்
றூவிகனின்னுடுசெய்துதடுக்கச்சமைபவரார்
நாவிகமழ்குழலாய்நாகவேதண்டனையகியே
ஆவிகட்காவியெனுமலர்மேன்மங்கையம்மனையே. அ)

திருக்காணிலயஞ்சினஞ்சேர்களஞ்சியஞ் சென்மவித்தாஞ்
செருக்காணிவேசமென்சிந்தைதின்சேவடிசேரச்செய்தென்
கருக்காணிநீக்கிநின்காற்காணிவாழக்கருணைசெய்தாள்
அருக்காணியானபொன்னேயலர்மேன்மங்கையம்மனையே.

ஒண்மையிலைபாதிகத்தாயுஞ்சேய்க்குற்றமுற்றுரையாள்
கண்மைகருதுவள்காழ்த்தபல்லண்டங்கள்கண்டளிக்குந்
திண்மைபெறுநிருபாதிகவன்னைசெயலிதுவோ
அண்மையினென்னையளியலர்மேன்மங்கையம்மனையே. ()

பேதைப்பிராகிருதத்தாயுந்தன்சுதன்பெற்றிகளைத்
தாதைக்குஞ்சாற்றலடன்னுளடகிச்சமித்திடுவள்

கோதைக்குழலப்பிராகிருதத்தன்னைகொள்கையிதோ
யாதைச்சொலவல்லனிற்கலர்மேன்மங்கையம்மனையே. ()

துன்பிழைத்தாயுந்தூர்த்தர்களென்றுதுரத்திவிடா
தின்பிழைத்தாயிரக்கக்கடலேநின்னிணையடிகட்
கென்பிழைத்தேன்பிழைத்தேனையினுமென்னிடர்க்கிரங்கி
அன்பிழைத்தாட்கொள்ளுதியலர்மேன்மங்கையம்மனையே.

தூக்கவொண்ணாததுசொல்லவொண்ணாததாண்டியென்னைப்
போக்கவொண்ணாதுநின்கொண்கன்மாயைபுரியுமையல்
காக்கவொண்ணாதிற்கட்டுண்டயர்க்குமெனைக்கசடன்
ஆக்கவொண்ணாதருள்வாயலர்மேன்மங்கையம்மனையே. ()

போதன்புராரிபுரந்தரன்பொன்னுலகோர்தபனன்
சீதன்மூனிவர்செயிக்கவொண்ணாதிறலுடைநின்
னாதன்செய்மாயைநவிலவற்றேவதனட்பொழிக்க
வாதன்றரமோவருளலர்மேன்மங்கையம்மனையே. (கக)

மூக்குணமுள்ளதுமோகஞ்செய்விப்பதுமொய்ங்கரகும்
புக்குணச்செய்வதுபோர்ப்பொறிநீத்தவர்புந்தியையும்
நெக்குணச்செய்வதம்மாயையதுதானீக்கவல்ல
அக்குணந்தந்தருள்வாயலர்மேன்மங்கையம்மனையே. ()

ஈதிசெய்நோய்களைமுற்றுமொழித்தலெழிலிலேயேற்
பாதிமுக்காற்பங்களவேனும்போக்கப்பரிந்திடுதல்
நீதியநீதியம்மட்டுஞ்செய்யாதுநிராகரித்தல்
ஆதிபராபரையேயலர்மேன்மங்கையம்மனையே. (கக)

சங்கற்பஞ்செய்யிற்றவறுதுசங்கற்பஞ்சற்றுமிலை
இங்கற்பனென்செய்வனின்றனிரக்கமிருங்கடலாஞ்
சிங்கற்பகுதியதன்றுமறந்திறந்தீனசனர்க்
கங்கற்பகம்போலருளலர்மேன்மங்கையம்மனையே. (கச)

சத்தியசங்கற்பையென்றுநின்றுவிற்சரணடைந்து
நத்தியநாயடியேனெண்ணமொன்றுகவையின்றியே
சித்தியடையச்செயினின்பெருமைசெகந்திகழும்
அத்தியளித்தோனுரத்தலர்மேன்மங்கையம்மனையே. ()

நீவேண்டிநின்னுளத்தேநினைந்தாலங்நிமிடமென்றன்
பாவேண்டியபொருள்யாவும்பலிக்கும்பகருங்கற்பக
காவேண்டுவநல்குங்கம்புருவாதிக்கடவுணிதி
ஆவேண்டுவநல்குமேயலர்மேன்மங்கையம்மனேயே.(கூசு

உடற்சுகமுண்மையுயிர்ச்சுகமுன்னியுனவுதிக்குங்
கடற்சுகம்யாவுனின்றுங்கண்டிலனிப்பகல்காறும்பச்சை
உடற்சுகம்வாழ்பொழிலோங்குஞ்சுகப்பதியுத்தமிநின்
அடற்சுகவீடெய்தலென்றலர்மேன்மங்கையம்மனேயே. (

எக்காலக்கண்ணுமெனைப்போன்றபாவிகளில்லையென்று
மூக்கான்மொழிந்தனனுண்மைநின்சந்நிதிமுன்னர்நின்று
கைக்காமலென்னைநின்காற்றெண்டுகொள்ளக்கருணைசெய்யுட
அக்காலமென்றருளாயலர்மேன்மங்கையம்மனேயே.(கூஅ

மூற்றுவியற்கைப்பொருளுமண்டோவிம்மூழுமகனைக்
கற்றுவெனவிரங்கிக்காத்துயிர்க்கணங்காக்குன்றன்
நற்றுயின்றன்மையிங்நானிலத்தோர்கண்டுநம்பச்செய்தி
அற்றூர்ககருந்துணையேயலர்மேன்மங்கையம்மனேயே.

சேகரவானவர்சேர்சுகனூருறைசெல்விநற்பாற்
சாகரநந்தனிநின்றனித்தண்ணளிச்சாகரத்தோர்
சிகரநல்கியென்காரியஞ்சித்திக்கச்செய்குணங்கட்
காகரமானவளேயலர்மேன்மங்கையம்மனேயே. (கூ00

வாழ்கதிருச்சுகனூர்வாழ்கவையத்துவானவர்கள்
வாழ்கசதுமறைவாழ்கபதின்மர்தம்வண்மறைகள்
வாழ்கவடதிருவேங்கடத்தெந்தைமலரடிகள்
வாழ்கநந்தாயலர்மேன்மங்கையென்றுமென்மாமனத்தே.

அலக்கணறச்சுகனூரலர்மேன்மங்கையன்னேபதத்
திலக்கணப்பாவினமாலையொருசதமிந்தியங்கொள்
புலக்கணீத்தவிராமானுசகுருபொன்னடிசேர்
விலக்கணனங்களெதிராசதாசன்விளம்பினனே.

அலர்மேன்மங்கைத்தாயார்மாலை
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

அரங்கநகரன்மீன யடைக்கலமாலை.

காப்பு.

சீராரரங்கநகரன்னீசேவடிசேர்த்தும்வணம்
நாராரடைக்கலநன்மாலையொன்றுநவில்வதற்கிப்
பாராரபுகழெம்பராங்குசமாமுனிபாதமலர்
ஏராரர்நின்பாங்கரிருத்திப்பராவுதியென்னுளமே.

நூல்

பொய்கையாழ்வார்

திருக்கச்சிவெஃகாப்பதிவந்தபொய்கைத்திருமுனிவன்
உருக்கக்கலியென்னுளத்தொளிர்ந்தோங்கவுவத்தியென்றுன்
கருக்கச்சளந்தீர்கழற்சரண்புக்கனன்காமர்வளப்
பெருக்கத்தொளிருமரங்கநகரன்னைப்பெண்மணியே. (க)

பூதத்தாழ்வார்

பூத்திகழ்காக்கடன்மல்லைவருமுனிபுங்கவன்வெண்
பாத்திகழ்தூலென்னுளத்திற்படியப்பணித்தியென்றுன்
மாத்திகழ்வாரிசமாணடிமன்னிமறைபுகுந்தேன்
ஓத்திகழ்சோரரங்கநகரன்னையுத்தமியே. (உ)

பேயாழ்வார்

மயிலைப்பதிவந்தமாமுனிவன்கலிமன்பொருளாம்
வெயிலைப்பொழிந்தென்றும்வீடாவவித்தைவினையிருள்செய்
துயிலைத்துடைத்தியென்றுன்றுணைத்தாட்சரண்டுன்னினனுல்
அயிலைப்பொருங்கண்ணரங்கநகரன்னையாரணியே. (ங)

திருமழிசையாழ்வார்

ஆழிதருங்கலியாகுமழிசையடிகணன்னூற்
பாழிபெறும்பொருளென்னுளத்தென்றும்படர்ந்துநிற்க
வாழியருள்செய்தியென்றுன்மலரடிவந்தடைந்தேன்
வீழியிதழ்கொளரங்கநகரன்னைவித்தகியே. (ச)

மதுரகவியாழ்வார்

கோளூர்முனிவன்குருகூர்முனிமேற்குறித்தகலை
வாளூர்பொருளென்மனமன்னிநிற்கமகிழ்தியென்றுன்
தாளூர்சலசச்சரணடைந்தேனுயிர்தாங்குமொன்பான்
கேளுரரங்கநகரன்னேயாங்கிருபாகரையே. (நி)

நம்மாழ்வார்

உண்மையுலகினோரநம்மாறனுகந்துரைத்த
தின்மைமன்னுல்களென்சிந்தையிற்றேங்கிடச்செய்தியென்றுன்
ஒண்மையடியையுவந்தடைந்தேனுலகோர்ப்புரக்கும்
வண்மையரங்கநகரன்னேயாகும்வராகநகையே. (சு)

குலசேகராழ்வார்

கொல்லிநகர்வந்தகோமுனிவன்கலிகொண்டபொருள்
புல்லியென்னெஞ்சிற்பொலியக்கருணைபுரிதியென்றுன்
அல்லிமலரடியண்டைகொண்டேன்மறையந்தமுறை
வல்லியரங்கநகரன்னேயாம்பத்தவற்சலையே. (எ)

பெரியாழ்வார்

பரத்துவஞ்செய்துநற்பஞ்சவன்பொற்கிழிபார்ப்படித்த
உரத்துவவில்லிபுத்தூர்க்கோன்கலியென்னுளத்துநிற்கத்
திரத்துவஞ்செய்தியெனநின்சரண்சரண்சேர்ந்தனனுற்
றரத்துவர்முத்தவரங்கநகரன்னேத்தற்பரையே. (அ)

கோதைநாயகித்தாயார்

திருக்கோதைநாயகிசெய்ந்நூலென்சிந்தையிற்றேக்குவித்தென்
கருக்கோதைநீக்கக்கருணைசெய்வா யென்றுன்கான்மலரின்
மருக்கோதைசூடிமறைபுகுந்தேன்மறையோர்பயிலும்
இருக்கோதைத்தாயவரங்கநகரன்னேயிந்திரையே. (கூ)

திருமங்கையாழ்வார்

விற்கலிவந்தபரகாலமாமுனிவேந்தனருள்
நற்கலியென்னுளநாடொறுநண்ணநயத்தியென்றுன்
அற்கலித்தோட்டுமடிச்சரண்புக்கனனுரணமா
நற்கலியோங்குமரங்கநகரன்னேநாயகியே. (க0)

தொண்டரடிப்பொடியாழ்வார்

விப்பிரநாராயணமுனியேந்தல்வியன்கலிகள்
பப்பிரதப்பொருணூலுமென்னெஞ்சிற்பதித்தியென்றுன்

சுப்பிரசன்னத்துணையடியிற்சரண்டுன்னினனல்
அப்பிரமேயவநகவரங்கநகரன்னேயே. (கச)

திருப்பாணழ்வார்

முனியூர்தியூர்ந்தெம்முகுந்தன்முன்வந்தமுனித்தலேவன்
கனியூர்சுவைக்கலேயென்னுளநிற்கக்கணித்தியென்றுன்
பனியூர்திருமலர்ப்பாதத்தடைந்தனன்பக்கியிறைத்
தனியூர்தியூருமரங்கநகரன்னேத்தாக்கணங்நே. (கஉ)

ஸ்ரீமந்நாதமுனிகள்

நாதமூனிகளெனுமெம்மடிகணனிமலர்ப்
பாதமூவந்துபணிந்துய்யும்வண்ணம்பணித்தியென்றுன்
சேதமுளரித்திருவடியிற்சரண்சேர்ந்தனனுல்
வேதமுழக்கத்தரங்கநகரன்னேவித்தகியே. (கஙூ)

உய்யக்கொண்டார்

புலஞ்செயிர்த்தேதாங்கியவுய்யக்கொண்டார்புகழ்பூத்தொளிர்ந்து
பொலஞ்செயடிகளென்புந்திவைத்தேத்தப்புரிதியென்றுன்
நலஞ்செய்திருவடிநண்ணினனல்லவர்நாளுநண்ணி
வலஞ்செய்யரங்கநகரன்னேயாகும்வரோதையையே. (கசு)

குருகைக்காவலப்பன்

கூறுபுகழ்க்குருகைக்காவலப்பன்குறிக்கொணிட்டை
தேறுமெனக்குஞ்சிறந்தோங்கியருள்செய்தியென்றுன்
நாறுமலரடிநண்ணினன்சீர்த்தியிஞ்ஞாலமெலாம்
வீறுமரங்கநகரன்னேவேதவிளக்கொளியே. (கஞ)

நம்பிகருணாகரதாசர்

நம்பிகருணாகரதாசவள்ளறன்னல்லொழுக்கங்
கும்பியுழைக்குமெனக்கும்வரிங்குரைகழலே
நம்பியடைந்தனனுளும்பிறவிநரலேயுற்றேர்க்
கம்பியனேயவரங்கநகரன்னேயம்புயையே. (கசூ)

ஏறுதிருவுடையார்

ஏறுதிருவுடையாரென்றுரையெம்மிருதிக்குப்
பேறுதருமவன்பால்வருகேயப்பெருக்கின்வளந்
தேறுமெனக்குமளித்தியென்றுன்பதந்தேர்ந்தடைந்தேன்
நாறுமலர்ப்பொழினண்ணுமரங்கநகரன்னேயே. (கஎ)

திருக்கண்ணமங்கையாண்டான்

தூயதிருக்கண்ணமங்கையாண்டானெஞ்சுரநிதன்
நேயவடிகளடியினுறுமன்பினீத்தமிந்தத்
தீயனுற்றுய்யநின்சேவடிசேர்ந்தனன்றெய்வமயிற்
சாயலரங்கநகரன்னையாகுந்தயாபரையே. (கஅ)

வானமாமலையாண்டான்

மறையோர்புகழ்வானமாமலையாண்டான்மகிழ்தருதன்
இறையோனுழிக்கொண்டவீரமடியற்குமீதியென்றுன்
பொறையோங்குதாளிற்புகல்புகுந்தேனம்புலனென்ற
நிறையோர்நிலவுமரங்கநகரன்னைநின்மலையே. (கக)

உருப்பட்டரோச்சான்பிள்ளை

பேணுமுருப்பட்டரோச்சான்பிள்ளைப்பேர்ப்பெருந்தகைதன்
மாணுறுமாரியன்பாற்கொண்டநிட்டைமரபெனக்கும்
பூணுறும்வண்ணம்புரிதியென்றுன்முட்புகல்புகுந்தேன்
சேணுறுசோலையரங்கநகரன்னைச்செந்திருவே. (உ0)

சோகத்தூராழ்வான்

சோகத்தூராழ்வான்சுகநிலைநிட்டைதுடியிடையார்
மோகத்தூரெற்குமுரணற்றுண்டாகநின்முண்டகத்தாள்
ஆகத்தூடுய்த்தின்றடைக்கலம்புக்கனனையவெள்ளை
நாகத்தூர்தித்தலைவன்போற்றரங்கநகரன்னையே. (உக)

கீழையகத்தாழ்வான்

கீழ்வானெழுபகல்போலொளிர்வண்புகழ்க்கீழையகத்
தாழ்வானெனத்தமிழாரணம்பாடும்பண்ணரையர்வு
தாழ்வாரெனக்குந்தயைசெயநின்னைச்சரணடைந்தேன்
வாழ்வாரரங்கநகரன்னையாகும்வதானியையே. (உஉ)

மேலையகத்தாழ்வான்

மேலையகத்துறையாழ்வானெனையான்வியந்துதிரு
மாலையகத்தமறைத்தமிழ்பாடுமகிழ்மவளத்
தாலையளித்தியெனைநின்சலசச்சரணடைந்தேன்
சோலையகத்தவரங்கநகரன்னைச்சுந்தரியே. (உங)

மணக்கானம்பி

திருமணக்கானம்பிசேவடிசிந்தையிற்சேரச்செய்தென்
கருமணக்காகரமாங்காமநோயைக்களைதியென்றுன்

மருமணத்தாளின்மறைபுகுந்தேன்மணிவண்ணனெம்மான்
திருமணக்காந்தையரங்கநகரன்னைச்செய்யவளே. (உசு)

திருவல்லிக்கேணிப்பாண்பெருமாளரையர்

பெருக்கத்திருக்கைவக்கேணிப்பாண்பெருமாளரையர்
தருக்கத்தவாளந்தணந்தநடையெற்குஞ்சார்கவென்றுன்
திருக்கத்திகைக்கழலிற்சரண்சேர்ந்தனன்றோவிரிய
இருக்கத்தையானவரங்கநகரன்னையின்பவைப்பே. (உஞ)

சொட்டைப்பூசிச்செண்டலங்காரதாசர்

சொட்டைப்பூசிச்செண்டலங்காரராரியன்றூவடியில்
நெட்டைப்பேரன்புற்றநிட்டையெனக்குநிகழ்கவென்றுன்
மிட்டைச்செய்தாமரைமாணடிபுக்கனன்மன்னனந்த
முட்டைப்பெற்றுளுமரங்கநகரன்னைமுன்னவளே. (உசு)

கோமடத்துத்திருவிண்ணகரப்பன்

குருவிண்ணகர்தருவானெனுங்கொள்கைகொள்கோமடத்துத்
திருவிண்ணகரப்பன்சேவடியேத்துந்திறம்பெறநின்
மருவிண்ணளவுமையடிமேவினன்வையகத்துப்
பெருவிண்ணரங்கநகரன்னையாஞ்சுப்பிரசன்னையே. (உஎ)

உலகப்பெருமாணங்கை

நல்லொழுக்கத்துலகப்பெருமாணங்கைநண்ணுநிட்டை
புல்லொழுக்கேற்கும்புகுமாகருணைபுரிதியென்றுன்
எல்லொழுக்கிண்டையினைத்தாளடைந்தனனென்றும்பொன்னி
நல்லொழுக்காருமரங்கநகரன்னைப்பின்னையே. (உஅ)

ஸ்ரீபுண்டரீகாக்ஷதாசர்

சீரார்ந்தநற்புண்டரீகாக்கதாசர்தந்தேசிகன்பால்
காரார்ந்தொழுகுநடையெற்குணர்த்தியென்றுன்
ஏரார்ந்தவிண்டையினைத்தாளிலில்லடையெய்தினனுற்
பாரார்ந்தகீர்த்தியரங்கநகரன்னைப்பார்க்கவியே. (உகூ)

ஸ்ரீஆளவந்தார்

ஆளவந்தாரெம்மடிகளடியாமருத்தவைப்பென்
நாளவந்திரமனமஞ்சிகம்வைத்துநன்றுறநின்
நாளவந்தாமரைநற்குணனுகினனண்பர்பவ
மாளவந்தாளுமரங்கநகரன்னைமாநிதியே. (கூ0)

திருவரங்கப்பெருமாளரையர்

திருமான்முனஞ்செந்தமிழ்மறைபாடுந்திருவரங்கப்
பெருமாளரையரெனப்பாடியாடுநற்பேறெனக்கு
வருமாறுன்றிருவின்மறைபுகுந்தேன்வழுவாதமுத்தி
தருமாவரங்கநகரன்னையாருந்தயாம்புதியே. (நூக

சொட்டைநம்பி

கையொழியாதன்னடைச்சொட்டைநம்பிதன்கான்மலரை
பொய்யொழியாதவென் புந்திவைத்தேத்தப் புரிதியென்று
மெய்யொழியாவன்பர்மேவுதின்றாட்சரண்மேவினனுன்
மையொழியாக்கண்ணரங்கநகரன்னைமைதிலியே. (நூஉ

அரசுநம்பி

அகந்தூயனுமெம்மரசுநம்பிப்பெரியோனடியை
உகந்தூதியமெனவுன்னிடவுள்ளமுவத்தியென்றுன்
சுகந்தூங்குதாளிற்றுணைந்தடைந்தேனற்றுறப்புரப்பான்
நகந்தூக்குநாரணனண்ணுமரங்கநகரன்னையே. (நூஙூ

தெய்வத்துக்கரசுநம்பி

அவாநிலைநீத்தவடிகடெய்வத்துக்கரசுநம்பி
சுவாநிலையேற்குந்துணைநிற்கவன்புசுரத்தியென்று
தவாநிலைத்தாபதர்தாழுன்றிருவிற்சரணடைந்தேன்
உவாநிலைத்துண்டத்தரங்கநகரன்னையொள்ளொளியே. (

பிள்ளைக்கரசுநம்பி

பிள்ளையரசுநம்பிப்பெரியோன்கழல்பேணிநின்றிவ்
வெள்ளையறிவனும்வீடுபெற்றுய்யநின்வீங்குமொளிக்
கொள்ளையடிச்சரண்கூடினன்பேரண்டகோடிக்கெல்லாந்
தள்ளையரங்கநகரன்னையாஞ்சத்யசங்கற்பையே. (நூசு

சிறுபுள்ளுடையார்

செருக்காற்றிற்செல்லாச்சிறுபுள்ளுடையார்திருவடியிற்
பெருக்காற்றிற்பீடுறும்பேரன்புநாளும்பிறங்கவென்றுன்
இருக்காற்றினெண்ணிணையடிக்கில்லடையெய்தினனல்
அருக்காற்றுப்பொன்னேயரங்கநகரன்னையக்கனையே. (

திருமாலிருஞ்சோலைதாசர்

சீராரிருமாலிருஞ்சோலைதாசர்தஞ்சீர்த்திகளே
நாராவின்னவினவிற்றியுய்வானருணல்குதியென்

றேரார்கின்ருள்களிலில்லடையெய்தினனீர்ம்பொழிற்கட்
காராரரங்கநகரன்னேயாங்கருணலையையே. (கூஎ)

வங்கிபுரத்தாய்ச்சி

தெருள்சேர்ந்தவங்கிபுரத்தாய்ச்சிகிட்டையைச்சேர்ந்தொழுகி
மருள்சேரொன்ருற்றத்தைமாற்றிடவுள்ளமகிழ்தியென்றுன்
பொருள்சேர்கழலிற்புகல்புகுந்தேன்பொழில்பூத்தளிக்கும்
அருள்சேரரங்கநகரன்னேயாகுமகளங்கையே. (கூஅ)

பெரியநம்பிகள்

அருங்கலிக்கேள்விப்பெரியநம்பிக்குத்தன்னரியன்பால்
ஒருங்கலில்பேரன்புதித்தாங்கெனக்குமுதிக்கவென்றுன்
பீருங்கமிமிரம்புயத்தாளடைந்தனன்பெட்குமின்னின்
மருங்குலரங்கநகரன்னேயாமங்களாகையே. (கூகூ)

திருக்கோட்டியூர்நம்பி

திருக்கோட்டியூர்நம்பிச்செம்மற்குத்தன்றிருத்தேசிகன்பாற்
றிருக்கோட்டுமன்புசெழித்தாங்கெனக்குஞ்செழிக்கவென்றுன்
தருக்கோட்டுந்தாளிற்சரண்புகுந்தேன்மெய்ச்சதுமறையோர்
திருக்கோட்டியோங்குமரங்கநகரன்னேச்செஞ்சுடரே. ()

பெரியதிருமலைநம்பி

பெரியதிருமலைநம்பியெனுமெம்பெருந்தகைதன்
அரியதிருவருட்காளாகும்வண்ணமருடியென்றுன்
உரியசரணடைந்தேனுனேயோராவுளத்தினர்கட்
கரியவரங்கநகரன்னேயாமம்புயாதனனே. (சக)

மாறனேர்நம்பி

குற்றமிலாமாறனேர்நம்பிதன்குரவன்கழலில்
அற்றமிலாவன்படைந்தாங்கியானுமடைகவென்றுன்
சுற்றமிலார்துணையாமடியிற்சரண்டின்னினைஞ்
செற்றமிலார்சேரரங்கநகரன்னேச்சிற்பரையே. (சஉ)

திருக்கச்சிநம்பி

திருக்கச்சிநம்பியடிகட்குத்தந்திருத்தேசிகன்பால்
அருக்கச்சுதவன்பமைத்தாங்கெனக்குமமைத்தியென்றுன்
கருக்கச்சளங்கழற்றுங்கழற்கையடைகண்டனன்சீர்ப்
பெருக்கத்தரங்கநகரன்னேயாகும்பிராப்பியையே. (சகூ)

திருமாலையாண்டான்

திருமாலையாண்டானெனுஞ்செம்மலுக்குத்தன்றேசிகன்பாற்
பெருமாலையாக்கியபெற்றியினெற்கும்பிறப்பியென்றுன்
மருமாலைத்தாளின்மறைபுகுந்தேன்மனமாசறுத்தோர்
கருமாலைநீக்குமரங்கநகரன்னைக்காரணியே. (சச)

ஆளவந்தாராழ்வான்

ஆழ்வானறிவின்றலைநின்றுழுகுமெம்மாளவந்தார்
ஆழ்வானுக்காரியன்பாலானவன்பெற்குமாகவென்றே
எழ்வான்பிறப்புமிரிக்குநின்றுட்சரணெய்தினனிற்
றுழ்வார்க்கருளுமரங்கநகரன்னைச்சற்குணியே. (சஙி)

வானமாமலையாண்டான்

திருவானமாமலையாண்டான்றெருணடைச்செல்வமெற்கும்
வருவானருடியென்றுன்மனைத்தாளின்மறைபுகுந்தேன்
பெருவானவர்பெறும்பேற்றையடியவர்பெற்றுவக்கத்
தருவானரங்கநகரன்னையாருஞ்சகாதனையே. (சசு)

தெய்வவாரியாண்டான்

அமலனெனுந்தெய்வவாரியாண்டான்றன்னடியினையாங்
கமலமென்னுள்ளக்கமலம்வைத்தேத்தக்கணித்தியென்றுன்
நிமலவடிகளினீழலடைந்தனனித்தியர்சேர்
விமலவரங்கநகரன்னையாரணவேத்தியையே. (சஎ)

ஈசனாண்டான்

இலங்கெழின்மேதகுகொளெம்மீசனாண்டாற்கிறைவனுழித்
தலங்கெழிலன்புசுரந்தாங்கெனக்குஞ்சுரக்கவென்றுன்
கலங்கெழுதாள்களிற்கையடைபுக்கனன்காயம்வையத்
தலங்கெழுசீர்த்தியரங்கநகரன்னைத்தற்பணையே. (சஅ)

ஜீயராண்டான்

சிதஞ்செய்பஞ்சேந்தியச்சீயராண்டாற்குத்தன்றீர்த்தனுழி
இதஞ்செய்யும்பத்திமையேய்ந்தாங்கெனக்குமியைகவென்றுன்
பதஞ்செய்பதங்களைப்பற்றினன்பத்தர்கள்பாவமெலாம்
அதஞ்செய்யரங்கநகரன்னையாமருளார்கலியே. (சகூ)

சிருக்குருகூரப்பன்

தன்னுரியன்பாற்றிருக்குருகூரப்பன்றுனடைந்த
இன்னவுமன்பெனக்குமுண்டாகவிழைத்தியென்றுன்

பொன்னரசத்தவம்போருகத்தாளிற்புகல்புகுந்தேன்
கொன்னரசங்கநகரன்னேயாகுங்குசேசயையே. (கூ0)

திருமோகூரப்பன்

தேசிகன்பர்னந்திருமோகூரப்பன்சிறந்துகொண்ட
ஆசிலதாமன்பெனக்குமுண்டாகவருடியென்றுன்
ஏசிகழுள்களிலேன்றடைந்தேனெண்ணிருக்கெசுர்நற்
கோசிகமேத்துமரங்கநகரன்னேக்கோமளேயே. (கூக)

திருமோகூர்நின்றுன்

நீடுறுசீர்த்திருமோகூர்நின்றுனெனுநின்மலன்றன்
பீடுறுநன்னடையின்பெருக்கெற்கும்பெருகவென்றுன்
சேதாடுறுதோடகத்தாட்சரண்டுன்னினன்றும்பியிசை
பாடுறுசோலையரங்கநகரன்னேப்பண்ணவியே. (கூஉ)

தெய்வப்பெருமாள்

தெருணிதித்தெய்வப்பெருமாட்பெருந்தகைசீரடியைப்
பொருணிதியென்னவென்புந்திவைத்தென்றும்புகழுமன்பு
மருணிதியாமெற்கும்வாய்க்கவென்றுன்னேமறைபுகுந்தேன்
அருணிதியானவரங்கநகரன்னேயற்புதையே. (கூங)

வகுளாபரணசோமயாஜியார்

மதியார்வகுளவணிச்சோமயாஜிதன்மாணடியே
நிதியாயென்னுள்ளநிறுவியுய்வானின்னிறைதவர்க்குக்
கதியாங்கழல்களிற்கையடைபுக்கனன்கற்றவர்கள்
துதியாரரங்கநகரன்னேயாகுஞ்சுடர்க்கொடியே. (கூச)

திருக்குருகூர்தாசர்

சீரார்திருக்குருகூர்தாசரென்னுமெந்தெய்வமணிக்
கேரார்தன்னுரியன்பாலேய்ந்தநிட்டையெனக்குமுற
வாராரருள்செய்தியென்றுன்கழலின்மறைபுகுந்தேன்
தேரார்தெருவாரரங்கநகரன்னேச்சின்மயையே. (கூஎ)

திருமாலிருஞ்சோலைதாசர்

திருமாலிருஞ்சோலைதாசரெனுந்தெய்வத்தேதுதன்சீர்க்
குருமாமணியுழிப்பெய்யன்புப்பால்வெள்ளக்கோலமெற்கும்
வருமாறுன்வாரிசமாமலர்த்தாளின்மறைபுகுந்தேன்
திருமாமணிப்பூணரங்கநகரன்னேச்சேமவைப்பே. (கூசு)

வடமதுரைப்பிறந்தான்

வடமதுரைப்பிறந்தானென்னும்வண்மைமணிமலைக்குத்
திடமதுரைத்தவன்றேமன்புவதைசெழித்தலென
மடமலியெற்குமளித்தியென்றுன்றுண்மறைபுகுந்தேன்
நடமலிந்தோங்குமரங்காரரங்கநகரன்னையே. (நிள)

ஆட்கொண்டி

ஆட்கொண்டியென்னுமடிகளடிகளகத்தில்வைத்தென்
சேட்கொண்டதீவினைதீர்த்துய்குவானின்சிறுசதங்கைத்
தாட்கொண்டதாமரைத்தாளடைந்தேனம்பிச்சார்ந்தவரை
ஆட்கொண்டருளுமரங்கநகரன்னையம்புயையே. (நிஅ)

அம்மங்கி

மறைகொண்டமாண்பொருண்மன்னுளத்தம்மங்கிவள்ளலினீற்
சிறைகொண்டதீவினைதீர்வானடியர்செயுஞ்செயிர்கள்
பொறைகொண்டுன்புண்டரீகப்பொற்பாதம்புகல்புகுந்தேன்
நறைகொண்டபூம்பொழினண்ணுமரங்கநகரன்னையே. ()

இராஜபுரோகிதர் நாதமுனிகள்

பொன்னித்துறைவன்புரோகிதன்பொங்கெழிற்பொன்னடியென்
சென்னிக்கணியெனச்சேர்ந்துய்யுமாறருள்செய்கியென்றுன்
உன்னித்துறவோர்தொழுந்தாளடைக்கலமுற்றனன்மால்
பன்னிப்பிரியையரங்கநகரன்னைப்பார்க்கவியே. (கூ0)

இராஜமகிஷி திருவரங்கத்தம்மன்

ஆக்கியந்தாரனற்றூரமரங்கத்தம்மன்னெழுக்கஞ்
சாத்தியமாகவெற்கென்றுன்சலசச்சரணைடைந்தேன்
ஏத்தியமாமறைக்கெட்டாப்பரம்பொருளேயினிதாம்
வாத்தியவோதையரங்கநகரன்னைமாமருந்தே. (கூக)

எம்பெருமானார்

எம்பெருமாற்கென்றுமின்பணிசெய்திதயத்துகக்கும்
எம்பெருமானரிணையடியேயெனக்கென்றும்பொன்றூச்
செம்பெரும்பேறென்றுதுன்னக்கருணைசுரந்தருள்வாய்
நம்பெருமாண்மணவாட்டியரங்கநகரன்னையே. (கூஉ)

மலைகுனியநின்றார்

இனியகருத்துடனின்சொலெவர்க்குமிசைக்குமலை
குனியநின்றார்தங்குரைகழல்கூடியென்கோதறுப்பான்
நனியருள்செயகியென்றுன்கழனண்ணினனுரணற்குக்
கனியனையாயெம்மரங்கநகரன்னைக்கண்மணியே. (கூகூ)

ஆரிய ஸ்ரீசடகோபதாசர்

தன்மவுருவாரியச்சீசடகோபதாசரெனும்
நின்மலபாதுவினெஞ்சிருணீங்கியிங்கீடுகன்மச்
சன்மமொழிக்கநின்ருட்சரண்புக்கனன்சார்ந்தவர்க்குப்
பொன்மலிபோலுமரங்கநகரன்னேப்புண்ணியையே. (கூச)

அணியரங்கத்தமுதனர்

அணியரங்கத்தமுதப்பேரடிகளடிகள்பவப்
பிணியரங்கப்பிடித்துய்வானருளென்றுன்பெட்குமொன்பான்
மணியரங்கத்தண்டைமாணடிபுக்கனன்மாதவிகள்
நணியரங்கத்துநடஞ்செய்யரங்கநகரன்னேயே. (கூஞ)

திருவாய்த்தலமுடையார்

திருவாய்த்தலமுடையாரடிசேர்ந்தடியேன்விவிதக்
கருவாய்த்தலமரனீங்கவருள்செய்துகாத்தியென்றுன்
மருவாய்த்திலங்குமையடிபுக்கனன்மாணுருவாய்
அருவாய்த்திகழுமரங்கநகரன்னேயம்புயையே. (கூகூ)

கூரத்தாழ்வான்

இசையோங்குகூரத்திறையெம்மடிகளிணையடியில்
நசையோங்கியுய்யநயந்திருக்காதியநான்மறையின்
மிசையோங்குன்னடிமேவினனல்குதிமெய்ப்புகழெண்
டிசையோங்கரங்கநகரன்னேயாகுஞ்சிந்தாமணியே. (கூஎ)

முதலியாண்டான்

ஊண்டானெனநம்மெதிபதிசீருண்டுறைமுதலி
யாண்டானெனேயென்றுமாள்வானருடியென்றஞ்சிறைத்தேன்
பாண்டான்முரல்பதுமப்பதம்பற்றினன்பாரளப்பான்
நீண்டான்மகிழுமரங்கநகரன்னேநீரசையே. (கூஅ)

அருளாளப்பெருமாளெம்பெருமானர்ஜீயர்

அம்புவிபோற்றருளாளப்பெருமாளெனுமடைகொள்
எம்பெருமானரிணையடியென்பவமீர்க்குமென்று
நம்புறுன்மனநண்ணுன்றுளேயநந்தடைந்தேன்
வம்பவிழ்சோலையரங்கநகரன்னேமாமணியே. (கூகூ)

வடுகநம்பி

மைந்தாைந்தாநெறிமாண்பினனுமெம்வடுகநம்பி
கந்தார்நடையெற்குக்கைகூடுன்றன்கருணைகொள்வான்
பைந்தார்புனைகின்பதஞ்சரண்புக்கனன்பாயும்பொன்னிச்
சிந்தாரரங்கநகரன்னேவேதச்சிரப்பொருளே. (எ0)

திருக்குருகைப்பிரான்பிள்ளான்

சீரார்திருக்குருகைப்பிரான்பிள்ளான்றிருவடியில்
நாரார்மனநலநண்ணிடநீயருணல்கிடென்றுன்
தாரார்சலசச்சரணத்துணையிற்சரணடைந்தேன்
ஏராரரங்கநகரன்னையாமெம்மிறையவளே. (எக)

அநந்தாழ்வான்

கனந்தாழ்பொழிற்றிருவேங்கடமாமலைக்கண்ணனுக்குத்
தினந்தாழ்ந்துதேமலர்க்கண்ணித்திருப்பணிசெய்துவந்த
அனந்தாழ்வானிட்டடையளித்தியென்றுன்முளடைந்தனனற்
சனந்தாழரங்கநகரன்னையாகுஞ்சரணியையே. (எஉ)

எழுபத்துநான்கு சிங்காதனாதிபதிகள்

சீரியஞானவெழுபத்துநான்குசிங்காதனராம்
ஆரியர்தங்களருட்கிலக்காகவருடியென்றுன்
வேரிமரைபுரைமென்முளடைக்கலம்வேட்டடைந்தேன்
நாரியரதனமேநல்லரங்கநகரன்னையே. (எங)

எழுநூறு உத்தமாச்சிரமிகள்

சத்தமனைங்களெதிராசமாமுனிதாளடைந்த
உத்தமமாமாச்சிரமிகளோரெழுநூற்றுவர்கள்
தத்தமநிட்டைதமியேற்குறநின்சரணடைந்தேன்
புத்தமுதொத்தவரங்கநகரன்னைப்புங்கவியே. (எச)

பன்னீராயிரவரேகாந்திகள்

விதியாரெழுகெம்மிராமானுசமுனிவேந்தனருட்
கதியார்பன்னீராயிரவரேகாந்திகள்காற்றுணையென்
மதியாரநின்னைமறைபுகுந்தேன்வையமையலற்றேர்
நிதியாமரங்கநகரன்னையாகுநியாமகையே. (எடு)

எழுநூற்றுவர் அம்மையர்கள்

எம்மையுமாட்கொளுமெம்பெருமானுரிணையடிசேர்
அம்மையரோரெழுநூற்றுவர்நிட்டையடியணுக்கும்
இம்மைவரநின்னிணையடிக்கில்லடையெய்தினனற்
செம்மையரங்கநகரன்னையாகியதேசிகையே. (எசு)

திருவரங்கத்தமுதனார்

திருவரங்கத்தமுதார்தெள்ளியன்செய்தசெந்தமிழ்நூல்
கருவரங்கத்தினங்கற்றுய்யுமாறெனைக்காத்தியென்று
மருவரங்கத்தகின்மாணடியிற்சரண்வந்தடைந்தேன்
தெருவரங்கத்தவரங்கநகரன்னைச்செந்திருவே. (எஎ)

எம்பார்

கம்பார்களத்தியர்க்காதலிக்குந்தீக்கருமமொழிந்
தெம்பாரடிகளேயெண்ணியுய்வானெற்கருடியென்றுன்
வம்பார்வனசமலர்த்தாட்சரணவரணமுற்றேன்
அம்பாரரிக்கண்ணரங்கநகரன்னையற்புதையே. (எஅ)

பராசரபட்டர்

தேக்கும்புகழெம்பராசரபட்டர்திருவடியென்
வாக்குமனமுமவழுத்திநினைக்கும்வரம்பெறநின்
சேக்குமையடிசேர்ந்தனனிந்தச்செகமீனத்துங்
காக்குமரங்கநகரன்னையங்கமலாலயையே. (எக)

அழகியமணவாளதாசர்

வெண்மணிப்பிள்ளைப்பெருமாளையங்கர்கின்வேந்தன்றன்பேர்
நண்மணித்தாசரைநண்ணியுய்வானுளநள்ளிருளூர்
விண்மணியேநின்விரையார்மலர்க்கழல்வேட்டடைந்தேன்
ஒண்மணிமாலையரங்கநகரன்னையுத்தமியே. (அ0)

சீராமப்பிள்ளை

ஆராமப்போதாலலங்கலணிந்தென்னகத்திருத்திச்
சீராமப்பிள்ளையைச்சிந்திக்கச்செவ்வருள் செய்தியென்றுன்
மாராமத்தாளின்மறைபுகுந்தேனன்மரபடியர்
நாராமப்பூவைநயக்குமரங்கநகரன்னையே. (அக)

நஞ்சீயர்

வெஞ்சீயமெண்ணிமேவழத்தின்வேண்டார்வெருவவந்த
நஞ்சீயர்நற்கழலுடொழுநாடிநயக்கவெற்கு
நெஞ்சீதியென்றுநின்னீரசத்தாட்சரணேர்ந்தடைந்தேன்
மஞ்சீயன்முத்தவரங்கநகரன்னைமாணிக்கமே. (அஉ)

நலந்திகழ்நாராயணச்சீயர்

நலந்திகழ்நாராயணச்சீயர்நற்கழலணிணியுய்வான்
பொலந்திகழ்நின்னடிப்புண்டரிகத்திற்புகல்புகுந்தேன்
வலந்திகழ்வன்னிவளர்ப்போர்வழுத்துமலர்மகளே
நிலந்திகழ்ந்தோங்குமரங்கநகரன்னைநிச்சலையே. (அங)

நம்பிள்ளை

சொல்லவரியசொல்லார்ந்தநம்பிள்ளைதுணையடியாற்
கல்லவரியபிறவியைக்கல்லக்கருதிவந்துன்
வல்லநற்றாளின்மறைபுகுந்தேன்மறைவாணர்தொழும்
நல்லவரங்கநகரன்னையாளினும்பகியே. (அச)

ஸ்ரீசேனபதிஜீயர்

சேணேங்குநல்லுரச்சேனபதியெனுஞ்சீயரடி
கோணேங்குமென்னுளங்கொண்டுய்யநீயருள்கூர்தியென்றுன்
பூணேங்குதாளிற்புகல்புகுந்தேன்சிறைப்புட்கணத்தின்
பாணேங்குசோலையரங்கநகரன்னேப்பண்ணவியே. (அடு)

பெரியவாச்சான்பிள்ளை

மாண்டகுணத்தெம்பெரியவரச்சான்பிள்ளைமாணருளே
பூண்டவரன்புபுனைந்துய்யநின்கழல்புக்கடைந்தேன்
தூண்டலிலாதசுடர்விளக்கேதுகடூர்வளங்கள்
நீண்டவரங்கநகரன்னேயாகுநிரஞ்சனேயே. (அசு)

இராமாநுசாசாரியர்

எங்கைநம்பிள்ளைசுதனுமிராமாநுசாரியன்ருள்
சிந்தையில்வைத்தெளியேனுய்யநீயருள் செய்தியென்றுன்
மூந்தைமறைமூடித்தாளிலடைக்கலமூந்தினேனேர்
நிந்தையுமில்லாவரங்கநகரன்னேநித்தியையே. (அள)

வடக்குத்திருவீதிப்பிள்ளை

நீடுமெய்ஞ்ஞானநெறிநின்றெழுகுநன்னிட்டைகள்கை
கூடும்வடக்குத்திருவீதிப்பிள்ளைகுரைகழலே
நாடுநலம்பெறநின்னடிநண்ணினனுன்மறையும்
நேடுமரங்கநகரன்னேயாகுநிராமயையே. (அஅ)

சிவிக்கைப்பிள்ளை

மாவளமோங்குஞ்சிவிக்கரைப்பிள்ளைமலரடிச்சீர்
நாவளமோங்கநவிற்றியென்சன்மத்தின்ஞாட்பறுப்பான்
பூவளமோங்கிப்பொலியுநின்ருளிற்புகல்புகுந்தேன்
காவளமோங்குமரங்கநகரன்னேக்கற்பகமே. (அக)

வேல்வெட்டிப்பிள்ளை

மால்வெட்டியென்றன்மனத்தையெப்போதும்வளர்கருணை
வேல்வெட்டிப்பிள்ளைவிழுத்தாணிறுத்தும்விரகுபெற
நூல்வெட்டியோர்தொழுநின்ருளடைந்தனனும்பவர்க்கு
மேல்வெட்டிகாட்டுமரங்கநகரன்னேவிண்ணவியே. (கூ0)

ஈயுண்ணி மாதவப்பெருமாள். இவர்க்கு

ஈயுண்ணி சிறியாழ்வானப்பிள்ளையென்றுந் திருநாமம்

எங்குநிறைபுகழீயுண்ணிமாதவனின்னருளாற்
றங்குமென்சன்மத்தவிர்ப்பானினதுதயைபெறநின்

கொங்குண்மலரடிகூடினனன்பர்கள்கூட்டுணுஞ்சீர்
பொங்குமரங்கநகரன்னையாங்கடற்புத்திரியே. (கூக)

ஈயுண்ணிபத்மநாபப்பெருமாள்பின்னை

சுரக்குமளிப்பத்மநாபப்பெருமாடுனையடியென்
பரக்குமனத்திற்பதித்துய்யநின்னைப்பணிந்தனன்யான்
கரக்குஞ்சராசரம்பாவையுமீளவுங்கண்டவற்றைப்
புரக்குமரங்கநகரன்னையாமணிப்பூடணையே. (கூஉ)

நாலூர்ப்பிள்ளை. இவர்க்குக்கோலேசர்,
கோலவராகப்பெருமாள்,இராமானுஜதாசர் என்றுந்திருநாமம்

சீரார்நாலூர்ப்பிள்ளைசேவடியேத்தியென்சீவினையின்
வேராரவம்வெட்டிவிரத்திவழிநின்றுவீடடைவான்
ஏராரின்னிண்டையினையடியிற்சரணெய்தினனற்
காராரொழில்சூழரங்கநகரன்னைக்கண்மணியே. (கூங)

நாலூராச்சான்பிள்ளை. இவர்க்கு
நாலூர்தேவப்பெருமாள்பிள்ளையென்றுந்திருநாமம்

நாலூராச்சான்பிள்ளைநற்பதநண்ணிநளிர்ந்தென்றற்
காலூர்தியைப்புறங்கண்டண்டர்யாவருங்காண்பரிய
மேலூர்புகுன்விழுத்தாளடைக்கலமேவினனற்
சேலூர்திருக்கண்ணரங்கநகரன்னைச்செந்திருவே. (கூச)

நடுவீற்றிருவீதிப்பிள்ளைபட்டர்

கடுவிற்கொடிதாக்கவற்றுமிருவினைக்கட்டறுத்த
நடுவிற்றிருவீதிப்பிள்ளைநற்றுணண்ணிநான்பிறவி
வடுவிற்றொழியநின்வண்மலர்த்தாளின்மறைபுகுந்தேன்
அடுவிற்புருவவரங்கநகரன்னையம்புயையே. (கூடு)

பின்பழகியபெருமாள்ஜீயர்

பின்பழகார்ந்தபெருமாளென்சீயர்பெருமைபுகழ்ந்
தென்பழங்கண்ணிரித்தீறினல்வீட்டின்ப மெய்தவெண்ணி
இன்பழநேர்நின்னினைத்தாளிலில்லடையெய்தினனற்
றென்பழனஞ்சூழரங்கநகரன்னைச்சின்மயையே. (கூசு)

ஏறுதிருவுடையார்தாசர்

ஏறுதிருவுடையார்தாசர்சீர்த்தியிசைத்திதயத்
தேறுதிருக்கையிரிப்பான்கருணையிழைத்தியென்றுன்
வீறுதிருப்புகழ்வேய்ந்தநின்றுணமறைமேவினனல்
நாறுதிருமலர்ச்சேக்கையரங்கநகரன்னையே. (கூஎ)

வானமாமலைதாசர்

தாரணியோர்புகழும்வானமாமலைதாசர்பதம்
ஏரணிநெஞ்சத்திருத்தியுய்வானருளீதியென்றுன்
தாரணிதாளிற்சரணடைந்தேனுயிர்தங்குலக
காரணியாகுமரங்கநகரன்னைக்கற்பகமே. (கூஅ)

திருக்குருகூர்தாசர்

வானேய்புகழ்க்குருகூர்தாசர்நோக்கின்வளனெனக்கு
மீனேய்நோக்கென்றெண்ணியுய்வானருள்செயல்வேண்டுமென்றுன்
தேனேய்செழுங்கமலத்தாளடைந்தனன்சேர்ந்தவரை
ஊனேய்தனீத்தாளரங்கநகரன்னையுத்துங்கையே. (கூகூ)

நயினராச்சான்பிள்ளை

ஞானவொழுக்கநயினராச்சான்பிள்ளைநல்லடியென்
ஈனவொழுக்கமற்றெண்ணியுயநீயிரங்கிடென்றுன்
மோனவொழுக்கர்தொழுந்தாளடைந்தனன்முத்திநெறிக்
கானவொழுக்கர்க்கருளுமரங்கநகரன்னையே. (க00)

வாதிகேசரியழகியமணவாளச்சீயர்

தேவாதிகேசரிநின்கொழுகன்பெயர்ச்சீயர்புகழ்
ஓவாதிசைத்துய்யநீதிருவுள்ளமுவத்தியென்றுன்
தேவாதியர்தொழுஞ்சேவடியிற்சரண்சேர்ந்தனன்யான்
ஓவாதிருக்கோதரங்கநகரன்னையொண்மணியே. (க0க)

பரகாலதாசர்

பக்குவநெஞ்சப்பரகாலதாசர்பதத்துணையென்
சக்குவக்கண்டுதாவங்கணீங்கத்தயைபுரியென்
றிக்குவட்டிண்டையடியினிலில்லடையெய்தினனெண்
டிக்குவக்குஞ்சீரரங்கநகரன்னைச்செல்வவைப்பே. (க0உ)

சீரங்காசாரியர்

தெருளார்செழுகடைச்சீரங்காசாரியர்சேவடியென்
இருளாரிதயத்திருத்தியுய்வானீயிழைத்தியென்றுன்
பொருளார்பூம்புண்டரிகப்பொற்பதத்திற் புகல்புகுந்தேன்
அருளாரரங்கநகரன்னையாமகந்தாக்கியையே. (க0ஊ)

அழகியமணவாளநயினர்

நல்லவரேத்துநின்னுதன்றிருப்பெயர்நண்ணியினர்
பல்லவபாதம்பணிந்துய்யவன்புபணித்தியெற்கென்
றெல்லவர்போலொவிரிண்டையடிச்சரணெய்தினனுல்
வல்லவர்வாழ்த்துமரங்கநகரன்னைமாமணியே. (க0ஃ)

பிள்ளைலோகாசாரியர்

அண்ணன்மூடும்பையுலகாரியன்கலியார்பொருளென்
திண்ணன்னுளத்திற்றிகழ்த்துவிப்பாயென்றுன்சேவடியாங்
கண்ணன்மலர்களிற்கையடைபுக்கனன்காந்துமணி
வண்ணன்மகிழுமரங்கநகரன்னைவானவியே. (கஅ)

கூரகுலோத்தமதாசநாயன்

சாந்தகுணனெங்கள்கூரகுலோத்தமதாதர்பத
காந்தமென்னெஞ்சக்கரும்பொற்கவரக்கணித்தியென்றுன்
சேந்தகமலத்திருவடியிற்சரண்சேர்ந்தனன்செங்
காந்தளங்கையாயரங்கநகரன்னைக்காஞ்சனமே. (கஉ)

விளாஞ்சோலப்பிள்ளை. இவர்க்குநலந்திகழ்நாரணனென்றுந்திருநாமம்

